# வணிக நாதம்



## 11ஆவது ஆண்டு சிறப்பு மலர்

ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.

2005

# Our Principal



**Mr.K. Sivaji**

B.A(Hons) Dip-in-Edu. Special Trd.(Eng.)

## எங்கள் கல்லூரி முதல்வர்

## திருமிகு. க. சிவாஜி அவர்கள் வழங்கிய

## ஆசியுரை

எங்கள் கல்லூரிக் கலை வர்த்தக மாணவர் மன்றம் வருடந்தோறும் வெளியிடும் "வணிக நாதம்" மலருக்கு ஆசிகூறுவதில் பெருமகிழ்வெய்துகிறேன். அறிவியல் சார்ந்த விடயங்களுடன் மன்றத்தின் செயற்பாடுகளை உள்ளடக்கிய மலராக இம்மலர் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகிறது. இன்றைய கல்விப்புலத்தில் மாணவர்கள் சுயமாக செயற்படுவதற்கு முதன்மை வாய்ப்பு வழங்குதல் முதன்மை பெறுகிறது. அவ்வகையில் எமது கல்லூரி கலை வர்த்தகத்துறை மாணவர்கள் சுயமாக முயன்று தம் ஆளுமையை வெளிப்படுத்தும் ஆவணமாக இந்நூலை வெளியிடுகிறார்கள். கலை வர்த்தக மாணவர் மன்றப் பொறுப்பாசிரியர்களின் ஆற்றுப்படுத்தலில் மாணவர்கள் இவ்வரிய நூலை வெளியிடுவது எமக்குப் பெருமையைத் தருகிறது. கலை வர்த்தக மாணவர் மன்றத்தினரையும் பொறுப்பாசிரியர்கள் குறிப்பாக திரு. வ. நந்தீஸ்வரன் அவர்களின் முயற்சியை மிகவும் பாராட்டுகிறேன். இம்மலர் மாணவர்களின் அறிவுத்திறனைத் தூண்டும் என்பதில் ஐயமில்லை. நூல்களைத் தேடி வாசித்தல் மாணவர்களுக்கு மிகவும் அவசியமாகும். அறிவு நிரம்புவதற்குக் காரணமான நூல்களைக் கற்காமல் கற்றவரிடம் சென்று பேசுதல், சூதாடும் அரங்கு இழைக்காமல் வட்டுக்காயை உருட்டி ஆடினாற் போன்றது என்பதனை

அரங்கு இன்றி வட்டு ஆடியன்றே நிரம்பிய

நூல் இன்றிக் கோட்டி கொளல்

என வள்ளுவப் பெருந்தகை திருக்குறளில் கல்லாமையால் வரும் துன்பத்தினை எடுத்துரைத்துள்ளார். எனவே மாணவ சமுதாயம் அறிவுசார் நூல்களைப் படிப்பதும் தாமே நூல்களை படைக்க முயல்வதும் வாழ்த்துக்குரியவை எனக் கூறி அமைகின்றேன்.

திரு.க. சிவாஜி

B.A.(Hons/Dip-in-Ed sp. I. Trd (English)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபையின் தலைவரும், ஆன்மீக தலைவியுமாக விளங்குகின்ற

## அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்கள் வழங்கிய


# ஆசிச்செய்தி



கல்வி மேம்பாடும், பண்பாட்டுச் சிறப்பும், தெய்வ நம்பிக்கையும் ஒருசேர வளர்க்கப்படும் சிறப்பு வாய்ந்த கல்லூரிகளில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் குறிப்பிடத்தக்கது. இக்கல்லூரியின் அதிபரின் ஆளுமையும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் பாராட்டுக்குரியவை. ஆண்டு தோறும் கலைப்பிரிவிலும் வர்த்தகப் பிரிவிலும் மாணவர்கள் பலர் பல்கலைக்கழகத்தில் புகுந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறுகிறார்கள். பன்னிரண்டாவது தடவையாக 'வணிகநாதம்' என்ற மலரை வெளியிடுவது பற்றி நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். சில சந்தர்ப்பங்களில் இவ்வெளியீடுகளில் பங்கு பற்றி சிறப்புரை ஆற்றிய வாய்ப்பும் எனக்குக் கிடைத்திருக்கின்றது. தரமான விடயங்களையும் மாணவர்களுக்கு பயன்படத்தக்கதான கருத்துக்களையும் இம்மலர் தாங்கி வருவது கண்கூடு. எனவே இந்த ஆண்டும் இவ்வெளியீட்டு நிகழ்ச்சியிலே ஆசிச்செய்தி வழங்கும் வாய்ப்பு எனக்குத் தரப்பட்டுள்ளது. அதிபர் அவர்களையும் வணிக மன்றத்தினரையும் அத்துறை சார்ந்த மாணவர்களையும் வாழ்த்தி ஆசி கூறுவதோடு பல்லாண்டு பல்லாண்டு காலம் இம்முயற்சி உயர்வடைய வேண்டும் என்று திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,**
சமாதான நீதிபதி,
தலைவர்.



# வாழ்த்துரை

புகழ் பூத்த ஸ்கந்தவரோதயக் கல்லூரி வணிக மாணவர் மன்றம் வருடந்தோறும் வெளியீடு செய்யும் "**வணிக நாதம்**" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். வர்த்தகத்துறை இன்றைய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இணைந்து நவீனத்துவம் பெற்று வருகிறது. தினமும் ஏற்படும் மாற்றங்களையும் வளர்ச்சியையும் துறைசார் நிபுணர்கள் மாணவர்களுக்குத் தெரியப்படுத்த இவ்வாறான சஞ்சிகைகள் துணை புரிவதாக அமையும். மாணவர்களின் புத்தாக்க முயற்சிகளுக்கும் எழுத்தாற்றல், தேடல், நூல் நிலையப் பயன்பாடு, தலைமைத்துவம் போன்ற திறன்களை வளர்ப்பதற்கும் இவ்வாறான சஞ்சிகை வெளியீடுகள் உதவுகின்றன. "**வணிக நாதம்**" சஞ்சிகை கல்லூரியை விட்டு வெளியேறும் மாணவர்களின் நினைவுப் பெட்டகமாவும், பழைய மாணவர்களைக் கல்லூரியுடன் இணைக்கும் பாலமாகவும் திகழ்கிறது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வணிக மாணவர் மன்றம் வளர்ச்சி பெறவும் அவர்களது சஞ்சிகை வருடாந்தம் வெளிவந்து ஒளி பரப்பவும் வாழ்த்துகிறேன். இவ் வெளியீட்டிற்கு உறுதுணை புரிந்த அனைவரையும் பாராட்டுகிறேன்.


**ப. விக்கினேஸ்வரன்**
வலயக் கல்விப்பணிப்பாளர்

வலிகாமம் கல்வி வலயம்,
சுன்னாகம்.

உடுவிற் கல்விக் கோட்டத்தின் பணிப்பாளர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணக் கல்வி வரலாற்றிலே முத்திரை பதித்து நூற்றாண்டுகள் கண்ட புகழ் பூத்த கல்லூரி இன்றும் பிரகாசித்துக் கொண்டிருப்பதுடன் எனது கல்விக் கோட்டத்தினுள் அமைந்த முன்னணிக் கல்லூரி என்பதில் பெருமையடைகின்றேன்.

அக்கல்லூரி கல்வி அபிவிருத்தி என்ற வரிசையில் வருடா வருடம் கலை, வர்த்தக மாணவ மன்றத்தினர் வெளியிடும் "வணிக நாதம்" சஞ்சிகை மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மலரானது மாணவரது சிறந்த ஆக்கங்களையும், கல்விமான்களதும், அறிஞர்களதும் படைப்புக்களையும் தாங்கி வெளிவருவதையிட்டும் இம்மலரில் உள்ள சகல ஆக்கங்களும் இன்றைய உயர்தர மாணவர்களின் புதிய கல்விச் சீர்திருத்த செயற்றிட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஒப்படைகள், ஆய்வுமுறை, தகவல் தொழினுட்பம் கணனிக் கல்வி என்று பெறுமதி மிக்க நூலாக வெளிவருவதுடன் மாணவர்க்கு உயர் பயன் தரும் சஞ்சிகை எனக் கூறுவது பொருத்தமுடையதாகும்.

இதனை நல்ல முறையில் வெளியிட்ட அதிபர், பிரதி அதிபர், உப அதிபர், ஆசிரியர் குழாமினரது வழிகாட்டலில் பொறுப்பாசிரியர் அவர்களுக்கும் கலை வர்த்தக மன்றத்தினருக்கும் பாராட்டுதலை தெரிவிப்பதுடன், தொடர்ந்து கல்லூரியின் பெருமையை நிலைநாட்டும் வகையில் மாணவ கல்வி அபிவிருத்தியிலும் ஆக்கபூர்வமான நற்பணிகளை ஆற்ற வேண்டுமென மனநிறைவுடன் வாழ்த்துகின்றேன்.

**திரு. செ. குபேரநாதன்,**
கோட்டக்கல்விப்பணிப்பாளர்.

கோட்டக்கல்வி அலுவலகம்,
(உடுவில்)
மருதனார்மடம், சுன்னாகம்.

**எங்கள் கல்லூரி உப அதிபரும் கலை வர்த்தக மாணவர் மன்ற புரவலருமாகிய**


**செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் அவர்களின்**

# ஆசியுரை



பாடுபட்டு உழைப்பவர்க்கே இப்பாரிடம் சொந்தமையா... என்ற கவிமணி தேசிக விநாயகம்பிள்ளையின் பாவரிகள் அற்புதமான கருத்துடையவை. மாணவர்களின் பராயம் தம் உழைப்பின் பயனை உணரும் பருவமாக அமைதல் வேண்டும். "மெய் வருந்தக் கூலி கிடைக்கும்" என்ற மூத்தோர் வார்த்தையில் முழுமையான பயன் உண்டு. மேலே குறித்த வார்த்தைகளூடாக யான் சொல்ல வருவது என்பது மாணவர்களின் முயற்சியின் பயனை, பங்களிப்பின் சிறப்பை விளக்குவதே. கலை வர்த்தக மாணவர் மன்றத்தினூடாக தம் ஆளுமையை, அனுபவத்தை பெற்ற மாணவர்கள் இன்று உயர்நிலையிலுள்ளனர். இந்த ஆண்டு கணக்காளர் தேர்வில் தேறி பயிற்சி பெற்றுவரும் கணக்காளர்களில் ஒருவர் எங்கள் கல்லூரி கலை வர்த்தக மாணவர் மன்றத்தில் தலைவராக சில ஆண்டுகளுக்கு முன் விளங்கியவர். அவர் இம்மன்றத்தினூடாக தன் வளர்ச்சியை ஏணிப் படிகளாக்கிக் கொண்டவர். சபைக் கூச்சமின்றி மேடை அனுபவத்தை பெறுவதற்கு, நூல் வெளியிடுவதற்காக நிதியைப் பெற மக்களை நாடுவதற்கு, அச்சுக்கலை அனுபவங்களை பெற்றுக் கொள்வதற்கு, அறிஞர்களை நாடிக் கட்டுரை, கருத்துரை பெறுவதற்கு, நூலைச் சந்தைப்படுத்துவதற்கு எல்லாவித விமர்சனங்களையும் உணருவதற்கு மாணவர்களுக்குப் பெரும் களப் பயிற்சியை இத்தகைய மன்றங்கள் வழங்குகின்றன. எங்கள் கல்லூரிக் கலைவர்த்தக மன்றம் வருடந்தோறும் "**வணிக நாதம்**" மலரின் பிரசவத்தால் தனித்துவப் பெருமையை பெறுகிறது. அவ்வகையில் இம்மன்றத்தைப் பொறுப்பேற்று நடாத்தும் ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். அவர்களின் பணி சிறக்க இறைவனைப் பிரார்த்தித்து ஆசி கூறி அமைகிறேன்.

**ஆறு. திருமுருகன்**



கலை வர்த்தக மாணவ மன்றப்

பொறுப்பாசிரியர் திரு.வ.நந்தீஸ்வரன்

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

கலை வர்த்தக மாணவ மன்றத்தின் வணிகநாத மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். எமது கல்லூரியின் சிறப்பிற்கு இம்மன்றம் தன் பங்களிப்பினை தவறாது நிலைநாட்டி வருகிறது. கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் இம்மன்றம் ஆற்றல் மிக்க பணிகளை ஆற்றி புகழை நிலைநாட்டிக் கொண்டுள்ளது. இம்மன்ற நிர்வாகத்தில் பங்கு கொண்ட மாணவர்கள் பலர் விரிவுரையாளராக, கணக்காளராக, வங்கியாளராக, ஆசிரியராக நிர்வாகிகளாக இன்று விளங்குகின்றனர். வணிகத்துறை ஆசிரியராக கடந்த பதினொரு ஆண்டுகளாக இப்பாடசாலையில் கற்பித்து வரும் யான் இத்துறைசார் மாணவர்களின் உயர்விருத்தி கண்டு மிகுந்த ஆனந்தமடைகிறேன். எமது மாணவர்கள் இன்று கணக்குப் பரிசோதகர்களாக கணக்கு ஆய்வாளர்களாக இலங்கை முழுவதிலும் பணியாற்றி வருகிறார்கள். வணிகநாத மலர் இத்தகைய மாணவர்களின் வளர்ச்சிக்கு பேருதவி புரிந்தது என்பதை யாரும் மறுக்கமுடியாது. அவ்வகையில் இவ்வாண்டும் வணிகநாத மலர் சிறந்த ஆக்கங்களோடு வெளிவருவது பெருமகிழ்ச்சி தருகிறது. கலை வர்த்தக மாணவ மன்றம் கல்விக் கருத்தரங்குகளையும் வாராந்தக் கூட்டங்களையும் தவறாது நடாத்தி மாணவர்களின் விருத்தியை மேம்படுத்தி வருகிறது. இப்பணி சிறக்க என்னை வழிநடத்திய பொறுப்பாசிரியர்களின் வழியில் யானும் ஏனைய பொறுப்பாசிரியர்களும் செயற்பட்டு வருகின்றோம். இம்மலர் சிறப்புற அமைவதற்கு பல வழிகளிலும் வழிகாட்டிய அதிபர் பிரதி அதிபர் உப அதிபர் ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்து மாணவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்து அமைகின்றேன்.

வ. நந்தீஸ்வரன்
(B.B.A.(Hons) - Dip.in Edu.)

# மன்றத் தலைவர் உரைக்கின்றார்

புகழ் பூத்த ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் கலைவர்த்தக மாணவ மன்றத்தின் தலைமையை ஏற்றதையிட்டு பெருமகிழ்வு அடைகின்றேன். பல்லாயிரம் சான்றோர்களை உருவாக்கிய பழம்பெரும் கல்லூரி வரலாற்றை காக்கும் கடமை மாணவர்களாகிய எம்மைச் சார்ந்துள்ளது. எமது கல்லூரி எல்லோர்க்குமாக அகலத் திறக்கப்பட்டுள்ள கல்வி வளாகமாகும். எந்த ஒரு ஏழை மாணவனும் எம் கல்லூரி வளாகத்தினுள் காலடி எடுத்து வைத்துவிட்டால் அவன் வாழ்வு உயர்கிறது. கல்லூரி ஸ்தாபகர் கண்ட கனவு ஒருநாளும் வீண்போகவில்லை. ஒறேற்றர் சுப்பிரமணியம் அதிபர் முதல் இன்றைய அதிபர் திரு.க. சிவாஜி வரை கல்லூரி முதல்வர்களும் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் கருணையின் வடிவமாக நின்று எம்மை வளம்படுத்துகிறார்கள். மாணவர்கள் இனங்காணப்பட்டு வசதியற்றவர்களுக்கு எல்லாம் ஏனைய மாணவர்கள் போல் தேவைகள் நிறைவு செய்யப்படுகிறது. கால்களுக்குச் சப்பாத்து, கழுத்துப்பட்டி, உச்ச வறுமையுடையவர்களுக்கு நிதியுதவி, பசியோடு வருபவர்களுக்கு உதவி புலமைப்பரிசில்கள், நினைவுப்பரிசில்கள் என கல்லூரி தரும் ஆறுதல்களை மாணவர்களாகிய நாம் மறக்க இயலாது. க.பொ.த. உயர்தர மதிய விருந்துபசாரம் என்றால் என்ன ஏனைய விழாக்கள் என்றால் என்ன பணங் கொடுக்க இயலாதவர்களையும் அரவணைக்கும் கல்லூரி எம் கல்லூரி என்பதனை சமூகம் அறிய வேண்டும். இச்சூழலில் கலை வர்த்தக மாணவ மன்றம் வளர்ச்சி பெற்றது என்பது இயல்பானதே.

எம்மன்றத்தை இன்றும் நெறிப்படுத்தும் அதிபர் பொறுப்பாசிரியர்கள் என் சக மாணவர்கள் அனைவரையும் நன்றியோடு வணங்கி என் செய்தியை நிறைவு செய்கிறேன்.


இ. ருசந்தன்

# நன்றியுரை

எமது கல்லூரி கலை வர்த்தக மாணவ மன்றத்தின் வணிகநாத மலர் வெளியீட்டிற்கு உதவிய அன்பர்கள் அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

மலர் வெளியீட்டிற்காக எமது மன்றம் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு நடாத்த அதனை ஊக்குவித்த மாணவர்கள் பொதுமக்களுக்கு எம் இனிய நன்றிகள். மலருக்கான கட்டுரைகளை வழங்கிய அறிஞர்கள், மாணவர்களுக்கும் எமது நன்றிகள். மலர் சிறப்பதற்காக விளம்பரங்களை தந்துதவிய வங்கி முகாமையாளர், நிறுவனத் தலைவர்களுக்கும் எமது நன்றிகள். மலரை அச்சிட்டு தந்த சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தினருக்கும் நூலின் முகப்பு அட்டையை தயார் செய்து தந்த ஹரிஹரன் நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகள். நூலிற்கு ஆசியுரை, வாழ்த்துரை, வழங்கிய பெரியவர்களுக்கும் எமது நன்றிகள். வணிகநாத மலர் வெளியீட்டு விழாவிற்கு ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றிகளை இத்தால் சமர்ப்பிக்கின்றோம்.

**சி. திருக்குமரன்**
**செயலாளர்,**
**கலை வர்த்தக மன்றம்.**



**இ. ருசந்தன்**

(தலைவர்)



**சு. ஸ்ரீவரன்**


(பத்திராதிபர்)




**சி. திருக்குமரன்**

(செயலாளர்)

## 2005 கலை வர்த்தக மாணவர்கள்



## 2005 கலை வர்த்தக மாணவர்கள்



# தமிழ்மொழியும் தமிழர்களும்

சு. ஸ்ரீவரன்
தமிழ் 2005 கலை

தமிழ் மொழி நம் தாய் மொழி தமிழர்களாகப் பிறந்த ஒவ்வொரு தமிழர்களும் தங்கள் தாய்மொழியை நேசிக்க வேண்டும். பாரததேசத்தில் தோன்றிய பாரதி தன் மொழியின் மீது கொண்ட பற்றினால்,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்" என்ற

கவிதைத் தொடரை எடுத்துக்காட்டியுள்ளார். ஔவையார் விநாயகப்பெருமானை வழிபட்டு தனக்கு சங்கத் தமிழ் மூன்றையும் தரும்படி கேட்டுள்ளார்.

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில்
முன்தோன்றிய மூத்த தமிழ்க்குடி"

எனச் சங்கச் சான்றோர்கள் சிறப்பிக்கின்றார்கள்.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன்
வந்து பாயுது காதினிலே தந்தையர் நாடென்னும்
போதினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே"

என்று தமிழ் மொழியையும் தன்பிறந்த தேசத்தையும் பாடுகின்றார் பாரதியார்.

தமிழ் மொழியை உலகிற்கு புகட்டவென அவதரித்த அவதார புருஷசர்களாக கம்பர், வள்ளுவர், இளங்கோ, ஔவையார் சங்கப்புலவர்கள் என்று போற்றப்படவேண்டியவர்கள் உள்ளனர். "தமிழுக்கு அமுது என்று பெயர் அந்த தமிழ் எங்கள்....." என்ற பாடல்களினூடாக தமிழின் சிறப்பைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் இன்று மக்கள் தம் தாய் மொழியிலே பேசுவதற்கே வெட்கப்படுகின்றார்கள். ஆனால் சங்க காலப்பகுதியிலே தமிழானது தனித் தமிழாக இருந்து வந்தது. பின்பு சமண, பௌத்த, இஸ்லாமிய, மதங் களின் வருகையால் வடமொழிக் கலப்பு ஏற்பட்டது. இதனையே "மணிப்பிரவாள நடை" என சிறப்பாக கூறினர்.

காலம் செய்த கோலத்தால் தமிழர்கள் ஆதரவு அற்றவர்களாக அகதிகள் என்னும் பெயருடன் வெளிநாட்டுக்குச் சென்று வெளிநாட்டவருக்கு அடிமையாக வாழ்வது போல் இன்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன் தோன்றிய பழமை வாய்ந்த மொழியான தமிழும் அவர்களுக்கு அடிமை ஆகிவிட்டது. வெளிநாட்டு மோகத்தால் வெளிநாடு சென்றவர்கள் தம் தாய் மொழியை மறந்து இருக்கின்றார்கள். ஆங்கிலம், பிரெஞ்சு, டொச்சு, போன்ற பிற மொழிகளில் மிகவும் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். யார் செய்த பாவமோ தெரியாது தமிழுக்கு. இன்று தமிழ் நாட்டிலும் கூட தமிழ்மொழி அருகிப் போய்விட்டது. எம்மிற் சிலர் தாங்கள் தமிழர்கள் என்பதையே மறந்து விட்டார்கள். கை எழுத்தை வைத்தாலும் கூட அவர்கள் அதை தமிழில் போடமாட்டார்கள். ஏன் எனில் அதனை அவர்கள் ஒரு சிறுமைத்தனமாக நினைக்கின்றார்கள். இதனால் இன்று தமிழ்மொழி அருகியும் தமிழிலிருந்து தோன்றிய கன்னடம், தெலுங்கு, மலையாளம், போன்ற மொழிகளும் இன்று வேகமாக வளர்ச்சி கண்டுள்ளன.

இன்று தமிழ் மொழியிலும் பார்க்க ஆங்கில மொழியே வேகமாகப் பரவி வருகின்றது. தமிழர்கள் எங்கும் எவருக்கும் அடிமைகள். தமிழனை தலைநிமிர்ந்து வாழ விடாது நசிக்க முயன்று கொண்டிருக்கும் தீயசக்திகள் அவர்களுடைய தாய் மொழியான தமிழ் மொழியையும் அழித்தொழிக்க

முற்படுகின்றார்கள். ஆனால் இன்று இலங்கை, இந்தியாஆகிய நாடுகளில் வறுமையில் வாடுகின்ற மக்களை பணத்தை கொடுத்து உதவி செய்வது போல் நடித்து தமிழைத் தமிழனே தனக்கு சாதமாக்கி கொள்கிறான். இதனை வெளிநாட்டவர்கள் அறிந்தும் அதனை அறியாத தமிழர்கள் "பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்" என்ற கூற்றுக்கு இணங்க எதையும் செய் வார்கள் என எண்ணி காலத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்தி கொள் கின்றார்கள். சில வீடுகளில் முதி யோர்கள் தமிழை நன்கு கற்றவர் களாக இருந்தாலும் அவர்களுடைய பிற் சந்ததிகளில் பலருக்கு தமிழ் என்றால் என்ன என்றே தெரியாத சூழ் நிலைக்கு தமிழரும் தமிழ்மொழியும் தள்ளப்பட்டு விட்டது.

மேலும் சங்ககாலத்தில் முதற் சங்கம் கடைச்சங்கம் இடைச்சங்கம் என முச்சங்கங்கள் வைத்து தமிழை வளர்த்தார்கள். ஆனால் தற்போது தமிழை வளர்ப்பதற்கு ஒரு சங்கமும் இல்லை. மக்களுமில்லை. நாகரிகத் திற்கு ஏற்ற படி வாழவேண்டும் அது தான் கௌரவம் என்று தம் பண்பாட்டை யும் மறந்து மேலை நாட்டவர்களுடைய உடை அணிந்து கொண்டு திரிகிறார் கள். அவர்களை இனம் காணமுடியாது. இறுதியாக ஆண்களா? பெண்களா? என கண்டுபிடிப்பதே கடினமாக உள் ளது. இதனையே இக்கால கவிஞர் "செந்தமிழ் நாட்டு தமிழிச்சியே சேலை உடுக்கத் தயங்கிறியே. நெசவு செய்யும் திருநாட்டில் நீச்சல் உடையில் அலை கிறியே" என்று பாடுகிறார். மேலை நாட்டவர்களுடைய பண்பாடு, கலாச் சாரம் என்பவற்றை எமது தமிழ் மக்கள் மிகவும் சிறப்பாக காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையுமே அவர்கள் அலட்சியமாக விடுகின்றார்களே தவிர மேலை நாட்டு கலாச்சாரத்தை அன்று, எமது முன்னோர்களின் பழமொழியான "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த் தால் தன்பிள்ளை தானே வளரும்" என்ற பழமொழியை தற்போதைய வர்கள் "வெளிநாட்டார் மொழியை பேணி வந்தால் தம் மொழி தானே மறைந்து விடும்" என்ற அளவுக்கு மாற்றியுள் ளார்கள். இது எந்த அளவுக்கு செல்லும் என்பதை சற்று பொறுத் திருந்துதான் பார்க்கவேண்டும்.

ஆரம்பகாலங்களிலே தமிழ் மன்னர்கள் பிற மொழிபேசும் நாடு களைக் கைப்பற்றியதும் வாணிபத் தொடர்புகளுக்காக அவர்களுடன் பேசு வதற்குரிய நிலைமை வந்தது. இதனால் தமிழ் பிற மொழிகளுடன் கலந்து கொண்டது. நவீன காலங்களில் இப்படியான பல்வேறுபட்ட மொழிச் சொற்கள் தமிழுடன் சேரும் போது தமிழ் எழுத்துக்களிலே முதல் எழுத் தாக இடம் பெறாத எழுத்து வேற்று மொழிச் செல்வாக்கினால் இன்று முதல் எழுத்துக்களாகவும், இறுதி எழுத்துக் களாகவும் தமிழில் ஆதிக்கம் பெற்றுள் ளது. தமிழ்ப்புலவர்களும் பேராசிரியர் களும் தமிழைக் காத்தால் போதும் என இருக்காது எமது தேசம் எமது மொழி என்ற இலட்சியமுடன் தமிழிற் பற்றுகொள்ள வேண்டும். தனித்தமிழ் நாடு என்ற தமிழ் நாட்டிலே பாரதி, கண்ணதாசன், பாரதிதாசன் போன்ற தமிழ் பற்றாளர்களும் வாழ்ந்திருக்கின் றார்கள்.

தமிழ் நாட்டிலே அன்றைய காலத்திலே பெருந்தொகையான தமிழ்க் காப்பியங்கள் தோற்றம் பெற்றன. இவர்கள் திருவள்ளுவர், கம்பர், இளங்கோ போன்ற தமிழின் முத்துக்களாகப் போற்றப்பட வேண்டிய வர்கள். இவர்களைப் பாரதியார் தன் கவிதையிலே,

"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்,
வள்ளுவரைப் போல், இளங்கோவைப் போல் பூமி
தனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்று

பாடுகின்றார். தமிழ்க்காப்பியங்களான கம்பராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற

அறக்காப்பியங்களில் தமிழின் பண்பாடு மிகத் தெளிவாகச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் "ஓடையிலே என் சாம்பல் கரைந்த போதும் ஒண்தமிழே சலசலத்து ஓட வேண்டும்" என்று பாடித் தமிழுக்காக வாழ்ந்து கொண்டு இருப்பவர்களும் உள்ளார்கள். தமிழுக்காகவே தன் உயிரை விட்டவராக நந்திவர்மன் என்னும் தமிழ் பேசுகின்ற ஆத்மா இன்றும் உலகிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றது. தமிழர்கள் என்றும் தம் பண்பாடுகளுடன் வாழவேண்டும். அதாவது தமிழரின் வாழ்வியல் முறை இல்லறத்தோடு இணைந்தது. ஆலய வழிபாட்டையும் பாரம்பரிய கலைகளையும், விருந்தோம்பற் பண்பினையும் கடைப்பிடித்து ஒழுக வேண்டும். "ஒருவனுக்கு ஒருத்தி என்ற தமிழ் பண்பாடு" இன்று மறைந்து வருகின்றது. இவ்வாறு வாழ்ந்து கொண்டிருந்தால் தமிழருடைய நிலை என்ன நிலையில் இருக்கும் என்பது சிந்திக்ககூடிய விடயமாகத்தான் இருக்கும்.

தமிழர்களின் மூடப்பழக்க வழக்கங்களையும் கொள்கைகளையும் பயன்படுத்தித் தமிழர்களைத் திசை மாறும் பறவைகளாக மாற்றி வாழும் நிலைமை கவலைக்குரிய விடயமாகும். தமிழனா கப் பிறந்தவர்கள் எந்த ஒரு மூலை முடுக்கிலும் வாழ்ந்து கொண்டிருந்தாலும் அவர்கள் மனதிலே தமிழன் என்ற உணர்வு இருக்க வேண்டும். பழமை போற்றும் தமிழ் அழிந்து விடக்கூடாது. "தமிழா நீ பேசுவது தமிழ்" என்பதை நீ மறந்து விடாதே ஈழத்திரு நாட்டிலும் தமிழ் அழிந்து போகாது காத்த பெருமைக்குரியவராக நல்லை நகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் போற்றப்படுகிறார். ஆங்கிலேயர் காலத்தில் தமிழும் சைவமும் ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் அழிந்து கொண்டிருந்த வேளையிலே "சுடர் ஒளி போல தோன்றி" சைவத்தையும் தமிழையும் பேணிக்காத்த பெருமைக்குரியவராக ஆறுமுகநாவலர் ஈழத்தமிழர் மனங்களிலே என்றும் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டியவர்.

மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பிலே முத்தமிழுக்கும் வித்தகராக சிறந்து விளங்கியவர் விபுலானந்தர் ஆவார். பேராசிரியர் கைலாசபதி, க. கணபதிப்பிள்ளை, சு. வித்தியானந்தன் போன்றவர்களும் தமிழை வளர்த்தார்கள். இவர்களால் கவிதைகள், கட்டுரைகள், நாவல்கள் போன்றவை எழுந்த வண்ணமாக இருந்தன. மேலும் ஈழத்திலே நாம் பிறந்த மண்ணிற்காகத் தம் உயிரையே ஒரு பொருட்டாக நினையாது தாயகத்தின் விடிவுக்காகவும், தமிழைக் காக்கவும், தம் உயிரை பதினேழாயிரத்திற்கு மேற்பட்ட வீரர்கள் மண்ணிலே விதைத்துள்ளார்கள். தமிழ் மக்களும் தமிழும் அழிந்து விடக் கூடாது என்று ஒரு பகுதியினரும் தமிழையே அழிக்க வேண்டும் என்று ஒரு பகுதியினருமாக வாழ்கின்றார்கள். இன்று தமிழனே தமிழனுக்கு எதிரியாக இருக்கும் சூழ்நிலையையும் நம் கண் ஊடாக காணமுடிகின்றது.

தமிழ் நிலைத்து நிற்க வேண்டும். தமிழர் தம் பண்பாடு போற்றி தமிழ் வளர வேண்டும். "வாழ்க தமிழ் வளர்க தமிழர் தம் பண்பாடு".

நன்றி

# வேதங்களின் வழிவந்த இந்துப் பண்பாட்டு மரபுகள்

மு. அனோஜா
2005 A/L

ஓர் இனத்தின் பண்பாடு, அந்நாட்டின் இலக்கியம், வரலாறு, சமயம், அறிவியல் முதலியவற்றின் மூலம் விளக்கமுறுகின்றது. இப் பண்பாடு மனிதத்தன்மையை இயல்பாக வெளிப்படுத்துவதாகும். பண்பாட்டின் வகைகளும், வெளிப்பாடுகளும், சூழ் நிலை, சமூகம், உள்ளம் ஆகிய வற்றைச் சார்ந்து உருவாகும். பண்பாட் டைப் புறத்தில் இவ்வாறு என்று காட்ட முடியாது. தனிமனிதன் சமூகத்திற்கும், சமூகம் தனிமனிதனுக்கும் உணர்த்து வது பண்பாடாகும். பண்புள்ள தனி மனிதனால் ஒரு சமுதாயமே நலன் பெறுகின்றது. மக்களிடையே நிலவும் பண்பாட்டு மரபுகள் பல்வேறு பரி மாணங்கள் கொண்டவை. மரபு என்பது ஒரு சமூகத்தில் நீண்டகாலமாக நிலவி வருவது. இத்தகைய மரபுகள் மக்கள் வாழ்க்கையைப் பண்புள்ளதாக மாற்று வதால் இவற்றிற்கு மக்கள் மிகுந்த முக்கியத்துவம் அளிப்பதோடு, அவற்றை உரியவாறு கடைப்பிடிப்பதிற் கூடிய கவனம் செலுத்துகின்றனர். இந்துப்பண்பாடு பற்றிக்கூறும் கருத் துக்கள் காலம் தோறும் எழுந்த சமய இலக்கியங்களில் வெளிப்படுத்தப் படுகின்றன. இந்த வகையில் இந்துப் பண்பாடு பற்றிக்கூறும் இலக்கியங்க ளாக வேதம், ஆகமம், இதிகாச புராணங்கள், தர்ம சாஸ்திரங்கள், தேவாரம், திரு வாசகம், திவ்விய பிரபந் தங்கள் போன்ற இலக்கியங்களைக் குறிப்பிடலாம். இந்த இந்துப் பண்பாட்டுமரபு வேதமரபு, ஆகம மரபு, புராணமரபு, கலைமரபு, ஆன்மீக மரபு ஆகிய தலைப்புக்களில் வகைப் படுத்தி நோக்கப்படுகின்றது. ஆயினும், இங்கு நாம் வேதங்களின் வழிவந்த இந்துப் பண்பாட்டு மரபுகள் பற்றி நோக்கு வோமாயின் பாரதத்திலே ஆன்மீக சிந்தனை வளர்ச்சிக்கு அடிப்படையாகத் திகழும் வேதங்கள் இந்துப்பண்பாட்டு மரபின் ஊற்றாகத் திகழ்கின்றன. இந்துப் பண்பாட்டு மரபை வேதங்கள், சமயம், தத்துவம், மொழி ஆகியவற்றின் அடிப்படையில் வளம்படுத்தியுள்ளன.

வேதகாலத்தில் இந்துப் பண் பாடு உருவாக்கப்பட்டது என்பதையும் இக்காலப்பகுதியில் வாழ்ந்த ரிஷிகளின் பங்களிப்பு இதற்கு முக்கியமாக இருந்தது என்பதையும் இவர்கள் ஆசார அனுட்டானங்களில் சிறந்தவர்களாக விளங்கித் தமது உயர் கருத்துக்கள் மூலம் சிறந்த பண்பாடுடைய வாழ்க்கைக்கு வழிகாட்டியுள்ளார்கள் என்பதையும் பாரதியாரின்

"மரணமில்லாத இந்து நாகரிகமாகிய
கற்பக விருட்சத்திற்கு ஆதியிலே
விதை ஊன்றியவர்கள் வேத ரிஷிகள்"

என்ற கருத்து எடுத்துக் காட்டுவதாக விளங்குகின்றது.

வேதங்களில் புரோகித மண்டல வேதங்களாக இருக்கு, யசுர், சாமம் ஆகிய மூன்றும் திரயீவித்தியா என்ற நிலையில் சிறப்பிக்கப்பட்டுள்ளன. இவை எடுத்து கூறிய கருத்து உயரிய தெய்வக் கொள்கையாகும். தெய்வீக வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு மக்களின் நல் வாழ்விற்குரிய ஆற்றல் வழிபாட்டின் வழி கிட்டியது. பூரண வாழ்விற்கும், ஆன்ம ஈடேற்றத்திற்கும் இவை உதவின. மக்கள் பண்புடன் வாழ்வதற்கேற்ற உயர்ந்த அறிவுரைகள் வேதங்களில் இடம் பெற்றுள்ளன. இருக்கு வேத இறுதியில்

"எல்லா மாந்தரும் இணக்கமாய் வாழ்ந்து வருவார்களாக
எல்லோரும் அன்புடன் உரையாடட்டும் அனைவர்
உள்ளங்களிலும் ஒற்றுமை உணர்வு நிலவட்டும்....."

என்பது போன்ற உயர்ந்த தத்துவ சிந்தனைகள் இடம் பெற்றுள்ளன. இதே போன்று யசுர் வேதம்

"எல்லா உயிர்களும் என்னை நண்பனாகக் கருதட்டும் நானும் எல்லா உயிர்களையும் என் நண்பனாகவே கருதுவேனாக"

என்று கூறுகின்றது.

அதர்வ வேதத்திலும் தெய்வங் களை விட வேறான சக்திகளுக்கும் முக்கியத்துவம் அளித்து வந்தமை யையும் காணலாம். இவ்வேதத்தில் சமயத்தின் முக்கிய நோக்கமாகச் சாந்தப்படுத்தல், ஆசீர்வாதம் பண்ணு தல், துதித்தல், சபித்தல், போன்றன விளங்குகின்றன. அத்துடன் இதில் வேதங்களில் ஒன்றாக வைத்து எண்ணப்படும் பல சிறந்த தத்துவப் பாடல்களும் காணப்படுவதுடன் மக்களின் சமய நம்பிக்கைகள், கிரியை மரபுகள், மந்திரங்கள் இயற்கைச் சக்திகளைப் பெற்றோராகக் கொண்டு சமத்துவ உணர்வை வற்புறுத்தல் போன்ற விடயங்களும் உள்ளடக்கப் பட்டுள்ளன. பிற்காலத்தில் இந்து மதத்தில் மக்களின் பண்பாட்டு மரபுக்கு வழிவகுத்த நூல்களில் ஒன்று பகவத்கீதையாகும். இது வற்புறுத்தும் உயர்ந்த சிந்தனை கர்ம சந்நியாச மாகும். பலனில் பற்று வைக்காத மனப் பக்குவத்தோடு ஒருவன் கடமையைச் செய்ய வேண்டும் என்ற உயர்ந்த கருத்தை வற்புறுத்துகின்றது. இந்த சிந்தனைக்கு முன்னோடியாக யசுர் வேதத்தில் பல கருத்துக்கள் வற்புறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

"இந்த உலகில் கர்மம் அல்லது செயல் புரிந்தவாறே நூறு ஆண்டுகள் வாழ விரும்பு. இவ்வாறு பயன்கருதாது பணிபுரிகையில் உனது செயல்கள் உன்னைப்பற்றமாட்டா. விடுதலை பெறுவதற்கு உள்ள வழி இதுவே"

இவ்வாறு தனிமனித மேம்பாட்டுக்கன்றி வழிபாட்டு மரபிலும் பல புதிய மாற்றங்களை ஏற்படுத்துவதில் யசுர் வேதம் பெரும் பங்காற்றியுள்ளது.

இங்கு தெய்வத்தை குறித்துப் பல பெயர்களை கூறும் புதிய முறையும் காணப்படுகின்றது. இது முன்னர் சிவாகம வழிபாட்டில் சிறப் படைந்து காணப்படுவதும் குறிப்பிடத் தக்கதாகும். அடுத்து பெயர்கள் பல கொண்டு வழிபடும் முறையும் "நமசிவாய" என்ற ஐந்தெழுத்து மந்திரம் இந்து விக்கிரகவியல் சிவனது தெய்வீக வரலாறு ஆகியவை பற்றி விடயங்களை எடுத்துக் கூறப்படு கின்றன. வேத வரிசையில் முதன்மை பெறும் இருக்கு வேதம் பக்திநெறி, தோத்திரமரபு ஆகியவற்றிற்கு முன்னோடியாக விளங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பக்தியின் ஆரம்பக் கருவை இங்கு வருணனது பாடல்களில் காண்கின்றோம். வழிபாட்டு முறையில் உறவுமுறை கடைப்பிடிக்கின்றது. உதாரணமாக வழிபடுவோருக்கும், வருணனுக்குமிடையிலான தோழமை முறை பக்திநெறியில் இறைவனை தந்தையாக, தாயாக, சகோதரனாக கருதி வழிபடுதல் முதலானவற்றைக் குறிப்பிடலாம். இறைவனை இத்தகைய நிலையில் வழிபடுவதற்குரிய சாதனங் களாக அமைந்தவை தோத்திரங்கள் ஆகும். இந்து சமய மரபிலே தோத்திரங்கள் வேதங்களிலேயே தமது ஆரம்பத்தைக் கொண்டுள்ளன எனலாம்.

"பிரபஞ்சத்தின் தந்தையாக இறைவனை நாம் இரவும் பகலும் பாடல்களால் போற்றுவோமாக" என்று இருக்க வேதம் கூறும். இங்கு "கீர்" என்ற பதத்தால் தோத்திரம் குறிக்கப்படு கின்றது. வழிபாட்டின் நோக்கம் இறைவனது திருவருளைப் பெறுவ தாகும். இக்கருத்துக்கமையவும் இருக்கு வேதப்பாடல்கள் உள்ளன. அடுத்து இறைவனைப் புகழும் பாடல்களும் இருக்கு வேதத்தில் காணப்படுகின்றன. இவை பிரமன் என்று குறிக்கப்பட்டுள்ளன. இச்சொல் மந்திரங்களை குறித்தது. வழிபாட்டில் இறைவனையும் வழிபடுபவனையும்

இணைக்கும் சாதனங்களும் தெய்வீகப் பாடல்களாகிய தோத்திரங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. இம்மரபு பிற்காலச் சமய மரபில் பக்தி மரபை வளர்ப்பதற்குரிய சிறந்த சாதனமாக அமைந்தது. பிற்காலச் சமய வழிபாட்டு மரபில் இறைவன் வழிபாட்டின் கண்ணே தேவார திருவாசகம், பன்னிரு திருமுறைத் தோத்திரப் பாடல்களையும் ஆழ்வார்களின் திவ்விய பிரபந்த பாடல்களையும், திருவருட் செல்வர்களாகிய அருணகிரிநாதர் குமரகுருபரர், தாயுமானவ சுவாமிகள் போன்ற பெரியார்கள் பாடிய தோத்திரப் பாடல்களையும் பாடித்துதித்தல் விசேட அம்சமாயுள்ளது. தோத்திரப் பாடல்களை இசையுடன் பாடுதல் எமது மரபாகும். வேதப்பாடல்களை இசையுடன் பாட வழிவகுத்தது சாமவேதம் வேதப்பாடல்களை ஸ்வரத்தோடும் தேவாரங்களை பண்ணோடும் பாடுவது எமது சமய மரபாகும். இறைவனுக்குரிய பூசை உபசாரங்களில் இதுவும் ஒன்றாக விளங்குகின்றது.

இக்கால சமயத்தின் இன்னுமொரு முக்கிய அம்சம் யாதெனில் பல தெய்வங்களில் ஒரே பரம்பொருள் தத்துவத்தைக்காணும் முறையாகும். வைதீக சமயத்தின் முக்கிய பண்பு ஒருமையிற் பன்மையையும் பன்மையில் ஒருமையையும் இனம் காணும் முயற்சியாகும். அக்கினியை ஏனைய தெய்வங்களாகிய இந்திரனாகவும் அதிதியாகவும் போற்றும் மரபு இதற்குச் சிறந்த உதாரணமாகும். ஆன்மீக சிந்தனைக்கு வழிவகுத்த வேதப் பாடல்களில் பரம்பொருள் தத்துவம் சிறப்பாக இடம்பெறுகின்றது. பகவத்கீதையில் மேம்பட்ட நிலையில் விரித்துக்கூறப்படும் பரம்பொருட் தத்துவ சிறப்பிற்கு வேதப்பாடல்கள் வழி வகுத்துக் கூறும் கருத்துக்கள் முன்னோடியாக விளங்கியவை போற் காணப்படுகின்றது.

இருக்கு வேதத்தில் காணப்படும் தெய்வங்களது வீரதீரச் செயல்களை வேதப் பாடல்கள் விதந்து போற்றுகின்றன. இந்திரன், விஷ்ணு, உருத்திரன், பற்றிய பாடல் களில் இவ்வீரச்செயல்கள் சிறப்பிடம் பெறுகின்றன. இந்நிலை புராணங்கள் போற்றும் பரம்பொருள் தத்துவ சிறப்பிற்கும் முன்னோடியாக அமைந்திருக்கலாம். மேலும் இருக்கு வேதத்தில் காணப்படும் மறுமை பற்றிய சிந்தனைகளும் உபநிடத சிந்தனைக்கு வித்திட்டது எனலாம். வேதங்களில் இடம் பெறும் இறப்புப் பற்றிய பாடலும், பிதிரர் பற்றிய பாடல்களும், யமன் பற்றிய பாடல்களும் இறப்புக்குப்பின் ஆன்மா பற்றிய கருத்துக்களை கொண்டுள்ளன. உபநிடதங்களில் சிறந்ததாகிய கடோபநிடதம் ஆன்ம விசாரணைக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது. இங்கு மறுமை பற்றிய கருத்துக்களும் உபநிடத சிந்தனைகள் விரிவு பெற வழிகோலின எனலாம்.

இவ்வாறு வேதங்கள் இந்துப் பண்பாட்டின் பல்துறை சார்ந்த அம்சங்களை வளம்படுத்தியுள்ளன. சமயம், தத்துவம் ஆகிய இரண்டு துறைகளும் இவற்றில் முக்கிய இடம் பெறுகின்றன. பரம்பொருட் கொள்கை, வழிபாட்டு மரபு, பக்திநெறி, தோத்திரமரபு, இசை மரபு, தெய்வீக வரலாறு, உலகியல் நம்பிக்கை, மறுமைக்கோட்பாடுமுதலிய இன்னோரன்ன பண்பாட்டுச் சிந்தனைகள் வளம்பெற வேதங்களே கருவூலமாக விளங்கியுள்ளன என்று கூறுவதில் மிகையில்லை. இத்தகைய அம்சங் களை ஆராயுமிடத்து வேதங்களின் முதன்மையை நாம் நன்றாக உணர முடிகின்றது.

# ஈழத்து தமிழரின் கலை, கலாச்சாரங்களைப் பேணுதலும், வளர்த்தலும்

மு. சுகந்தினி
A/L 2006 ( Arts)

ஈழத் தமிழகம் பிரதேச ரீதியாகப் பிரிந்திருப்பது யதார்த்த நிலை, வரலாறு ஏற்படுத்திய இப்பிரதேசப் பிரிவுகளை வரலாறு தான் நீக்க வேண்டும். நீக்கும் பிரதேசப் பிரிவுகள் காரணமாக ஒவ்வொரு பிரதேசத் தமிழ் மக்களிடை யேயும் வெவ்வேறு விதமான சமூக அமைப்பு, வழிபாட்டு முறைகள், கலை வெளிப்பாடுகள், பழக்க வழக்கங்கள், சடங்காசாரங்கள் என்பன நிலவுகின்றன. தத்தம் பிரதேசங்களின் தனித்துவங் களை அவ்வப் பிரதேசத் தமிழ் மக்கள் பெருமையாகக் கருதுகிறார்கள். ஒரு பிரதேசத்தில் பெருமையாகக் கருதப் படும் தனித்துவம் இன்னொரு பிரதேச மக்களுக்குத் தம் பிரதேசத் தனித்து வத்திலும் குறைபாடுடையதாக தோன் றக் கூடும். உதாரணமாக கிழக்கு மாகாண நாட்டுப் பாடல்களும் நாட்டுக் கூத்தும் ஆகம முறையில் அமையாத வணக்க முறைகளும் வடமாகாண தமிழ் மக்களுக்கு உயர்ந்தனவாகத் தெரியாதிருக்கக் கூடும். வட மாகாணத் தில் சாதி அமைப்பு முறையையும் அதன் பயில் நிலையையும் பழக்க வழக்கங்களையும் கிழக்கு மாகாண மக்கள் பெரிதாக நினைக்காமல் இருக்கக் கூடும். எனினும் இவ் வேறு பாடுகளுக்கிடையே பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன என்பது யதார்த்த மாகும். மொழி, சமயம், சமூக அமைப் பில் சில அம்சங்கள், சில பழக்க வழக்கங்கள், உறவு முறைகள் என்ப வற்றிற்கிடையே காணப்படும் ஒற்றுமை களே ஈழம் வாழ் தமிழ் மக்களை ஈழத் தமிழர்களாக இனம் காட்டுகின்ற அம்சங்களாகும்.

பிரதேச ஒற்றுமைகள் யதார்த்த மானவை. ஆனால் நிரந்தரமானவை அல்ல என்ற உண்மையைப் புரிந்து கொண்டு கலாசார ஒற்றுமைகளைக் கண்டறிந்து அவற்றினடிப்படையாகப் பிரிந்து கிடக்கும் ஈழத் தமிழ் மக்களை இணைக்கின்ற முயற்சியில் தீவிரமாக ஈடுபட வேண்டிய ஒரு கால கட்டம் இது.

இம் முயற்சிகள் முன்னரும் இங்கு நடைபெறாமல் இல்லை. 1956க் குப் பிறகு ஈழத்து தமிழரின் தனித்துவ மான கலாசார அம்சங்களைக் கண்டறி யும் முயற்சிகள் நம்மோரால் மேற் கொள்ளப்பட்டுள்ளன. ஈழத்துத் தமிழ். இலக்கியம், ஈழத்துத் தமிழ் நாடகம், ஈழத்து இசை, ஈழத்துத் தமிழ்ச்சினிமா என்ற வகையில் இம் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. 19ஆம் நூற்றாண்டில் இச் சிந்தனைகளுக்கு விதையிடப்பட்ட தாயினும் இவற்றில் பிரக்ஞை பூர்வமான செயற்பாடுகள் 1956க்குப் பின்னரேயே தோன்றின. இன்று ஈழத்துத் தமிழரின் தனித்துவமான கலாசாரத்தை அதன் சகல பரிமாணங்களுடனும் வெளிப்படுத்துகின்ற அரசியல் தேவை ஒன்று உருவாகியுள்ளது.

மனிதனை மனிதன் மதிக்கின்ற அனைத்துக் கலாசாரங்களையும் தமது கலாசாரமாக மதிக்கின்ற ஒரு மனித கலாசாரமே உன்னதமானது. இனத் தனித்துவம் பிரதேச தனித்துவ கலா சாரங்கள் மனிதர்களைக் கூறு போடு கின்றன என்பது உண்மையாயினும் இத் தனித்துவ வெளிப்பாடுகள் சரித்திரப் போக்கில் தவிர்க்க முடியாத அம்சங்கள் ஆகும். இவற்றின் ஊடாகத் தான் உன்ன தமான மனித கலாசாரம்

உருவாக முடியும் என்ற உண்மையை யும் கலாசாரத் தனித்துவம் பேசும் நாம் மனதில் இருத்தல் வேண்டும்.

ஈழத்திலே தமிழர், வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத் திலும் வாழ்ந்து வருகிறார்கள். வடக்கி லும், கிழக்கிலும் வாழும் தமிழர்கள் பாரம் பரியமாகஅப்பிரதேசங்களில் வாழ்ந்து வருவதனால் அவர்களிடையே ஒரு நீண்ட கலாசார மரபு காணப் படுகிறது. தென்னிந்திய கலாசாரத்தின் அம்சங்கள் பல அதிற் காணப்படினும் புவியியல், அரசியல், பொருளியல் காரணங்களினால் சில தனித்துவமான பண்புகளையும் இக்கலாசார மரபு கொண்டுள்ளது.

முதலில் ஈழத்து தமிழர் இடையே பயில் நிலையில் உள்ள கலை, பண்பாட்டு, அம்சங்களை இனங் கண்டு கொள்ளுதல் அவசியமாகின்றது. முதலிற் கலை பற்றி நோக்குவோம்.

ஈழத்து தமிழர்களின் கலை என்ற வரையறைக்குள் வருவனவற்றை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று உயர் மரபுக் கலைகள் இன்னொன்று உப மரபுக் கலைகள். உயர், உப என்று இக்கலை களைப் பிரிப்பது இவற்றின் தாரதம்மி யத்தைப் பொறுத்தது அல்ல. ஏனெனில் இன்னொரு கலை வடிவமும் தம்மள வில் ஒரு முழுமையான அமைப்பைக் கொண்டிருக்கும். இக் கலைகளை மேலும் புரிந்து கொள்ளவே இத்தகைய தோர் பிரிப்பு அவசியமாகின்றது.

உயர் மரபுக் கலைகளாகக் கருதப்படுபவை ஈழத் தமிழர் மத்தியில் பயில் நிலையிலுள்ள பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம், சிற்பம், ஓவியம், தவில், நாதஸ்வரம் என்பனவாம். இவ் உயர்வு மரபுக் கலைகள் சாஸ்திர ரீதியில் அமைந்தவை. இன்னவாறுதான் இவை பயிலப்பட வேண்டும். வெளிப் படுத்தப்பட வேண்டும் என்ற வரையறை களைக் கொண்டவை. இவற்றால் இவை, இறுக்கமான மரபு பேணும் தன்மை கொண்டனவாகவும் மாறாத் தன்மை உடையனவாகவும் உள்ளன.

உப மரபுக் கலைகளாகக் கருதப்படுபவை நாட்டுக்கூத்து, நாட்டார் பாடல், கிராமியச் சிற்பம், கிராமிய ஓவியம், கிராமிய இசைக் கருவிகளான பறை, உடுக்கு, தப்பு, சவணிக்கை ஆகியவற்றை வாசித்தல் கிராமிய நடனங்களான கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், ஒயிலாட்டம் என்பனவா கும். இவை தமக்கென சில கட்டுப்பாடு களையும் வரையறைகளையும் கொண் டிருப்பினும் முன் குறிப்பிட்ட உயர் மரபுக் கலைகளைப் போல சாஸ்திர ரீதியில் அமையாதவை. திட்டவட்டமான தும், சாஸ்திர ரீதியானதுமான கோட் பாடுகளை இவை கொண்டிராமை யினாலும் கிராமிய மக்களின் வாழ்க்கை முறை, மனோபாவம், உலகனுபவம் என்பவற்றிடையே மாறும் இயல்புடை மையினாலும் காலத்துக்குக் காலம் இவற்றிற் சிற்சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளமையையும் காணலாம்.

இவ்விரு வகைக் கலை மரபுகளிலும் ஈழத்தமிழரின் கலை மரபாக வெளியிற் சித்தரிக்கப்படுவது உயர் மரபுக் கலைகளே ஆகும். இம்மரபு முன்னர் குறிப்பிட்டபடி சாஸ்திர ரீதியில் அமைந்தமையினாலும் ஏற் கனவே சில பாடசாலைகள் பல்கலைக் கழகம் தனிப்பட்ட சில ஸ்தாபனங்கள் ஆகியவற்றிற் பயிற்றப்படுவதனாலும் படித்தோரும் சமூகத்தின் உயர் குழாத் தினரும் அக் கலைகளில் ஈடுபாடு காட்டுவதனாலும் இக் கலைகளை ஈழத் தமிழரின் கலைகளாகக் கூறும் மரபு ஏற்பட்டிருக்கலாம். அத்தோடு பயில் வோர் தன்மையும் பயிலப்படும் முறை மையும் அதனைச் செம்மை வாய்ந்த கலை மரபாக ஆக்கியுமுள்ளனது. இவ் வுயர் கலை மரபு இன்று ஓரளவு வளர்ச்சி பெற்ற நிலையிலுமுள்ளது. எனவே இக்கலைகள் பற்றிய சிந்தனை வளர்ச்சியை இக்கலை பயிலுனரிடமும் புத்தி ஜீவிகளிடமும் பொது மக்களிட மும் பரப்பும் பணியுடன் இக்கலை களைத் திட்டமிட்டு வளர்த்தெடுக்கும் பணியைப் பற்றி விவாதிப்பதும் செயற்படுவதும் அவசியமானதாகின்றன.

# வாழ்வு நலம்பெற நல்லதைச் செய்வோம்

க. துஸ்யந்தினி
A/L 2005 Arts

"மானிடராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும்" மனிதப் பிறப்பு பெற வேண்டுமெனில் பல புண்ணியங்கள் செய்ய வேண்டும் அந்த வகையில் மனிதனாகப் பிறந்தவர்கள் புண்ணியம் செய்தவர்களாவர். இம்மானிட வாழ்விலே காலடி பதித்திருக்கும் எல்லோரும் நல்லவர்களாக இருக்க வேண்டும். தீயனவற்றை விலக்கி வாழ வேண்டும். ஔவை யாருடைய பாடலிலே அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது. அதனிலும் கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது. என்று கூறப்பட்டுள்ளது. அரிய பிறவியான மானிடப் பிறவி எடுத்தவர் கள் நல்லதையே செய்ய வேண்டும் இவ்வாறு நன்மை செய்து வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் ஒரு சிலரேயா வார்கள்.

நல்லதோர் வீணை செய்து அதனைப் பாதுகாக்காது விடுவது போல் இன்று மனிதர் தம் இனத்தையே ஆயிரம் சாதிகளாக வகுத்து அதிலே ஏற்றத்தாழ்வு கொண்டு அதனால் சண்டைகள் சச்சரவுகளுடன் வாழ்கின்றார்கள். அதனை முதலிலே ஒழிக்க வேண்டும். இதனையே பாரதியார் தன் பாடலிலே

சாதிகள் இல்லையடி பாப்பா
உயர்ச்சி தாழ்ச்சி கொள்ளல் பாவம்

என்றும் சாதி வேறுபாட்டை ஒழிக்க வேண்டும் சாதிகள் இல்லாத சமூகமாக மாற வேண்டும் என வலியுறுத்திச் சென்றுள்ளார்.

வாழ்க்கை என்பது ஒரு கலை. ஒரு சாரார் எப்படியாவது வாழ்வது தான் வாழ்வு என்பர். இன்னொரு சாரார் இப்படி வாழ்வது தான் வாழ்க்கை என்று கருதி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். எப்படியாயினும் ஒழுங்காக நல்ல முறையில் வாழ்வதையே சனங்கள் விரும்புகின்றார்கள்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்றது திருக்குறள். நமது வாழ்க்கை நல்வாழ்வு பெற்று நலமாக வாழ்வதற்கு நல்லதையே செய்ய வேண்டும். மனித மனம் ஒரு விசித்திரப் பொருள் "மனித மனம் ஒரு குரங்கு" என எம் முன்னோர்கள் கூறியதிலும் உண்மை இருக்கவே செய்கின்றது.

நவநாகரிக செயற்பாடுகளால் "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக" நேரத்துக்கு நேரம் மனிதர்கள் மாறிக் கொண்டிருக்கிறார்கள். இதனை சினிமாப் பாடல்களும் தமிழ் கவிதைகளும் கூறுகின்றன. ஆனால் மனிதன் சிறிதும் சிந்திப்பதாக தெரியவில்லை. மனிதனை விலங்குகளிலிருந்து வேறுபடுத்துவதே சிந்தனை. இதற்கமைய தீயனவற்றை சிந்திக்காது நல்லவற்றையே சிந்தித்துச் செயற்பட வேணடும். ஒருவரிடத்தே அன்பு, பண்பு, இரக்கம், பாசம், பொறுமை, நேர்மை முதலிய நல்லொழுக்கங்கள் கல்வியின் மூலம் கிடைக்கப்பெற்றால் நல் வாழ்வு வாழலாம் என்பதில் எவ்வித தடையுமில்லை. "அன்பெனப்படுவது தன் கிளை செறாமை" என்ற சங்கப் பாடலிலே அன்பு எனப்படுவது தன் உறவினர்களை கேடடையாது காத்தல் ஆகும். திரு வள்ளுவர் திருக்குறளிலே ஒவ்வொரு அறம் பற்றியும் கூறியுள்ளார். திருக்குறளின் முதற்பாலே அறத்துப் பாலாகும். இங்கு அன்பு பற்றி,

"அன்புக்குமுண்டோ அடைக்கும்தாள் ஆர்வலர்
புண் கண்ணீர் பூசல் தரும்"

என்று கூறுகின்றது. அன்பினால் சாதிக்க முடியாதது எதுவுமேயில்லை.

குடும்பம் என்னும் கோயிலிலுள்ளவர்களிடமும் அன்பு செலுத்த வேண்டும் ஆசிரியனிடம் அன்பாக

இருக்க வேண்டும். நண்பனிடம் அன்புடையவராக இருக்கவேண்டும். எதிர்கால சமுதாயத்திலே நற்பிரஜை யாக வாழவேண்டும். சமூகத்தில் மதிப்பாக இருக்கவேண்டுமெனில் சமூகத்தில் அன்புடையவராக இருத்தல் வேண்டும். திருவள்ளுவர் ஔவையார் போன்றவர்களின் நூல்களைப் படித்து அறிய வேண்டியது அவசியம். நாம் வாழும் வாழ்க்கை சிறந்த முறையில் அமையவேண்டும். எனவே பிறருக்கு நன்மை செய்து வாழ வேண்டும். நன்மை செய்ய முடியா விட்டாலும் தீமையாவது செய்யாதிருக்க வேண்டும். "வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்ற கூற்றுக்கிணங்க நாம் செய்வதே திரும்ப நமக்கு கிடைக் கிறது. இதனையே,

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்கின்ற பழமொழி சிறப்பிக்கின்றது.

இவ் வையகத்திலே வாழ் வாங்கு வாழவேண்டுமெனில் நாம் பெரியவர் வார்த்தையைக் கேட்க வேண்டும். அவர்களை மதிக்க வேண்டும். "அறிவில் சிறந்தவர்களைப் போற்ற வேண்டும்" நற்பண்புகளுடன் கூடிய கல்வியைப் பெற வேண்டும். கல்வி கற்காதவர்கள் ஏமாளிகளாக மாறுகின்றார்கள். எந்தவொரு மனிதனும் கல்வி கற்றிருக்க வேண்டியது அவசியமே. ஒரு கடிதமாவது எழுதும் அறிவு கொண்டிருக்க வேண்டும். இன்றைய சூழலிலும் ஒருவருக்கு வரும் கடிதத்தை இன்னொருவர் மூலமாக வாசித்து அறிந்து கொள்ள வேண்டிய நிலை துன்பமான செயலாகவே உள்ளது. இதனாலே தான் கல்வியின் அவசியத்தைப் புரிந்து கொள்ள முயல வேண்டும்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்றும்
"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக" என்றும் கூறுகின்றது.

ஒரு மன்னனுக்கு அவனுடைய நாட்டிலேதான் சிறப்பு கற்றவருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று கல்வியின் அவசியத்தை வலியுறுத்து கின்றார்கள்.

விஞ்ஞான மயமான இவ் வுலகிலே மனிதன் மனிதனாக வாழ வைப்பது நற்பண்புகள் ஆகும். மக்கள் பண்பு இல்லாத வரை

"அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பில்லாதவர்" என்பர்.

ஓரறிவுடைய மரத்திற்கு உவமையாக்கி விடுவார்கள். பண்பெனப்படுவது ஒரு வனது துன்பத்தைக் கண்டு அவனுக்கு உதவி செய்வதும் உதவி செய்தவரை நன்றி மறக்காமல் செய்வதுமே. செய்ந் நன்றிப்பண்பில் கர்ணன் கும்ப கர்ணன் சிறந்து விளங்கக் காண்கின்றோம். நன்றி மறத்தலில் வரும் பெரும் கேட்டை கந்தபுராண இதிகாசங்கள் விளக்குகின்றன. இதனை

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு" என்றும்
"உப்பிட்டவரை உள்ளளவும் நினை"

என்றும் செய்நன்றிப் பண்பு தமிழரிடம் முக்கியத்துவம் பெறுகிறது.

கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வாழாது உண்மை நெறியில் நின்று தர்ம வழியைப் பின்பற்றி வாழவேண்டும். மனம், வாக்கு, காயம், என்ற திரிகரணசுத்தியினால் நன்மையையே செய்யவேண்டும் உண்மையையே தனது இலட்சியமாகக் கொண்டவன் அரிச்சந்திரன்.

"கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலேன்" என்று உண்மை பேசுவதையே உயிரிலும் மேலாக கொண்டு வெற்றி பெற்றவன். இந்த அரிச்சந்திரனைப் போல் வாழ்விலே பொய் கூறாது இருந்தால் நல்வாழ்வு பெறலாம். அறிவை வளர்ப்பதன் நோக்கப் என்னவெனில் ஒழுக்கத்தை வளர்ப்பதேயாகும். என்ற கருத்தை கல்வி நிபுணர்களும் உளநூல் ஆராய்ச்சி யாளர்களும் ஒத்துக்கொண்ட பேருண் மையாகும். நமது வாழ்க்கை ஒழுங்காக அமைய நாட்டின் எதிர்காலம் ஒழுக்க நெறியில் வளர இளம் சமுதாயத்தி லிருந்தே ஆணிவேர் போல் ஊன்றப்பட வேண்டும். இவ்வாறான நல்லொழுக் கங்களால் மட்டுமே நல்வாழ்வு வாழமுடியும்.

மனிதன் இவ்வுலகிலே அடைய வேண்டிய செல்வங்களாக அறம்,

பொருள், இன்பம், வீடு ஆகிய நால் வகை அறங்களை மேற்கொள்ள வேண்டும். ஒருவன் தனக்குரிய கடமை களைச் சரியாகச் செய்யவேண்டும். ஒழுக்கத்தோடு வாழவேண்டும் என்பதை யும் தர்ம வழியில் நட, கணவனைத் தெய்வமாகப் போற்று, மனைவியை கண்கலங்காது காப்பாற்று. வீட்டுக்கு வரும் விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று விருந்து அளி என்பன பல அறங்களாகும். அறங்கள் என்பது எவற்றை நீக்க வேண்டும் என்பதை,

"அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்"

என்று கூறுகின்றது. சிலப்பதிகாரம். மணிமேகலை நாலடியார் ஆசாரக் கோவை என்பனவும் அறம் கூறுவன வாக உள்ளன.

ஒருவனுடைய வாழ்க்கைக்கு பொருளானது அவசியம். நேரிய வழியில் பொருளை ஈட்ட வேண்டும். பொருள் வாழ்வுக்கு முக்கியமானது.

"பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை
அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை"

என்பது திருக்குறளாகும். களவெடுத் தல், கொள்ளையடித்தல் ஆகிய செயல்களால் கிடைக்கும் பொருள் நிலைக்காது. பொருளை அளவுக்கு மீறி செலவளிக்ககூடாது. இதனையே "ஆற்றில் போட்டாலும் அளந்து போடு" என பழமொழியில் கூறப்பட்டுள்ளது. தேவைக்கு மீறிய பொருட்களை வைத்திருப்பதனால் நன்மை ஒன்று மில்லை. அதனை மற்றவர்களுக்கு கொடுப்பதனாலே நன்மை பெறமுடியும் இல்லாவிட்டால் அதனால் நிம்மதி யின்மையும் ஏற்படும் இதனையே,

"பொருளானாம் எல்லாம் என்று ஈயாது இவறும்
மருளானாம் மாணாப் பிறப்பு" என்ற குறளினூடாக காட்டலாம்.

ஒரு குடும்பத்திலே ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலையில் வாழவேண்டும் இன்றைய நிலையில் நாம் இருவர் நமக்கு ஒருவர் என்ற நிலை மாறி ஒரு ஆண் எத்தனை பெண்களையும் திருமணம் செய்கின்றார்கள். அது போலவே பெண்களின் நிலையும். இன்று பெண்கள் சுதந்திரம் என்னும் போர்வையால் அளவுக்கு மீறி நடக் கின்றார்கள். அதனை விடுத்து அற நெறியில் வாழ்வதே சிறப்பான வாழ்க்கையாகும். தொலைத்தொடர்பு சாதனங்களும் இன்று முக்கிய பங்கு வகிக்கின்றன மற்றும் நலமாக வாழ்வதற்கு சுத்தமும் முக்கியமாகும். "சுத்தம் சுகம் தரும்" என்றும் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்றும் போற்றுகின்றது. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்க்கை" என்பதற்கிணங்க நல்லதை செய்ய வேண்டும்.

"இன்றைய இளைஞர்களே நாட்டின் நாளைய தலைவர்கள்" என்பதிற்கிணங்க அவர்களை பெரியவர் களாகிய பெற்றோர்கள் நல்வழிப்படுத்த வேண்டியது அவசியமே "தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்." எனவே சிறுவர்களுக்கு புத்திமதிகள் கூறவேண் டும். "இளங்கன்று பயமறியாது" அத னால் அவர்கள் குழப்படி செய்வார் கள். அதனை திருத்தி நாட்டில் வள மாக வாழ வகை செய்தல் வேண்டும். இளைஞர்களும் யுவதிகளும் தம் எண்ணப்படியே நடந்து கொள்கின்றார் கள். பிறருக்கு உதவி செய்யும் மனப் பாங்கு குறைந்து வருகின்றது. ஒரு பயணம் செய்து கொண்டிருக்கும் பேருந்தில் இளைய வயதுடையவர்கள் இருக்கின்றார்கள். வயது போன முதியவர்களுக்கும் கைக் குழந்தை யுடன் வரும் தாய்மார்களுக்கு இடம் கொடுக்காது கண்டும் காணாதவர்கள் போல் இருக்கின்றார்கள் இந்த நிலை மாற வேண்டும்.

எனவே வாழ்க்கை வாழும் போது பன்னாடை போல தீய எண்ணங் களை எடுத்து நல்லதை தவிர்க்காமல் நீரை விட்டு பாலை மட்டும் உண்ணு கின்ற அன்னப் பறவையைப் போல போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து என்ற மனநிறைவோடு வாழ்வதனால் மட்டுமே நாம் வாழ்வில் நலமாக இருக்க முடியும் எனவே வாழ்வு நலம் பெறுவதற்கு நல்லதையே செய்வோம் தீயதை விலக்குவோம்!

ஓங்குக நற்பண்புகள்!
ஒழிக தீய பழக்கங்கள்!

# ஓயாமல் பேசியவள்

இ. கல்பனா
A/L 2006 $A_2$

முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் வணிகன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒரு மகள் இருந்தாள். அவள் எப்பொழுதும் ஓயாமல் தொண தொணவென்று பேசிக் கொண்டிருப்பாள்.

வாயாடியான அவள் யாரையும் மதிப்பதில்லை. அவள் எங்கே இருந்தாலும் அங்கே கலகம் ஏற்படும். அவளின் குறும்புகளைப் பற்றி வெளியூரில் உள்ளவர்களும் பேசத் தொடங்கினார்கள்.

வாயாடிப் பெண்களைத் திருத்த அந்த ஊரில் ஒரு வழக்கம் இருந்தது. மலை உச்சியிலுள்ள முருகன் கோயிலுக்கு அவர்களை அழைத்துச் செல்வார்கள். அதற்குள் வாயாடிப் பெண்களின் நாக்கை நீட்டச் சொல் வார்கள் உள்ளிருக்கும் வெள்ளை எலும்புகள் அவர்கள் நாக்கை நன்றா கக் கடித்துவிடும். பேசும் போதெல்லாம் பல நாட்களுக்கு வலி இருக்கும். இதனால் பல பெண்கள் தங்கள் வாயாடித்தனத்தை விட்டு விட்டார்கள்.

வணிகனும் தன் மகளை அங்கு அழைத்துச் சென்றான். புற்றுவைத்தியம் எந்தப் பயனையும் அவளுக்குத் தரவில்லை. வழக்கம் போல அவள் வாயாடியாகவே இருந்தாள்.

அந்த ஊரிலிருந்த யாரும் அவளைத் திருமணம் செய்து கொள்ள முன்வரவில்லை. அவளுக்கோ வயதா கிக் கொண்டே வந்தது.

வெளியூரில் இருந்து வந்த இளைஞன் ஒருவன் அவளைத் திருமணம் செய்து கொள்ள ஒப்புக் கொண்டான்.

இதை அறிந்த ஊர் பெரியவர்கள் “தம்பி! உன்னைப் பார்த்தால் நல்லவனைப் போலத் தெரிகிறது. அவள் பயங்கரமான வாயாடி. யாரையும் மதிக்கமாட்டாள் உன் வாழ்க்கையே அவள் நரகமாக்கி விடுவாள். நாம் சொல்வதைக்கேள் அவளைத் திருமணம் செய்ய வேண்டாம்” என்றார்கள்.

“ஐயா! உங்கள் அறிவுக்கு நன்றி” வாக்குக் கொடுத்து விட்டேன். இனி நான் அதை மீறமுடியாது. என்னை மன்னித்து விடுங்கள் என்று பணிவுடன் கூறினான்.

“இப்படிப்பட்ட நல்லவனுக்கு அடங்காப்பிடாரியான வாயாடி மனை வியா? இதுதான் தலைவிதி போலும்” என்று சொல்லிக் கொண்டு பெரிய வர்கள் சென்றார்கள். அவனுக்கும் அந்த வாயாடிக்கும் திருமணம் நடந்தது. அன்று மாலையே அவள் தன் மாமனாரிடம் ஐயா! என் மனை வியை அழைத்துக் கொண்டு நான் எங்கள் ஊருக்கு செல்கிறேன். அங்கே சில சடங்குகள் செய்ய வேண்டும் நீங்கள் இருநாட்கள் கழித்து அங்கு வந்தால் போதும் சரி என்றார் அவர்.

மாட்டு வண்டியில் அவனும் அவளும் அமர்ந்தனர். அதில் நிறையப் பானைகள் வைக்கப்பட்டிருந்தன. அவன் வண்டியை ஓட்டிக்கொண்டு புறப் பட்டான். வண்டி மேடுபள்ளங்களில் பல முறை ஏறி இறங்கியது. அப்போது பானைகள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டன. ஓசை எழுந்தது.

கோபங்கொண்ட அவன் எனக்குச் சிறு சத்தம் கேட்டாலும்

பிடிக்காது பானைகளே உங்களுக்கு இது தெரியாதா? இனிமேல் நீங்கள் ஓசை எழுப்பினால் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது என்று கத்தினான்.

ஏன் பானைகளைப் பார்த்து தன் கணவன் கத்துகிறான்? அவை எப்படி ஒன்றோடொன்று மோதாமல் இருக்கும்? என்று நினைத்து அமைதி யாக இருந்தாள் அந்த வாயாடி. மீண்டும் ஓர் மேட்டில் ஏறி இறங்கியது வண்டி. பானைகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. நான் எச்சரிக்கை செய்தும் என் பேச்சை மீறுகிறீர்களா? உங்களை என்ன செய்கிறேன் பாருங் கள் என்று கோபத்துடன் கத்தினான். கையிலிருந்த தடியை வீசி பானை களை உடைத்தான். என் பேச்சை யார் கேட்காவிட்டாலும் இதே கதிதான் என்று கத்தினான்.

தன் கணவன் முட்டாளாகவும் முரடனாகவும் இருக்கிறான். என நினைத்து அமைதியாக இருந்தாள் அவள். வண்டி சென்றது மாட்டின் கழுத்திலிருந்த மணி ஓசை எழுப்பியது. அதற்கும் எச்சரிக்கை விதித்தான். பானைக்கு நேர்ந்த கதியை பார்த்தீர் களா? என்று கத்தினான். மாடுகளோ மணி ஓசையை எழுப்பியே நடந்தன. வண்டியிலிருந்த கத்தியை எடுத்து மாடுகள் இரண்டையும் வெட்டினான். நடந்ததைக்கண்டு திகைத்தாள் அவள். பின் அவளே வண்டியை இழுத்துக் கொண்டு சென்றாள். பின்பு சக்கரங்கள் சத்தம் போடத் தொடங்கின. அதற்கும் எச்சரிக்கை விடுத்தான் ஆனால் நிறுத்தப்படவில்லை சக்கரங்கள் அவற்றைப் பல துண்டுகளாக வெட்டி எறிந்தான்.

தன் மனைவியைப் பார்த்து கோபத்துடன் நாம் நடந்து செல்வோம் கீழே இறங்கு என்றான். நடுக்கத்துடன் கீழே இறங்கிய அவள் பானை, மாடு, சக்கரங்களுக்கு நிகழ்ந்தது தனக்கும் நிகழுமே என்று நடுங்கினாள். ஏதும் பேசாமல் நீண்ட தொலைவு நடந்தாள். அதன் பிறகு அவள் அதிகம் பேசுவதில்லை. நல்ல பெண்ணாக நடந்து கொண்டாள்.

இரண்டு நாட்கள் கடந்தன. அவளுடைய தந்தை அங்கு வந்து தன் மகள் அடக்கத்துடன் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தார்.

# பரிசோதனை முறை

ம. வினோதா
A/L 2005 Arts

விஞ்ஞான முறைகளிலே தலையாயதும் மிகத் துல்லியமானதும் செம்மையானதுமான முறை பரிசோ தனை முறையாகும். இம்முறையே இயற்கை விஞ்ஞான வகைகளிலும் சமூக விஞ்ஞான வகைகளிலும் பயன்படுத்தப்படுகின்றது. உண்மை யிலேயே விஞ்ஞானத்தின் செம்மையை நிர்ணயிப்பது அதில் பயன்படுத்தும் பரிசோதனை முறையேயென்றால் அது மிகையாகாது. நாம் எமது அறிவைப் பல கல்வித் துறைகளின் மூலம் விருத்தி செய்து கொள்கிறோம். மொழியின் உண்மைகள் பற்றிய விளக்கங்களை அறிவாகக் கொள்ளமுடியும். ஜனநாயகம் உலக மக்களிடையே எளிமையையும் சுதந் திரத்தையும் அடிப்படை உரிமைகளை யும் சமத்துவத்தையும் உறுதிப்படுத்து கின்றது என்ற அரசியல் பொருளாதார விளக்கத்தைச் சமூக விஞ்ஞானத் துறைகளின் முடிவாகக் கொள்ள முடியும். உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் அணுக்களினால் ஆனவையென்னும் விளக்கம் பௌதீக இரசாயன இயற்கை விஞ்ஞானங்களில் முடிவாகக் கொள்ளப்படும். விஞ்ஞான வகைகளினாற் பெறும் அறிவிற்கும் ஏனைய கல்வித்துறைகளுக்குமிடையே உள்ள விடயங்களுக்கும் இடையில் உள்ள முக்கிய வேறுபாடுகளில் ஒன் றாக விஞ்ஞான அறிவின் உண்மை யைக் கவனிக்கமுடியும்.

உண்மை என்பதன் பொருள் நியாயத்தின் அல்லது விளக்கத்தின் முடிவு. உண்மையென்பதில் கருதப்படுவது அவ்வாறான பொருளென் பதினாலாகும். அவ்வுண்மை என்பது எல்லோருக்குமே அல்லது பெரும்பா லோருக்கும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தன்மையிலே அர்த்தங் கொள்வதாகும். செம்மையான பொதுமையாக்கப்பட்ட விளக்கங்களை விஞ்ஞானத்திற் பெறுவதற்கு அடிப்படையாக அமைவது அங்கே பயன்படுத்தப்படும் பரிசோதனை முறையாகும். அங்கே பெரும்பாலான விளக்கங்கள் நேரடியாகவே உண்மை யோடு பொருந்துவனவாக அமைந்துள் ளன. சில வேளைகளில் விளக்கங்கள் சுற்றி வளைத்து அதாவது எதிர்கால எதிர்வுகூறல்கள் மூலம் உண்மையுடன் பொருந்தக்கூடிய விதத்தில் கூறப்படு கின்றன. புவியீர்ப்புச் சக்தியை பற்றிய விளக்கத்தையும் அவ்வாறான விளக்கத் திற்கு உதாரணம் கூறலாம். விஞ்ஞா னம் இயற்கைத் தோற்றப்பாட்டில் காணப்படும் நேர்வுகளுக்கும் சம்பவங் களுக்கும் அனுபவத்தில் காரணகாரிய ரீதியில் பொருத்தப்பாட்டை அளிக்க முற்படும்.

உண்மை கொள்கைகள் போன் றவற்றில் வெளிப்படுவன விஞ்ஞான விளக்கங்களாகும். விதிகள் சம்பந்தப் பட்ட விளக்கங்களாகக் கவனிக்கப் படலாம். பொயில் எனும் இயற்கை விஞ்ஞானியின் விளக்கம் ஏதோ ஒரு வாயுவின் அமுக்கத்திற்கும் கனவள விற்கும் இடையே உள்ள விதி சம்பந் தப்பட்டதாகக் காணப்படுகிறது. இத் தொடர்பும் அமுக்க அளவையும் கன வளவையும் பற்றியதாக இருப்பதனால் அது ஒரு கணிதவியலான அதாவது எண்ணங்கள் மூலம் காட்டக்கூடியதான விஞ்ஞான விளக்கமாகும். ஈரலிப்பான இடத்திலுள்ள இரும்பு துருப்பிடிக் கின்றது இது இயற்கையின் தன்மை ஆகும். உலகில் எப்பகுதியிலும் இது காணப்படக்கூடிய ஓர் விளக்கமாகும்.

புவியீர்ப்பு போன்ற வாதங்களிலே மிகவும் தெளிவாக இதனைக்காண லாம். இது இயற்கைத் தோற்றப் பாடுகளுக்கு இடையே உள்ள காரண காரியத்தொடர்புத் தன்மையாகும். விஞ்ஞானத்தில் உலகில் அல்லது இயற்கைகாரணகாரிய இடங்களுக் கிடையே தோற்றப்பாடுகளின் தொடர்பை விளக்குவதற்குப் பரிசோ தனை முறை உதவுகின்றதெனலாம். இக்காரண காரியத் தொடர்புகளை விளக்குவதற்கு மட்டுமல்ல அவற்றைக் கண்டு பிடிப்பதற்கும் இப்பரி சோதனைமுறை உய்த்தறிமுறை மூலம் கையாளப்படலாம். ஒரு பரிசோதனை செய்வதற்கு கருதுகோள்களை அடிப்படையாகக் கொண்டே அன்று கூறுவதில் முறைகளின் விளக்கங்கள் மட்டுமன்றி விஞ்ஞானியின் அன்றாட நடவடிக்கைகளும் கூட இப்பரி சோதனைகளில் ஆய்வு செய்யப்படும் என்று கூறுவது சாதாரண விளக்க மாகும். இதனை விளக்க கருது கோள்களைப் பற்றி செய்யப்படும் சோதனைகளின் சில விளக்கங்களை நாம் இங்கே கவனிக்கலாம்.

ஒரு காரணத்தை பரிசோதிப் பதற்காக அக்காரணத்தின் எதிர்வு கூறல்களை விளக்குவதற்கான ஒரு விஞ்ஞானக் கருதுகோளைப் பற்றியதாய பரிசோதனை அமைத்துக் கொள்ளப் படவேண்டும். விஞ்ஞானக் கருது கோள்கள் பெரும்பாலான சந்தர்ப் பங்களில் அக்காரணத்தையும் இன்னும் அநேக மூலகங்களையும் ஒன்றுபடுத்துவதால் கிடைக்கப் பெறுகிறது. உலகில் யாதேனுமொரு இயற்கைத் தோற்றப்பாட்டின் காரணத்தை விளக்கவே விஞ்ஞானப் பரிசோதனைகள் செய்யப் படுகின்றன.

விஞ்ஞானத்தில் பயன்படுத்தப் படும் பரிசோதனைகளை இரண்டு வகையாகப் பிரித்தலாகும்.

1. அவதானம்
2. பரிசோதனை
3. கட்டுப்படுத்தப்பட்டஅவதானம்

பரிசோதனையில் அவதானம் எனும் பொழுது அச்சொல் சாதாரண பயன்பாட்டில் புலன் மூலம் உற்று நோக்குவது எனும் அர்த்தத்தினைக் கொண்டதாகும். அவதானம் என்பது இயற்கைத் தோற்றப்பாடு ஒன்றில் அது நடைபெறும் பொழுது அத்தோற்றப் பாட்டுச் சம்பவத்தில் எவ்வித கட்டுப் பாட்டினையோ மாறுபாடுகளையோ ஏற்படுத்தாமல் அதனை அவ்வாறே பரிசோதனைக்கு உட்படுத்தலாகும். இந்த அவதானத்தை விஞ்ஞானிகள் ஒருவித பரிசோதனை முறையாகவே கொள்கின்றனர்.

அவதான முறையில் அறிமுகப் படுத்திய முக்கிய பரிசோதனை முறையைக் கவனிக்கலாம். விசேடமாக உயிரியல் விஞ்ஞானத்திலே இது பயனுடைய பரிசோதனை முறையாக அமைந்துள்ளது. இம்முறை பயன் படுத்தப்படுத்தலிலே பரிசோதனைக்கு உட்படவேண்டிய பொருளை இரண்டு வகைப்படுத்தலாம். அதில் ஒரு வகை ஆய்வுக்குட்படுத்தும் உயிரியல் செயல்முறைகளுக்குப் பாத்திரமான அதன் நடத்தைப் பயன்பாட்டை அவதானிக்கும் அதே வேளையில் மற்றைய பகுதி அந்நடத்தையோடும் செய்முறைகளோடும் சம்பந்தப்படாமல் அவதானிப்பதாகும். கட்டுப்பாட்டுப் பரிசோதனைமுறை உயிரியல் விஞ்ஞானத்திலும் மருத்துவத்திலும் உளவியலிலும் பெரும்பாலும் பயன் படுத்தப்படும் முறை ஆகும். லூயிபாஸ் டரும் அவருடைய உதவியாளர்களான வெம்லர், றூ ஆகிய இருவரும் விஞ்ஞான வரலாற்றில் இடம்பெறும் மிகவும் ஆச்சரியப்படக்கூடியவர்களாவர். பரிசோதனை முறையிலே நிபந்தனை களும் இரண்டு குழுவாக அமைத்துக் கொண்டு போவதற்கு கவனமாகவும்

நுணுக்கமாகவும் செயற்பட வேண்டியுள்ளது. உதாரணமாக மனநோயாளர்களைப் பற்றிய ஆய்வு நடத்தும் போது ஒரு குழுவிற்கு உண்மையான மருந்துக் குளிகையைக் குடிப்பதற்குக் கொடுக்கும் போது அதற்குச் சமமாகவேனும் மருந்தில்லாத ஏதோவொரு குளிகையை மற்றைய குழுவிற்கும் கொடுப்பது போன்ற தந்திரோபாயத்தைக் கடைப்பிடிப்பது அவசியமானதாகும். சில வேளைகளில் எந்தக் குழுவினருக்கு மருந்து கொடுக்கப்பட்டதெனப் பரிசோதனை முடியும் வரை பரிசோதனை நடத்தியும் அறிய முடியாதிருக்கும் தன்மையைக் கையாளுவதன் மூலம் ஏற்படுத்தல் அவசியமானதாகும். இயற்கை தோற்றப்பாட்டை அல்லது அதன் காரணத்தைப் பற்றிய ஆய்விலே அதனை ஓர் உண்மை எனக் கொண்டு ஒரு கருதுகோள் மூலம் அதன் கடந்தகால நிகழ்கால எதிர்கால விளக்கங்களை பெறப்பயன் படுத்தப்படுவது இப்பரிசோதனை முறையாகும். கருவிகள் இன்றி செயற்படும் பரிசோதனையை அவதானமாக வும் கொள்ளலாமென்பது பின்னரே காணப்படும் முறையாகச் சாதகமான கட்டுப்படுத்தல் மூலமாக கட்டுப் படுத்தப்பட்ட குழுமுறையும் உண்மைப் பரிசோதனை முறையும் கொண்டுள்ள பரிசோதனையைப் போன்ற பரிசோத னைகளை அவதானிப்பதும் பொதுப் பரிசோதனை யென இரண்டு வகை களுக்குள்ளே அடங்கும். அவதானம் பரிசோதனைக்கிடையே உள்ள வேறுபாடுகள் ஒன்றிற்கொன்று வேறுபட்டதல்ல என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டியதாகும். சமபரிசோதனைமுறை என்றால் என்ன? அவதானத்தைப் போலல்லாமல் சம பரிசோதனையிலே பரிசோதனைக் குட்படும் இயற்கைத் தோற்றப்பாடு அல்லது நிகழ்விலே சாதகமான கட்டுப்பாடு நடைபெறும். உதாரணமாக பொயில் என்னும் விஞ்ஞானியின் கொள்கை அல்லது விதி பற்றிய ஒரு பரிசோதனையை நடத்துவோமெனக் கொள்வோம். ஒரு வாயுவின் அமுக்கமும் கனவளவும் எண்ணளவினதாக அமைவது பற்றிப் பொயில் விதி கூறுகிறது. பரிசோதனை ஒன்றை நடத்துவது பரிசோதனை நடத்தும் விதத்திலுள்ள வெப்ப நிலையிலே தங்கி உள்ளது. அதே போல பரிசோதனையிலே வாயுவின் அமுக்க அளவினை பரிசோதனைக்காக எடுத்துக் கொள்ளும் கருவிகளின் மூலம் கட்டுப்படுத்தல் பரிசோதனைக்குட்படுத்தப்படும். சாதகமாக கட்டுப்படுத்தல் எம்மாற் செயற்கையாக ஏற்படுத்தப் படுவதனால் இங்கே செய்யப்படுவது உண்மை பரிசோதனை முறை ஆகும்.

இரத்த ஓட்டம் பற்றிய கண்டுபிடிப்பிலும் வில்லியம் கார்வே என்னும் விஞ்ஞானி செய்த பரிசோதனையை இங்கே விளக்கத்திற்காக எடுத்துக்கொள்ளலாம். இப்பரிசோதனையில் உயிருள்ள பாம்பு ஒன்றை வெட்டிப்பார்த்ததிலே அதன் இதயம் ஒரு மணித்தியாலத்திற்கு அதிகமான நேரம் இயங்காதிருந்தது. எனினும் தெளிவாக துடிப்புள்ளதாக உள்ளுறுப்புகள் அசைவதை நன்கு தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது. பாம்பின் இதயத்தின் பெரும் பிரிவு ஆகிய நாடி, நாளம் அதன் அடிப் பாகத்தில் உட்புகும் அதே வேளை நாளங்கள் இதயத்திலிருந்து வேறாகியபோது அங்கே இதயத்தின் மேற்பகுதி ஆகும் இதயத்தை வால்வுகளை விரல்களின் மூலம் நசித்து வைத்து இரத்த ஓட்டம் தடைசெய்து இதயம் முதலிருந்ததிலும் விட வெள்ளை நிறமாக காணப்பட்டது. இதன்மூலம் இரத்த ஓட்ட பரிசோதனை நடைபெற்றது. இதனால் வில்லியம் கார்வே சாதாரணமான பரிசோதனை எமக்கு தெரிவித்துள்ளார். இவ்வாறாக பரிசோதனையை நேரடியான ஓர் அவதானமாக காணமுடியும்.

குறித்த தோற்றப்பாட்டிற்கோ அல்லது குறித்த நிகழ்விற்கோ

விஞ்ஞான விளக்கங்கள் கணக்கின்றி ஏற்பட முடியும். அப்போது உருவான இரண்டு கருதுகோள்களில் எது பிழை அற்றது என முடிவு செய்ய இதுவரை அத்துறையிலே சோதனையால் கிடைத்த எல்லா தரவுகளையும் தொகுத்து நோக்குவது விஞ்ஞானிக்கு அவசியமாகும். அவ்வாறான வேளை களில் பிழையற்ற கருது கோள்களை தீர்ப் பதற்கு மேற்கொள்ளும் பரிசோத னையை தீர்ப்புச்சோதனை எனக் கொள்ளலாம். தீர்ப்புச் சோதனை செய்வதற்கு நல்ல உதாரணங்களாகக் கொண்டாலும் ஒளி பற்றிய அலை அணுவாதம் பற்றிய சிக்கலான அது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குற்குப் பின் பௌதீக விஞ்ஞானத்திலுமே மறுபடியும் எடுத்தது. 20ஆம் நூற் றாண்டின் முற்பகுதியில் ஐன்ஸ்ரடைன் போன்ற புகழ் பெற்ற விஞ்ஞானிகள் வெளியிட்ட கருத்துக்களினால் அணுவாதம் மறுபடியும் வெளிப்பட்டது. கருதுகோளில் இருந்து முடிவை பெற்றுக்கொள்வதில் கருதுகோளும் அதற்கு அனுசரணையான கருது கோள்களும் வகிக்கும் பங்கு காட்டப் பட்டுள்ளது.

பரிசோதனையின் குறைபாடு களில் பரிசோதனையில் பூரணமாக குறைபாடுகள் இல்லாததாகச் செய்வ தற்கு முடியாது. பல்வேறு சந்தர்ப் பங்களிலும் பரிசோதனை முறை குறைபாடு ஏற்பட முடியும். பரிசோதனை முறையில் விஞ்ஞானி அகவயமாக விளக்கிருப்பதை அல்லது கருத்து வெளிப்படுவதை உணர்த்துவது ஓர் அவதானமோ அல்லது பரிசோத னையோ கருதுகோள்களில் கிடைக்கும் தீர்ப்புச் சோதனை ஆகும். விஞ்ஞானி களின் தவறுகளினாலும் சில விடயங்கள் அவரது அவதானத்திற்குள் அகப்படாது போகலாம். பொயிலின் விதியைப் பற்றிய பரிசோதனை யொன்றை செய்து பெறமுடிகிறது.

1. பரிசோதனைக்குட்படுத்தும் வாயுவின் வெப்ப அளவு பயன்படுத்தும் கருவிகளில் பாதிக்கப்படும்.

2. வாயு இருக்கும் கண்ணாடிக் குழாய் பரிசோதனை காலத்தினுள் மாற்றமடைதல் என்பது பரிசோத னைக்கு ஏற்றவாறு கருதுகோள் அமைதலில் பரிசோதனையாளன் கவனிக்காமல் விடவும் இடமுண்டு.

விஞ்ஞானப் பரிசோதனையில் புறவயமாயிருத்தல் என்பது அதிகமாக அனுபவித்தல் ஏற்படுத்துவது ஒன்றா கும். இங்கே இயற்கைத் தோற்றப் பாட்டின் இயல்பான தன்மை அல்ல. அதனு டைய ஒருசாயலே அவதானிக் கப்படுகிறது. பரிசோதனையில் சில பிழைகளை தடுக்க முடிந்தாலும் தவிர்க்கக் கூடிய பிழைகளும் இருக்கலாம். பரிசோதனையில் பல்வேறுபட்ட தன்மைகளில் நடத்து வதன் மூலம் ஏற்படும் குற்றத்தை அல்லது குறைகளை அறியமுடியும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நடாத்தப்பட்ட ஓர் அளவீட்டின் இடையைத் தனது அளவின் பயனாக எடுத்துக் கொள்ளும் தன்மை வாய்ந்த எண்களும் இணைக்கப்பட்ட செயலும் குற்றங்களைத் தவிர்ப்பதற்குத் தயாரித்து கொள்ள முடியும். சில வேளைகளில் ஏற்படும் குற்றங்களைப் போக்கி கொள்வதற்கான ஒரு கருவியை பரிசோதனைக்காக ஆக்கி கொள்ளமுடியும். பரிசோதனையில் சாதாரணமாகப் பின்பற்றக்கூடிய பின்வரும் நடைமுறைகள் பரிசோதனை முறையில் ஏற்படும் குற்றங்களைப் போக்கிக் கொள்வதற்கு உதவியாக அமையும். கவனமாகவும் விளக்க மாகவும் அவதானித்தல் பிழையற்ற அறிக்கைகளை அல்லது தரவுகளை வைத்துக்கொள்ளல் போன்ற காரணிகளாகும்.

# விஞ்ஞானத்தின் எழுச்சிக்காலம்

ரா. ரஜித்தா
A/L 2005 Arts

விஞ்ஞானம் இன்றைய நிலையில் மனித நாகரிகத்தின் வியத்தகு வளர்ச்சிக்குச் சிறந்த தோழனாகவும், அதே வேளையில் அதனை அழித்தொழிக்கும் பயங்கரக் காலனாகவும் விளங்குகிறது. காட்டிலே விலங்கு நிலையில் வாழ்ந்த மனிதனை, விண்வெளியைக் கடந்து கோள்களுக்குப் பிரயாணம் செய்யுமளவிற்கு வளர்த்ததும் விஞ்ஞானமே. இவ்வளர்ச்சி அனைத்தையும் கணப்பொழுதில் அழித்து உலகைச் சுடுகாடாக்கி விடப் பயமுறுத்துவதும் விஞ்ஞானமே. எனவே தான் ஆக்கத்திலும், அழிவிலுமாக எவ்வகையிலும் விஞ்ஞானம் பின்னிப் பிணைந்து கிடக்கிறது. இவ்விஞ்ஞானம் கடலைப்போல அகலமும், ஆழமுடைய அறிவுத் தொகுதி உடையதும் மனிதகுலம் உலகில் முளைவிடத் தொடங்கிய நாள் முதல் இன்றுவரை அது பல இன்னல்களைக் கடந்து பற்பல சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறு விஞ்ஞானம் படிப்படியாக முன்னேறத் தொடங்கிய காலப்பகுதியாக மறுமலர்ச்சியுகத்தைக் குறிப்பிடலாம். விஞ்ஞான வளர்ச்சி மறுமலர்ச்சியின் மற்றுமொரு முக்கிய கூறாகக் காணப்பட்டது. மத்திய காலத்தில் பரந்த அளவில் அறியப்பட்டிருந்த போதிலும் ஆதாரமற்ற கூற்றுக்களும், கோட்பாடுகளும் செயலிழந்து சென்றன. மறுமலர்ச்சிக் காலத்திலே கிரேக்க, உரோம நூல்களில் ஆர்வம் கொண்டு கற்றோர் மதகுருமார் கற்பித்த விடயங்களை அப்படியே ஏற்றுக் கொள்ளாது அவற்றின் உண்மை பொய்யறிந்து ஆராய்வதில் ஆர்வம் கொண்டனர். இதனால் இந்த ஐரோப்பிய மக்கள் தற்கால விஞ்ஞான ரீதியான சிந்தனையில் ஈடுபட்டனர்.

மத்திய காலத்தின் இறுதி நூற்றாண்டுகளில் கோட்பாட்டாளர்கள், கட்டிடக்கலைஞர்கள், பொறியியலாளர்கள் போன்றோர் உருவாகினர். இத்தாலியைச் சேர்ந்த லியனாடோடாவின்சி (கி.பி. 1462-1519) மேலே கூறிய மூன்று ஆற்றல்களையும் பெற்றிருந்தார். இவர் ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை, மாத்திரமன்றி வானியல், விஞ்ஞானம், தொழில்நுட்பம், உடற்கூற்றியல் ஆகியவற்றிலும் வல்லுனராக இருந்தார். விஞ்ஞானத்தின் மறுமலர்ச்சியானது மத்திய காலத்தின் இறுதி இரு நூற்றாண்டுகளிலும் மேலும் திருப்பு முனைக்குள்ளானது. நவீன விஞ்ஞானத்திற்குரிய புதிய கருத்துக்களும் அணுகு முறைகளும் தளர்ந்து விட்டன. எனவே புலமையாளர்களினதும் கைவினையாளர்களின் ஒருங்கிணைவே நவீன விஞ்ஞானத்தின் எழுச்சிக்கு வழி வகுத்தது. புலமைவாதிகள் பிரயோகம் சாராது அறிவுமுறைகளை அதாவது கோட்பாடுகள், நியாயங்கள், விதிகளை உருவாக்குபவர்கள் இதனால் புலமைவாதிகள் குருடற்ற முடமானவர்களுக்கு ஒப்பானவர்களாக கூறப்படுகின்றனர். ஆனால் கைவினையாளர்களோ அறிவை விடுத்து பிரயோகத்தை செயற்படுத்துபவர்கள். அதாவது கைவினையாளர்கள் உருவாக்கம் என்பதோடு தொடர்புடையவர்கள் இதனால் கைவினையாளர்கள் குருடான முடமற்றவர்களுக்கு ஒப்பானவர்களாகக் கூறப்படுகின்றனர்.

16ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தில் இவ்விரு சாராரின் முறைகள் ஒருங்கிணைப்புப் பெறவில்லை. இங்கே புலமைவாதிகள், கைவினையாளர்களின் முறைகள் ஒருங்கிணைப்புப் பெறாத வரை விஞ்ஞான வளர்ச்சி ஏற்படமாட்டாது என்ற பிரான்சிஸ் பேக்கனின் கருத்து முதன்மை பெறுகின்றது. தொகுத்தறிமுறை பற்றிய விமர்சனத்தில் பிரான்சிஸ்பேக்கன் புலமைவாதிகளை எட்டுக் கால்

பூச்சியை ஒத்தவர்கள் எனக் குறிப்பிடு கின்றார். எட்டுக் கால் பூச்சியான சிலந்தியானது தன்னிடம் உருவாகும் நூலைப்பயன் படுத்தி வலையைப் பின்னுவது போன்று மத்திய காலத்தில் வாழ்ந்த புலமை வாதிகள் மெய்யியல், அளவையியல் போன்ற துறைகளைப் பயன்படுத்தி விதிகள், கோட்பாடுகள், நியாயங்களை வலைப்பின்னல்களாக உருவாக்க முயன்றனர். பிரான்சிஸ் பேக்கன் கருத்துப்படி கைவினையாளர் கள் எறும்புகளைப் போன்றவர்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். எறும்புகள் எவ்வாறு பல்வேறு பொருட்களைத் தேடிச்சென்று சேகரிக்கின்றதோ அவ்வாறே கைவினை யாளர்களும் பல்வேறு பொருட்களையும் கருவிகளை யும் உருவாக்கி இருந்தனர். இவ்விரு சாராரும் ஒருங்கிணைப்பு பெறாத வரையில் அறிவுக்கோபுரத்தை கட்டியெழுப்ப முடியாது. தேனீக்கள் எவ்வாறு முறையாக தேன்வதையைக் கட்டுகின்றதோ அவ்வாறே புலமை யாளர்களும் கைவினையாளர்களும் ஒருங்கிணைந்து செயற்படும் போதே அறிவு வளர்ச்சி அடைய முடியும் என பேக்கன் குறிப்பிட்டுள்ளார். 16ஆம் நூற் றாண்டினைத் தொடர்ந்து இவ்விருசாரா ரின் முறைகளும் ஒருங்கிணைப்பு பெற்று நவீன விஞ்ஞானத்தின் வளர்ச் சிக்கு வித்திட்டது. கொப்பனிக்கஸ் தன் புலமை அறிவினால் வான் பொருட்கள் சூரியனை மையமாகக் கொண்டு வலம்வருவதாகக் கண்டறிந்தார். கலிலியோ வில்லைகள் பற்றிய அறிவி னால் தொலைகாட்டியை உருவாக்கி இருந்தார். ஒரு கட்டத்தில் இந்த இரு முறைகள் ஒருங்கிணைப்பு பெற்று அதுவே விஞ்ஞானத்தில் வானியல் புரட்சியாக அடையாளப்படுத்தப் பட்டது. கொப்பனிக்கசில் இருந்து நியூட் டன் வரை அதாவது 16ஆம் நூற்றாண்டி லிருந்து 17ஆம் நூற்றாண்டு வரை குறிப்பிடத் தக்க முன்னேற்ற நடவடிக் கைகள் இடம்பெற்றன.

போலந்து நாட்டைச் சேர்ந்த நிக்கலஸ்கொப்பனிக்கஸ் (கி.பி. 1473-1543) பூமி பிரபஞ்சத்தின் மையம் எனவும் அது தட்டை வடிவானதெனவும் இடைக்காலத்தில் ஏற்றுக்கொண்டிருந்த தொலமியின் புவிமையக்கொள்கை தவறானது எனக்காட்டியதுடன் விஞ்ஞானத்திற்கு அளப்பரிய சேவை களைச் செய்துள்ளமையால் இவர் தற்கால வானியலின் தந்தை எனப் போற்றப்படுகின்றார். இவருடைய இப்புதிய கண்டுபிடிப்புக்கள் மூலம் சூரிய மண்டலக்கோள்கள் பற்றியும், உடுக்கள் பற்றியும் விஞ்ஞானரீதியாக ஆய்வு செய்வதற்கு வழிவகுக்கப் பட்டது. இதுவே இவருடைய சூரிய மையக் கொள்கை ஆகும். விஞ்ஞா னத்தின் எழுச்சிக்குப் பங்களிப்புச் செய்த மற்றுமொரு விஞ்ஞானி ஜேர்மனி யைச் சேர்ந்த யொஹன்னஸ்கெப்லர் (1571-1630) என்பவராவர். இவர் கொப்பனிக் கஸ் கூறிய கருத்துக்களை உறுதிப்படுத்தி அவற்றை மேலும் விருத்தி செய்து கொண்டு விண்வெளி யில் உள்ள கோள்கள் நீள்வட்டமாக சுற்றுகின்றது என்பதைக் கண்டுபிடித் தார். இது விஞ்ஞானத்திலே பெரும் புரட்சியை ஏற்படுத்தியது. டைக்கோடீ பிறகே (கி.பி. 1546-1601) என்பவர் தொலமி, கொப்பனிக்கஸ் கூறியதை விட வேறு கருத்தைக் கூறினார். கோள் கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. ஆனால் அந்தக் கோள்களும் சூரியனும் பூமியைச்சுற்றி வருகின்றன. இதனால் இவற்றுக் கெல்லாம் பூமி மையமாக உள்ளது எனக் கூறினார். இதுவே கொப்பனிக் கசின் வானியல் புரட்சி என அழைக்கப் படுகின்றது. இத்தாலி நாட்டைச் சேர்ந்த கலிலியோகலிலி மறுமலர்ச்சிக் காலத்திலேயே வாழ்ந்த மற்றுமொருவிஞ்ஞானி ஆவர். தொலைக் காட்டியைக் கண்டுபிடித்த அவர் அதன் மூலம் அண்டவெளியில் உள்ள பொருட்களை அவதானித்தார். இதன் மூலம் சந்திரனில் உள்ள குழிகள், மலைகள் ஆகியன பற்றியும் சூரியனின் கறைத்தடம் பற்றியும் வியாழனின் உபகோள்கள் பற்றியும், பல விடயங் களைஅவதானிக்கும் வாய்ப்புக் கிடைத் தது. இத்தொலைக் காட்டியைப் பயன் படுத்தி கொப்பனிக்கசின் கருத்தை இவர் உறுதிப்படுத்தினார். இரண்டு சமமற்ற பொருட்களை ஓர் உயரமான இடத்திலிருந்து கீழே போட்டால்

பாரங்கூடியது முதலில் நிலத்தில் விழும் என்ற அரிஸ்ரோட்டலின் கருத்து தவறானது என்று செயல்மூலம் காட்டும் பொருட்டு பிரசித்திபெற்ற பீசாக் கோபுரத்தில் ஏறி வித்தியாசமான கனமுடைய இரு பொருட்களை கீழே போட்டு அவை இரண்டும் ஒரே நேரத்தில் விழுவதைக் காட்டினார். இவருடைய விஞ்ஞானத்தில் கருவிகள் மூலம் அவதானிக்கும் முறை ஆரம்பிக் கப்பட்டது.

17ஆம் நூற்றாண்டின் இறுதியில் விஞ்ஞான மனிதன் எனப்போற்றப்பட்ட அரிஸ்ரோட்டலின் கருத்துக்கள் வெகுவாக மறையத்தொடங்கின. டேக்காட் (கி.பி. 1569-1650) என்பவர் சடப்பொருட்களையும் அசைவையும் கொண்டு எல்லா நிகழ்ச்சிகளையும் விளக்கமுற்பட்டார். ஆங்கிலேய நாட்டு விஞ்ஞானியான ஐசாக்நியூட்டன் இயக்கம் பற்றிய மூன்று விதிகளையும் ஈர்ப்பு விதிகளையும் கண்டு பிடித்தார். இக்காலத்தில் வைத்தியத்துறையிலும் எழுச்சி உண்டானது. சுவிஸ்நாட்டைச் சேர்ந்த பரசல்ஸ் (1496-1541) என்பவ ரும் ஆங்கிலேய நாட்டைச்சேர்ந்த வில்லியம்ஹாவே (1578-1651) என்பவ ரும் இத்துறையில் முக்கியமானவர் கள்.

உடலின் குருதிச்சுற்றோட்டத் தொகுதி பற்றி முக்கியமான விடயங் கள் வில்லியம்ஹேவேயினால் கண்டு பிடிக்கப்பட்டன. மத்தியகால ஐரோப் பாவின் புகழ்மிக்க பல்கலைக்கழக மான இத்தாலியின் பாதுஷா பல்கலைக்கழகம் வைத்தியத்துறைக்கு புகழ் பெற்றதாகும். இக்காலப்பகுதியில் கொப்பனிக்கஸ், கெப்லர், கலிலியோ, ரைக்கோடீபிரகே, நியூட்டன் என்பவர்கள் முதன்மை விஞ்ஞானிகள் ஆவர். பிரித் தானியாவைச் சேர்ந்த பிரான்சிஸ் பேக்கன் (கி.பி. 1561-1626) என்பவர் விஞ்ஞான வளர்ச்சிக்கு பரிசோதனை அவசியமானது எனக்கூறினார். அடுத்து இக்காலப்பகுதியிலே நீராவியைப் பயன்படுத்தி இயங்கும் இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. நீராவியின் சக்திக்கண்டுபிடிப்பால் 1807ல் நீராவி யால் இயங்கும் கப்பல்கள் இயங்கத் தொடங்கின. 1803ல் ஜோன்ஸ் ரீபன் மணிக்கு 56.7Km ஓடக் கூடிய இயந்திரத்தைக்கண்டு பிடித்தார். தோம்ஸன் நீராவியால் வீடுகளுக்கு வெப்பமூட்டினார். புகையில்லா அடுப்பை அமைத்தார். நீர்வீழ்ச்சியில் சக்கரத்தை வைத்து இயக்குவதால் வெப்ப ஆற்றலும், ஒளியாற்றலும் பெறப்படும் என்பது அறியப்பட்டது. 18ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் மின்சாரம் ஒரு புதுமைப் பொருளாக இருந்தது. பென்சமின் பிராங்கிளின் மின்சாரத்தைப் பற்றி பல ஆய்வுகளைச் செய்தார். வோல்டர் மின்கலத்தைக் கண்டுபிடித்தார்.

19ஆம் நூற்றாண்டு மின்சார காலம் என்றே அழைக்கப்படுகின்றது. டேவி, மைக்கல்பரடே, ஜோசப்ஹென்றி போன்றோரின் ஆய்வுகள் முக்கிய மானவை டால்ரன், மெண்டலீன் ஆகி யோரின் ஆய்வுகள் புதிய கோட்பாடுகள் தோன்றுவதற்கு உதவின. 1900இல் மாக்ஸ்பிளாங்கின் குவாண்டக் கொள்கையும் 1905இல் அல்பேட் ஐன்ஸ்ரினின் சார்புக் கொள்கையும் விஞ்ஞானத்தில் புதிய மாறுதல்களை ஏற்படுத்தின. இவ்விரு கொள்கைகளும் உலகு பற்றிய பழைய பௌதீகவியல் கொள்கைகளை மாற்றியமைத்தன. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஹைசன்பேக்கின் (1901-1976) நிர்ணயமின்மைத்தத்துவம் இக்கால விஞ்ஞானத்தில் பலத்த மாறுதல்களை ஏற்படுத்தியது எனலாம்.

முடிவாக தற்போதைய 21ஆம் நூற்றாண்டில் விஞ்ஞான வளர்ச்சி யானது தவிர்க்க முடியாததொன்றாகும். இப்பெரும் வளர்ச்சியானது மனித நாகரிகத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்த மாற்றம் நன்மையாகவோ அல்லது தீமையாகவோ இருக்கலாம். எனினும் விஞ்ஞான வளர்ச்சி மனித சமுதாயத்திற்கு பயன்படக்கூடியதாக இருத்தல் அவசியமாகும். இன்று ஏற் பட்டுவரும் விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியானது எல்லா நாடுகளை யுமே பாதித்துள்ளது. மனிதன் இதனால் புதிய பல வாய்ப்புக்களைப் பெற்றுள் ளான். இவ்வாறு இது முளைவிடத் தொடங்கிய நாள் முதல் இன்று வரை பல இன்னல்களைக் கடந்து பற்பல சாதனைகளைப் படைத்துக் கொண்டி ருக்கின்றது.

# அந்நியர் ஆட்சியின் போது ஈழத்தில் இந்துமதம்

சி. நிறஞ்சலா
A/L 2005 Arts

இலங்கை வரலாற்றில் ஓர் ஒழுங்கமைப்புடன் இருந்த இந்து மதமானது அந்நியர் ஆட்சியின் போது நிலைகுலைகின்றது. இருந்தும் பாரிய அழிவில் இருந்து மீண்டு இந்துமதம் வளர்ச்சி கண்டது.

போர்த்துக்கல்லிருந்து கிழக்கு நாடுகளுக்கு கடல்வழி வாணிபம் செய்யப் புறப்பட்ட போர்த்துக்கீசர் இலங்கை வந்தமை ஒரு தற்செயல் நிகழ்வே ஆகும். கோவாவுக்குச் செல்லும் வழியில் ஏற்பட்ட புயல் காரணமாக இலங்கைக் கரையை அடைந்தனர். இலங்கையின் மையம் முடிவுப்பகுதி சிங்களப்பேரரசு ஆண்டது. யாழ்ப்பாணத்தினை தமிழ் மன்னர் ஆண்டனர். மன்னர்களிடையே நிலவிய ஒற்றுமையின்மையால் விரைவாக போர்த்துக்கீசர் உள்வாங்கப்பட்டனர். யாழ்ப்பாண அரசும் உட்பகை துரோகம் காரணமாக 1621இல் அவர்கள் கைப்பட்டது.

போர்த்துக்கீசர் மத சகிப் பற்றோர். அவர்கள் பௌத்தர்களையும் இந்துக்களையும் வலிந்து தமது சமயத்திற்கு இழுத்தனர். அவ்வாறு ஆலய தலைவர்களைக் கொடுமைப் படுத்தினர். இந்து ஆலயங்களை இடித்து அங்குள்ள செல்வங்களைச் சூறையாடினர். சைவ ஆலயங்களை இடித்து தேவாலயங்கள் கட்டினர். விக்கிரகங்களைத் தமது நாடுகளுக்குக் கடத்தினர். 1533இல் நாள்தோறும் இரண்டாயிரம் சிற்பிகள் வேலை செய்தாலும் இருபது வருடம் சென்றாலும் முடியமாட்டாததும் கருங்கற்பாணியில் சீதாவாக்கை எனுமிடத்திலுள்ள பெறண்டி வைரவர் ஆலயத்தையும் 1575இல் அளவற்ற திரவியத்தை உடைய முன்னேஸ்வர ஆலயத்தையும் , 1588இல் தெய்வந் துறையிலுள்ள செம்பினால் வேய்ந்த சிகரங்களையும் 1000 விக்கிரகங்களை யும் கொண்ட விஷ்ணு ஆலயத்தையும், 1622இல் கோணேஸ்வரம், கேதீஸ்வரத் தையும் இடித்துப் பொடியாக்கினர். யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூர், மாவிட்ட புரம், செல்வச்சந்நிதி போன்றவற்றையும் தரைமட்டமாக்கினர்.

இவ்வளவு கொடுமைகள் செய் தும் அக்கால மக்கள் இந்துமதத்தை வளர்த்து வந்தனர். இவர்களது கொடுமைக்கும் ஈடுகொடுத்து தலை நிமிர்ந்து நின்ற வழிபாடு வைரவர் வழிபாடாகும். வளவுகள், மரங்கள் என்பவற்றிற்கு கீழ் வைரவர் சிலை வைத்து காவோலையால் மூடி வழிபட்டனர். கிணற்றடியில் உள்ள சூலங்களை பட்டையினால் மூடி பூசைவழிபாடாற்றிய பூக்களை கிணற் றுக்குள்ளும் போட்டும் வந்தனர். தற்செயலாய் சூலம் தென்பட்டால் தேங்காய் உரிக்கும் கருவி என்றும் பட்டை கொழுவுகின்ற தடி என்றும் அழைத்தனர். வாழையிலையில் உணவு உண்டுவிட்டு வீட்டுக்கூரையில் செருகி வைத்தனர். பிராமணர் மதகுருமார் என்பதால் வரி செலுத்தாது தப்பிக்கொள்ள ஏனையோரும் பூனூல் அணிவதன் மூலம் பிராமணராக தம்மைக்காட்டி வரி செலுத்தாது வாழ்ந்தனர்.

இக்காலகட்டத்தில் யாழ்ப் பாணத்து தமிழ் அரசர் காலத்தைப் போல சைவப் பிரபந்தங்கள் எவையும் ஆக்கப்படவில்லை. ஆனால் கத்தோ லிக்க நூல்கள் பெருமளவு தோன்றின.

இந்து சமயம் நலிவடைந்து தேசிய உணர்வு மங்கி மறைந்து கலாசார உணர்வும் அழிந்து மக்கள் சுதந்திரம் இழந்த ஓர் இருண்ட காலமாக போர்த்துக்கேயர் காலம் காணப்படுகின்றது.

போர்த்துக்கேயரைத் தொடர்ந்து வந்த ஒல்லாந்தர் சமயக் கொடுமை இழைக்கவில்லை. பசு வதைத்தல் என்பதே ஒல்லாந்தர் காலத்தில் முக்கிய சமய எதிர்ப்பு நிகழ்வாக இருந்தது. இவ்வாறு ஒருநாளுக்கு ஒரு வீடு இறைச்சி அளித்தல் வேண்டும். அவ்வாறு சுவாமி ஞானப்பிரகாசர் ஆறுமுக நாவலரது முறைவரும் போது இரவோடு இரவாகத் தப்பி இந்தியா சென்றனர்.

போர்த்துக்கீசரைப் போன்று இந்துக்கோயில்களை அழித்தனர். 1730இல் மட்டக்களப்பிலுள்ள சைவக் கோயில்களையும் இடித்தனர். தமது மதமாகிய புரட்டஸ்தாந்து மதத்தினை மக்களிடையே திணிப்பதில் முனைப்பாயிருந்தனர். கிறீஸ்தவத் தேவாலயங்களுக்கு மக்கள் செல்ல வேண்டுமெனப் பணித்தனர். பாடசாலைகளிலும் கிறீஸ்தவக் கல்வியை முதன்மைப்படுத்தினர். 1821இல் அழிக்கப்பட்ட நல்லூர் கோவிலை 1793ஆம் ஆண்டு ஒல்லாந்தரது அனுமதியுடன் 1793ஆம் ஆண்டே மீளப்புதிதாக ஆக்கப்பட்டது. 1787ஆம் ஆண்டு ஒல்லாந்தத்தளபதியினுடைய ஆசியுடன் வண்ணை வைத்தீஸ்வரர் கோயில் வைத்திலிங்கச்செட்டியாரால் கட்டத்தொடங்கி 1791இல் திருப்பணி நிறைவு பெற்றது.

இவர்கள் தமது ஆட்சியின் போது அழிவுற்ற கட்டடங்களை ஆக்கியதுடன் நிலங்களைச் செம்மைப்படுத்தினர். இவர்களது ஆட்சியில் இந்துமதம் செழிப்படைந்து காணப்பட்டது. பல இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. பறாளை விநாயகர் பள்ளு, மறைசயந்தாதி, ஊஞ்சல், தூது இலக்கியங்கள் பலவும் தோற்றம் பெற்றன. எனவே ஓரளவு வளர்ச்சிக் காலமாகவே என்றே ஒல்லாந்தர் காலம் விளங்கியமையைக் காணலாம்.

1796ஆம் ஆண்டு இலங்கையின் கரையோரப்பகுதிகளையும் 1815 கண்டியையும் கைப்பற்றிய ஆங்கிலேயர் 1822ஆம் ஆண்டு முழு இலங்கையையும் கைப்பற்றினர். மதம் மாறுபவருக்குப் பல சலுகைகள் வழங்கப்பட்டன. புடவைகள் உத்தியோகம் பதவி பட்டம் என பொருளாதார வசதிகளையும் செய்தனர். இவற்றை காரணமாக வைத்து மத மாற்றம் செய்தனர். மதமதற்றத்தோடு கல்வியையும் போதித்தனர். மிஷனரிப் பாடசாலைகளை உருவாக்கி ஆங்கிலம் போதித்தனர். மாணவர்களுக்கு விவிலிய வேதம், ஆங்கிலம் கற்றல் போன்ற கட்டாயங்களை செய்தனர்.

எனினும் பெரும்பாலானோர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று நடப்போராய் கிறீஸ்தவ வேடத்தில் சைவராய்த் திரிந்தனர். இவர்களை "பஞ்சாட்சரக் கிறீஸ்தவர்" என அழைப்பர். இதன் பொருள் என்னவெனின் சம்பளத்திற்கு கிறீஸ்தவன் போலவும் மற்ற வேளைகளில் இந்துவாகவும் நடித்தனர். இக்காலத்தில் நாவலர் பாதிரிமாருக்கு எதிராக கண்டனம் எழுதினார். "யாழ்ப்பாணச் சமய நிலை" என்ற பெயரில் துண்டுப் பிரசுரம் எழுதினார். இவர்களது செயற்பாட்டால் இந்துமதம் காக்கப்பட்டது. நாடெங்கும் 147 இந்துக் கல்லூரிகளை அமைத்தார். பல சலுகைகள் செய்து கல்வி போதித்தார்.

மட்டக்களப்பில் விபுலானந்தரும் அந்நியருக்கு எதிராக பிரச்சாரம் செய்தார். நாவலர் பெருமான் பார்சிவல் பாதிரியாரின் நன்மதிப்பைப் பெற்று அப்பாடசாலையில் தமிழ் ஆசிரியராக இருந்ததுடன் கிறீஸ்தவர்களின் புனித நூலான பைபிளினை மொழிபெயர்த்தார். பிரமச்சாரியராக இருந்து அந்நியருக்கெதிராகப் பிரச்சாரம் செய்தார். வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை பிரித்தானியருக்கெதிராக அமைத்தார். அதனைத் தொடர்ந்து நாடெங்கும் பல பாடசாலைகளை அமைத்தார்.

கிறீஸ்தவ பாதிரிமார் தமது நாடுகளில் இருந்து பல பெரியார்களை

அழைத்துக் கல்வி போதித்தனர். அச்சு இயந்திரத்தின் மூலம் தமிழ் மொழியில் பைபிளை ஆக்கி இலவசமாக விநியோகித்தும் பல சலுகைகளை வழங்கினர். இலவச உணவுகளையும், மருந்துப் பொருட்களையும் உடைகளையும் வழங்கி னர். இவர்கள் முன்னையவர்களைப் போலல்லாது அதாவது யுத்த முறைகளைக் கையாளாது பல சலுகைகளை வழங்கியும் மக்களோடு ஒன்றியும் தமது மதத்தைப் பரப்ப முயன்றனர்.

இவர்களுக்கெதிராக நாவலர் செயற்பட்டார். திருக்கேதீஸ்வரத்தினை மீண்டும் உருவாக்க முனைந்தார். சைவப்பிள்ளைகள் திருநீறு தரிக்க வேண்டும் என்பதனையும் கல்வி கற்க வேண்டும் என்பதையும் முன்வைத்தார். இந்துக்கல்லூரிகளை நாட்டின் பல பாகங்களிலும் அமைத்தார். மற்றச் சமயவாதிகளுக்கெதிராகத் துண்டுப் பிரசுரங்கள் மூலம் தம் மதத்தை மெய்ச் சமயமாக நிறுவினார். சைவ ஆலயங்களில் நிகழும் ஆடம்பர நிகழ்வுகளைக் குறைத்தார். பாதிரிமார்களது "ஒரு கையில் செபமாலையும் மறுகையில் பைபிளும்" எனும் கட்டளைக்கெதிராக உருத்திராட்சமும் திருநீறும் தரிக்க வேண்டும் எனப் பணித்தார். பாதிரிமாரது சலுகை எனும் மாயைக்குள் அடி பணிந்த மக்களை மீட்டெடுக்கப் புராண படன முறையை அறிமுகம் செய்தார். இவரைத் தொடர்ந்து மகாவித்துவான் நா.கதிரைவேற்பிள்ளை சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரனார் ஆனந்தகுமார சுவாமிகள் போன்ற பெரியார்கள் தம்மை உருக்கி இந்துமத மறுமாற்றத்திலிருந்து மக்கள் மாறாதிருக்க அரும் பணியாற்றினர்.

மலையக மக்கள் படும் துயரங்களை சளைக்காது உலகிற்கு எடுத்துக்கூறியும், வெள்ளையர்களால் அப்பாவித் தமிழ் மக்கள் படும் துயரங்களை தெளிவாக எடுத்துக்கூறியும் பணியாற்றியவர் நா.முத்தையா அவர்கள். "ஆத்ம ஜோதி" என்ற மாதச் சஞ்சிகை மூலம் இந்துமதத்தை உலகிற்கு அறிமுகம் செய்தவர். கண்டியில் தபோவனம் அமைத்து பயிற்சி வழங்கியவராக கண்டி சுவாமி சச்சிதானந்தர் என்றும் நினைவுகூரக் கூடியவர். இவர் பல ஆங்கிலேயருடன் வாதத்தில் வென்று பேராதனை குறிஞ்சிக் குமரனை வழிபடச் செய்தவர் என்பது வரலாறு.

1889இல் சைவபரிபாலன சபையையும் 1890இல் இந்துக்கல்லூரி அதிகாரசபையும் தோன்றி மதமாற்றத்திலிருந்து காத்தன. கிறீஸ்தவ இளைஞர் சபை **(Young men Christian Association)** போல பற்பல இடங்களில் நிறுவி இந்து சமயத்தினை வளர்த்தனர். இலங்கைச் சேக்கிழார் மன்றத்தினை 1864இல் உருவாக்கினர். இச்சபை 1869இல் நாவலர் நூற்றாண்டு விழாவை வியக்கத்தக்கவாறு நடாத்தி வெற்றி கண்டது. திருமறைக்கலா மன்றத்திற்கு எதிராகச் செயற்பட்ட ஒரே ஒரு இந்து நிறுவனமாக மேல் மாகாணம், மத்திய மாகாணம் போன்றவற்றில் இது திகழ்ந்தது. நமது கடவுளரது திரு அவதாரச் செயல்களை நடாத்தியும் அவர்களை கவரக்கூடிய வகையில் பிரசுரமாக்கினார். இதனால் இந்துக்கடவுளரின் சக்திகளை தம் நாட்டுக்குப்பரப்பியதாக சான்றாதாரம் உள்ளது.

யாழ்ப்பாணம் 1592இல் போர்த்துக்கேயரால் முற்றுகையிடப் பட்டது. அவர்களது ஆட்சியின் போது அழிவான இவ் ஆலயம் 1734இல் மீண்டும் ஒல்லாந்தர் ஆட்சியின் போது கட்டப்பட்டு பிரித்தானியர் ஆட்சியின் போது பல்வேறுபட்ட செல்வாக்ககளுடன் வளர்க்கப்பட்டது.

எனவே அந்நியரது ஆட்சியின் போது ஏற்பட்ட மதமாற்றம் இன்றும் தொடர்வதைக் காணலாம். அக்காலத்தில் பல பெரியார்கள் அவதரித்து இந்துமதப் பெருமைகளை எடுத்துக்கூறி நிலைபெறச் செய்தனர். இல்லையேல் இன்று இந்துமதம் என்று ஒரு மதம் இருப்பதே சந்தேகமானதாகும். அந்நியர் ஆதிக்கத்தில் அடிபணிந்த மக்களைப்போல் இன்றும் மக்கள் அடிபணிகின்றனர். அன்று கட்டாயமாக மதம் மாறிய மக்கள் இன்று பலசலுகைகளுக்காக மதம் மாறிய வண்ணம் உள்ளனர். அன்று உதித்த நாவலர் போல் இன்றும் அதே இடத்தில் பல நாவலர்கள் தோன்றியுள்ளனர். அப் பாரிய அழிவு என்றும் தொடராது என்பது திண்ணம்

# நாமும் நமது கலாசாரத் தனித்துவமும்

ப. பாமினி
A/L 2006 Arts

தமிழ் மக்கள் மிக நீண்ட காலமாக இலங்கையில் வாழ்ந்து வருகிறார்கள். நீண்டகால வரலாற்றைக் கொண்ட ஓரினம் தனித்துவமான பண்பாட்டினைக் கொண்டிருத்தல் அவசியம். ஓரினத்தின் அல்லது ஒரு குழுவின் தனித்துவத்தை நிர்ணயிக்கும் காரணிகளுள் அவ்வினத்திற்கோ அல்லது குழுவிற்கோ அரிய தனித்துவ மான பண்பாடும் மிக முக்கிய ஒரு காரணியாகும்.

எமது பண்பாடு என்று எண்ணியதும் நம் மனக்கண்முன்னே சில கருத்துருவங்கள் தோன்றுகின்றன. சமூகவியல், மானிடவியல் துறைகளில் 'உயர்வழக்கு' மாத்திரம் பண்பாடாகக் கொள்ளப்படுவதில்லை. பண்பாடு என்பது ஒரு மக்கட்கூட்டம் தமது சமூக வரலாற்று வளர்ச்சியின் அடியாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதிகப் பொருட்கள், ஆத்மார்த்தக் கருத்துக்கள், மத நடைமுறைகள், சமூக பெறுமானங் கள் ஆகிய யாவற்றினதும் தொகுதியா கும். ஒரு கூட்டத்தினரின் தொழில் நுட்ப வளர்ச்சி, உற்பத்தி முறைமை, உற் பத்தி உறவுகள், கல்வி, விஞ்ஞானம், இலக்கியங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் தொகுதியாகும்.

இவற்றுள் கலைகள் முக்கிய மானவையாகும். ஒரு குழுவின் சமூக அமைவின் மிகத் தூரத்துப் பிரதிபலிப் பாக அமைவன கலைகள். ஒரு இனத் தில் அல்லது குழுவின் மத்தியிற் காணப்படும் கலைகளின் பரிணாமத் தைக் கொண்டும் அவ்வினத்தின் தன்மை அமைப்பு என்பவற்றைக் கணக்கிட முடியும். வெள்ளத்த னைய மலர் நீட்டம் என்பது போல சமூகத்த னையவே கலைகளும் அமையும். கலைகளை ஆராய்தல் என்பது ஓர் ஆய்வாளனை இறுதியில் சமூகத்தை ஆராய்தலுக்குக் கொண்டு சென்றுவிடும்.

ஓர் இனத்தின் அல்லது குழு வின் வளர்ச்சிப் போக்கில் அக்குழுவி னுள் இருந்து அவ்வினத்திற்கோ அல்லது குழுவிற்கோ உரிய கலைகள் இயல்பாக எழுமாயினும் வலிமை வாய்ந்த அல்லது வளர்ச்சியடைந்த பிறிதோர் இனத்தின் தொடர்புகளும் அவற்றின் கலைத்தாக்கங்களும் குறிப்பிட்ட இனத்தின் கலைகளிற் பல மாற்றங்களை ஏற்படுத்திக் கூறும்.

கட்டிடம், சிற்பம், ஓவியம், நடனம், சங்கீதம், இலக்கியம், நாடகம், போன்ற கலைகளைப் பொறுத்தவரை ஈழத் தமிழரிடையே ஒரு நீண்ட பாரம்பரியம் உள்ளது. எமது கலைப் பாரம்பரியத்தை நிர்ணயிப்பதில் எமது அண்டை நாடான இந்தியா அன்றிலி ருந்து இன்றுவரை பெருஞ் செல்வாக்கு செலுத்தி வருகின்றது. எமது நாட்டுக் கலைகளில் மாத்திரமன்றித் தென்னாசிய நாடுகளனைத்திலும் இச் செல்வாக் கினைக் காணலாம்.

இந்தியாவில் தமிழ் நாட்டோடு ஈழத்தில் வாழ்ந்த தமிழர் வைத்திருந்த மாறாத் தொடர்பு காரணமாகவும் இங் குள்ள சமூக அமைப்பு காரணமாகவும் குறிப்பிட்ட சில கலைகளையே உய ரிய கலைகளாகக் கொள்ளும் மனப் பாங்கும் நமது தனித்துவங்களை மறந்து தாய்நாடு எனக் கூறப்படும் தமிழகத்தினையே எதற்கும் ஆதர்ச மாகக் கொள்ளும் பண்பும் எம்மவருக்கு ஏற்பட்டது. இதற்குப் பல வரலாற்றுக் காரணங்களுண்டு.

எமது அயல் இனத்தவரான சிங்கள மக்களும் தமது தனித்துவங் களைப் பற்றிச் சிந்திக்காத காலம் ஒன்று இருந்தது. ஆனால் பின்னாளில் அவர்கள் இப்பிணைப்பினின்றும் மெல்ல விடுபட்டுத் தமது தனித்துவங்களைக் கலையின் பல துறைகளிலும் வளர்த் தெடுத்துள்ளனர். இந்நாடு சுதந்திரம் பெற்ற பின் ஏற்பட்ட தேசிய எழுச்சியில் வளர்ச்சி பெற்றோர் அவர்களே. சிறுபான் மையினர் என்ற அச்சம் காரணமாக தமிழர் அங்ஙனம் தம்மை வளர்க்க முயன்றாரில்லை. மிகப் பெரும்பான்மை யினரான இந்தியத் தமிழ் பாரம் பரியத்தின் நிழலில் மானசீகமாக ஒதுங்கி மன ஆறுதல் தேடிக் கொண்டனர்.

1950களுக்குப் பின்னர் சிங்கள வர்கள் மத்தியில் கலைத்துறையில் பெருவளர்ச்சி தோன்றுகிறது. இரு இன மக்களுக்கும் அன்று அரச ஆதரவு கிடைத்த போதிலும் உடனடித் தேவை காரணமாகவும் அரசின் திட்டமிட்ட ஊக்குவிப்பு காரணமாகவும் அமரதேவ போன்றோர் சிங்கள சங்கீதத்தை வளர்த்தனர். மணிபாரத, சித்திரசேனா, வஜிரா போன்றோர் சிங்கள நாட்டி யத்தை வளர்த்தனர். கண்டிய நடனம் அவர்களின் கலாசாரச் சின்னமான தேசிய நடனமாயிற்று. சரத்சந்திர போன்றோர் சிங்கள மக்களுக்கெனத் தனித்துவம் மிக்க நாடக அரங்கினைத் தோற்றுவித்தனர். அவரது மனமே, சிங்கபாகு நாடகங்கள் சிங்கள நாடகத் துறையின் வழிகாட்டிகளாயின.

ஈழத்து தமிழர்களைப் பொறுத்த வரை இம்முயற்சிகள் பெருமளவு நடைபெறவில்லையென்றே கூறலாம். தமிழ் நாட்டுக்கும் எமக்கும் இடையே மொழி, சமயம், கலாச்சாரம் ஆகிய விடயங்களில் ஒற்றுமை இருந்தமை யால் இந்தியத் தமிழர்தம் கலை களையே இங்குள்ள தமிழரும் ஆதர்சமாக கொண்டார்கள். இங்குள்ள தமிழரது சமூக அமைப்பும் அதற்குத் துணையாக நின்றது. தமிழ் நாட்டில் வளர்ச்சி பெற்ற பரதம், நாடகம், சினிமா, இலக்கியம் என்பவற்றை நிறையப் பார்க்கவும் படிக்கவும் ஏற்ற சூழல் இங்குள்ள தமிழுக்குத் தொடர்ந்து வாய்த்தது. இதனால் தென்னிந்தியக் கலையையே நமது கலை என்று வெளிப்படையாகக் கூறும் நிலைக்கும் வந்தோம்.

நாவலர் உரத்துச் சொன்ன ஈழத்து இலக்கிய பாரம்பரியத்தைக் காரணம் காட்டி நிறுவினார் பண்டிதமணி கணபதிப்பிள்ளையவர்கள். இவர்கள் காட்டிய இலக்கிய பரம்பரை பெரும் பாலும் யாழ்ப்பாணத்துப் புலவர் குழாத் தையுள்ளடக்கியதாகவும் செந்நெறி இலக்கியம் சார்ந்ததாகவும் மரபு வழிப்பட்டதாகவும் அமைந்தது.

அவர் காட்டிய இலக்கியப் பாரம்பரியம் சமூக வளர்ச்சிப் போக்கில் மேலும் வளர்ந்தது. ஈழத்து இலக்கிய பாரம்பரியத்தை அகட்டிப் பாரம்பரியத் தொடர்ச்சியை வலியுறுத்தியவர்கள் பேராசிரியர் வித்தியானந்தனும் கலாநிதி க.கைலாசபதியும் கலாநிதி கா. சிவத்தம்பியும் ஆவர். இவர்கள் பரப்பினுள் யாழ்ப்பாணத்துப் புலவர் மாத்திரமன்றி மட்டக்களப்பு, மன்னார், தலைநாட்டு முஸ்லீம் எழுத்தாளர்களும் அடங்குவர். செந்நெறி இலக்கியம் மாத் திரம் அன்றி வாய்மொழி இலக்கியம் நாட்டார் இலக்கியம் என்பனவும் எமது இலக்கியப் பாரம்பரியமாக கணிக்கப் படலாயிற்று. சமூகத்தின் உயர்குழாத் தினர் மாத்திரமின்றி சகல மட்ட எழுத் தாளர்களும் ஈழத்துத் தமிழ் இலக்கிய பாரம்பரியத்தவராயினர். மண்வாசனை யும் ஈழத்துத் தமிழர் பிரச்சினைகளும் வெளிப்பட நாவல் சிறுகதை எழுதிய நமது எழுத்தாளர்கள் அப்பாரம்பரி யத்தை வளர்த்துச் சென்றனர். இவ்வகையில் 1960களில் ஈழத்தில் வாழ்ந்த தமிழர்களின் இலக்கியத் தனித்துவம் இனங் காணப்படலாயிற்று. ஈழத்து தமிழிலக்கியம் என்ற பெயரும்

இலக்கிய உலகில் இடம்பெலாயிற்று. இன்று இத்துறை மேலும் ஆராயப் படுகிறது. ஆராய்ச்சியில் ஈடுபடுபவர் களுள் கலாநிதி கா. சிவத்தம்பி கலாநிதி பொ. பூலோகசிங்கம் கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவ்வண்ணம் ஈழத்துத் தமிழரின் கலைத் தனித்துவத்தைக் காணும் முயற்சிகளும் பேணும் முயற்சிகளும் வளர்க்கும் முயற்சிகளும் 1960களிலிருந்து மெல்ல மெல்ல மேற்கொள்ளப்பட்டு வந்தன. எனினும் இன்னும் நாம் தென்னிந்திய மாயையி னின்றும் முற்றாக விடுபட்டோமில்லை. அளவுக்கதிகமாக இங்கு வந்து குவியும் மூன்றாந்தர வீடியோ திரைப் படங்கள் இதற்குச் சான்றாகும். ஆனால் இன்றைய சூழலும் நெருக்கடியும் தேவையும் இங்குள்ள தமிழர்களைத் தாங்களே அறிந்து கொள்ள வேண்டிய அவசியத்தை ஏற்படுத்துகின்றன.

இன்றைய சமூக மாற்றத்தின் மத்தியில் கலைத் தனித்துவம் பற்றிய வாத பிரதிவாதங்கள் நிகழ்கின்றன. ஏற்கனவே எமது முன்னோடிகளால் தொடங்கப்பட்ட கலைப் பாரம்பரியத்தை மென்மேலும் முன்கொண்டு செல்ல வேண்டியதும் இது வரை உயர்ந்தோர் கடைக்கண்படாது கவனிப் பாரற்று கிடந்த தனித்துவம் மிக்கக் கிராமியக் கலைகள் வளர்க்கப்பட வேண்டியதும் தற்போது வளர்ச்சி பெற்றுள்ள கலை வடிவங்கள் மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தப்பட வேண்டியதும் அவற்றினூடாக இங்குள்ள தமிழர்களின் வாழ்க்கை முறை போராட்டங்கள் முரண்பாடுகள் என்பன பிரதிபலிக்கப்பட வேண்டியதும் இன்றைய காலகட்டத்தில் வாழும் கலைஞர்களின் கடமை ஆகின்றது.

* * *

## நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையில் அங்கம் வகிக்க முடியாதவர்கள்

1. பாராளுமன்றம், மாகாணசபை, உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள்.
2. இலங்கை பிரஜையாக இல்லாது இருப்பின் அல்லது இல்லாது ஒழியின்
3. சித்த சுவாதீனம் அற்றவராகக் காணப்படின்
4. துர்நடத்தை உடையவராக இருப்பின்
5. இலங்கையில் அல்லது வேறொரு நாட்டின் தண்டனைத் தீர்ப்பிற்கு உள்ளாகி இருப்பின்

## பிம்ஸ்ரெக்

சுற்றுலாத் தொடர்பாக இலங்கை, இந்தியா, வங்காளதேசம், மியான்மார், தாய்லாந்து ஆகிய ஐந்து நாடுகள் ஒன்று சேர்ந்து உருவாக்கிய பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பாகும். இந்த் அமைப்பின் 2003ஆம் ஆண்டில் நடைபெற்றது.

## சிறப்பியல்பு வாய்ந்த நிதி நிறுவனங்கள்

1. வர்த்தக வங்கிகள்
2. குத்தகைக் கம்பனி
3. துணிகர முயற்சி மூலதனக் கம்பனி
4. காப்புறுதிக்கம்பனி

# [அளவையியல்] சிந்தனை விதிகள்/ எண்ண விதிகள்

க. கேசவன்
A/L 2006 Arts

மனிதனின் பகுத்தறிவு ஆகிய செயலை ஆராய்வதற்காக மரபுத் தர்க்கத்தில் இருந்து முன்வைக்கப்பட்ட தத்துவங்களே சிந்தனை விதிகள்/ எண்ண விதிகள் ஆகும். இந்த சிந்தனை விதியின் கீழ் பின்வரும் தத்துவங்கள் இடம்பெறுகின்றன.

i. ஒருமைத்தத்துவம்
ii. எதிர்மறைத்தத்துவம்
iii. விலக்கிய நடுப்பதத் தத்துவம் } அரிஸ்ரோட்டில் (உய்த்தறிதல்)
vi. போதிய நியாயவிதி } இலைப்பினிஸ் (தொகுத்தறிதல்)
v. இரட்டைமறுப்புத்தத்துவம் } தற்கால அறிவியல்

இச் சிந்தனை விதிகளில் முதல் 32ம் அரிஸ்ரோட்டிலினால் முன்வைக்கப்பட்டது ஆகும். இது உய்த்தறிதலை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் போதிய நியாய விதி இலைபினிஸ்ற் என்ற சிந்தனையா ளரால் முன்வைக்கப்பட்டது. இது தொகுத்தறிதலை அடிப்படையாகக் கொண்டது. இவை ஒவ்வொன்றையும் இங்கு நோக்கிக் கொள்ளலாம்.

### ஒருமைத்தத்துவம்:

சிந்தனைவிதிகளில் முதலாவ தாக அமைந்த தத்துவம் ஒருமைத் தத்துவம் ஆகும். இத்தத்துவம் அரிஸ் ரோட்டிலினால் கூறப்பட்டது. இது உய்த் தறிதலை அடிப்படையாகக் கொண்டது. இந்த ஒருமைத் தத்துவம் ஒருபதம் குறிக்கும் பொருளானது எல்லோரு டைய மனதிலும் ஒரே எண்ணத்தையே வெளிக்காட்டும் எனக்கூறுகின்றது. இங்கு பதம் குறிக்கும் பொருட்களில் உள்ளார்த்தமான மாறுபாடு இருப்பினும் அதில் உள்ள ஒற்றுமைத் தன்மை யையே இப்பதம் குறிக்கும். இதனை **A.A** ஆகும் என்ற குறியீட்டால் குறிப்பதுண்டு.

**Ex:**

**i.** மனிதன் என்னும் போது பகுத்தறிவுடையவன் என்ற ஒருமையான எண்ணம் வெளிப்படுகிறது.

இது போன்று **A** என்னும் போது 3 கோடுகளால் அடைக்கப்பட்ட தளவுரு என்ற எண்ணம் வெளிப்படுத்தப் படுகின்றது.

### எதிர்மறைத்தத்துவம்:

(முரணாண்மைத் தத்துவம்)

சிந்தனை விதிகளில் ஒருமைத் தத்துவத்திற்கு பின் அமைந்த தத்து வம் எதிர்மறைத் தத்துவம் ஆகும். இத் தத்துவம் அரிஸ்ரோட்டிலினால் முன் வைக்கப்பட்டது. இத்தத்துவம் உய்த் தறிதலை அடிப்படையாகக் கொண்டுள் ளது. இவ் எதிர்மறைத் தத்துவமானது ஒரு பதம் குறிக்கும் பொருள் ஒருங்கே ஓர் இயல்பைக் கொண்டதாகவும், கொண்டு அமையாததாகவும் இருக்க முடியாது என விளக்கி நிற்கின்றது. இதனை குறியீட்டில் **A** என்பது ஒருங்கே **B** ஆகவும் **B** அல்லாத தாகவும் இருக்க முடியாது என்ற குறியீட்டால் உணர்த்தப்படுகின்றது.

**Ex:**

**i.** மனிதன் ஒருங்கே பகுத்தறி வுடையவனாகவும் பகுத்தறிவு அற்றவ னாகவும் இருக்க முடியாது.

### விலக்கிய நடுப்பதத் தத்துவம்:

சிந்தனை விதிகளில் 3வதாக அமைந்த தத்துவம் விலக்கிய நடுப்பதத் தத்துவம் ஆகும். இத்தத் துவமும் அரிஸ்ரோட்டிலினால் முன் வைக்கப்பட்டது. இது உய்த்தறிதலை அடிப்படையாகக் கொண்டது. இத்தத்து வம் ஒருமைத்தத்துவத்தினதும் எதிர்

மறைத் தத்துவத்தினதும் கிளை யாக உள்ளது. இத் தத்துவமானது ஒரு பதம் குறிக்கும் பொருள் ஒன்றில் ஒரு இயல்பைக் குறிக்கும்/அந்த இயல்பை கொண்டிராமல் இருக்கும். என விளக்கம் காட்டப்படுகிறது. இத்தத்துவத்தை குறியீட்டில் **A** ஒன்றில் **B** ஆகும்./ **B** அல்லதாகும் என்ற குறியீட்டினால் குறிப்பிடுவர்.

**Ex:**

**i.** மனிதன் ஒன்றில் பகுத்தறிவு உடையவனாவான் /பகுத்தறிவு அல்லாதவனாவான்.

**போதிய நியாயவிதி:**

அரிஸ்ரோட்டிலின் சிந்தனை விதிகளின் பின் கூறப்பட்ட தத்துவம் போதியநியாயவிதித் தத்துவம் ஆகும். இத் தத்துவம் இலைப்பினிஸ்ற் என்ற சிந்தனையாளரால் கூறப்பட்டது. இத் தத்துவம் தொகுத்தறிதலை அடிப்படையாகக் கொண்டது. இத் தத்துவம் எந்த ஒன்றும் உண்மையாக அமைவதற்கு போதுமான ஆதாரம்/நியாயம் முன் வைக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றது. எந்த ஒன்றும் அதுவாக இருப்பதற்கு உரிய ஆதாரமும், அதுவல்லாத வேறெதுவும் இல்லை என்பதையும் எடுத்துக் காட்டவேண்டும்.

**Ex:**

**i.** ஒருவரை குற்றவாளி எனக் கூறுவதாயின் அவர் செய்த குற்றத்திற்கு போதுமான ஆதாரம் முன் வைக்கப்பட வேண்டும்.

**இரட்டை மறுப்புத் தத்துவம்:**

தற்கால தர்க்க முறையில் கூறப்பட்ட ஒரு தத்துவம் இரட்டை மறுப்புத் தத்துவம் ஆகும். இத் தத்துவம் எந்த ஒரு கூற்றையும் இருமுறை மறுத்தால் உடன்பாடான கருத்து பெறப்படும் என கூறுகின்றது எடுத்துக்காட்டாக

அவன் பரீட்சையில் சித்தியடையாமலில்லை என்பது

அவன் பரீட்சையில் சித்தியடைந்தான்

என்பதையே காட்டும் இதனை குறியீட்டில் NNP=P என்பதாக உணர்த்தலாம்.

❒ ❒ ❒

# சிந்தனைக்குச் சில..........

* மனம் எதை நினைக்கிறதோ அதுவாகவே ஒருவன் ஆகிறான்.
* ஒருவனுக்கு உணவளிப்பதை விட, அதை அவன் தேடிக்கொள்ள வழிகாட்டுவது சிறந்தது. ஒருவனுக்கு உதவி செய்வதை விட,அவன் பிறருக்கு உதவி செய்யக் கற்றுக் கொடுப்பதே நல்லது.
* அறிந்து கொள் அல்லது அறிந்தோர்க்கு செவி சாய்த்துத் தெரிந்துகொள்.
* ஆழ்ந்த அன்பு திடீரென மலர்வதில்லை. அதே போல், மலர்ந்த அன்பு ஒருபோதும் அழிவதில்லை.
* முன் எச்சரிக்கை பின் விளைவுகளை பிரதிபலிக்கும்.
* குறைந்தளவு பணம் நம்மைக் காப்பாற்றும் நிறைந்தளவு பணத்தை நாம் காப்பாற்ற வேண்டும்.
* உழைத்தவன் வியர்வை காயுமுன் அவனுக்குரிய கூலியைக் கொடுத்துவிடு.
* புலன்களிற்கு இரையாகும் மனிதன் சமுதாயத்தின் அச்சுப் பிழை.
* நாம் எல்லோரும் உலகின் பங்குதாரர்கள். உரிமை இருப்பது போலவே கடமையும் நம் எல்லோருக்கும் உண்டு.

**இ. றாஜிதா A/L 2006 $A_2$**

# மனைப்பொருளியற் கல்வியின் முக்கியத்துவம்

கு. றஜிதா
A/L 2005 Arts

இன்று மாணவர்களினதும் சமுதாயத்தினதும் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் விரிவான கவனத்தை கல்வி அமைச்சு சகல மட்டங்களிலும் செலுத்தி வருகின்றது. பாடசாலைகளில் இருந்து உருவாக்கப் படும் எதிர்கால நற்பிரஜைகள் எமது பாரம்பரியங்கள், பண்பாடுகள் கலா சாரங்களுக்கு உட்படுத்தப்பட்டு ஆற்றல் மிக்கவர்களாவும் நாகரீகம் பொருந்திய வர்களாகவும் மாற்றமடைய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதற்காக தற் போதைய கல்வித்திட்டத்தில் க.பொ.த. (சா/த) க.பொ.த. (உ/த) வகுப்புகளிற்கு மனைப்பொருளியல் கற்பதற்கான வாய்ப்புக்களும் வசதிகளும் வழங்கப் பட்டுள்ளன.

மனைப்பொருளியற் கல்வியைக் கற்கும் மாணவர்கள் வீட்டையும், சுற்றுப்புறத்தையும் சுகாதார முறைப்படி தூய்மையாகவும் அழகான முறையில் வைத்துக் கொள்வது பற்றியும் குடும்பத்தை சிறந்த முறையில் பேணி வளர்ப்பது பற்றியும் எடுத்துக் கூறுவதே மனைப்பொருளியல் **(Home Economics)** ஆகும். மனைப்பொருளியல் கல்வியை கற்கும் மாணவர்களிடம் உரிய வேளைகளில் வேலைகளை மேற் கொள்ளுதல் பரஸ்பர ஒற்றுமை அழகியல் கலைப்படைப்பாற்றல்கள் சமூக சேவைகள், பொதுச்சேவைகள், தனிநபர் சுகாதாரம், குடும்ப சுகாதாரம் சமூக சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு அதிகமாகக் காணப்படுகின்றது. அத் துடன் தமது கடமைகள், பொறுப் புக்கள், மனித உரிமைகள், மனித கௌரவம் என்பவற்றை மதித்து தமது சமூக தொடர்பான பிரச்சனைகளை இனம் கண்டு அவற்றைத் தீர்ப் பதற்கேற்ற வழிமுறைகளை கையாளக் கூடிய ஆற்றல் உடையவர்களாகவும் உள்ளனர்.

இத் துறையில் கற்கும் மாணவர்கள் தமது சுய தொழிற் பாடுகளை வளர்த்து பூரண மனிதத்து வத்தின் முன் மாதிரியாக அவர்கள் மாற்றமடைய உதவுகிறது.

மனிதன் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு இன்றியமையாததாக அமைவது சிறந்த சத்துள்ள உண வாகும். சமையலுக்கு இக் காலத்தில் பயன்படுத்தும் மின்சார அடுப்பு, வாயு அடுப்பு பிறெஸர் குக்கர் **(Pressure Cooker)** குளிர்சாதனப் பெட்டி, இன் னும் பல நவீன இயந்திர சாதனங் களின் அமைப்பு, இயக்கம் என்பன பற்றி இக்கால பெண்கள் அறிந்திருப் பது மிக முக்கியமாகும்.

குழந்தைகளைப் பேணி வளர்ப் பதும் மனைப்பொருளியலில் ஒரு பகுதியாக விளங்குகின்றது. இதற் கமைய குழந்தைகளுக்கான உள வியல் பற்றிய அறிவு பெற்றிருப்பது மிக மிக அவசியமாகும். மேலும் குடும்ப அங்கத்தவர்களின் ஒத்துழைப் பைப் பெற்று வேலைகளை பகிர்ந்து செய்ய வேண்டும். மேலும் குடும்ப அங்கத்த வர்களுக்கு இடையிலும், குடும்பத்தினருக்கும் சமுதாய மக்களுக் கும் இடையிலும் நல்லுறவை ஏற்படுத்த திறமை முக்கியமானதாகும். குடும்ப அங்கத்தவர்கள் விருந்தினர்கள் என்போரின் வசதிக்கேற்ப ஏற்பாடுகள் இடம் பெற வேண்டும்.

வயோதிபர்களையும் நோயாளர் களையும் தனி அக்கறையுடன்

கவனிக்க வேண்டும். அடுத்து குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் மகிழ்ச்சியும் வசதியும் மனநிறைவும் ஏற்படும் வகையில் குடும்பங்களில் வரவு செலவு திட்டத்தை வகுக்க வேண்டும். சகல குடும்பங்களில் உள்ள அனைவருக்கும் மனைப்பொருளியல் அறிவு என்பது இன்றியமையாததாக விளங்குகின்றது.

தற்காலத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கவும் ஆற்றல்களை வளர்த்து பூரண ஆளுமையை ஏற்படுத்தவும் மனைப் பொருளியல் கல்வியினால் முடியும். இதனால் இன்று மனைப் பொருளியல் கல்வி பாடசாலை மட்டத்திலிருந்து பல்கலைக்கழகம் வரை ஒரு பாடத்துறையாக விரிவடைந்து அதில் பட்டங்களும், பட்ட மேற்படிப்புக்களும் மேற்கொள்வதற்கு உயர் கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மனைப் பொருளியல் கல்வியை இரசாயன முறையிலும் ஆராய்ச்சிப் படிப்பாகவும் பயிலலாம். இதற்கான வசதிகள் இப்போதே மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

✳ ✳ ✳

## சுருக்கப் பதங்கள், பெயர்கள், நிறுவனங்கள்

| | |
|---|---|
| U. N. O. | ஐக்கிய நாடுகள் சபை |
| SAARO | (சார்க்) தெற்காசிய பிராந்திய நாடுகளுக்கான ஒத்துழைப்புக்கட்டமைப்பு |
| NATO | (நேட்டோ) வட அத்திலாந்திக் ஒப்பந்த நிறுவனம் |
| WTO | உலக வணிகக் கழகம் |
| B.B.C | பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் |
| C.N.N | அமெரிக்க தொலைக்காட்சிச்சேவை |
| FIFA | சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் |
| INTERPOL | (இன்ரர்போல்) சர்வதேச காவல்துறை |
| EUROPOL | (யூரோபோல்) ஐரோப்பிய காவல்துறை |
| REDBARNA | (றெட்பானா) நோர்வீஜியன் சிறுவர் பாதுகாப்பு |
| U.N.H.E.R. | அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயம் |
| NORAD | (நோராட்) நோர்வே அபிவிருத்தி ஒத்துழைப்பு அமைச்சு |
| I.C.C. | சர்வதேச கிறிக்கற் சம்மேளனம் |
| SLBC | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் |
| SLRC | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் அல்லது இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் |
| I.O.C. | சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் |
| SPEC | (ஒபெக்) ஆசிய பசுபிக் நாடுகளது பொருளாதாரக் கூட்டமைப்பு |
| NPT | அணு ஆயுதத் தடுப்பு உடன்படிக்கை |
| I.A.E.A. | சர்வதேச அணுசக்தி முகவரகம் |
| OPEC | பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் நிறுவனம் |
| V.O.A. | அமெரிக்க ஒலிபரப்புச்சேவை |
| N.G.O. | அரச சார்பற்ற நிறுவனம் |
| A.L. | அரபு லீக் |
| NAM | அணிசேரா இயக்கம் |
| P.L.O. | பலஸ்தீன விடுதலை இயக்கம் |

க. சிந்துஜா
2006 A/L

# இறைமை பற்றிய ஒஸ்ரினின் கருத்தும் விமர்சனமும்

ஞா. துஸ்யந்தினி
A/L 2005 Arts

அரசறிவியலில் இறைமை என்பதை விளக்குவதிலும் அதன் பண்பை தெளிவாக்கி வரையறுத்துக் கொள்வதிலும் சிக்கல்கள் இன்றும் உள்ளன. இறைமை என்ற பதம் உயர்ந்த அதிகாரம் என்பதைக் குறிக்கும் **Supreem Power** என்பதி லிருந்தும் பதமாகிய **Sopparnete** என்பதிலிருந்தும் மத்தியகால லத்தீன் பதமாகிய **Supremitas** என்பதிலிருந் தும் தோன்றியதாக கூறப்படுகின்றது. இவ் இறைமைக்கு மிக உயர்ந்த அதிகாரம் அல்லது மேலான அதிகாரம் என்பது பொதுவான வரைவிலக்கண மாகக் காணப்படுகின்றது. இறை மைக்குப் பல்வேறு அறிஞர்கள் பல்வே றான வரைவிலக்கணங்களை கூறியுள் ளனர். எனினும் இறைமை பற்றிய ஒஸ்ரினின் கருத்து சிறப்பானதாகக் காணப்படுகின்றது. இவரது இறைமை பற்றிய கருத்தானது நடைமுறை அரசுகளுடன் பொருத்தப்பாடுகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜோன் ஒஸ்ரின் தனது "சட்டவியலுக் கான விளக்கவுரை" என்ற நூலின் மூலமாக தனது கோட்பாட்டை முன் வைக்கின்றார். "நிர்ணயம் செய்யப்பட்ட மேலான மனிதன் ஏனைய மேலானவர் களிடமிருந்து வரும் கட்டளைகளிற்கு சமுதாயத்தின் பெரும்பாலானோர் வழக்கமாக கீழ்ப்படிவதனாலும் அந்த மனிதன் அச்சமூகத்தின் இறைமை யாளன் என கருதப்பட வேண்டும்" அத்துடன் அந்த மேலான மனிதனை யும் உள்ளடக்கிய அச்சமூகம் சுதந்திரம் பெற்ற அரசியற் சமூகமாகும். இந்த கருத்தினை ஒஸ்ரின் முன்வைப் பதன் மூலம் இறைமை, அதன் தன்மை, அதன் உறைவிடம் அதன் ஆதிக்க எல்லை என்பவற்றை தெளிவாக்கு கின்றார். ஆனாலும் கூட இவரது கோட்பாடு பற்றிய கருத்தில் மேலதிக விளக்கங்கள் வேண்டப்படுவதாகவும் கருத்து முரண்பாடுகள் கொண்டதாக வும் அமைந்திருப்பதும் அவதானிக்கப் பட வேண்டிய அம்சமாகும்.

ஒஸ்டினுடைய இறைமைக் கோட்பாடு இறைமை அதிகாரம் தலைசிறந்த மனிதனிடம் ஒப்படைக் கப்படல் வேண்டும் என்பதை வலியுறுத் துவதன் மூலம் மக்கள் இறைமை என்ற கருத்துடன் முரண்பட்டுக் கொள்கின் றார். இவரது கருத்து முடியாட்சிக்கு பொருத்தமானதாக காணப்படும் அதே வேளை மக்களாட்சிக்கு பொருத்தமற்ற தாகக் காணப்படுகின்றது.

ஒரு அரசினுடைய அதிகாரம் கட்டளையாக இருக்க முடியுமே தவிர முழுநிறைவானதாக இருக்கமுடியாது என்பதை உணராத ஒஸ்ரின் வரம்பற்ற இறைமை என்ற கருத்தை வலியுறுத்து கின்றார். ஒவ்வொரு சமுதாயத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கலாசாரம் ஒழுங் குமுறை என்பன காணப்படுமிடத்து அரசன் அவற்றுக்கு அவசியம் கீழ்ப்படிய வேண்டும். அதனால் ஒஸ்ரி னின் கருத்து அரசென்பது சமூக நன்மையை உயர்த்தும் வழக்கமான கருவி எனும் கருத்தை நிராகரிப்பதாக அமைகின்றது.

மேலும் ஒஸ்ரின் இறைமை பிரிபட முடியாது என்பதை வலியுறுத்து வதுடன் சட்ட இறைமை அரசியல் இறைமை என்ற வேறுபாட்டினை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒஸ்ரினி னுடைய கருத்து ஆரம்பகால அரசு களைப் பொறுத்த வரை சாத்தி

யமானதாக காணப்பட்ட போதும் நவீன அரசுகளின் அமைப்பை பொறுத்தவரை முரண்பட்ட ஒரு சிந்தனையாகவே காணப்படுகின்றது. ஆரம்பகால சிறிய அரசுகளில் மக்கள் அனைவரும் ஒன்றாக கூடி தம் கருத்துக்களை சுதந்திரமாக தெரிவித்து தீர்மானங் களை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக இருந்த வேளையில் கூட இறைமையும் அரசியல் இறைமையும் ஒன்றாக இருக்க முடிந்தது. ஆனால் நவீன அரசுகளில் அனைவரும் ஒன்றாககூடி தீர்மானங்களை எடுக்க முடியாது. ஆதலால் கூட இறைமையும் அரசியல் இறைமையும் வேறுபடுத் தப்பட்டு காணப்படுகின்றது. அத்துடன் சட்டரீதியான இறைமையை கூடியளவு வலியுறுத்தும் ஒஸ்ரின் அதற்குப் பின்னணியான சமுதாய சக்திகளைப் பொருட்படுத்தவில்லை என பேராசிரியர் கார்னர் குறிப்பிடுகின்றார்.

ஒஸ்ரினுடைய இறைமைக் கோட்பாட்டின் பிரதான எதிர்ப்பாளரான பன்மைக் கோட்பாட்டாளர் பென்தம் என்பவர் "இறைமை என்பது கூட்டத் தின் மூலம் எல்லையற்றதாக இருந்த போதிலும் நீதி முறைப்படி எல்லையற்ற தல்ல என்றும் ஒரு இறைமையாளர் தனது அதிகாரத்தை சட்டங்களை உருவாக்கிக் கொள்வதன் மூலம் நிலைநாட்டிக் கொள்ள முடிந்தபோதும் இவ் இறைமையின் நோக்கம் பெரும் பாலான மக்களின் விருப்பத்தை பூர்த்தி செய்வதாக அமையவேண்டும்" என்றார்.

ஒஸ்ரின் இறைமை பிரிக்கப்பட முடியாது எனக் கூறுகிறார். இக்கருத்து ஏற்கமுடியாத ஒன்றாகும். ஏனெனில் நடைமுறையில் அமெரிக்காவில் இறைமையானது மத்திய மாநில அரசுகளிற்கிடையிலே பிரிக்கப்படுவதை அவதானிக்கலாம். மேலும் ஒஸ்ரின் இறைமையின் உறைவிடமாக நிர்ண யிக்கப்பட்ட ஒரு மனிதன் அல்லது ஒரு குழுவாக இருக்கவேண்டும் என் றார். ஆனால் அமெரிக்காவில் இறை மையானது ஜனாதிபதி காங்கிரஸ் மாநில கூட்ட சபை என்பவற்றை உறை விடமாகக் கொண்டுள்ளது.

தொகுத்து நோக்குமிடத்து ஒஸ்ரினுடைய வரம்பற்ற இறைமை என்பது நடைமுறையில் பெற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகவே காணப் படுகின்றது. ஒரு அரசின் இறைமை யானது பன்மைத்தன்மை கொண்டதும் அரசியல் திட்டரீதியானதும் பொறுப்பு டையதுமாகும். மட்டுப்படுத்தக் கூடிய இவ் இறைமையானது மேலாண்மை பெறுவதை விட கட்டுப்படுத்தக்கூடியது. நிரந்தரமானது என்பதைவிட தேர்தல் தொகுதிகளின் விருப்பத்தினால் அது மாறுபட்டு செல்லும் அதன் அதிகாரங் கள் விபரிக்கக் கூடியவை. உள்வழியா கவும் வெளி வழியாகவும் அதன் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப் பட்டவையாகவும் மீள்பார்வைக்கு உரியனவாகவும் காணப்படும் என்ற ஒஸ்ரினின் கருத்து இங்கு நோக்கத் தக்கது. எவ்வாறாயினும் ஒஸ்ரின் தனது இறைமை பற்றிய கோட்பாட் டினை நீதி மற்றும் வரலாறு தொடர் பான பின்னணியில் இருந்து வேறுபடுத் தியிருந்தமை அவதானிக்கப்படக்கூடிய ஒரு சிறப்பம்சமாக காணப்படுகிறது.

| வெளியீடு: | ஆசிரியர் பெயர்: | நூலின்பெயர்: |
|---|---|---|
| 1. BRIGHT | **பொன்சக்திவேல்** | அரசியல் மூலதத்துவம் பகுதி I |
| 2. ஸ்ரீலங்கா வெளியீடு | **குமாரலிங்கம் ரஞ்ஜகுமார்** | அரசறிவியலின்அடிப்படைத் தத்துவங்கள் |

# பிரச்சினையான ஊழியர் தொடர்பாக ஒழுங்கினைக் கடைப்பிடித்தல்

## [Discipling the Problem Employee]

க.சித்திரா
A/L 2005 Arts

### அறிமுகம் - Introduction:-

பொதுவாக நிறுவனம் ஒன்றின் வெற்றியானது ஊழியர்களிலேயே தங்கியுள்ளது. எனவே தான் ஊழியர்கள் ஓர் நிறுவனத்தின் சொத்தாகக் கருதப்படுகிறார்கள். எனினும் இவ் ஊழியர்கள் நிறுவனத்தின் வினைதிறனான செயற்பாட்டிற்கு பங்கம் ஏற்படுத்துபவராகவும் காணப்படுகின்றனர். இதனால் நிறுவனம் தனது இலக்கினை அடைவதில் ஊழியர்கள் தடையாக அமைந்து விடுகின்றார்கள். அதனால் நிறுவனங்கள் ஒவ்வொன்றும் ஊழியர்களது செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி வழிநடத்த வேண்டிய பெரும் பொறுப்பை நிறுவன முகாமையிடம் வழங்கியுள்ளது. இதனால் ஒவ்வொரு நிறுவன முகாமையும் நிறுவன இலக்கை அடையத்தக்க வகையில் ஊழியர்களின் ஒழுங்கினைக் கடைப்பிடிப்பதில் அதிககவனம் செலுத்துகின்றன.

இக்கட்டுரையானது பிரச்சினையான ஊழியர் தொடர்பாக எழக்கூடிய பிரச்சினைகள் தொடர்பாகவும் அதைதீர்ப்பதற்கு நிறுவனமுகாமை பின்பற்றும் நடைமுறை பற்றியும் கூறுகிறது.

### ஒழுங்கு என்றால் என்ன? What is discipline?

நிறுவனத்தின் விதிமுறைகளிற்கு அமையவும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நடத்தை நியமங்களிற்கு அமையவும் ஊழியர் நடந்து கொள்ளும் நிலையினை ஒழுங்கு என்கிறோம். பெரும்பாலும் ஊழியர்கள் தம்மைத் தாமே ஒழுங்கு முறைக்கு உட்படுத்திக் கொள்கின்றனர். எது தகுந்த நடத்தை எனக் கருதப்படுகிறதோ அதற்கமைய ஊழியர்கள் நடந்து கொள்கின்றனர் என்பதையே நாம் குறிக்கிறோம். ஏனெனில் அது தான் செய்ய வேண்டிய சரியான விடயமென ஊழியர்கள் கருதுகின்றனர். அவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகின்றது என்பதை அவர்களிடமிருந்து ஒரு தடவை கூறிவிட்டால் அந்த நியமங்களும் விதிகளும் நியாயமானவை என கருதியவாறு அவர்கள் அவ் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முயல்வார்கள். அதனால் எல்லா ஊழியர்களும் சுய ஒழுங்கு என்ற பொறுப்பினை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

### ஒழுங்கு பிரச்சினைகளின் வகைகள் [ Types of discipline problems]

முகாமையானது ஒழுக்காற்று நடவடிக்கைகள் தேவை எனக்கருதும் அநேகமான பிரச்சினைகளை நாம் சுலபமாக எடுத்துக் கூறக்கூடியதாக உள்ளது. ஒழுங்கு மீறல்கள் பின்வருமாறு 4 வகையாகப் பிரிக்கப்படலாம்.

i. வரவு **[Attendance]**

ii. வேலையின் போதான நடத்தை **[on-the-Job behaviour]**

iii. நேர்மையின்மை **[Dishonestly]**

iv. வெளிச் செயற்பாடுகள் **[Outside Activities]**

### வரவு [Attendance]

முகாமையாளர்கள் எதிர்நோக்கும் மிக மோசமான ஒழுக்காற்றுப் பிரச்சினை வரவு என்பதில் சந்தேகமில்லை. உதாரணமாக 200 நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி இந்நிறுவனங்களில் 60% வீதமானவை 1000ற்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்டு இருந்ததுடன்

வரவின்மை, மற்ற கதியில் பணியாற்றுதல், சுகயீன விடுமுறை, துஸ்பிரயோகம் மற்றும் வரவுப் பிரச்சினை முன்னணியிலிருந் தன. 79% வீதமான நிறுவனத்தில் இந்நிலை காணப்பட்டது.

வரவு இவ்வளவு மோசமான பிரச்சினையாக ஏன் உள்ளது என்ப தற்கு தெளிவான விடை இல்லாத போதும் பல காரணத்தை முன்வைக் கலாம்.

1. பல நிறுவனங்கள் தமது இலக்குகளை ஊழியர்களின் இலக் குடன் இசைவுபடுத்தத் தவறிவிட்டன. ஊழியர்கள் தம்மை வேலையுடன் அல்லது நிறுவனத்துடன் தொடர்பு படுத்த முடியாத நிலையில் வழமை யாக வரவில் வீழ்ச்சி காணப்படுகிறது.

2. பல ஊழியர்களுக்கு அவர்கள் செய்யும் பணி ஆர்வமாக இருப்ப தில்லை எனவே ஒழுங்காக வேலைக்கு நேரத்திற்குச் செல்வது அதிமுக்கிய விடயமாக இருப்பதில்லை.

3. வித்தியாசமான பின்னணியைக் கொண்ட ஊழியர்களை நிறுவனத்தில் சேர்த்துக் கொண்டமையாகும். இவர்கள் வேலை தொடர்பான முன் அனுபவம் காணப்படாதிருந்தனர்.

4. அநேக ஊழியர்கள் தமக்குரித்தான சுகவீன விடுமுறையைத் தாம் சுகவீன மடையாத போதும் பயன்படுத்திவிட வேண்டுமெனக் கருதுகின்றனர் என்பது வெளிப்படையாகும்.

### வேலையின் போதுள்ள நடத்தை [On - the - Job Behaviour]

ஒழுங்குப் பிரச்சினையின் 2ஆவது வகையாக இது உள்ளது. இத்தலைப்பானது கீழ்ப்படிய மறுத்தல், சண்டையில், சூதாடுதல், பாதுகாப்பு சாதனங்களைப் பயன்படுத்தத் தவறுதல், கவனமின்மை மற்றும் மது அருந்துதல், போதைப்பொருள் உட்கொள்ளல் ஆகியவற்றை உள்ள டக்குகிறது.

இவற்றில் அநேகமானவை நிறுவன விதிகள் நேரடியாக மீறப்படுகின்றன என்பதைப் பிரதிபலிக் கின்றன. தேவையற்ற சுகவீன லீவு எடுப்பது போன்ற தெளிவற்ற மீறல் களுக்கு மாறாக சண்டையிடல், சூதாடு தல், பாதுகாப்பு மீறல்கள் தெளிவான விதிகள் மீறப்படுவதைக் காண்பிக் கின்றன. இவ்வாறான விதி மீறல்களை தெளிவாக அறிவது முக்கியமானது.

### நேர்மையின்மை [Dishonestly]

முகாமை எதிர்கொள்ளும் பரந்தளவிலான ஊழியர் பிரச்சினையாக இது இல்லாத போதும், பாரம்பரியமாக மிகத் தீவிர ஒழுக்காற்று நடவடிக்கை களுக்கு உட்படும் ஒன்றாக இருக்கிறது. மதிப்பீடு செய்யப்பட்டவற்றில் 90% வீத மானவை திருட்டுக்காக ஓர் ஊழியரை வேலையிலிருந்து நீக்குவதாக ஓர் ஆய்வு கூறுகிறது. மற்றும் ஆட்சேர்த்த லின் போது விண்ணப்பத்தில் பொய் யான தகவல்களை வழங்கியதாகக் காணப்பட்ட ஊழியர்களை 88% வீத மான நிறுவனங்கள் வேலையிலிருந்து நீக்கியுள்ளது. இதற்கு மேலாக ஒரு தடவை பொய் அல்லது களவு செய்த ஓர் ஊழியரை நம்ப முடியாதெனவும், எனவே நிறுவனத்திலிருந்து அவர் விலக்கப்பட வேண்டுமெனவும் கருதப் படுகிறது.

### வெளிச் செயற்பாடுகள் [Out side Activities]

இறுதியான பிரச்சினை வகையாக ஊழியர் தமது வேலைக்கு வெளியே ஈடுபட்டுள்ள செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிடுகிறது. இது அவர்களின் வேலையில் செயற்றிறனைப் பாதிக்கின்றது/நிறுவனம் பற்றிய அபிப்பிராயத்தைப் பாதிக்கிறது. இங்கு அதிகாரம் அளிக்கப்படாத வேலை நிறுத்தச் செயற்பாடுகள் வெளியில் குற்றவியல் செயல்களில் ஈடுபடல், போட்டி நிறுவனத்திற்கு வேலை

செய்தல் போன்றவை அடங்குகின்றன. முகாமை ஆளணியினரிடையே இந்த வகையானவர்கள் நிறுவனத்தைப் பற்றி அவதூறாகப் பேசி/அதன் முக்கிய விழுமியங்கள் குறித்து பகிரங்கமாகச் சந்தேகம் கொள்வர். வேலை நேரத்திற்கு அப்பால் ஊழியரின் நடத்தைக்காக நிறுவனம் விரும்பிய வாறு தண்டனை வழங்குவதைப் பாதுகாக்க நீதிமன்ற உதவியை நாடினாலும் கூட வெளிச்செயற்பாடுகள் குறித்து நிறுவனம் எந்த நடவடிக் கையையும் எடுக்காது என ஊழியர் கருதுதல் தவறானது. ஏனெனில் முகாமைப் பதவியில் இது நன்கு புலனாகிறது. எனினும் வேலைக்கு அப்பாலுள்ள செயற்பாடுகளில் ஊழியர் நிறுவனத்தில் ஏற்புடைய நியமங் களுக்கிணங்க செயற்படல் அனுமதிக் கப்பட்டுள்ளது.

ஊழியர்களது குற்றங்களை சிறுவகைக் குற்றம், பெரும் வகைக் குற்றம் எனப் பகுத்து ஆராயலாம். இவ்வாறாக வேறுபாடு செய்தால் முகாமையானது பொருத்தமான ஒழுங்கு விதிகளைப் பின்பற்றலாம். உதாரணமாக ஊழியர்கள் முதலாவதாகச் சிறு குற்றத்தைச் செய்த நிலையில் பொதுவாக வாய்மூலமான எச்சரிக்கையை முகாமை மேற்கொள்ளும். 2ஆவது தடவை எழுத்து மூலமான எச்சரிக்கையையும் மேற்கொள்ளும் இதற்கு மாறாக மோசமான குற்றம் உடனடி இடைநிறுத்தத்திற்கு வழிவகுக்கின்றது. ஊழியர்கள் புரியும் குற்றங்களைப் பின்வருமாறு பகுத்தாராயலாம்.

| பிரச்சினையின் வகை | சிறுகுற்றம் | பெரும் குற்றம் |
|---|---|---|
| வரவு | ❑ வழமையாகப் பிந்தி வருதல்<br>❑ தகுந்த காரணமின்றி வேலைக்கு வராதிருத்தல்<br>❑ அனுமதியின்றிப் புறப்படுதல் | |
| வேலையின் போதுள்ள நடத்தை | ❑ பாதுகாப்பு விதிகளை அனுசரிக்கத் தவறுதல்<br>❑ வேலையின் போது மது அருந்துதல்<br>❑ வேலையின் போது தூக்கம்<br>❑ விபத்துக்களை அறிவிக்கத் தவறுதல்<br>❑ உலாவித் திரிதல்<br>❑ சூதாடுதல் | ❑ நிறுவனத்தின் சொத்துக்களை வஞ்சகமாக அழித்தல்<br>❑ கீழ்ப்படியாமை<br>❑ ஆயுதங்களை மறைத்து வைத்தல்<br>❑ தீங்கு விளைவிக்கும் நோக்குடன் இன்னொரு ஊழியரைத் தாக்குதல் |
| நேர்மையின்மை | ❑ வேறொருவரின் நேர அட்டவணையைப் பயன்படுத்தல்<br>❑ குறைபாடான வேலையை மறைத்து வைத்தல்<br>❑ நிறுவனத்திற்கு எதிரான நடவடிக்கையில் செயற்படல் | ❑ களவெடுத்தல்<br>❑ வேலைப் பதிவேட்டில் வேண்டுமென்று பொய்த் தகவலை சேர்த்தல் |
| வெளி நடவடிக்கைகள் | ❑ வேறொரு கம்பனியில் பணி புரிதல் | ❑ அங்கீகரிக்கப்படாத வேலை நிறுத்தம் |

**ஒழுங்குப் பிரச்சினைகளைக் கையாள்வது தொடர்பாகக் கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்.**

**1. பிரச்சினையின் தீவிரத் தன்மை:**

பிரச்சினை ஒன்று எந்தளவிற்கு பாரதூரமானது என்பது கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

**2. பிரச்சினையின் கால அளவு:**

இதற்கு முன்பு ஒழுங்குப் பிரச்சினைகள் இருந்தனவா? எவ்வளவு காலத்திற்கு அவை நீடித்தன? என்ற வினாக்கள் எழுப்பப்படல் அவசியமான தாகும்.

**3. நிகழும் கால இடைவெளியும், பிரச்சினையின் தன்மையும்:**

பிரச்சினையின் கால அளவை மட்டும் கருத்திற் கொள்ளாது பிரச்சினையின் வடிவத்தைப் பற்றியும் அக்கறை கொள்ளல் அவசியமான தாகும்.

**4. ஊழியரின் வேலை வரலாறு:**

நிறுவனத்திற்கு எவ்வளவு காலமாக ஊழியர் பணியாற்றியுள்ளார்? அவரது செயற்றிறனின் தரம் எவ்வாறு இருந்தது? என்ற வினாக்கள் இங்கு எழுப்பப்படல் வேண்டும்.

**5. நடத்தை நியமங்கள் பற்றி ஊழியர் கொண்டீர்கும் அறிவு:**

தற்போதுள்ள ஒழுங்கு விதிகள் பற்றி பிரச்சினைகள் ஏற்படுகின்ற ஏற்படுகின்ற ஊழியரை அறிவுறுத்த எந்தளவிற்கு முகாமை முயற்சி செய்துள்ளது? நடத்தை நியமங்கள் குறித்து மீறும் ஊழியர் கொண்டிருக்கும் அறிவின் அளவிற்கு ஏற்ப தண்டனையின் தீவிரத்தன்மை அமைகிறது.

**6. அசாதாரண காரணிகள்:**

பிரச்சினையுடன் தொடர்புடைய அசாதாரண சூழ்நிலைகள் உள்ளனவா எனக் கவனித்தல்

**7. நிறுவன ஒழுங்கு நடைமுறைகளின் வரலாறு:**

கடந்த காலங்களில் ஒழுங்கு மீறல்கள் எவ்வாறு கையாளப்பட்டன? ஒழுங்கு நடைமுறைகளைப் பிரயோகத்தில் ஒருமித்த தன்மை பேணப்பட்டதா? என்ற விடயங்கள் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

**8. ஏனைய ஊழியர் மீது ஏற்படக்கூடிய தாக்கங்கள்:**

தெரிவு செய்யப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் அப்பிரிவின் ஏனைய ஊழியரின் மீது எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அப்பிரிவிலுள்ள ஏனைய ஊழியர்கள் மீது பாரிய தாக்கம் ஏற்படுத்துமானால் ஊழியருக்கு எதிரான குறிப்பிட்ட ஒரு நடவடிக்கை எடுப்பதில் பிரயோசனத்தன்மையில்லை.

**9. முகாமையின் ஆதரவு:**

ஊழியர்கள் தமது விடயத்தை முகாமையில் உயர் மட்டத்திற்குக் கொண்டு செல்வார்களாயின் உமது தீர்மானத்தை நியாயப்படுத்த உங்களிடம் நியாயமானளவு சான்றுகள் உள்ளனவா? உங்களது ஒழுங்காற்று நடவடிக்கையை அவ் ஊழியர் எதிர்த்தால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையை ஆதரிக்கும் ஊழியர் காணப்படுகின்றனரா? என்ற விடயங்கள் கருத்தில் கொள்ளப்படல் அவசியம்.

## ஒழுக்காற்று நடவடிக்கைகள் [Disciplinary Actions]

இங்கு ஒழுக்காற்று நடவடிக்கைகள் பின்வரும் 6 படிகளினூடாகப் பின்பற்றப்படுகிறது.

1. வாய்மூல எச்சரிக்கை
2. எழுத்துமூல எச்சரிக்கை
3. வேலை இடைநிறுத்தம்
4. பதவி இறக்கம்
5. சம்பள வெட்டு
6. வேலை நீக்கம்

### வாய்மூல எச்சரிக்கை [Oral warning]

எச்சரிக்கையின் மிகச் சுலபமான வடிவம் வாய்மூலமான எச்சரிக்கையாகும். இது தனியாக சம்பிரதாய மற்ற சூழலில் வழங்கப்படுவது சிறந்தது. முகாமையாளர், ஊழியரால் மீறப்பட்ட விதியை ஊழியருக்கு தெளிவாக அறிவிப்பதுடன் அதனால் ஏற்பட்ட பிரச்சினையையும் தெரியப்படுத்த வேண்டும்.

இந்த வாய்மூல எச்சரிக்கை பயனுள்ளதாகவிருந்தால் உத்தியோக ரீதியான ஒழுக்காற்று நடவடிக்கை தவிர்க்கப்படலாம். அந்த ஊழியர்

திருந்தத் தவறினால் மேலும் தீவிர நடவடிக்கையை மீண்டும் பரிசீலிக்க வேண்டிய நிலை ஏற்படும். மற்றும் இந்த எச்சரிக்கை குறித்த ஒரு தற்காலிக பதிவை ஊழியரின் கோவையில் வைத்திருத்தல் வேண்டும். அப்பதிவில் எச்சரிக்கையின் நோக்கம், திகதி, ஊழியருடனான போட்டியின் விளைவு ஆகியன காணப்படல் வேண்டும். ஊழியர் திருந்தி விட்டால் ஊழியரின் கோவையிலிருந்து வாய்மூல எச்சரிக் கைப் பதிவு அகற்றப்படலாம்.

எழுத்துமூல எச்சரிக்கை

## [Written warning]

ஒழுங்கு நடவடிக்கையின் 2ஆவது படி இதுவாகும். உண்மையில் ஒழுக்காற்று நடவடிக்கையின் 1ஆவது சம்பிரதாயக் கட்டம் இதுவாகும். ஏனெனில் ஊழியரின் கோவையில் ஒரு பகுதியாக எழுத்து மூல எச்சரிக்கை சேர்க்கப்படுகிறது. எச்சரிக்கையின் ஒரு பிரதி ஊழியருக்கும் இன்னொரு பிரதி ஊழியரின் கோவையை பேணும் அதிகாரிக்கும் அனுப்பப்படுகிறது. இந்த எச்சரிக்கையில் ஊழியர் செய்த ஒழுக்க மீறல் குறிப்பிடப்பட்டு அதனால் ஏற்பட்ட விளைவும் எதிர்கால ஒழுக்க மீறல்களால் ஏற்படக்கூடிய விளைவு களும் தெரிவிக்கப்பட்டிருக்கும்.

எழுத்து மூல எச்சரிக்கைகள் ஊழியருக்கு மோசமான பாதிப்பை ஏற்படுத்துவதனால் குறிப்பிட்ட சில வருடங்களிற்குப் பின்பு ஊழியர் திருந்தி நடக்கும் பட்சத்தில் கோவையிலிருந்து அகற்றப்படுகின்றன.

வேலையிலிருந்து இடைநிறுத்தம்

## [Suspension]

அடுத்தபடியான ஒழுக்காற்று நடவடிக்கை ஊழியரை வேலையி லிருந்து இடைநிறுத்தம் செய்தலாகும். இது வழமையாக முதல் மேற்கொண்ட நடவடிக்கைகள் விரும்பிய பலனைத் தராத நிலையிலேயே மேற்கொள்ளப் படுகிறது. ஆனால் ஒழுக்க மீறல்கள் பாரதூரமானதாக இருந்தால் இதற்கு விதிவிலக்கு உண்டு. அப்பொழுது வாய்மூலமான/எழுத்து மூலமான எச்சரிக்கை எதுவும் இன்றி ஊழியர் இடைநிறுத்தப்படுவார்.

இடைநிறுத்தமானது ஒரு நாளி லிருந்து பல வாரங்களுக்கு நீடிப்பதாக இருக்கலாம். ஒரு மாதத்திற்கும் கூடுதலான இடைநிறுத்தங்கள் அரிதா கவே உள்ளன சில நிறுவனங்கள் இப்படியை முழுமையாகத் தாண்டிச் செல்கின்றன. ஏனெனில் இது நிறுவனத் திற்கும், ஊழியருக்கும் எதிர்மாறான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. ஒரு ஊழியரை இடைநிறுத்திய காலப்பகுதி யில் சில இழப்புக்கள் ஏற்படுகின்றன. இந்த ஊழியர் தனித்துவமான திறமை கொண்டவரானால் நிறுவனம் மோசமான பாதிப்பினை அடைகின்றது. தகுந்த மாற்று ஊழியர் கிடைக்காது விட்டால் நிறுவனத்தின் செயற்றிறன் பாதிக்கப் படுகிறது. ஊழியர் நோக்கில் பார்த்தால் இடைநிறுத்தல் காலத்திற்கு முன்பு ஊழியர் கொண்டிருந்த மனநிலையை எதிரிடையாக மாற்றி கசப்புணர்வுடன் வேலைக்குத் திரும்பும் நிலையை ஏற்படுத்துகிறது.

அப்பொழுது முகாமை ஏன் ஊழியர்களை இடைநிறுத்துவதை ஒழுக்காற்று நடவடிக்கையாகக் கருத வேண்டும்? ஏனெனில் குறுகிய சம்பள மாற்ற இடைநிறுத்தம் பிரச்சினையான ஊழியரைப் புரிந்து கொள்ள வைக்கும் தன்மை கொண்டிருப்பது என்பதாகும். இது ஊழியரை முகாமையின் கண்டிப் பான தன்மையைப் புரிய வைத்த பொறுப்பை ஏற்று நிறுவனத்தின் விதிகளைப் பின்பற்றி நடந்து கொள்ள வழியமைக்கும்.

பதவியிறக்கம்

## [Demotion]

இடைநிறுத்தம் பயனளிக்கா திருந்து பிரச்சினையான ஊழியரை வேலைநீக்கம் செய்வதை முகாமை

தவிர்க்க விரும்பினால் பதவியிறக்கம் மாற்றீடாக இருக்கலாம். எனினும் ஒரு சில நிறுவனங்கள் மட்டுமே பதவியிறக்கத்தை ஒரு ஒழுக்காற்று நடவடிக்கையாகப் பயன்படுத்துகின்றன. ஏனெனில் அது ஊழியர்களின் மனோதிடத்தைப் பாதிக்கின்றது என்பதாகும். அத்துடன் ஏனைய முற்றிய செயற்பாடுகளைப் போலல்லாது தற்காலிகமானது அல்ல பதவியிறக்கம் மாறாக ஒரு தண்டனையாகும்.

பதவியிறக்கம் பின்வரும் சந்தர்ப்பங்களில் அமையும்

1. பணியைச் செய்யும் ஆற்றல் ஊழியரிடம் உள்ளதென்பது தெளிவாக அறியப்படும்போது

2. ஊழியரை நிறுவனத்தில் வைத்திருக்க வேண்டிய சட்டரீதியான கடப்பாடு இருக்கும்போது

**சம்பள வெட்டு**

**[Paycut]**

பிரச்சினையான ஊழியரின் சம்பளத்தை வெட்டுவது இன்னொரு மாற்றீட்டு நடவடிக்கையாகும். இது நடைமுறையில் அரிதாகவே கடைப்பிடிக்கப்படுகின்றது. நிச்சயமாக இந்த அணுகுமுறை ஊழியரை வழமையாகத் தளர்வடையச் செய்யும் நடவடிக்கையாகும். ஆனால் வேலை நீக்கத்திற்கு ஒரு மாற்று நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்படுகிறது.

**வேலை நீக்கம்**

**[Dismissal]**

முகாமையின் இறுதியான ஒழுக்காற்று நடவடிக்கையாக ஊழியரை வேலையிலிருந்து நீக்குவது என்பதாகும். மிகவும் பாரதூரமான குற்றங்களுக்கு மட்டுமே வேலையிலிருந்து ஊழியர் நீக்கம் செய்யப்படல் வேண்டும். எனினும் ஓர் ஊழியரின் நடத்தை ஒரு நிறுவனத்தை அதன் செயற்பாட்டை மோசமாகப் பாதிக்கும் அளவிற்கு பாதகமானதாக இருந்தால் சாத்தியமான ஒரே நடவடிக்கை அவ் ஊழியரை வேலை நீக்கம் செய்தலாகும்.

ஒரு வேலை நீக்கத்தீர்மானம் நீண்ட கடுமையான பரிசீலனைக்கு பின்பே மேற்கொள்ளப்படும். வேலை நீக்கம் செய்யப்படும் ஊழியர்கள் யாவரும் ஓர் உணர்ச்சிக்கொந்தளிப்பான நிலைக்கு உட்படுகின்றனர். பல வருடங்கள் நிறுவனத்தில் பணியாற்றி 50 வயதை அடைந்தவர்களுக்கு உரிய வேலை தேடிக் கொள்வது கடினமாகும் அல்லது விரிவான பயிற்சியை அவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர். அதற்கு மேலாக வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர் அத்தீர்மானத்தை எதிர்த்து சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடும் என்பதையும் முகாமை கவனத்திற் கொள்ளல்வேண்டும்.

**முடிவுரை [Conclusion]**

இது வரையில் பிரச்சினையான ஊழியர்களை ஒழுங்கு முறைப்படுத்தல் தொடர்பிலான அம்சங்கள் ஆராயப்பட்டன. ஒழுக்காற்று நடவடிக்கையானது வாய்மூல எச்சரிக்கையில் ஆரம்பித்து பின்னர் எழுத்து வடிவாக மாற்றமடைந்து பின்பு வேலை இடைநிறுத்தமாகி இறுதியில் தேவையானால் வேலை நீக்கத்தில் முடிவடைகின்றது. பொதுவாக முகாமையானது ஊழியர்களின் ஒழுங்கீனப்பிரச்சினைக்கு சம்பள வெட்டையையும், பதவி இறக்கத்தையும் வேலை நீக்கத்திற்கு மாற்றீடாகத் தற்போது வழங்கி வருவதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

# இலங்கையின் முதலாவது வேலை நிறுத்தத்தின் விளைவாக தொழிற்சங்கம் தோற்றம் பெற்றமை

பா. லக்ஸ்மிப்பிரியா
A/L 2006 Com.

இலங்கையின் முதல் வேலை நிறுத்தம் அதாவது அச்சுத் தொழி லாளர்களின் முதல் வேலை நிறுத்தம் நடந்து முடிந்து 110 ஆண்டுகள் நிறைவுறுகின்றன. இந்த முக்கிய வேலைநிறுத்தமே 1893ல் இலங்கையில் முதல் தொழிற்சங்கம் உருவாக வழிவகுத்தது. 1893 செப்டெம்பர் 12ஆம் திகதி எச்.டபிள்யு. கேவ் அன் கம்பனியைச் சேர்ந்த 60 அச்சுத்தொழி லார்கள் வேலைநிறுத்தம் செய்தமை நாட்டில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது. மறுநாள் அவர்கள் வேறு ஸ்தாபனங் களிலிருந்து அச்சுத்தொழிலாளர் களுடன் சேர்ந்து அச்சுத்தொழிலாளர் சங்கத்தை உருவாக்கினர். இந்த நிகழ்ச்சிகள் ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் அளித்தன.

தொழிற்சங்க இயக்கத்தைப் பற்றிய தீர்க்க தரிசனம் கொண்டிருந்த முதல் இலங்கையர் பூல்ட்ஜென்ஸ் ஆவார். இவர் வெளிப்படையாகவே தொழிற்சங்கங்களை ஆதரித்தார். 1893ஆம் ஆண்டில் அச்சுத்தொழிலாளர் களின் வேலைநிறுத்தம் ஆரம்பிப்பதற்கு சில வளங்களுக்கு முன்னதாக கொழும்பிலுள்ள தொழிலாளர்கள் தொழிற்சங்கமயமாக்கப்படும் நிலையில் உள்ளதாகவும் அச்சுத்தொழிலாளா களே இதற்குத் தலைமை வகிக்க வேண்டும் என்றும் அவர் ஒரு கட்டுரை யில் குறிப்பிட்டிருந்தார். இவர் அதில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். அச்சுத் தொழிலாளர்கள் நியாயமான அளவில் வலிமை படைத்தவர்களாவர். சக தொழிலாளர்களைக் காட்டிலும் விசால மான ஞானம் கொண்டவர்களுமாவர். எனவே நாம் வலியுறுத்தும் தொழிற் சங்க அமைப்பில் தொழிற்சங்க இயக்கத்தின் தலைமைப் பாத்திரத்தை ஏற்கும் கடமை அவர்களுக்கு உண்டு. லண்டன் அச்சுத்தொழிலாளர் சங்கம் அமைக்கப்பட்டுள்ள தத்துவத்தின் அடிப்படையில் இங்கும் ஒரு சங்கம் அமைக்கப்பட வேண்டும். அச்சுத்தொழி லாளர் களில் பிரசித்தம் வாய்ந்த எவரா யினும் ஏதாவது பொது நடவடிக்கை எடுப்பதற்கு முன்னால் எங்களுடன் தொடர்பு கொண்டால் நாம் மிகவும் பெருமையடைவோம் எனவும் திட்ட வட்டமான நடவடிக்கைகளினை மேற் கொள்வது பற்றிய திட்டத்தை வழங்கு வோம் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

அச்சுத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது நூற்றுக் கணக்கான கொழும்புத் தொழிலாளர் கள் ஒன்றுசேர்ந்து இலங்கை அச்சுத் தொழிலாளர் சங்கத்தை அமைத்தனர். பத்திரிகைச் செய்திகளிலிருந்து இந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற கூட்டத்தைக் கண்காணிக்க அரசாங்கம் ஜோன் கொத்தலாவலை உட்பட ஐந்து பொலிஸ் இன்ஸ்பெக்டர்களையும் இருபது பொலிஸ் கொன்ஸ்டபிள் களையும் அனுப்பி வைத்ததாகக் கூறப்படுகிறது.

இக்கூட்டத்தில் 'ஒற்றுமையே பலம்' போன்ற வார்த்தைகளைக் கொண்ட சுலோக அட்டைகளும் கொண்டு செல்லப்பட்டதாகவும் கூறப்படு கின்றது. மேலும் இந்தச் சுலோக அட்டைகள் அரசாங்க அலுவலகங் களில் பயன்படுத்தப்படும் உயர்தரமில் போர்ட்டுக்களில் செய்யப்பட்டிருந்த தாகவும் பென்சிட்டால் அழகான எழுத்துக்களில் இவை எழுதப்பட்டிருந்த தாகவும் கூறப்படுகின்றது.

இக்கூட்டத்திற்கு திரு. எச். ஜே. சாள்ஸ் பெரேரா தலைமை வகித்தார். சங்கத்தின் நோக்கம் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையே மோதலை உண்டு பண்ணுவதல்ல என்று இக் கூட்டத்தில் தெரிவித்த இவர் தொழிலாளர்களுக்குச் சில நன்மைகளைப் பெற்றுக்கொடுப்பதே அதன் நோக்கம் என்றும் தங்களின் கீழ் வேலை செய்யும் தொழிலாளர்களை அடக்குவதோடு கொடூரமாகவும் அநீதியாகவும் நடக்கும் முதலாளிகள் தொழிற்சங்கம் என்ற பெயரைக் கேட்டதும் நடுங்குகின்றார்கள் என்றும் தெரிவித்தார்.

இச்சங்கத்தின் செயலாளரான ஏ. ஈ. பூல்ட்ஜென்ஸ் அச்சுத்தொழிலாளர்கள் பெறும் குறைந்த சம்பளத்தைப் பற்றிப் பேசினார். தொழிலாளரின் கோரிக்கைக்கு முதலாளிமார் எதிர்ப்புத் தெரிவித்தால் அச்சுத்தொழிலாளர் தாமே ஒன்று சேர்ந்து கூட்டுறவு அச்சியந்திரசாலைகளை நிறுவ வேண்டும் என்றார். இங்கு அச்சுத் தொழிலாளர்களே அச்சுநிறுவனங்களின் உரிமையாளராக இருப்பதோடு அடிமைகள் போல எவரும் இருக்க மாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

தன்னைக் கிளர்ச்சியாளராகவும் புரட்சிக்காரனாகவும் கூட்டத்தில் அறிமுகப்படுத்திக் கொண்ட டாக்டர். பி.எம். லிஸ்போ பின்ரோ வேலைக்குப் போகாத நாட்களுக்காகத் தொழிலாளர்களுக்கு முதலாளிமார் அபராதம் விதிப்பதையும் குறிப்பிட்டார். முன்னைய அச்சுத்தொழிலாளியும் பௌத்த மதுவிலக்குப் பிரசாரகருமான டொன். பஸ்டியன் தன் எஜமானாருக்கு மரியாதை வழங்குவதை பாரம்பரிய சிங்களக் கண்ணோட்டம் வலியுறுத்தினாலும் தொழிலாளர்கள் தமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

இக்கூட்டத்திற்குப் பின்பு நூற்றுக்கணக்கான அச்சுத்தொழிலாளர்கள் ஒன்றுசேர்ந்து இலங்கை முழுவதிலும் உள்ள மற்ற அச்சுத் தொழிலாளர்களுடனும் ஒன்று சேர்ந்து சங்கங்கள் அமைக்கப்படும் நம்பிக்கையை வெளிப்படுத்தவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அச்சுத்தொழிலோடு சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் தொழில் நலனையும் பொதுவான வாழ்க்கை நலனையும் பேணுவதே புதிய சங்கத்தின் நோக்கங்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

பொதுவான வாழ்க்கை நலனை சங்கம் வலியுறுத்தியது. உறுப்பினர்கள் தம் சம்பாத்தியத்தின் 2% வீதத்தை சங்கத் திற்கு வழங்கினர். சுகவீனமான காலத்திலும் சாவு நேரும் போதும் அவர்களுக்குச் சங்கம் அலவதன்கள் வழங்கியது. சங்க விதிகளைப்பற்றிய கைநூல் ஒன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது. "த சிலோன் பிறிண்டர்" என்ற பத்திரிகையும் வெளியிடப்பட்டது. இதன் முதலாவது வெளியீட்டில் இலங்கைத் தொழிலாளர்களின் வகுப்புக்கள் பற்றிய பூல்ட்ஜென்ஸின் கட்டுரையும், இலங்கைத் தொழிலாளர்களின் சங்கங்கள் பற்றிய பின்ரோவின் கட்டுரையும் இடம் பெற்றன.

அச்சுத்தொழிலாளர்களின் கிளர்ச்சி தோல்வியிலேயே முடிந்தது. தொழிற்சங்கம் பல சலுகைகளை வழங்கிய போதும் சங்கத்தின் மீதிருந்து அக்கறை குறைந்து விட்டது. என்று 1894ல் டொக்டர் லிஸ்போ பின்ரோ முறையீடு செய்தார்.

கொலனித்துவ அதிகாரிகள், முதலாளிமார் ஆகியோரின் நிலைப்பாடு, மத்தியதர வகுப்பின் கருத்துக்களை வெளிப்படுத்தும் பத்திரிகைகளின் கண்ணோட்டம் என்பன தெளிவாக விளங்கின. "தொழிற்சங்க அபாயம்" வலியுறுத்தப்பட்டதுடன் அதனை அழிப்பதற்கு

எல்லா நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டன.

உதாரணமாக 1983 ஜுலை மாதத்தில் தொழிற்சங்கங்களைப் பற்றி பூல்ட்ஜென்ஸ் கட்டுரை எழுதிய போது 'சிலோன் இன்டி பென்டன்ற்' அவரைப் பின்வருமாறு குற்றம் சாட்டியது. தங்கள் முதலாளிமாருடன் சுமுகமாக ஒத்துப்பணிபுரிந்த தொழிலாளர்கள் மத்தியில் இவர் கிளர்ச்சியைத் தூண்டி விடுகிறார்.

மேற்கத்தைய பாணியில் அமைந்த கிளர்ச்சி நடவடிக்கைகளுக்கு எதிராக 'சிலோன் ஒப்சேர்வர்' எச்சரிக்கை விடுத்தது. தங்கள் தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு எதிராக கேவ்ஸ் நிறுவனம் உறுதியாக நின்றமைக்காக 'ரைம்ஸ்' பத்திரிகை பாராட்டுத் தெரிவித்தது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களை பிற அச்சக முதலாளிகள் சேவையில் அமர்த்தக்கூடாது என 'சிலோன் ஒப்சேர்வர்' ஆலோசனை கூறியது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு தொழில் ஒப்பந்தத்தினை மீறியதற்காக வில்லியத்திற்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையை உயர் நீதிமன்றம் இறுதியாக ரத்துச்செய்தது. இவ்வாறு தொழிற்சங்கம் வளர்ச்சியடைந்தது.

*  *  *

## 2003ஆம் ஆண்டு 9ஆம் இலக்க பாவனையாளர் அதிகாரசபைச் சட்டம்

1. கி. பி. 1979ஆம் ஆண்டு முதலாம் இலக்க நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்
2. கி. பி. 1987ஆம் ஆண்டு முதலாம் இலக்க நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம்
3. விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

ஆகிய மூன்று சட்டங்களையும் இரத்துச் செய்து 2003ஆம் ஆண்டு 9ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச்சட்டம் ஸ்தாபிக்கப்பட்டது.

## பாவனையாளர் அலுவல்கள் பேரவை

1. வர்த்தக சட்டத்துறையில் பரந்த அனுபவம் கொண்ட ஆள்.
2. தொழில் பொறுப்பு முயற்சியினை முகாமை செய்வதில் பரந்த அனுபவம் கொண்ட ஆள்.
3. வியாபார நடைமுறைகளிலும் பாவனையாளர் அலுவல்களிலும் பரந்த அனுபவம் கொண்ட பொருளியலாளர்.

ஆகிய மூன்று கட்சிக்காரர்களைக் கொண்ட பேரவை இதுவாகும். இதன் பதவிக்காலம் மூன்று வருடங்களாகும்.

# முயற்சியாண்மை
# ENTREPR ENEURSHIP

அ. நிறோஜினி
A/L 2006 Com.

**அறிமுகம்:**

விரைவாக மாற்றமடைந்துவரும் உலகில் நாம் வாழ்கிறோம். இந்த மாற்றங்களுக்கு ஈடுகொடுத்துச் செயற்படக்கூடிய புத்தாக்கம் காணக் கூடிய முயற்சியாளர்களின் தேவை அதிகரித்தவண்ணமிருக்கிறது. முயற்சியாண்மை பொருளாதார அபிவிருத்தியின் அத்தியாவசியக் காரணிகளில் ஒன்றாகிவிட்டது.

சுயபோக்குடைய முதலாளித்துவ வர்க்கத்தின் வளர்ச்சியுடன் இணைந்த நவீன ஆக்கங்களைப் படைக்கக்கூடிய மாற்றங்களுக்குப் பொருத்தமான தீர்வினை முன்வைக்கக் கூடிய முயற்சியாண்மையின் முக்கியத்துவம் முன் ஒரு போதும் இல்லாதவாறு வெளிப்பட்டிருக்கின்றது. அதாவது, வணிகச்சந்தர்ப்ங்களை உருவாக்குதல் சமமான முக்கியத்துவம் பெறுகிறது. ஆச்சரியப்படத்தக்க விதமாக மாறுகின்ற உலகின் தலைமைத்துவமும் முயற்சியாண்மைக்கே ஒப்படைக்கப்படவேண்டும். இன்று முயற்சியாளர்களுக்கு உயர்ந்த கேள்வி காணப்படுகிறது. விவசாயப்பண்ணை, விஞ்ஞானக்கூடம், பாடசாலை, பல்கலைக்கழகம், அரசு, வணிகள், சமூகப் பிரதி நிதித்துவ நிறுவனம் போன்ற எல்லா இடங்களிலும் முயற்சியாண்மை அவசியமாகின்றது. முயற்சியாளன் மாற்றம் புரிவான். அவன் புதியவை புனைவதில் முன்னிற்கின்றான்.

**முயற்சியாண்மை என்பதன் பொருள்:**

**Entrepreneurship** என்பது பிரான்சிய மொழிப்பதமான **Entreprendre** என்பதிலிருந்து திரிபடைந்த சொல்லாகும். பிரான்சிய மொழியில் அதன்பொருள் பொறுப் பேற்றல்/சந்தர்ப்பத்தை உருவாக்குதல்/புதுமைபுனைதல்/தேவைகளையும் விருப்பங்களையும் திருப்திசெய்தல்/புத்தாக்கம் என்பனவாகும்.

முயற்சியாண்மை என்பது ஒன்றைநோக்கும் முறையாகும். சிந்திக கும் முறையாகும்; செயற்படும் முறையாகும் இது ஒரு புதிய வழிமுறை, முயற்சியாண்மை ஒரு கலையோ, விஞ்ஞானமோ அல்ல. ஒரு செயன் முறையாகும். ஒரு பிரயோகச் செயற்பாடு என்பதனால் அதனைச் சொற்களால் விபரிப்பது கூட ஓரளவு சிரமமானது குறிப்பிட்ட பெறுபேற்றை அடையும் நோக்குடன் முயற்சியாளர் மாற்றம் புரிகின்றான். இப்பெறுபேறு நிதிவடிவினதாக இருக்கமுடியாது முடியும் மிகவும் நல்ல தரத்தை அடைவதற்காகப் புரிந்த மாற்றம் என்பதில் திருப்தியும் ஏற்படுகிறது.

வணிக முயற்சியாண்மையொன்றில் கீழே உள்ள பண்புகளுள் ஒன்றோ பலவோ காணப்படல்

1. இலாபம் ஈட்டுதல் அல்லது இலாபம் ஈட்டாதிருத்தல் பல வணிகர்கள் இலாபமுழைப்பதற்காகவே நடாத்தப்படுகின்றன. பல வணிகர்கள் பணத்தைச் சம்பாதிப்பதில் ஈடுபடுகின்ற போதிலும் சில வணிகர்கள் சமூக சேவையில் ஈடுபடுகின்றன. அவை இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் என அழைக்கப்படுகின்றன.

உதாரணம்:- செஞ்சிலுவைச்சங்கம், சர்வோதயம் இயக்கம், சமூகம்.

2. சிறியதாகவோ, பெரியதாகவோ காணப்படலாம். முயற்சியாண்மையில் அளவு வரையறையில்லை. அவை சிற்றளவினதாகவோ பேரளவின

தாகவோ இருக்கமுடியும். பாரிய கம்பனியாகவோ சிறு தனிமுயற்சி யாகவோ அமையமுடியும்.

3. பொருள்களை அல்லது சேவை களை உற்பத்திசெய்தல் வணிக முயற்சியாண்மை பொருள் உற்பத்தி யிலோ சேவை உற்பத்தியிலோ ஈடுபடமுடியும்.

4. பிரதேச, உள்நாட்டு, சர்வதேச அமைப்பாக இருக்கமுடியும். வணிக முயற்சியாண்மை கிராமத்தில், பிரதேசத்தில் வலயத்தில் அல்லது முழு உலகத்திலும் தொழிற்படுவதாக இருக்கமுடியும்.

**முயற்சியாண்மையும் சமூகமும்:**

எமது தேவைகளையும் விருப் பங்களையும் பூர்த்திசெய்யும் எமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் பொறுப்பையேற்கும் முயற்சியாண்மை சமூகத்தின் சுகநலனுக்கு முக்கிய மானதாகும்.

புதியது காணும் சந்தர்ப்பங் களை ஏற்படுத்துதல், எமது வாழ்க் கைத்தரத்தை அல்லது தொழிற்பாடு களை உயர்த்துதல், என்பன முயற்சி யாண்மை புரிந்துவரும் நாளாந்தச் செயற்பாடுகளாகும். தாய், தந்தை, இருவரும் தொழிலுக்குச் செல்லும் சந்தர்ப்பங்களில் குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்கள் **[Daycare Centre]** வீடு வாசல் சுத்தம் செய்யும் நிறுவனங்கள் **[Cleaning Service]** உருவாதல் வயது முதிர்ந்த சனத்தொகை அதிகரிக்கும் போது முதியவர் பராமரிப்பு இல்லம், பொழுதுபோக்கு நிலையம், விளையாட்டுக்கழகம், சமூகச்சேவை, நிறுவனங்கள் உருவாதல் என்பன முயற்சியாண்மையின் பிரதிபலன்களா கும். இவையாவும் மனிதத்தேவை விருப்பங்களைப் பூர்த்தி செய்வதில் புதுவழி காண்பதற்கான முயற்சிக ளேயாகும். முயற்சியாண்மைக்குரிய பணிகளாகும். முயற்சியாண்மை இப்பணிகளில் ஈடுபடுகிறது.

முயற்சியாண்மை எப்போதும் புதிய செயற்பாடுகளை உருவாக்கு கிறது. ஒன்றைப் புரிவதில் புதிய வழி யைக் காண்கிறது. புதிய பொருள்களை யும் சேவைகளையும் சந்தையில் கொண்டு சேர்க்கிறது. தற்போது உள்ளவற்றுடன் புதுமையானவற்றைச் சேர்க்கிறது. அதன்மூலமாக எமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது. விலைமட்டத்தைக் குறைக்கிறது. வணிக நிறுவனங்கள் உருவாகின்ற காரணத்தால் வேலை வாய்ப்புப் பெருகுகிறது பேதமோ வேறுபாடுகளோ காட்டாது சமூகத்தில் பங்கிடுவதற்கென செல்வத்தை உருவாக்குவது முயற்சி யாண்மை என்று சுருக்கமாகக் கூறலாம். இது சமூக நலனைத் தோற்றுவிக்கின் றது.

ஒருவணிக வாய்ப்பு வெற்றி யானபோது முயற்சியாண்மை மேலும் வணிக வாய்ப்புக்களைத் தோற்றுவிக் கின்றது. உதாரணமா, தனிநபர் பணனி **[Persona] Computer]** அறிமுகம் காரணமாக வேறு பல வணிக வாய்ப் புக்கள் உருவாகியுள்ளன. மென்பகுதி, வன்பகுதி, பயிற்சிச்செயல் திட்டம், திருத்தும்சேவை, கணனிச் சஞ்சிகை வெளியீடு, காட்டூன் திரைப்படம், சலனப் படம், சித்திர ஆக்கம் போன்றவற்றுக் கான வணிக வாய்ப்புகள் உருவாகி யுள்ளன. இதனால் தனிப்பட வும் கூட்டாகவும் தொழில்நுட்ப ரீதியாக வும் புதிய நிலைமைகள் தோன்றியுள்ளன.

முயற்சியாண்மைத்திறன் உருவாகக்கூடிய சாதகமான விரும்பத் தக்க சூழல் நாட்டில் காணப்பட வேண்டும். விசேடமாக சாதகமான நிதி நிலைமை சட்டச்சூழல் என்பவற்றை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். புதிய வணிகச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தக் கூடிய முதலீட்டுக்குப் பொருத்தமான நிதிச்சூழலை அரசு ஏற்படுத்த வேண்டும். சட்டரீதியான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் தேசிய கல்வி பயிற்சிச் செயல்திட்டங்கள்

இருக்கவேண்டும். இதற்கு சிறந்த சந்தைமுறை பொருத்தமானதாகும்.

அரசு, வணிகம், கல்வி, சட்டம் போன்றவற்றின் ஒத்துழைப்பும் குழுக்களின் உதவியும் ஆலோசனைகளும் கிடைக்குமானால் முயற்சியாண்மை பலமடையும். அத்தகைய உதவிகளை நாடுகளில் முயற்சியாண்மை பாதாள உலகிலேயே [Under Ground] தொழில்படும் எல்லோருக்கும் வெளிப்படையாகத் தெரியும் விதத்தில் தொழிற்படுவதில்லை.

**முயற்சியாளர் [Entrepreneurs]**

முயற்சியாண்மையில் ஈடுபடும் முயற்சியாளர் மாற்றம் கொண்டுவரும் பிரதிநிதிகளாவர் [Agents of Change] அவர்கள் சந்தர்ப்பங்களை இனங்கண்டு அதன் நட்ட அச்சத்தைக் கட்டுப்பாட்டுடன் கணக்கிட்டு வெற்றியடையக் கூடிய ஆக்கங்களில் ஈடுபடுவர். முயற்சியாளன் தேவை விருப்பங்களுக்குப் பொருத்தமான அசாதாரணமானவற்றைப் பற்றியே சிந்திக்கின்றான். அவன் பகுப்பாய்விலேயே பெருமளவு நேரத்தைச் செலவிடுகிறான்.

**முயற்சியாண்மை பிறப்புரிமையா? அல்லது ஆக்கமா?**

இக்கூற்று தொடர்பாக விடையளிக்கப் பல்வேறு ஆய்வுகள் நடந்தன. அத்தகைய கல்வி ஆய்வுகளின் முடிவுகள் வணிக உரிமையில்லாத குடும்பத்தின் பிள்ளைகளை விட வணிக உரிமையாளர் குடும்பத்தில் பிறந்த பிள்ளைகள் முயற்சியாண்மையில் கூடிய நாட்டங்காட்டுவதனை எடுத்துக்காட்டியுள்ளன. இதனால் சிலர் முயற்சியாண்மை பிறப்பினால் ஏற்படும் திறன் எனக்கூறுகிறார்கள். அதனை அவ்வாறே ஏற்றுக்கொள்ள முடியாதபோதும் சூழல் தாக்கத்தினால் முயற்சியாண்மை ஏற்படமுடியும் என்பதை ஓரளவுக்கேனும் ஏற்றுக் கொள்ளலாம்.

முயற்சியாளரின் ஆராய்ச்சியாளன் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் நோக்கத்தை நிறைவேற்றுவதில் வல்லவன். எப்போதும் பகுப்பாய்வு செய்பவன். இனிய முகத்தினன் எப்போதும் சூழலை ஆய்பவன். புதிய கருத்துக்கள் புதிய வாய்ப்புக்களினால் தூண்டப்படுபவன் மற்றவர்களுக்குச் சேவை செய்து கொண்டே தன்திசையில் இலக்கை நோக்கிச் செல்ல முயல்பவன் தன்வழியே செல்வதில் விருப்புடையவன்.

**முயற்சியாண்மைப் பண்புகள்**

**[Entreprencurship Characteristics]**

முயற்சியாளராக வர ஆசைப்படும் ஒருவர் பின்வரும் பண்புகளைத் தன்னுள் ஏற்படுத்திக் கொள்ளவும் அதிகரித்துக் கொள்ளவும் முயன்றால் தனது எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்ளமுடியும்.

**தன்னம்பிக்கை**

**[Self Confident]**

நோக்கத்தை வென்றெடுக்க முடியும் என்பதில் அவனுக்கு சுய நம்பிக்கை உண்டு. தன் நோக்கத்தைப் பூர்த்தி செய்ய இடையறாது முயற்சி செய்வான். அவனுடைய நோக்கம் தெளிவானது இலக்கை அடைவதில் அவன் நேரடியாக ஈடுபடுபவன் தோல்வி அல்லது பின்னடைவு ஏற்பட்டாலும் அவன் பின்வாங்குவதில்லை. கலங்குவதில்லை. எந்த ஒரு முயற்சியாண்மையின் வெற்றிக்குப் பின்னாலும் தோல்வி, வீழ்ச்சி, கவலை, துன்பம், வழிவிரக்கம் இல்லாமல் இல்லை. அவற்றைச் சாதரணமாக நோக்குவான். அவற்றை விரயமானவை எனக்கருத மாட்டான். அனுபவமாகவும் முதலீடாகவும் கொள்வான்.

**முன்னுனர்வு**

**[Percepytire]**

வணிகச் சூழலில் ஒரு நிகழ்ச்சி நடைபெறும் என்பதனை முன்கூட்டியே உணர்ந்து கொள்ளும் ஆற்றல்

முயற்சியாளனுக்கு இருத்தல் வேண்டும் இது தூரதிருஷ்டி ஆற்றல் எனக் கூறலாம். எப்படியான சவாலையும் எதிர்கொள்ளும் முன் ஆயத்தத்துடன் இருக்க அவனால் எப்போதும் முடியும். அதன் மூலம் ஏற்படக்கூடிய நட்டம் அல்லது இழப்பை இழிவுபடுத்திக் கொள்ளமுடியும். இத்தன்மை கொண்டவர் வணிகப்போக்கை இலகுவாக இனங்கண்டு அவற்றை வணிகச் சந்தர்ப்பங்களாக மாற்றி நல்ல வெற்றி பெறுவார்.

### கடின உழைப்பு
### [Hard Working]

அயராதுழைக்கும் பண்பு முயற்சியாளனுக்க உண்டு. அவன் எப்போதும் உழைப்பை நேசிப்பான். உழைப்பை மதிப்பான். நன்மையோ தீமையோ எதனையும் தாங்கும் ஆற்றல் அவனுக்குண்டு.

### நெகிழக்கூடிய தன்மை
### [Flexible]

சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப அவன் மாறுவதற்கு ஆயத்தமாக இருப்பான். சூழல் மாறும் வரை அவன் காத்திருப்பதில்லை அதற்க முன்னே அவன் தொழிற்பட்டு விடுவான். **[Proactice]**

### ஊக்கமாகச் செயற்படல்
### [Motivated]

வெற்றி நோக்குடன் நீண்ட காலத்திற்கு ஊக்கமாகச் செயற்படுவார்.

### வளங்களால் நிறைவுடையவன்
### [Resourceful]

எப்பொழுதும் ஆராயும் தன்மையுடன் சரி பிழை காண்பதில் ஈடுபடுவான் அவன் தனது எல்லா வளங்களையும் தன் இலக்கை அடைவதில் பயன்படுத்துவான்.

### நட்டப்பொறுப்பை முகாமை செய்தல்
### [Able to Manage Visk]

முயற்சியாளன் நட்ட அச்சத்தைச் சந்தர்ப்பமாகவன்றி சவாலாகக் கருதுவான் நட்ட அச்சத்தை மதிப்பீடு செய்து பொறுப்பேற்பான் தோல்வி சாத்தியத்தை விட வெற்றிச் சாத்தியம் அதிகமாக இருந்தால் மட்டுமே நட்ட அச்சத்தைப் பொறுப்பேற்பான். நட்டச் சாத்தியம் அதிகமெனில் அதனைக் கைவிடுவான். பொறுப்பேற்ற நட்ட அச்சத்தை முடிந்த அளவு இழிவு படுத்திக் கொள்ள முயலுவான்.

### புத்தாக்கம் புனைபவன்
### [Creative]

ஆக்கத்திறன் அல்லது புத்தாக்க வல்லமை முயற்சியாளனிடம் கட்டாயமாக இருக்கவேண்டிய பண்பாகும். அவனது பார்வையும் செயலும் புது விதமாகவே அமையும். அவன் எல்லோரையும் போல சாதாரணமாகவோ வழமையான முறையிலோ பார்ப்பதில்லை. செய்வதில்லை சவாலை ஏற்க விரும்புவான். சவாலை ஏற்று வலுவுடையதாக சிக்கலாக இருப்பினும் கலக்கமடையான். புதிய பொருளை, புதிய சேவையை புதிய கருத்தை ஆக்குவதிலேயே எப்போதும் முயலுவான் அதன் மூலமாக அவன் மாற்றத்தை ஏற்படுத்துவான்.

### பெறுபேற்றை நோக்கிச் செல்வான்
### [Achievement Oriented]

முயற்சியாளன் எப்பொழுதும் உயர் நோக்கம் கொண்டிருப்பான் அந் நோக்கத்தை அடைவதில் அர்ப்பண சிரத்தையுடன் ஈடுபடுவான் பெறுபேற்றை அடைவதில் அவன் எப்பொழுதும் விருப்பத்துடன் முயற்சி செய்வான். பெறுபேற்றை அடைவதில் அர்ப்பண சிந்தையுடன் செயற்படுவான் பெறுபேற்றை அடைவதன் மூலம் மேலும் மேலும் முன்னோக்கிச் செல்லுவான். ஓர் இலக்கை நிறைவேற்றிய பின் மேலும் மேலும் முன்னோக்கி செல்லுவான் ஓர் இலக்கை முடித்த பின்னர் அதற்கடுத்த இலக்கை ஏற்படுத்திக் கொள்வான்.

நல்லெண்ணமுடையவன்

**[Optimistic]**

அவன் நல்லெண்ணத்துடனேயே பார்ப்பான், புரிவான், இல்லை, முடியாது, என்ற பதங்கள் அவனிடம் இல்லை எதிர்மறையான மனப்பாங்கு அவனிடம் இல்லை. அவனிடம் எப்பொழுதும் நேர் எண்ணங்களே காணப்படும். ஒரு போதும் எதிர்காலத்தை இருள் சூழ்ந்த தாக எண்ணமாட்டான்.

சுதந்திரமானவன்

**[Independent]**

தன் எண்ணப்படி முடிவெடுக் கவும் செயல்படவும் சுதந்திரத்தை எதிர்பார்க்கிறான். பிழையேற்பட்ட போதி லும் அது தொடர்பாக எவருக்காவது பதில் சொல்ல அவன் ஆயத்தமில்லை. மற்றவர் கருத்துக்கள் எண்ணங்களில் தங்கியிருப்பதுமில்லை மற்றவர் எண்ணங்களை மதிப்பவன். அவற்றை அங்கீகரிப்பவன் ஆனால் சொந்தத் தீர்மானத்தையே பெரிதும் விரும்புவான். தனது பயணத்தை தொடக்கம் முடிவு என்பவற்றைத் தானே தீர்மானிக்கவும் கட்டுப்படுத்தவும் விரும்புகிறான்.

தூர நோக்குடையவன்

**[Visionary]**

ஒன்று அவ்வாறிருக்க வேண்டும் என்பது பற்றிய சாட்சி அவனிடம் உண்டு ஏன் இலக்கை அடையும் வரை அக்காட்சி அவனிடம் காணப்படும். தனது சொந்த இலட்சியத்தை அடை யும் இலக்குடன் தனது வணிகத்தைச் தன்னுடன் இணைத்துக் கொள்ளுவான். வெவ்வேறு காரணிகளினால் அவன் தூண்டப்படுவான். பின்வருவன அவ்வாறு முயற்சியாளன் தூண்டப் படுவதற்கான காரணிகள் சிலவாகும்.

* * *

## பாவனையாளர் அதிகாரசபையின் நிதியம்

இது பின்வரும் வழிகளில் நிதியைப் பெறுகின்றது.

1. பாராளுமன்ற ஒதுக்கீடுகள்
2. சேவைக்கட்டணங்கள்
3. இந்தச் சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் வரும்படி
4. இந்தச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட குற்றமொன்றிற்கான தண்டப்பணத்தில் 1/3 பங்கு
5. மானியங்களும், நன்கொடைகளும்
6. நுகர்வோர் பாதுகாப்பு நிதியத்தின் இறுதி மீதி

## மேற்படி நிதியிலிருந்து பின்வரும் செலவுகள் மட்டும் செலவிடப்படலாம்

1. அதிகாரசபையின் உறுப்பினருக்கான ஊதியம்
2. பாவனையாளர் கல்வியும் அவற்றைப் பரப்புவது தொடர்பான செலவுகளும்
3. பாவனையாளர் ஒழுங்கமைப்பு மேம்பாடு ஊக்குவிப்பதற்கான செலவுகள்

# மனிதவள முகாமைத்துவம்
## HUMAN RESOURCE MANAGEMENT


வெ. மதுரிகா
A/L 2006 Com.

நிறுவனங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்களை நிர்வகிப்பதுடன் சம்பந்தப்பட்ட ஒரு முகாமைத்துவமே மனிதவள முகாமைத்துவம் ஆகும். இது முன்னர் ஆளணி முகாமைத்துவம் [Personnel] என்ற பெயருடன் செயற்பட்டதாகும். ஆளணி முகாமைத்துவமோ பணியாளர்களை சேர்த்து கொள்வதிலும் வேலை வாங்குவதிலும் மட்டுமே அக்கறை செலுத்தி வந்தது. இதற்கு மேலதிகமாக பணியாளர்களை, பராமரிப்பது அக்கறை காட்டுவது மணிதவள முகாமைத்துவமாகும். இதனை அடிப்படை நோக்கமெல்லாம் உயர் உற்பத்தித் திறன் [High Productivity] என்பதனை அடைந்து கொள்வதே ஆகும். ஊழியர்களின் உற்பத்தி திறனை அதிகரிப்பதிலே அக்கறை செலுத்தவதில் மனிதவள முகாமைத்துவம் பின்வரும் தொழிற்பாடுகளை ஆற்றி வருகின்றன.

## Functions of Human Resource Management

| இணைத்தல் | அபிவிருத்தி | உச்சப்படுத்தல் | பராமரித்தல் |
|---|---|---|---|
| A) மனிதவள திட்டமிடல் | வழிகாட்டுதல் | செயற்திறன்மதிப்பிடுதல் | பாதுகாப்பு |
| B) ஆட்சேர்த்தல் | பயிற்றுதல் | கூலி, சம்பள நிர்வாகம் | சுகாதார வசதி |
| C) தேர்ந்தெடுத்தல் | தொழில்விருத்தி | நலன்சேவை நிர்வாகம் | தொழில் உறவு |
| D) பதவியுயர்த்தல் | | தூண்டுதல் | |
| E) இடமாற்றல் | | தொடர்பாடல் | |
| F) சமூகமயப்படுத்தல் | | | |

**A)** மனித வள முகாமைத்துவத்தின் அடிப்படை தொழிற்பாடே இதுவாகும். நிறுவனம் ஒன்றுக்குத் தேவையான மனித வளத்தைத் திட்டமிட்டுக் கொடுப்பதே இதன் நோக்கமாகும். ஒரு நிறுவனம் எந்த அளவிலும், தரத்திலும் மனித வளத்தை கொண்டிருக்க வேண்டும் என்பது இக்கருமத்தால் தீர்மானிக்கப்படும். மனிதவளம் மிகையாகவும் பற்றாக்குறையாகவும் இல்லாமல் தேவையான அளவிலே வைத்துக் கொள்வதற்கு மனிதவளத் திட்டமிடுதல் உதவி செய்யும் இதற்குப் பொறுப்பான மனிதவள முகாமையாளர் இருப்பதுடன் அவரைக் கொண்டிராத நிறுவனங்கள் அரச அமைப்புக்களான NIBM, SLIDA, SLBDC ஆகியவற்றின் உதவியைப் பெற்றுக் கொள்ளமுடியும் நிறுவனங்கள் தமக்குத் தேவையான மனிதவளத்தைத் திட்டமிட்டுப் பயன்படுத்தக்கூடிய நுட்பமே மனித வரைபடம் [MANING CHART] என்பதாகும். இது ஒரு சட்ட வரைபடம் ஆகும். இந்த வரைபடத்திலே X அச்சில் தொழில்களும் Y அச்சில் எண்ணிக்கையும் காட்டப்படும். இதனால் ஒவ்வொரு தொழில்களுக்கும் எந்த எண்ணிக்கையினர் தேவைப்படுகின்றனர். என்பதை இப்படத்தின் மூலம் திட்டமிட முடியும். இது பின்வருமாறு காட்டலாம்.




இவ்வரைபடத்திலே தொழில் மொத்தமாகத் தேவைப்படும் மனிதவளம் 62 என்பதனை மிக இலகுவாக திட்டமிட்டுக் கொள்ளமுடிகிறது. என்ன வகையான தொழில்களுக்கு எத்தனைபேர் தேவையாகின்றனர் என்பது இந்த வரைபடத்தினால் திட்டமிட்டுக் கொள்ளப்படும். குறிப்பாக

| | |
|---|---|
| பொறியியலாளர் | 05 |
| தொழில்நுட்பவியலாளர் | 10 |
| முகாரிகள் | 07 |
| இயந்திர இயக்குனர் | 20 |
| எழுதுவினைஞர் | 15 |
| பியோன் | 06 |
| | 62 |

மேற்காட்டிய வரைபடத்தில் மொத்தமாகத் தேவைப்படும் மனிதவளம் 62 என்பதை மிக இலகுவாகத் திட்டமிட்டுக்கொள்ள முடிகிறது. என்ன வகையான தொழில்களிற்கு எத்தனைபேர் தேவைப்படுகின்றனர் என்பது இவ்வரைபடத்தினால் திட்டமிடப்படும் குறிப்பாக

| | |
|---|---|
| பொறியியலாளர் | 05 |
| தொழில்நுட்பவியலாளர் | 10 |
| முகாரிகள் | 17 |
| இயந்திர இயக்குனர் | 20 |
| எழுதுவினைஞர் | 15 |
| பியோன் | 05 |
| | 62 |

இத்திட்டமிடலினால் ஒவ்வொரு தொழிலுக்கும் தேவைப்படுகின்ற சரியான எண்ணிக்கையினர் திட்டமிட்டுப் பெறப்படுவர். ஊழியர் மிகையோ பற்றாக்குறையோ இல்லாது தேவைப்படும் அளவில் ஊழியரை வைத்துக்கொள்ள நிறுவனம் நடவடிக்கை எடுக்கும்.

**D) ஆட்சேர்த்தல்:** மனிதவள திட்டமிடலைத் தொடர்ந்து இடம்பெறுகின்ற கருமமே ஆட்சேர்த்தல் ஆகும். இது நிறுவனத்துக்குத் தேவைப்படுகின்ற பணியாளர்களை இணைத்துக் கொள்கின்ற நடவடிக்கை ஆகும். நிறுவனம் பணியாளர்களை.

i. உள்ளிருந்து ஆட்சேர்த்தல்
ii. வெளியிருந்து ஆட்சேர்த்தல்

என்ற இரு முறைகளில் சேர்த்துக் கொள்ளப்படுவர் இதில் உள்ளிருந்து ஆட்சேர்த்தல் ஆனது பதவி உயர்வு, இடமாற்றம் ஆகிய இரண்டினையும் ஊழியர்களைப் பெறும் முறையாகும். இதில் பதவி உயர்வு சேவை மூப்பு **[Seniority]** மதிப்பீடு **[Mort Rating]** என்ற அடிப்படைகளிலே நிகழ முடியும் இதன்படி குறிக்கப்பட்ட சேவைக்காலத்தின் பின்னரும் நிலையை அளவிட்டதன் பின்னரும் பதவி உயர்வு ஆட்சேர்க்க வகை செய்யும்.

இடமாற்றம் என்பது உள்ளிருந்து ஆட்சேர்க்கப்படுகின்ற ஒரு முறையாகும். இதன்படி ஒரு திணைக்களத்தில் இருந்து இன்னொரு திணைக்களத்திற்கும் ஒரு பகுதியில் இருந்து இன்னொரு பகுதிக்கும் ஒரு பிரிவிலிருந்து இன்னொரு பிரிவிற்கும் இந்த இடமாற்றங்கள் நிகழமுடியும். இந்த இடமாற்றங்களால் ஆட்கள் வந்து சேர்வது வழக்கம் என்பதால் அதனை உள்ளிருந்து ஆட்சேர்த்தலாகக் கொள்வர். எப்பொழுதுமே பதவி உயர்வு வழங்கப்படும் பொழுது இடமாற்றங்களும் தொடர்புபடும் என்பதனால் இரண்டுமே உள்ளிருந்து ஆட்சேர்த்தலாக கொள்ளப்படும். பெரும்பாலும் நிறுவனம் ஒன்றில் வெற்றிடங்களில் **25% - 50%** வரை உள்ளிருந்து ஆட்சேர்த்தல் மூலம் நிரப்பப்படும்.

வெளியில் இருந்து ஆட்சேர்த்தல் என்பது **50%** வரையான ஊழியர்களை வழங்குவதாகும். இத்தகைய ஊழியர்களை பெறுவதற்கு நிறுவனம் பலமுறைகளைப் பயன்படுத்தும் குறிப்பாக

i. புதினப்பத்திரிகை விளம்பரம்
ii. அரச வர்த்தமானி விளம்பரம்
iii. தொழில் முகவர் இல்லம்
iv. தொழில்மாற்று
v. பல்கலைக்கழகங்கள்
vi. தொழில்நுட்பக் கல்லூரிகள்
vii. பாடசாலைகள்

என்பன வெளியிலிருந்து ஆட்சேர்த்தலுக்க உதவும் முறைகளாகும் இவற்றில் முக்கியமாக விளம்பரமானது பகிரங்கமாக விடப்பட்டு ஆட்சேர்த்தல் இடம்பெறுகிறது.

**தேர்ந்தெடுத்தல்:**

ஆட்சேர்த்தல் கருமத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களை பரிசீலனைக்கு உட்படுத்தி அதில் பொருத்தமானவர்களைக் கண்டுகொள்ள உதவும் கருமமே தேர்ந்தெடுத்தல் ஆகும். இதற்கென நிறுவனங்களில் 3 நுட்பங்கள் பயன்படுத்தப்பட முடியும்.

i. பரீட்சை **[Test]**
ii. நேர்முகப் பரீட்சை **[Interview]**
iii. நடத்தைப் பரீட்சை **[Behavioural test]**


இதில் நடத்தைப் பரீட்சை மட்டும் இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகளிற்குப் பொருத்தமில்லாத முறையாகும். எனவே தான் பரீட்சையும் நேர்முகப் பரீட்சையுமே தேர்ந்தெடுத்தல் நுட்பங்களாகப் பயன்பாட்டில் உள்ளன.

**பரீட்சை:**

தேர்ந்தெடுத்தல் நுட்பங்களில் பிரதானமானது இதுவாகும். பெரும் எண்ணிக்கை கொண்ட விண்ணப்பதாரிகளில் உண்மையான திறமை கொண்டவர்களை இனங்கண்டு ஆட்சேர்த்து கொள்வதற்காகப் பரீட்சை உதவும். ஆனால் நல்ல தேர்ந்தெடுத்தலிற்கு உதவ பரீட்சை நல்ல பரீட்சையாக **[good test]** இருத்தல் அவசியம் இதன்படி


i. பெறுமதித்தன்மை
ii. நம்பிக்கைத் தன்மை
iii. நியாயத் தன்மை

என்ற 3 பரீட்சைப் பண்புகளினாலேயே தெரியப்பட்டிருத்தல் வேண்டும். பெறுமதித்தன்மை என்பது நல்ல பரீட்சையின் முதல் பண்பாகும். இதன்படி பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிக்கும் வேலைத்திறமை இடையேயான நேர்க்கணிய உறவைக் காட்டுவதாகும். அதாவது பரீட்சையில் கூடிய புள்ளி பெற்றவர்கள் வேலையைத் திறமையாகவும் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்கள் வேலையை திறமையின்றியும் ஆற்றவதே பரீட்சையின் பெறுமதி தன்மையாகும். இதனைப் பின்வருமாறு வரைபடம் காட்டுகிறது.




பரீட்சை பெறுமதித்தன்மையை கொண்டிருக்காத போது எதிர்க்கணிய உறவோ தொடர்பின்மையோ தான் காணப்பட இயலும் எது பரீட்சையில் பெற்ற புள்ளிக்கும் வேலைத்திறமைக்கும் இடையே எந்தவித உறவுகளும் இருக்கமாட்டாது. இதனைப் பின்வருமாறு வரைபடங்கள் காட்டுகின்றன.

எதிர்க்கணியம்




தொடர்பின்மை




**நேர்முகப்பரீட்சை:**

தேர்ந்தெடுத்தலிற்காக பயன்படுத்தப்படும் இரண்டாவது நுட்பம் இதுவாகும். இது வேலை கொடுப்போர் வேலை பெற இருப்போர் முகத்திற்கு முகம் சந்திப்பர். இதில் வினாவப்படும் கேள்விகளிற்கு அளிக்கப்படும் விடையை மையமாக கொண்டு ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவர். நடைமுறையில் ஒன்றுக்கு மேற்பட்ட நேர்முகப்பரீட்சைகளும் நடாத்தப்பட்டு ஆட்கள் தேர்ந்தெடுக்கப்படுவதுண்டு. இதில் பின்வரும் நேர்முகப்பரீட்சைகள் முக்கியம் பெறும்.

**i.** திரைகாட்டும் / கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை
எந்த பகுதிக்குள் வினாக்கள் வினாவப்படும் என்று வரையறை கொண்டதாகும்.

**ii.** திரைகாட்டாத / கட்டமைக்கப்படாத நேர்முகப்பரீட்சை
இது கேட்கப்படும் வினாக்களிற்கு வரையறையைக் கொண்டிராத நேர்முகப்பரீட்சையாகும்.

**iii.** சபை நேர்முகப்பரீட்சை **[Panel Interview]**
இதில் பல பரீட்சகர்கள் ஒரு பரீட்சார்த்தியை பரீட்சிப்பதாகும்.

**iv.** குழு நேர்முகப்பரீட்சை **[Group Interview]**
இதில் ஒரு பரீட்சகர் பல பரீட்சார்த்திகளைக் குழுக்களாக வைத்துப் பரீட்சிப்பதாகும்.

**v.** பட்டியல்படுத்தப்பட்ட நேர்முகப்பரீட்சை
நேர்முகப்பரீட்சைக்கென வினாவப்படும் வினாக்களிற்கு ஒரு பட்டியலைப் பராமரிக்கும் நேர்முகப்பரீட்சையாகும்.

நம்பிக்கை தன்மை என்பது பரீட்சைகள் அடக்கி இருக்கும் வினாக்கள் சரியானவை என்பதன் அர்த்தமாகும். இதன்படி ஒரு வினாவிற்கு ஒரு சரியான விடையே இருப்பதாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட விடைகள் இருப்பது பரீட்சையின் நம்பிக்கைத் தன்மையினைக் குறைக்கும். இதன் அடிப்படையிலேயே தற்காலத்தில் பெரும்பாலான பரீட்சைகள் பல்தேர்வு வினாக்கள் **[Mcq]** அடக்கியதாக அமைக்கப்படுகின்றன. நியமத்தன்மை என்பது விண்ணப்பத்தில் கேட்கப்பட்ட தகமைக்கும் பரீட்சை வினாக்களின் தரத்திற்கும் உறவு இருப்பதைக் காட்டுவதாகும். இதன்படி கேட்கப்பட்ட தரத்தைக் கொண்டவர்களால் விடையளிக்கப்படக்கூடிய வினாக்கள் பரீட்சை கொண்டிருத்தல் வேண்டும். மாறாக தரம்கூடிய வினாக்களையோ தரம் குறைந்த வினாக்களையோ அது கொண்டிருத்தல் ஆகாது.


ஒரு நிறுவனம் தேர்ந்தெடுத்தலிற்கு என பல வகையான பரீட்சைகளை நடாத்துவது வழக்கம் குறிப்பாக

- **i.** செய்முறைப்பரீட்சை
- **ii.** பொது அறிவுப் பரீட்சை
- **iii.** பொது விவேகப் பரீட்சை
- **iv.** உளச்சார்பு பரீட்சை
- **v.** ஆளுமைப் பரீட்சை

என்பன தேவைக்க ஏற்ற வகையில் நடாத்தப்படுகின்ற பரீட்சைகள் ஆகும்.

### i. பயிற்சியும் அபிவிருத்தியும்

வேலைக்கு என அமர்த்தப்பட்ட ஒருவர் தனது வேலையினைத் திறமையாகச் செய்வதற்குத் தேவைப்படுவதே பயிற்சி ஆகும். இந்தப் பயிற்சி அவரது வேலையைத் திறமையாக மேற்கொள்ள உதவுவது மட்டுமன்றி அவரது திறமை விருத்தி செய்யப்படவும் வகை செய்யும். எனவே தான் பயிற்சியின் மூலம் ஒருவர் பெற்றுக் கொள்ளக்கூடும் என்ற தொழிலின் முன்னேற்றமே அபிவிருத்தி ஆகும். நடைமுறையில் சிறு அளவிலான பயிற்சி பேரளவிலான அபிவிருத்தியைக் கொண்டு வரும் எனக் கொள்வர். ஒருவரிற்கு எந்தளவிலான பயிற்சி தேவைப்படும் என்பதைப் பயிற்றுதல் இடைவெளி எடுத்துக்காட்டும். இவ் இடைவெளியைப் பொறுத்தே பயிற்சியின் அளவு தீர்மானிக்கப்படும். இதனைப் பின்வருமாறு படம் காட்டுகிறது.



நிறுவனங்களுள் ஊழியர்களிற்கான பயிற்சியை வழங்க ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளைப் பின்பற்றுவது வழக்கம்

**i. விரிவுரை**

இது விரிவுரை மண்டபத்திலே குறைந்த செலவுடன் பெரும் எண்ணிக்கையினருக்கு வழங்கப்படும் பயிற்சி ஆகும். இப்பயிற்சி செய்முறையுடன் சேர்த்துக் கொள்ளப்படும். ஆயின் அதிக பயனுறுதியைத் தரும் என்பதனாலேயே இக்காலத்தில் பட்டறைப் பயிற்சி என்பது பிரபலம் பெறுகிறது.

**ii. சுழற்பயிற்சி**

இது நிறுவனம் ஒன்றில் இருக்கும் எல்லா வேலைகளையும் கற்றுக் கொள்வதற்கான ஒரு வகைப்பயிற்சி ஆகும். இதன்படி நிறுவனம் ஒன்றின் வெவ்வேறு பகுதிகளில் வைத்து ஒரு குறித்தகால எல்லைக்குள் பயிற்சி கொடுக்கப்படும்.

**iii. பயிலுனர் பயிற்சி**

ஒரு வேலை தொடர்பான கோட்பாடுகளையும் செய்முறைகளையும் ஒரே நேரத்தில் தெரிந்து கொள்ள உதவுவதே பயிலுனர் பயிற்சி ஆகும். இந்தப் பயிற்சி உயர்மட்ட, கீழ்மட்ட வேலைகளிற்கு என வழங்கப்பட முடியும் என்பதனால் எல்லா மட்டங்களைச் சார்ந்தவர்களிற்குப் பொருத்தமான பயிற்சி எனப் பயிலுனர் பயிற்சி கொள்ளப்படும்.

**iv. விடய ஆய்வு**

நிறுவனங்களில் ஏற்படுகின்ற முகாமைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழி வகைகளைக் காட்டுவதே விடய ஆய்வு ஆகும். இங்கு பயிற்சி பெறுவோரால் ஒரு விடயத்தில் உள்ள பிரச்சினைகளை கண்டுபிடித்தல் மற்றையோர் கருத்துக்களிற்கு மதிப்பளித்தல் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் என்பன பயிற்சி வழக்கம்.


**v.**

இது வேலையின் ஒரு அங்கத்தை வழங்கி அவர் அந்த வேலையில் கொண்டுள்ள பலத்தையும் பலவீனத்தையும் கண்டறிவதற்காக நடாத்தப்படும் பயிற்சி இதுவாகும். இப்பயிற்சியில் அவர் எத்தகைய பலவீனங்களை கொண்டிருக்கின்றாரோ அவற்றை நீக்குவதற்கான பயிற்சி வழங்கும் இதன் மூலம் அவர் வேலையில் திறமையுடன் பணியாற்றலாம்.

## ஊக்கப்படுத்தல்

ஊழியர்களை வேலையில் உற்சாகப்படுத்துவதற்காக முன்வைக்கப்படுவதே ஊக்கப்படுத்தல் ஆகும். இதற்காகவே நிதி சார்ந்ததும் நிதி சாராததும் என பல ஊக்குவிப்புக்கள் முன்னர் வழங்கப்பட்டன. ஆனால் "மாஸ்லோ" என்ற அறிஞரின் ஆய்விற்குப் பின்னர் ஊழியர் கொண்டிருக்கும் தேவைகளும் அவற்றுக்கான திருப்திகளுமே ஊக்கப்படுத்தலில் முக்கியம் எனக் கொள்ளப்பட்டது. அவரால் மனிதர்களின் தேவைகளிற்கு ஒரு வரிசை ஏற்படுத்தப்பட்டது. இதுவே தேவைகளின் வரிசைக் கொள்கை என அழைப்பர். இது பின்வருமாறு காட்டப்படும்.

MasLaws




உடலியற் தேவை என்பது மக்கள் உயிர் வாழ்விற்கு அவசியமான உணவு, உடை, உறையுள் என்பவற்றை அடக்குவதாகும். இது சம்பளத்தின் ஊடாக திருப்திப்படுத்தப்படலாம்.

பாதுகாப்புத்தேவை என்பது மக்களது அச்சத்தைப் போக்க உதவுகின்ற திருப்தியின்மை வேண்டி நிற்பதாகும். வழமையில் தொழிலிற்கும் உயிரிற்கும் உடமைகளிற்கும் பாதுகாப்பை வேண்டி நிற்பதாகப் பாதுகாப்பு தேவை அமையும்.

சமூகத்தேவை என்பது தேவைகளிற்கு அப்பாற்பட்ட வகையில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவையாகும். இதில் சமூகத்தவருடன் இணைந்து வாழல், அன்பு செலுத்துதல், உறவாடல், என்பன பூர்த்தி செய்யப்படவேண்டி இருக்கும்.

கௌரவத் தேவை என்பது ஏனையோரிலும் பார்க்கச் சமூகத்தில் மேலான நிலையைப் பெற கொண்டிருக்கும் தேவையாகும். உயர்ந்த அந்தஸ்தைப் பேணுதல் இதில் முக்கிய தேவையாகும். உயர்பதவியைப் பெறுதல் வாகனங்களை உடமையாக்குதல் சொத்துக்களை உடமையாக்குதல் போன்றன இங்கு திருப்தியைப் பெற்றுத்தரும்.

தன்னலத் தேவை என்பது அவரவர் தேவையாகும். இங்கு அவரிற்கு ஒப்பாக எவரும் இல்லை என அமையும் தேவை இருக்கும். ஜனாதிபதியோ அன்றிப் பிரதமரோ ஆக வேண்டும் என்ற தேவை தன்னலத் தேவையாகும்.

### செயற்திறனை மதிப்பிடுதல்

நிறுவனங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்களது திறமையை மதிப்பிடுவதே இப்பணியாகும். இதன்படி வருட ஆரம்பத்திலோ/ இறுதியிலோ ஊழியர்களது திறமையை மதிப்பிட்டு அது திருப்திகரமாக இருந்தால் அவர்களிற்கான சம்பளத்தை அதிகரிப்பதோ / பதவி உயர்வை வழங்குவதோ நிறுவனத்தின் பணியாக இருக்கும். இவ்வாறு மதிப்பிடும் பொழுது அது திருப்திகரமற்றதாக இருப்பின் அவரை இன்னொரு வேலைக்கு மாற்றுவதோ / புதிய பயிற்சிக்கு உட்படுத்துவதோ வழிமுறையாக அமையும். எனவே தான் நிறுவனத்தில் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவரது திறமைகளை அளவிடுகின்ற செயற்திறன் மதிப்பிடல் முக்கியமாகின்றது.

உசாத்துணைநூல்: **முகாமைத்துவம்**
**க. தேவராசா**

# எல்லைக்கிரயக் கணிப்பீடு
# Marginal Cost Evaluation

த. சஞ்சீபன்
A/L 2006 Com.

**எல்லைக்கிரயம் வரைவிலக்கணம்:**

**Definition of Marginal Cost**

ஒரு அலகு பொருளை மேலதிகமாக உற்பத்தி செய்யும் பொழுது ஏற்படுகின்ற மேலதிக செலவே எல்லைக்கிரயம் எனப்படும். இச்செலவுகள் உற்பத்திக்கேற்ப மாற்றமடைந்து செல்லும் தன்மையுடையவை. எனவே எல்லைச் செலவு என்பது மாறும் செலவினையே குறித்து நிற்கின்றது. எல்லைச் செலவுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. நேர்மூலப்பொருள் செலவு **[Direct Material Cost]**
2. நேர்கூலி **[Direct Labour]**
3. மாறும் மேந்தலைகள் **[Variable Overheads]**

**எல்லைக்கிரயவியல் வரைவிலக்கணம்:**

குறித்த செயற்பாடுகளுக்கும் செய்முறைகளுக்கும் உற்பத்திப் பொருளுக்குமான உற்பத்தி செலவுகளில் மாறும் செலவுகளைச் சாட்டுதல் செய்வதுடன் தொடர்புடைய ஒரு செலவியல் அணுகுமுறை நுட்பமே எல்லைக்கிரயவியல் எனப்படுகின்றது. அதாவது எல்லைக் கிரயவியலில் செலவுகள் மாறும் செலவு நிலையான செலவு என பாகுபடுத்தப்படுகின்றன.

எனவே மாறும் செலவுகளை செலவு அவர்களுக்கு தாக்கீடு செய்து நிலையான செலவானது குறித்த காலப்பகுதிக்குரிய செலவாகக் கொண்டு மொத்தப் பங்களிப்புக்கு எதிராக பதிவழிக்கும் ஒரு நுட்பமே எல்லைக்கிரயவியல் எனக்கிரய முகாமைக்கணக்காளர் நிறுவனம் **Institute of cost and Management Accountants** கூறுகின்றது. இவ் எல்லைச் செலவியல் முறையானது குறுங்கால தீர்மானம் இடல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

**செலவு நடத்தை [Cost Behaviour]**

எல்லை செலவியல் முறையின் பிரதான அம்சம் செலவுகளை அவற்றின் தன்மைக்கு ஏற்ப வேறுபடுத்தல் ஆகும். இதனையே செலவு நடத்தை என்பர். உற்பத்தியின் தொடர்பிற்கு ஏற்ப இடம்பெறக்கூடிய செலவுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. நிலையான செலவு **Fixed cost**
2. மாறும் செலவு **Variable Cost**

**நிலையான செலவு [Fixed Cost]**

உற்பத்தி அதிகரித்தாலும் வீழ்ச்சியடைந்தாலும் மாற்றம் அடையாது நிலையாக இருக்கும் செலவுகள் நிலையான செலவுகள் ஆகும். இது

உற்பத்தியோடு நேரடியாகத் தொடர்புபடாதவை ஆகும். இச்செலவுகள் உற்பத்தி இடம்பெற்றாலும், இடம்பெறாவிட்டாலும் ஏற்படும்.
உதாரணம்: பெறுமானத் தேய்வு **Depreciation**

**மாறும் செலவு [Variable cost]**

உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப மாற்றம் அடையக்கூடிய செலவுகள் மாறும் செலவுகள் எனப்படும். இது உற்பத்தி அதிகரிக்கும் போது அதிகமாகவும் உற்பத்தி வீழ்ச்சியடையும் போது குறைவாகவும் இருக்கும்.
உதாரணம்: நேர்மூலப் பொருள் செலவு
நேர்கூலி
மாறும் மேந்தலைகளின் செலவு

உற்பத்தி முகாமையாளர் உற்பத்தி தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இவ்விரு செலவுகளையும் அவதானித்தல் வேண்டும். இங்கு மாறும் செலவுகளே மாற்றம் அடைந்து செல்லும் என்பதால் அந்த மாறும் செலவுகளிலேயே கூடிய கவனம் செலுத்துவர்.

**எல்லைக்கிரயவியலின் பண்புகள்:**
**[Characteristics of Marginal costing]**

- ❒ முகாமைத்துவ முடிவுகளை எடுப்பதற்கும் செலவுகளைப் பகுப்பாய்வு செய்த சாட்டுதல் செய்யவும் உதவும் ஒரு கருவியாக காணப்படுகிறது.
- ❒ அனைத்து செலவினங்களும் மாறும் செலவுகள் நிலையான செலவுகள் என வகுப்பதுடன் பகுதி மாறும் செலவுகள் கூட நிலையானவை மாறுதற்குரியவை என வகுக்கப்படுகிறது.
- ❒ இங்கு மாறும் செலவுகள் மட்டுமே உற்பத்திப் பொருள் தொடர்பில் ஆராயப்படுகிறது.
- ❒ நிலையான செலவுகள் காலச் செலவுகளாக கொள்ளப்பட்டு குறித்த நிதியாண்டு காலத்தில் இலாப நட்டக்கணக்குகளில் பங்களிப்புக்கு எதிராக சாட்டுதல் செய்யப்படுகிறது.
- ❒ இங்கு இறுதி முடிவு பொருள்களினதும் **[Finished goods]** நிறை வடையாத பொருட்களினதும் **[Stock of work in progress]** பெறுமதி எல்லை செலவியல் அடிப்படையிலே மதிப்பிடப்படுகிறது.
- ❒ இலாபம் ஆனது இங்கு பங்களிப்புக்கு எதிராக நிலையான செலவுகளைச் சாட்டுதல் செய்வதன் மூலம் பெறப்படும் மிகையிலிருந்து கணிக்கப்படும்.
- ❒ இங்கு விலைகள் பங்களிப்பைக் கூட்டுவதன் மூலம் எல்லைச் செலவியல் அடிப்படையிலே தீர்மானிக்கப்படும்.

**எல்லைச் செலவியல் முறையின் எடுகோள்கள்:**

- ❒ அனைத்து உற்பத்தி மட்டங்களிலும் நிலையான செலவு மாற்றம் அடையாது நிலையாகவே இருக்கும்.

- அனைத்து உற்பத்தி மட்டங்களிலும் அலகிற்கான விற்பனைவிலையானது மாறாது நிலையாகவே இருக்கும்

- மேலதிகமாக உற்பத்தி அதிகரிக்கும் ஆயின் அதன் அளவால் மாறும் செலவு மட்டுமே அதிகரிக்கும்

- விற்பனை அதிகரிப்போ / குறைவோ நிலையான செலவில் எதுவித பாதிப்பினையும் ஏற்படுத்தாது

- விற்பனை அளவின் வீழ்ச்சியானது இலாப அளவீட்டிலும் அதே அளவால் வீழ்ச்சியடையும்.

**பங்களிப்பு**

**[Contribution]**

ஒரு குறித்த பொருளின் விற்பனை விலைக்கும் எல்லைச் செலவுக்கும் இடையிலான வேறுபாடு பங்களிப்பு எனப்படும். எனவே விற்பனை விலையிலிருந்து எல்லைச் செலவைக் கழிப்பதன் மூலம் இது பெறப்படும். இம்முறை கூடுதலாக நிறுவனங்களில் பயன்படுத்தப்படுகிறது.

பங்களிப்பு = விற்பனை விலை - எல்லைச் செலவு

**contribution=Salesprice-Marginal cost** இங்கு எல்லைச் செலவு எப்போதும் மாறும் செலவிற்குச் சமனாக இருக்கும் எனவே

பங்களிப்பு = விற்பனைச் செலவு - மாறும் செலவு

**contribution=Salesprice-Variable cost** மாறாக வேறு வகையில் கூறின் நிலையான செலவுடன் இலாபத்தை கூட்டுவதன் மூலம் பங்களிப்பைப் பெறலாம்.

பங்களிப்பு = நிலையான செலவு + இலாபம்

**contribution=Fixed cost + Profit**

பங்களிப்பு **Contribution**

அலகு [Unit]

மொத்தப் பெறுமதி [Totalvalue]

**பங்களிப்பு கணிப்பு முறைகள்:**

1. அலகு **[Unit]**
2. மொத்த பெறுமதி **[Total value]**

**அலகுக்கான பங்களிப்பு ; அலகிற்கான உதவு தொகை:**

| | |
|---|---|
| அலகு விற்பனை விலை **Unit Selling Price** | **XXX** |
| அலகு மாறும் செலவு **Unit Variable Cost** | **(XX)** |
| அலகுப் பங்களிப்பு **Unit contribution** | **XXX** |

உதாரணம்: ரோஜா உற்பத்தி நிறுவனத்தின் தரவு வருமாறு [அலகிற்கு]
நிலையான செலவு 8 ரூபா விற்பனை 16/-

மாறும் செலவு 5/- விற்பனை அலகுகள் 100
இலாபம் 3/-

**பங்களிப்பு அலகுக்கு கணிக்க:**

| கணிப்பு | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| அலகு விற்பனை விலை | 16 | நிலையான செலவு | 8 |
| அலகு மாறும் செலவு | (5) | அல்லது இலாபம் | 3 |
| அலகு பங்களிப்பு | 11 | அலகு பங்களிப்பு | 11 |

மொத்த பங்களிப்பு / மொத்த உதவு தொகை

| | | |
|---|---|---|
| மொத்த விற்பனை | **Total sales** | **XXX** |
| மொத்த மாறும் செலவு | **Total Variable cost** | **(XX)** |
| மொத்தப்பங்களிப்பு | **Total Contribution** | **XXX** |

உதாரணம்:

மேற் கூறிய உதாரணத்தின் படி அலகுக்கான பங்களிப்பை விற்பனை செய்த அலகால் பெருக்குவதன் மூலம் மொத்த பங்களிப்பை அறியலாம்.

மொத்த பங்களிப்பு = அலகுக்கான பங்களிப்பு x விற்பனை செய்த அலகுகள்

**Total contribution = Unit contribution x Units sold**
**= 11 ரூபா x 100 அலகுகள்**
**= 1100 ரூபா**

**பங்களிப்பின் அவசியம் / பங்களிப்பின் நன்மைகள்**

1. பொருளின் விலை நிர்ணயம் செய்தலுக்கு
2. பொருளின் இலாபத் தரமான தன்மையை நிர்வகித்தல்
3. ஒரு பொருளை உற்பத்தி செய்வதா / கொள்வனவு செய்வதா என்பதை அறிய
4. உற்பத்தி கலவை / தொகையில் ஏற்கும் மாற்றத்தால் ஏற்படும் விளைவுகளைக் கண்டு கொள்க
5. புதிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் தொடர்பான முடிவுகளை எடுத்தல்
6. இலாப நட்டமற்ற புள்ளியைக் கணிப்பீடு செய்வதற்கு உதவுகிறது.

**பங்களிப்பு விற்பனை விகிதம் / இலாப விகிதம்**
**[contribution Salesratio/Profit volume Ratio]**

வியாபார நிலையங்களின் மிக முக்கிய விகிதம் ஆக பங்களிப்பு விற்பனை விகிதம் அமைகின்றது. இது விற்பனைக்கும் பங்களிப்புக்கும் உள்ள தொடர்பினை விளக்கி நிற்கின்றது. அதாவது ஒரு பொருளுக்கான பங்களிப்பினை பொருளுக்கான விற்பனை விலையின் 100% மாக கூறுவதே பங்களிப்பு விற்பனை விகிதமாகும்.

பங்களிப்பு விற்பனை விகிதம் = $\frac{\text{பங்களிப்பு}}{\text{விற்பனை}}$ X 100

**contribution sales Ratio =** $\frac{\textbf{Contribution}}{\textbf{Sales}}$ X 100

கணிப்பீட்டின் போது இவ்வீதம் உயர்வாக இருப்பின் அது இலாபம் கூடுதலாக உள்ளது என்பதனையும் மாறாக இவ்வீதம் குறைவாக இருப்பின் இலாபம் குறைவாக உள்ளது எனவும் முகாமையாளர் உணர்ந்து கொள்ள உதவும். முகாமையாளர் இவ்விகிதத்தின் ஒரு உயர்வான பெறுமானத்தை விரும்புவர்.

**பங்களிப்பு விற்பனை விகிதம் உயர்வாக இருக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்:**

1. அலகுக்கான எல்லைச் செலவை / மாறும் செலவை குறைப்புதன்மூலம்
2. அலகுக்கான விற்பனை விலையை உயர்த்துவதன் மூலம்
3. அதிக இலாபம் ஈட்டத்தக்க பொருளை விற்பனை செய்தல்

**பங்களிப்பு விற்பளை விகிதத்தின் விசேட இயல்புகள்:**
**[Special Feature of C/S Ratio]**

1. விற்பனைகளுக்கும் பங்களிப்புக்கும் இடையேயான தொடர்வைக் காட்டுகிறது

2. இவ்விகிதமானது அலகுக்கான விற்பனை விலையும் மாறும் செலவும் நிலையாக **[Contant]** இருக்கும் போதோ விகிதாசாரப்படி மாற்றம் அடையும் போதோ **[Eluctuate Proportionately]** நிலையானதாக இருக்கும் **[Remain constant]**

3. உற்பத்தி மட்டம் எவ்வாறு மாற்றம் அடைந்தாலும் இவ்விகிதம் மாற்றம் அடையாத நிலையாக இருக்கும்

4. நிலையான செலவுகளில் எவ்வித மாற்றம் ஏற்பட்டாலும் இவ்விகிதமானது பாதிக்கப்படமாட்டாது ஏனெனில் பங்களிப்புக் கணிப்பீட்டில் நிலையான செலவுகள் எப்பொழுதும் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை

**சமப்பாட்டுப் புள்ளி / இலாப நட்டமற்ற புள்ளிப் பகுப்பாய்வு:**
**[Break-Even point or cost - Volume Profit Analysis]**

எதிர்கால செலவு வருமானம் தொடர்பில் தீர்மானம் என்பதற்கான தகவல்களை வழங்கும் ஒரு நுட்பமே இலாப நட்டப்புள்ளி பகுப்பாய்வு எனப்படும். இதனை-கிரய-அளவு-இலாபஆய்வு எனவும் கூறுவர்.விற்பனை வருமானமும் மொத்தச் செலவினமும் ஒன்றுக்கொன்று சமனாக இருக்கும் இடத்தில் இலாப நட்டமற்ற புள்ளி தோன்றும்.

Cima **இன் கருத்துப்படி:**

இலாப நட்டமற்ற பகுப்பாய்வு என்பது பல்வேறு செயற்பாட்டு மட்டங்களில் கிரயம், தொகை, இலாபம், என்பவற்றுக்கிடையேயான தொடர்பை ஆய்வு செய்கின்ற ஒரு பகுப்பாய்வு முறை ஆகும். இத் தொடர்பு ஆனது வரைபட

ரீதியாகவோ சமன்பாட்டு ரீதியாகவோ வெளியிடப்படுகிறது. இது இலாப நட்டமற்ற புள்ளி பகுப்பாய்வு எனப்படும்.

உதாரணம்:

சறோ கம்பனியின் தரவுகள் பின்வருமாறு

| | |
|---|---|
| விற்பனை மொத்தம் | 200000/- |
| இலாபம் | 20000/- |
| மாறும் செலவு விற்பனையில் | 70% |

கணிக்குக:

1. பங்களிப்பு விற்பனை விகிதம்
2. நிலையான செலவுகள்
3. 80000 ரூபா இலாபம் ஈட்டத் தேவையான விற்பனையளவு

விடை

1. விற்பனை 200000 ரூபா எனின் மாறும்

$$\text{செலவு } (200000 X \frac{70}{100} = 14000 \text{ ரூபா}$$

$$\text{பங்களிப்பு விற்பனை விகிதம்} = \frac{(200000 - 140000)}{200000} X100$$

$$= 30\%$$

2. பங்களிப்பு = நிலையான செலவு + இலாபம்

$$60000 = X + 20000$$

$$X = 60000 - 20000$$

$$X = 40000 \text{ ரூபா}$$

எனவே நிலையான செலவு 40000 ரூபா

3. 80000 இலாபம் ஈட்டத் தேவையான விற்பனையளவு

$$= \frac{40000 + 80000}{30\%}$$

$$= \frac{120000}{30} X100$$

$$= 400000 \text{ ரூபா}$$

**இப்புள்ளியினைக் கணித ரீதியில் பின்வருமாறு கணிக்கலாம்**

$$\text{இலாப நட்டமற்ற புள்ளி [அலகுகளில்]} = \frac{\text{மொத்த நிலையான செலவு}}{\text{அலகொன்றிற்கான பங்களிப்பு}}$$

$$\textbf{Break evenpoint (Unit)} = \frac{\textbf{Total Fixed Cost}}{\textbf{Unit contribution}}$$

இலாபநட்டமற்ற புள்ளி [BEP]

அலகுக்கு [Unit] பெறுமதி [Value]

**இலாபநட்டமற்ற புள்ளிகள் இரு முறைகளில் கணிக்கலாம்:**

1. அலகு **[Unit]**

$$\frac{\text{மொத்த நிலையான செலவு} \quad \textbf{Total Fixed Cost}}{\text{அலகுக்கான பங்களிப்பு} \quad \textbf{Unit Contribution}}$$

2. பெறுமதிக்கு **[Total Value]**

இலாப நட்டமற்ற புள்ளி **X** அலகு விற்பனை விலை
**Break Even Point X Unit Selling Price**

உதாரணம்:

டயானா வியாபார நிறுவனம் தனி ஒரு பொருளை உற்பத்தி செய்து வருகின்றது

| | | |
|---|---|---|
| | நிலையான செலவு | 500 ரூபா |
| | அலகு பங்களிப்பு | 2 ரூபா |
| | அலகு விற்பனை விலை | 10 ரூபா |

கணிக்குக:
1. இலாபநட்டமற்ற புள்ளி [அலகு]
2. இலாபநட்டமற்ற புள்ளி [பெறுமதி]
3. இலாபம் அல்லது நட்டம்

விடை

1. இலாபநட்டமற்ற புள்ளி [அலகு] = $\frac{500\text{ரூபா}}{2\ \text{ரூபா}}$ = 250 அலகுகள்
2. இலாபநட்டமற்ற புள்ளி [பெறுமதிக்கு] = 250 அலகுகள் **X** 10 ரூபா
 = 2500 ரூபா
3. மொத்த வருமானம் [250 அலகுகள் **X** 10 ரூபா] = 2500
 கழி: மொத்த மாறும் செலவு [250 அலகு **X** 8 ரூபா] = (2000)
 மொத்த பங்களிப்பு **Total contribution** = 500
 கழி: நிலையான செலவு = (500)
 இலாபம்/நட்டம் = 00

**சமப்பாட்டுப் புள்ளி அட்டவணை:**
**[Break-Even Point Chart]**

- இலாப நட்டமற்ற புள்ளியானது வரைபட ரீதியாகவும் தீர்மானிக்கப்படட முடியும். ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் விற்பனை தொகையின் பல்வேறு மட்டங்களில் இலாபத்தையும் நட்டத்தையும் சுட்டிக்காட்டுகின்ற வரை படமே இலாப நட்டமற்ற வரை படமாகும்.
- இது கிடையச்சில் தொகை/வெளியீட்டு அலகினையும் நிலைக்குத்தச்சில் பெறுமதியையும் காட்டக்கூடிய வகையில் தயாரிக்கப்படும்.
- இவ் வரைபடத்தில் பின்வரும் மூன்று கோடுகள் வரையப்படும்

1. மொத்த வருமானகோடு - **Total Revenue Curve**

இது மூலப்புள்ளியிலிருந்து [பெறுமதி அலகு பூச்சியமாக உள்ள போது] ஆரம்பித்து எதிர்பார்க்கப்படுகின்ற வருமானப் புள்ளிவரை வரையப்படும்.

2. நிலையான செலவுக் கோடு - **Fixed cost curve**

நிலைக்குத்தச்சில் ஒரு புள்ளியில் மொத்த நிலையான செலவு குறிக்கப்பட்டு அது கிடையச்சிற்குச் சமாந்தரமாக வரையப்படும்

3. மொத்த செலவுக்கோடு - **Total Cost curve**

மொத்த வருமானக் கோடும் மொத்த செலவுக்கோடும் சந்திக்கும் புள்ளி இலாபநட்டமற்ற புள்ளியாகும்.

உதாரணம்: ரோசி நிறுவளத்தினால் உற்பத்தி செய்யப்படும் **R** என்ற பொருள் தொடர்பான பின்வரும் தகவல்களிலிருந்து இலாபநட்டமற்ற புள்ளி (அலகிற்கு) விற்பனை வருமான இலாபம் என்பவற்றை கணிக்க

விற்பனை 20000 அலகுகள்
நிலையான செலவு 60000 ரூபா
ஒரு அலகிற்கான விலை 10 ரூபா
ஒரு அலகிற்கான மாறும் செலவு 5 ரூபா


விடைகள்:

1. இலாபநட்டமற்ற புள்ளி (அலகு) $= \frac{60000}{10-5} =$ 12000 அலகு

2. இலாபநட்டமற்ற புள்ளி (பெறுமதி) = 12000 அலகு **X** 10 = 120000ரூபா
3. விற்பனை வருமானம் (20000X10) = 200000
4. கழி: மாறும் செலவு (20000X5) = (100000)

| | | |
|---|---|---|
| மொத்த பங்களிப்பு | = | 100000 |
| கழி: நிலையான செலவு | = | (60000) |
| இலாபம் **Profit** | = | 40000 |

BEP Chart




**இலாப அளவு வரைபு**

**Profit Volume chart**

இலாப அளவு வரைபடமானது இலாபநட்டமற்ற வரைபடத்திலிருந்து வேறுபட்டது. இது விற்பனைத் தொகை, இலாபம் என்பவற்றிற்கு இடையிலான தொடர்பையும் அல்லது பாதுகாப்பின் இறுதி எல்லையையும் இலகுவாக வெளிப்படுத்துகின்றது. இதுவும் "விற்பனை மாற்றத்திலான இலாபத்தாக்கத்தை வெளிப்படுத்துகின்ற வரைபடம்" என வரையப்படுகிறது.

இங்கு கிடையச்சு முன்னைய வரைபடங்களுக்கு வரையப்பட்டது போன்றே வரையப்படும். ஆனால் நிலைக்குத்தச்சு இலாபத்தை வெளிப்படுத்தும் இது மூலப்புள்ளிக்கு கீழே நட்டத்தை வெளிப்படுத்தும். ஒரு இலாபக் கோடானது பூச்சிய செயற்பாட்டு மட்டத்தில் நட்டத்திலிருந்து வரையப்படுகிறது. இது நிலையான கிரயத்திற்கு சமனாக இருக்கும். இங்க கிடையச்சை வெட்டும் புள்ளியே இலாபநட்டமற்ற புள்ளியாகும். கிடையச்சிற்கு மேற்பட்ட புள்ளியாவும் இலாபத்தை வெளிப்படுத்தும். மேற்காட்டப்பட்ட உதாரணத்தின்படி இலாப அளவு வரைபடமானது இவ்வாறு இருக்கும்.



| | |
|---|---|
| உண்மையாக விற்பனை செய்த அலகுகள் | |
| **Actual units sold** | 20000 |
| இலாபநட்டமற்ற புள்ளியில் அலகுகள் | |
| **Breakeven point units** | (12000) |
| மேலதிக விற்பனை செய்த அலகு | |
| **Extraunitsold** | 8000 |
| அலகு பங்களிப்பு | |
| **Unitcontribution** (10-5) ரூபா | 5 |
| மொத்த இலாபம் **Total Profit** ரூபா | 40000 |

❑ இலாப அளவு வரைபடத்தின் பிரதான அனுகூலம் யாதெனில் விற்பனை விலை, மாறும் செலவு நிலையான செலவு மாற்றும் விற்பனைக் கேள்வி என்பவற்றிலான ஏதேனும் மாற்றங்களினால் இலாபத்திலும் இலாபநட்டமற்ற புள்ளியிலும் ஏற்படும் தாக்கத்தை ஒன்றாக எடுத்துக் காட்டும் என்பதாகும்.

**பாதுகாப்பு எல்லை**

**The Margin of Safety**

❑ எதிர்பார்த்த விற்பனை மட்டத்திற்கும் இலாபநட்டமற்ற புள்ளிக்கும் இடையிலான வேறுபாடே பாதுகாப்பு எல்லை ஆகும். **(The Margin or Safety is the difference the expected level of sales and the breakeven point)** இலாபநட்டமற்ற புள்ளியினை விட ஒரு நிறுவனம் கூடுதலாக உற்பத்தி செய்து விற்பனை செய்யும் சந்தர்ப்பங்களில் இத்தகைய ஆகக்கூடிய விலை மட்டத்திற்கும் இலாபநட்டமற்ற புள்ளியில் உள்ள விலை மட்டத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு பாதுகாப்பின் இறுதி எல்லை எனப்படும்.

**பாதுகாப்பு எல்லை = எதிர்பார்த்த விற்பனை (அலகு)-இலாபநட்டமற்ற புள்ளி அலகுகள்**

**Margin of safety = Projected sales - breakeven point**

**உசாத்துணை நூல்கள்:-** ReferencesBooks

1. L. W. Jowler J.L. Brown - Wheldons Cost Accounting
2. T. Lucery - Costing
3. S. P. Arora T. S. Soni - Cost Accounting
4. Cima Revision kit (2004)
5. Cima Studry Pack (2004)
6. R.Yogendrajah - Cost Accounting

# அதென்ஸில் ஆரம்பித்த ஒலிம்பிக்..........

த. வசந்தன்
A/L 2005 Art's

| | | | | |
|---|---|---|---|---|
| 1896 | - | அதென்ஸ் | - | கிறீஸ் |
| 1900 | - | பாரிஸ் | - | பிரான்ஸ் |
| 1904 | - | செயன்டலூயி | - | வடஅமெரிக்கா |
| 1908 | - | லண்டன் | - | பிரித்தானியா |
| 1912 | - | ஸ்ரொக்கோம் | - | சுவீடன் |
| 1916 | - | பேர்லின் | - | ஜேர்மனி |
| 1920 | - | அண்ட்வர்ப் | - | பெல்ஜியம் |
| 1924 | - | பாரிஸ் | - | பிரான்ஸ் |
| 1928 | - | ஆம்ஸ்டாம் | - | ஒல்லாந்து |
| 1932 | - | லொஸ்ஏஞ்சல் | - | வடஅமெரிக்கா |
| 1936 | - | பேர்லின் | - | ஜேர்மனி |
| 1940 | - | டோக்கியோ | - | ஜப்பான் |
| 1944 | - | லண்டன் | - | பிரித்தானியா |
| 1948 | - | லண்டன் | - | பிரித்தானியா |
| 1952 | - | ஹெல்சிங்கி | - | பின்லாந்து |
| 1956 | - | மெல்ப்பரின் | - | அவுஸ்ரேலியா |
| 1960 | - | உரோம் | - | இத்தாலி |
| 1964 | - | டோக்கியோ | - | ஜப்பான் |
| 1968 | - | மெக்ஸிக்கோ | - | வடஅமெரிக்கா |
| 1972 | - | சஸிஸ்ச் | - | ஜேர்மனி |
| 1976 | - | மொன்ட்றீல் | - | வடஅமெரிக்கா |
| 1980 | - | மொஸ்கோ | - | சஸ்வியா |
| 1984 | - | லொஸ்ஒஞ்சல் | - | வடஅமெரிக்கா |
| 1988 | - | சியோல் | - | தென்கொரியா |
| 1992 | - | பாஸிலோனா | - | ஸ்பெயின் |
| 1996 | - | அட்லாண்டா | - | வடஅமெரிக்கா |
| 2000 | - | சிட்னி | - | அவுஸ்ரேலியா |
| 2004 | - | எதென்ஸ் | - | கிரேக்கம் |
| 2008 | - | பீயிங் | - | சீனா (நடைபெற உள்ளது) |

1ஆம் உலகமகா யுத்தத்தினால் 1916இலும், 2ஆம் உலகமகா யுத்தங்களினால் 1940, 1948இலும் ஒலிம்பிக் தடைப்பட்டது.

# விளையாட்டுக்கள்

## உதைபந்தாட்டம் [Foot Ball]

இவ்விளையாட்டு பிரித்தானியரால் கண்டு பிடிக்கப்பட்டது. பதினொராம் நூற்றாண்டில் மண்டை ஓடுகளே பந்தாக விளங்கின. காலில் மட்டும் உதைத்தாடும் தன்மை புட்பாலி என விளங்கி பின் உதைபந்தாட்டமாக அழைக்கப்பட்டது.உதைபந்தாட்டத்தின் நிலையமாக ஐரோப்பா உள்ளது. அங்கு 14 மில்லியன் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு வீரர்கள் உள்ளனர்.

## கிரிக்கெட் [Cricket]

'கிரிசி' என்ற ஆங்கிலச் சொல்லின் அல்லது 'கிரிக்கே' என்ற பிரெஞ்சு சொல்லில் இருந்து 'கிரிக்கெட்' பிறந்தது. பிரித்தானியாவில் 'லீவ்டு' என்ற கிராமத்திலேயே கிரிக்கெட் தோன்றி வளர்ந்து வந்தது. 1787இல் உருவாகிய எம்.சி.சி. கிரிக்கெட் சட்டநிர்வாகிகளுக்கும் பொறுப்பேற்றுள்ளது.

## ஹாக்கி [Hockey]

இவ்விளையாட்டு எங்கு தோன்றியது என நிச்சயமாகக் கூறமுடியாது. ஸ்விட்லாந்தில் ஆசியசிந்தி என்ற ஆட்டமும் அயர்லாந்தில் ஆசிய கர்வி என்ற ஆட்டமும் ஹாக்கி போன்ற அமைப்புள்ள ஆட்டங்கள். விக்கெட் என்ற பிரெஞ்சு சொல்லே ஹாக்கி என ஆங்கிலத்தில் கூறப்படுகிறது.

## ரெனிஸ் [Tennis]

இங்கிலாந்தைச் சேர்ந்த மேஜாவால்டர்ஸ்டன் விஸ்பில் 1893இல் டெனிஸ் ஆட்டத்தை கண்டுபிடித்தவர். இலத்தீன் சொல்லாகிய ரெனியியெட் என்ற சொல்லிருந்தும் கிரேக்கரால் கானனேஸி என்ற சொல்லில் இருந்தும் பிரெஞ்சுச் சொல்லின் ரென்ஸ்விலிருந்தும் தோன்றியது எனக் கூறப்படுகிறது.

# கண்ட நகர்வு

கோ.ஹம்சத்வனி
A/L 2006 Art's

பூவியில் காணப்படும் கண்டங்கள் தம்மிடம் விட்டு நகர்வடையும் செயன்முறையே கண்டநகர்வு ஆகும்.

ஆரம்பத்தில் சிறுசிறு துண்டுகளாக இருந்து பின்னர் ஒன்றிணைந்து தனிப்பெரும் கண்டமாகக் காணப்பட்டது எனவும் அத்தனிக் கண்டமே பஞ்சியா **(Pangeca)** என அழைக்கப்பட்டது என அண்மைக்கால ஆய்வு முடிவுகள் மூலம் அறிய முடிகிறது. இக்கண்ட நகர்வுத் தன்மையினை விளக்குவதற்காக 1912ஆம் ஆண்டு அல்பிரட் வெகினர் **(Alprad Wegener)** என்பவரினால் முன்வைக்கப்பட்ட கருத்தே கண்ட நகர்வுக் கோட்பாடு ஆகும். இவர் இப் பஞ்சியா நிலத்திணிவில் வடஅமெரிக்கா, ஐரோப்பா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, அத்தாட்டிக்கா, தென் அமெரிக்கா முதலிய பெருங்கண்டங்கள் ஒன்றிணைந்து இருந்ததாலேயே அப்பெயர் பெற்றதாகவும் விளக்கியுள்ளார்.

பஞ்சியா நிலத்திணிவின் வடபகுதி **Angaraland** (அங்கர்லாந்து) எனவும் தென் பகுதி கொண்டுவனாலாந்து **(Gonduvahland)** எனவும் அழைக்கப்பட்டது. வட,தென் கண்டங்களுக்கிடையே காணப்பட்ட கடற்பகுதி **Tetheys** (தெத்தீஸ்) எனவும் அழைக்கப்பட்டது. இப் பஞ்சியா நிலத்திணிவைச் சூழ்ந்து காணப்படும் பாரிய சமுத்திரம் **Panthalassa** எனவும் அழைக்கப்பட்டது.

அல்பிரட் வெகினர் இக் கண்டநகர்வுக் கோட்பாட்டினை முன்வைக்கும் போது கண்டங்கள் ஒன்றிணைந்து தோன்றிய பஞ்சியா நிலத்திணிவிலிருந்து காலப்போக்கில் படிப்படியாகக் கண்டங்கள் பிரிவடைந்து நகர்வுக்குள்ளாகி இன்றைய உலகின் இட அமைவுத் தன்மையினைப் பெற்றுள்ளதாக மேலும் விளக்கிமளித்துள்ளார். வெகினர் தனது கண்டந்நகர்வுத் கருத்தினை விளக்குவதற்குப் பின்வரும் ஆதாரங்களைப் பயன்படுத்தியுள்ளார்.

**புவிச்சரிதவியல் ஆதாரம்:**

இன்றைய உலகில் காணப்படும் இளம் மடிப்ப மலைகள் கண்ட நகர்வினாலேயே தோன்றின.

**Eg:** அமெரிக்காக்கள் மேற்குச்சார்ந்து நகர்ந்த போது பசுபிக்கின் அடையல்கள் மேலுயர்த்தப்பட்டதாலேயே மேற்குக் கரையோர மலைத்தொடர்களான றொக்கி, அந்தீஸ் மலைத்தொடர்கள் தோன்றினதென்றார். தென் அமெரிக் காவில் காணப்படும் பளிங்குப்படைப்பாறைகள் ஆபிரிக்காவிலும் காணப் படுகின்றன.

**புவிப்பௌதீகவியல் ஆதாரம்:**

சீயல், சீமா, கோளவகம் ஆகியவற்றில் காணப்படும் அடர்த்தி வேறுபாடுகளின் அடிப்படையில் கண்டங்கள் நகர்வடைவதாக வெகினர் எடுத்துக்காட்டியுள்ளார்.

**உயிர்ச்சுவட்டியல் ஆதாரம்:**

ஒரு கண்டத்தில் காணப்படும் உயிரினங்களின் உயிர்ச்சுவடுகள் ஏனைய கண்டங்களிலும் காணப்படுதல்

Eg: தென் அமெரிக்காவிலும் ஆபிரிக்காவிலும் ஒரே வகை உயிர்ச்சுவடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை.

**காலநிலையியல் ஆதாரம்:**

அயனமழைக் காலநிலைப் பிரதேசங்கள் சிதறிக் காணப்படுவதற்கு கண்டநகர்வே காரணமென்றார்.

**இடவிளக்கவியல் ஆதாரம்:**

இன்றைய கண்டங்களின் விளிம்புகள் ஒன்றோடொன்று பொருந்துதல்

Eg: அமெரிக்காக்களையும் ஐரோப்பா, ஆபிரிக்காவையும் ஒன்றிணைக்கும் போது ஆபிரிக்கா மெக்சிக்கோ வளைகுடாவினள் பொருந்த தென் அமெரிக்கா ஆபிரிக்காவின் கினி வளைகுடாவினுள் பொருந்துகிறது.

இத்தகைய ஆதாரங்களின் அடிப்படையில் அடர்த்தி, பெருக்குவிசை ஆகியவற்றின் மூலம் தாக்கப்பட்டுக் கண்டங்கள் நகர்வடைவதாக வெகினர் விளக்கியுள்ளார்.

உசாத்துணை நூல்:

**சுற்றாடற் புவியியல்:-**

**கலாநிதி க. குணராசா**

# ஈழமும் தமிழ் இலக்கணமும்

க. கிரியா
A/L 2006 Art's

தமிழ் மொழியின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத பல துறைகளின் ஈழநாட்டுப் பெரியாரே தமிழ் நாட்டவருக்கு வழி காட்டியிருக்கின்றனர். தமிழ்நாடு தமிழின் உயர்வினை மறந்த காலங்களில் அதனை நினைவூட்ட ஈழத்திலிருந்தே அறிஞர் தோன்றினர். இவர்களுள் பலர் புதிய இலக்கண நூல்கள் எழுதியும் பழைய இலக்கண நூல்களைப் பதிப்பித்தும் சிறந்த தொண்டாற்றினர்.

ஒரு மொழிக்குச் சிறப்புக் கொடுப்பது இலக்கணம். வயலுக்கு வரம்பு எவ்வாறு இன்றியமையாததோ குளத்திற்கு அணைக்கட்டு எவ்வாறு அவசியம் தேவைப்படுகின்றதோ அவ்வாறே மொழிக்கும் இலக்கணம் இன்றியமையாதது ஆகின்றது. இலக்கணம் இல்லாதவிடத்து மொழி சிதைந்து அழகு குன்றிச் சீர்கெட்ட நிலையை ஏற்படுத்தும் ஆகவே தான் இலக்கணம் ஒரு மொழிக்கு முதுகெலும்பு போலக் கருதப்படுகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே வாழ்ந்த ஈழத்துப் பேரறிஞர் பலர் இதனை நன்குணர்ந்திருந்தனர். தமிழ்மொழி சீர்குலையாமல் இருப்பதற்குத் தமிழ் இலக்கண நூல்கள் சிலவற்றை அச்சுவாகனம் ஏற்றி அவற்றை மக்களுக்குப் பயன்படும் வண்ணம் செய்வதற்குப் பலர் முன்வந்தனர். அவர்களிலே தலை சிறந்தவர் சி. வை. தாமோதரம்பிள்ளை.

இலக்கண நூல்களைப் பொது மக்கள் கற்க மாட்டார்கள். அந்த நூல்கள் விலை போவது மிகக்குறைவு எனினும் தமிழ்மொழி மேலுள்ள பற்றினால் குடந்தையில் வழக்கறிஞராக இருந்த போது அச்சிடப்பெறாத அருமையான பழந்தமிழ் நூல்கள் பலவற்றை தேடிப் பெற்றார். பனையோலைச் சுவடிகள் நீர் மறைந்து கிடந்தன. இந்நிலையைக் கண்ணுற்று உள்ளம் துடிதுடித்து அவர் கூறுகின்றார்.

"ஏடு எடுக்கும் போது ஓரம் சொரிகிறது. கட்டு அவிழ்க்கும் போது இதழ் முடுகிறது. ஒற்றை புரட்டும் போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது. இனி எழுத்துக்களோ வாலும் தலையுமின்றி நாலு புறமும் பாணக் கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது."

மேலும் அவர் நூல்களின் நிலை பற்றிக் கூறுகிறார். பழைய சுவடிகள் யாவும் கீலமாய் ஒவ்வொன்றாய் அழிந்து போகின்றன. புது ஏடுகள் யாவும் சேர்த்து அவற்றை எழுதி வைப்பாரும் இல்லை. துரைத்தனத்தாருக்கு அதன் மேல் இலட்சியமில்லை. சரஸ்வதியைத் தம்பால் வகிக்கப்பெற்ற வித்து வான்களை அவள் மாமி எட்டியும் பார்க்கின்றாளில்லை. திருவுடையீர்! நுங்கருணை இந்நாள் தவறினால் பின்பு தவம் புரிந்தாலும் யானை வாய்ப்பட்ட விளாம்பழத்தைப் பின் இலண்டத்துள் எடுத்துமென்? ஓடன்றே கிட்டுவது! காலத்தின் வாய்ப்பட்ட ஏடுகளைப் பின் தேடி எடுப்பினும் கம்பையும் நாராசமுந் தான் மீளும்.

எத்தனையோ திவ்ய மதுர கிரந்தங்கள் காலாந்தரத்தில் ஒன்றன் பின் ஒன்றாய் அழிகின்றன சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில்லையோ? ஆச்சரியம்! ஆச்சரியம்! அயலான் அழியக் காண்கிலும் மனந்தளம்புகின்றதே! தமிழ்

மாது நம் தாயல்லவா? இவள் அழிய நமக்கென்னவென்று வாளா இருக்கின்றீர்களா? தேசாபிமானம் மதாபிமானம், பாஷாபிமானம் என்று இவை இல்லாதோர் பெருமையும் பெருமையாகுமோ? இதனைத் தலை கூர்ந்து சந்திப்பீர்களாக.

இவ்வாறு உள்ளங் கொதித்து ஆவேசத்துடன் கூறுகின்றார் சி.வை.தாமோதரம்பிள்ளை. இது வரை எவரும் எட்டியும் பாராததுறையிற் பணியாற்ற முன் வந்தார். தன்னந் தனியராய்ப் பழைய தமிழ் இலக்கணப் புதையலைத் தமிழ் மக்களுக்கு அகழ்ந்தெடுக்கும் அரும்பணியில் ஈடுபட்டார். இச்சேவையில் ஏற்பட்ட இடைஞ்சலுக்கோ குறைவில்லை. இலக்கண ஏட்டுப் பிரதிகளைப் பெறுவது மிகவும் கடினமாய் இருந்தமையாற் பலர் வீடுகள் தோறும் சென்று பிரதிகள் தேட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஏடுகளை வைத்திருப்போரிடம் அவற்றைப் பெறுவது இன்னும் கடினமாய் இருந்தது.

ஏட்டுப் பிரதிகளை ஒப்பு நோக்கி ஆராய்ந்து பிழைகளை அகற்றிப் பிரதி செய்வது பொறுப்பாக இருந்தது. மேலும் அக்காலத்தில் நூல்களைப் பதிப்பதற்கு அதிக பணம் தேவைப்பட்டது. இன்றுபோல் அக்காலத்தில் நூல்களைப் பெற்று வெளியிடும் பதிப்பகங்கள் கிடையாது. அத்துடன் இவ்வளவு இடையூறுகளையும் தாண்டி நூலைப் பதுப்பித்தாலும் அதனைப் பாராட்டுவோர் இல்லை. இகழ்ந்து கூறப்பலர் முன்வரிசையில் நின்றனர். இத்தகைய தடைகள் எதிர்ப்பட்ட போதும் தாமோதரம்பிள்ளை அவர் மனந்தளரவில்லை.

அளபெடைபோலி எழுத்து என்பன எழுத்ததிகாரப் பதிப்பகத்திலும் தொல்காப்பியச் சூத்திரப் பொருளாராய்ச்சி பிறிது பிறிதேற்றல் ஆறனுருபு பிறிதேற்றல் இருபெய ரொட்டாகு பெயரும் அன் மொழித்தொகையும், ஈழமும் தமிழ் இலக்கணமும் தொகையும் தொகைநிலை என்பன சொல்லதிகாரப் பதிப்பிலும் சிறு பொழுதாராய்ச்சி என்பது பொருளதிகாரப் பதிப்பிலும் சேர்க்கப்பட்டுள்ளன. ஈழத்துப் பெரியார்கள் இலக்கண நூல்களைப் பரிசோதித்துப் பார்ப்பதோடு நில்லாது இலக்கண நூல்களும் எழுதினார். பழங்காலத்து இலக்கண நூல்கள் வடமொழியில் பண்பைப் பின்பற்றிச் சூத்திரங்களினால் இயற்றப்பட்டவை ஆகும்.

சுன்னாகத்துக் குமாரசாமிப் புலவர் நடவாமடி சீ. முதலாக நன்னூலர் வகுத்துக் கூறிய இருபத்து மூன்றினுள்ளும் நன்னூலர் அடங்கிய வினைப் பகுபதங்களுக்கும் அவற்றின் அடியாகப் பிறந்த பெயர்களைப் பகுபதங்களுக்கும் பகுதி விகுதி முதலிய உறுப்புக்களைப் பகுத்துக் காட்டி அச்சிட்டு வெளியிட்டார். இந்நூலின் பொருள் அமைப்புச் சிறந்ததாகப் பாராட்டப்படுகின்றது.

பன்மொழி அறிஞரும் தமிழ் மொழியே உலகம் தோன்றிய போது உண்டான மொழியாகும். இலக்கியத்திற்கு சிறப்பாக பழைய இலக்கியத்திற்குச் சிறந்த உரை எழுதுவோர் ஆழ்ந்த இலக்கண அறிவு படைத்தவராக இருத்தல் வேண்டும்.

# இன்றைய சமுதாயத்தில் திரைப்படங்களின் நிலை

உ. தர்சிகா
A/L 2006 Art's

இவ்வுலகிலுள்ள ஆறறிவு படைத்த ஜீவன்களான மனிதர்கள் தமது வேலை நேரம் தவிர்ந்த ஏனைய ஓய்வு நேரங்களைக் கழிப்பதற்காக விஞ்ஞானத்தின் விந்தை மூலமாக நவீன உலகிற்கு இணையற்ற சாதனங் களை உருவாக்கி உள்ளனர். அவ் வகையில் தொலைக்காட்சியானது திரைப்படங்களைக் கண்டு கழிப்பதற்கு பயன்படுகின்றது. இத்திரைப்படங்கள் தற்காலத்தில் சமூகத்தில் என்ன நிலையில் இன்று உள்ளதென நோக்கு வோம்.

தமிழ் திரைப்படங்கள் தற்போது ஆங்கிலச் சொல்லில் அமைந்து காணப்படுகின்றன. அது மட்டுமன்றி கதாநாயகன் கதாநாயகியர் ஆபாச மாகவும் எமது நாட்டு மக்களைக் கெடுப்பதற்காகவும் இவ்வாறான அரை குறை உடுப்புக்களை அணிந்து நடித்து மக்களைத் தங்கள் பக்கம் ஈர்க்க வைக்கின்றார்கள். இதுவே சமூக கலாச்சார சீர்கேடுகள் ஏற்பட வழிவகுக் கின்றது. இவர்கள் தமிழ் பண்பாட்டிற்கு அப்பாற்பட்ட உடைகளை அணிந்திருக் கின்றார்கள்.

இது மட்டுமன்றி கதாநாய கியர்களிற்கு தலையலங்காரங்களும் மேலைத் தேய முறையில் செய் கின்றனர். இவற்றை கண்டு கழித்த இளைய தலைமுறையினரும் அதனைப் பின்பற்றத் தொடங்குகின்றார்கள். நடிகர்கள் பேசும் கொச்சைத் தமிழை யும் இன்றைய இளைஞரும் யுவதி களும் பேசி மகிழ்கின்றனர். தற்காலத் திரைப்பட பாடல்களும் இரசம் நிறைந்த பாடல்களாகவும், ஆபாசக் காட்சிகளு மாகவும் காணப்படுகின்றன. அது மட்டுமன்றி தமிழ்ப் பாடல்களில் ஆங்கிலம் மற்றும் பிறமொழிகளும் கலந்து காணப்படுகின்றது.

மற்றும் சில திரைப்படங்கள் நல்ல குடும்பக்கதைகளாகும். நல்ல கதைக் கருவையும் உடையனவாகவும் மக்களிற்கு படிப்பினையுடைய திரைப் படங்களாகவும் தத்துவக் கருத்துக்கள் இனிய இசை, மனதை வருடிச் செல்லும் சந்தம் என்பனவற்றையுடைய பாடல்களும் உடையன. இன்றைய காலத்தில் மக்களிற்கு நன்மை பயக்கக்கூடிய திரைப்படங்களும் காணப்படுகின்றன.

இவ்வாறாக மக்களிற்கு நன்மை பயக்கக்கூடிய விடயங்களும் இன்றைய சினிமாவில் காணப்படுகின்றது. இதனை விட மக்களிற்குத் தீமை பயக்கக்கூடிய விடயங்களும் எத்தனையோ வழிகளில் மக்களிற்கு வந்து சேருகின்ற போதிலும் திரைப்படம் அதாவது சினிமாவின் மூலமாக எல்லாம் ஒட்டுமொத்தமாக வந்து சேருகின்றன. இந்த சினிமாத் திரைப்படங்கள் மூலமாக சமூகத்தில் பல சீர்கேடுகள் நிலவி வருகின்றன. அவற்றை தினமும் பத்திரிகை வாயிலாக நாம் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

எமது சமுதாய மக்களிற்கு நல்ல விடயங்கள் போய்ச் சேர்வதற்கு முன்பு பல தீய பழக்கங்கள் போய்ச் சேர்ந்து விடுகின்றன. பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்கள் யாரை எடுத்துப்பார்த்தாலும் எல்லோரும் தொலைக்காட்சியைப் பார்ப்பவர்கள். அவர்கள் தொலைக்காட்சியில் போடும் திரைப்படங்களைப் பற்றியே கதைத்துக் கொண்டு இருப்பார்கள். இவர்கள் படிக்கும் நேரத்தை தவறவிட்டு

படங்களைப் பார்த்துக் கொண்டிருக் கின்றார்கள் இதனால் மாணவர்கள் பெரும் பிரச்சினையை எதிர்கொள்ளு கிறார்கள்.

இதனைவிட பொது இடங்களி லும் வேலைத்திட்டங்களிலும் அரசநிறு வனங்களிலும் மக்கள் திரைப்படங் களைப்பற்றித் தான் பேசிக்கொண்டு இருப்பார்கள். திரைப்படங்களைப் பார்த்துவிட்டு பஸ் வண்டியில் பயணம் செய்து கொண்டிருக்கும் பெண்களும் ஆண்களும் பெண்களை ஆண்கள் இடித்து விழுத்துகின்றார்கள். இவ்வாறு பல சமூக சீர்கேடுகள் எமது சமுதாயத் தில் நிலவி வருகின்றதை நாம் எமது கண்களினூடாகவும் காதுகளினூடா கவும் பார்த்து, கேட்டு வருகின்றோம்.

மக்கள் அன்னத்தைப் போல அதாவது அன்னமானது ஒரு பாத்திரத்தில் தண்ணீரையும் பாலையும் ஒன்றாய் ஊற்றி வைத்தால் அன்னம் தண்ணீரைத் தவிர்த்து விட்டு பாலைக் குடிக்கும். ஆனால் எமது மக்கள் என்றால் எமது பயன்பாட்டில் உள்ள அரிப்பின் மாதிரி நல்லவற்றை எல்லாம் விட்டுவிட்டு கூடாதவற்றை எடுத்து அதன்படி நடப்பார்கள். இவ்வாறு பல வழிகளில் திரைப்படங்கள் எமது மக்களிடையே வந்து சேர்ந்து இருக்கின்றது. அரிப்பின் மாதிரி இல்லாமல் அன்னம் மாதிரி எமது மக்கள் இருக்க வேண்டும்.

## பொது அறிவு

※ 26-12-2004இல் இடம்பெற்ற "**சுனாமிப்**" பேரலை (கடல்) காரணத்தினால் அதிகம் பாதிப்பிற்குட்பட்ட நாடு எது?
**இந்தோனேசியா**

※ 2005ஆம் ஆண்டு சார்க் உச்சிமகாநாடு நடைபெறவுள்ள நாடு எது?
**வங்களாதேசம்**

※ அண்மையில் காலமான கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர் யார்?
**இரண்டாவது அருளப்பர் சின்னப்பர்**

※ 2005ஆம் ஆண்டு ஒக்கார் விருதினைப் பெற்று கொண்ட திரைப்படம் எது?
**த மில்லியன் டொலர் பேபி**

※ உலகின் மிகச்சிறிய அரசு எது?
**வத்திக்கான்**

※ இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் பிறந்த நாடு எது?
**போலந்து**

※ இலங்கையில் சுனாமி ஆழிப்பேரலையால் மிகவும் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டம் எது?
**அம்பாறை**

※ 2008ஆம் ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டி நடைபெறவுள்ள நாடு எது?
**சீனா**

※ ரஷ்யா நாட்டின் சட்ட முறை நாணயம் எது?
**ரூபிள்**

# தொடர்பூடகங்களில் பெண்கள்

இ. அனுஷா
A/L 2006 Art's

இன்று தொடர்பூடகங்கள் எனும் போது எம் நினைவில் தோன்றுபவை பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி, சினிமா, வீடியோ, கணனி என்பனவாகும். இவை சமூகத்தின் சமகால வாழ்வியலை, சமூகத்தின் கருத்தை சித்திரிக்கும், வெளிக்கொணரும் குறிகாட்டிகளாக அமைகின்றன. அத்துடன் இவ்வூடகங்கள் கொண்டு வரும் செய்திகள், நிகழ்ச்சிகள், சித்தரிப்புக்கள் சமுதாயத்தின் அன்றாட வாழ்க்கைப் போக்குகளை பிரதிபலிப்பனவாக அமைவதால் இவ்வூடகங்கள் பயனாளிகள் மத்தியில் பெரும் செல்வாக்கு உடையனவாக உள்ளன.

இத்தொடர்பு சாதனங்களும் அவற்றின் உள் அடக்கங்களும் மேலை நாடுகளின் தாக்கத்தினால் மாற்றம் அடைந்தபோதும் பெண்கள் பற்றியதான சித்திரிப்பில் மாற்றம் ஏற்படவில்லை. அதாவது இவற்றினூடாக பெண்களின் சுயத்தை மறுதலிக்கும் தன்மையே காணப்படுகிறது. குறிப்பாக விளம்பரங்களிலே பெண்கள் பாவனைப் பொருட்களாக, கவர்ச்சிப் பொருட்களாக, விற்பனைப் பண்டங்களோடு விளம்பரப்படுத்தப்படுகின்றார்கள். சஞ்சிகைகள் விளம்பரப் பலகைகள், சுவரொட்டிகள், திரைப் படங்கள் போன்றவற்றில் பெண்கள் பற்றிய யதார்த்தங்களில் இருந்து விடுபட்ட தரக்குறைவான படிமப்படுத்தப்பட்ட ஆண்நிலைக் கற்பனைச் சித்தரிப்புக்களே இடம்பெறுகின்றன. இச்சித்தரிப்புக்கள் மாநகரில் இருந்து சேரிப்புறம் வரை கொண்டு செல்லப்படுகின்றன.

**தொலைக்காட்சி:**

அண்மையில் மிகக்குறுகிய கால கட்டத்துள் வளர்ச்சி அடைந்து வந்துள்ள தொலைக்காட்சி ஊடகம் கூட பெண்களைப் பற்றித் தவறான சித்திரிப்பையே கொண்டுள்ளது. அதாவது அடங்கிப் போகும் பெண்களையும், வீட்டுப்பணிகளில் ஈடுபட்டிருக்கும் பெண்களையும், கவர்ச்சியாக உடல் காட்டி நிற்கும் பெண்களையுமே தொலைக்காட்சி விளம்பரங்கள் வெளிக்காட்டி நிற்கின்றன. அத்துடன் ஆண்களின் உபயோக பொருட்களுக்கான விளம்பரங்களிலும் பெண்களே அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றனர். விளம்பரங்களில் பெண் இலட்சிய மனைவியாக, தாயாக அல்லது வீட்டு வேலை செய்பவளாக சித்தரிக்கப்படுகின்றாளேயொழிய உயர்நிலையாக சித்தரிக்கப்படுவதில்லை. உதாரணமாக அங்கர், நெஸ்பிறே போன்ற பால்மா தயாரிப்புக்களில் பெண் சிறந்த தாயாகவே சித்தரிக்கப்படுகிறாள்.

இதனை விட விளம்பரங்களில் காட்டப்படும் பெண், மெல்லியதான, பளபளப்பான, அழகான, ஆரோக்கியமான உடலமைப்பு வரையறைகளைக் கொண்ட இலட்சியப் பெண்ணாகவே இருக்கிறாள். இங்கு இலட்சிய உடல் வாகு என்பது பாலியல் கவர்ச்சியை காட்டுகிறது. இச் செயற்பாடு பெண்களை மேன் நிலையை அடையச் செய்வதற்கு பதில் இழி நிலைக்குத் தள்ளுகிறது. இது பற்றியதான யுனெஸ்கோ அறிக்கை ஒன்றில் விளம்பரங்களில் வருகிற பெண்கள் எப்போதுமே இளமையானவர்களாகவும் கவர்ச்சிகரமாகவும் இருக்கின்றனர். பல சந்தர்ப்பங்களிலும் அவர்கள் கவர்ச்சிப்

பொருட்களாக மட்டுமே காண்பிக் கப்படுவது தவிர அறிவு ஜீவிகளாக காண்பிக்கப்படுவதில்லை. அறிவு ஜீவிகளாக இருப்பது ஆண்களாகவே நினைக்கத் தூண்டுகின்றது எனக் குறிப்பிடலாம்.

**பத்திரிகைகள்:**

பத்திரிகைகளில் பெண்களுக் காக ஒதுக்கப்படும் பக்கங்கள் பின்வரும் தன்மைகளின் அடிப்படையில் காணப்படுகின்றன.

1. முற்றுமுழுதான சமையல் குறிப்பு
2. அழகுக் குறிப்பு
3. அரைகுறை ஆடைகளை அணிந்து வெளிப்படுத்தும் பெண்களின் படம்
4. வீட்டை நிர்வகிப்பதற்கான ஆலோசனைகள்

இத் தலைப்புகளினூடாக வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள் கூட ஓர் ஆணைத் தன்பால் ஈர்த்து வைத்திருப் பதற்கான வழியையே கூறுகின்றன.

இன்று திருமணம் சொர்க்கத் தில் நிச்சயிக்கப்படுகின்றது என்பதற்குப் பதிலாக பத்திரிகைகளினூடாக நிச்சயிக்கப்படுகின்றது.

(மணமகள் தேவை விளம்பரப்பகுதி)

**சினிமா:**

சினிமாவானது பொழுது போக்கை மட்டும் நோக்காகக் கொண்ட ஓர் ஊடகமாகும். இதில் பெண்ணைக் கவர்ச்சிப் பொருளாக ஆபாச இலக்காக காட்டி வியாபார இலாபங்களை பெறும் தன்மை சினிமாவில் அதிகரித்துள்ளது. இச்சாதனங்களினூடாக வெளிவரும் சண்டைக்காட்சிகள் கேலிகள் பாலியற் செயற்பாடுகள் என்பன இன்று சிறியோர் தொடக்கம் பெரியோர் வரை பாதிக்கும் தன்மையைக் கொண்டுள்ளன. இது சமூகத்தை அதிகளவு பாதிக்கின்றது. எனவே இத்தொடர்பு சாதனங்கள் பெண் விம்பங்களையும் இலட்சியப் பெண் பாத்திரங்களையும் உருவாக்குவதோடு மட்டுமல்லாமல் பாலியல் கவர்ச்சி உடைய கட்டங்கள், பலாத்கார வன் முறைக் காட்சிகள் என்பனவற்றைக் காட்டுவதன் மூலமாக வன்முறை உணர்வை தூண்டிவிடுகின்றன. மேலும் இளைஞர்களையும் யுவதிகளை யும் ஒரு கற்பனை உலகில் சஞ்சரிக்கச் செய்து விடுகின்றன. இங்கு நடைமுறை வாழ்வு ஒன்றாகவும் ஊடகங்களில் வரும் செய்தி வேறொன்றாகவும் இருக்க இளைஞர் மத்தியில் பகற்கனவே அதிகரித்துள்ளது.

பொதுவாக ஊடகங்கள் பெண் பற்றிய பாரபட்சம் காட்டப்பட்ட போதும் சில ஊடகங்களில் பெண்கல்வி, வேலைவாய்ப்பு, பெண் மேம்பாடு போன்ற சிறந்த விடயங்களும் கூறப்பட் டுள்ளன. சினிமாவினூடாகவும் பெண் பற்றியதான புரட்சிகரமான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

எனவே பெண்ணானவள் மேம் பாடு அடைவதற்கு மாதர் அபிவிருத்திச் சங்கமோ மகளிர் அமைப்புக்களோ தமது சேவை வழங்கினாலும் கூட ஊடகங்களில் பெண்கள் பற்றியதான நல்ல சித்திரிப்பு வெளிவர வேண்டும். அப்போது தான் சமூகம் அவளை நற்கண்ணுடன் நோக்கும். அத்துடன் ஊடகங்களில் வரும் கருத்துக்களை ஒவ்வொருவரும் விமர்சனரீதியாக நோக்குதல் வேண்டும். பெண்களைப் இழிவுபடுத்தி வரும் இதழ்கள் நிராகரிக் கப்படுவதால் அல்லது பெண்களை பயன்படுத்தும் முறையில் மாற்றம் கொண்டு வருவதன் ஊடாகப் பெண் களையும் ஒரு சமூகப் பிராணியாக ஏற்றுக்கொள்ளும் நிலை ஏற்படும்.

# அண்மைக்காலத் தமிழக இலக்கிய வரலாற்றாசிரியர்களால் இருட்டடிப்புச் செய்யப்படும் பேராசிரியர் வி. செல்வநாயகம்

ம.பா. மகாலிங்கசிவம்

**1. இலக்கிய வரலாறு என்றால் என்ன?**

இலக்கிய வரலாறு என்பது இலக்கியத்தினது வரலாறு, இலக்கியத்தின் வழி வரலாறு என இருவகையிற் பொருள் கொள்ளப்படுகிறது.

இவற்றுள் இலக்கியத்தினது வரலாறு என்பது இலக்கியங்களைக் காலவரன்முறையில் ஒழுங்குபடுத்தி அவற்றின் உருவம், உள்ளடக்கம், என்பவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள், பண்புகள் என்பவற்றைக் கூறுவதாகும்.

"இலக்கியத்தின் - இலக்கிய வகையின் தோற்றம், பின்புலம், வளர்ச்சி, மாற்றம், படைப்பாளர், இலக்கியநலம், பின் தோன்றலுக்கு வழிகாட்டிய நிலை எனப் பல்வேறு கூறு களையும் உள்ளடக்கிய காலமுறைமையில் ஒழுங்குபடுத்தித் தருவது இலக்கிய வரலாறு"[1]

என முனைவர் சா. சவிரிமுத்து கூறுவது இலக்கியத்தினது வரலாறு என்றால் என்னவென்பது பற்றிய மேலதிக விளக்கத்தைத் தருகிறது.

இலக்கியத்தின் வழி வரலாறு என்பது இலக்கியங்களினூடாகத் தெரியவருகின்ற சமூக வரலாற்றை அறிவதாகும். கல்வெட்டுக்கள், செப்பேடுகள், இலச்சினைகள் போன்றவற்றை ஆதாரமாகக் கொண்டு எவ்வாறு ஓர் இனத்தினது வரலாற்றை அறிகிறோமோ அவ்வாறே இலக்கியங்களும் இதற்கு ஆதாரமாகக் கொள்ளப்படும்.

"ஒரு நாட்டினது அன்றேல் ஒருமொழிக் கூட்டத்தினரின் வரலாற்றை அவர்களது இலக்கியத்தின் வழியாகப் பார்க்கும் பயில்துறையை இத்தொடர் (இலக்கியத்தின் வழி வரலாறு என்னும் தொடர்) குறிக்கிறது"[2]

என்பர் பேராசிரியர் கா. சிவத்தம்பி.

தமிழில் இன்றுவரை எழுதப்பட்ட இலக்கிய வரலாற்று நூல்களில் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் தமிழில் இலக்கிய வரலாறு தவிர்ந்த ஏனைய பெரும்பாலான நூல்கள் இலக்கியத்தின் வரலாறுகளாகவே உள்ளன.

**2. தமிழிலக்கிய வரலாற்றுக்கு ஈழத்தவரின் பங்களிப்பு:**

தமிழிலக்கிய வரலாற்று நூல்களுக்குக் கால்கோள் செய்த பெருமை ஈழத்தவரையே சாரும். 1859இல் ஈழத்தவரான சைமன் காசிச்செட்டியாரால் எழுதப்பட்ட **The Tamil Plutarch** (தமிழ்ப்புலவர் சரித்திரம்) என்னும் நூலே இவ்வகையிலான முதன் முயற்சி ஆகும். இந்நூலே தமிழ் இலக்கிய வரலாற்றின் தோற்றுவாயாக அமைந்தது. இதனையடுத்துத் தமிழகத்தைச் சேர்ந்த வீராசாமிச் செட்டியாரின் 'விநோதரசமஞ்சரி' 1876இல் நூலாக்கம் பெற்றது. இந்நூலில் இலக்கிய வரலாற்றுக்குரிய சில அம்சங்கள் காணப்பட்ட போதும் இதனை முழுமையான இலக்கிய வரலாற்று நூல் எனக் கொள்ளலாமா என்பது ஐயத்திற்குரியதாகும்.

இதன் பின்னர் ஈழத்தவரான ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளையின் "பாவலர் சரித்திர தீபம்" 1886இல் வெளியிடப்பட்டது. இந்நூலில் 410 தமிழ்ப்புலவர்களின் வரலாறு அகரவரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்டுக் கூறப்படுகிறது. 1904இல் வெளியிடப்பட்ட மல்லாகம் வி. கனகசபைப்பிள்ளையின் **"Tamils Eighteen Hundred Years Ago"** (1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்) என்னும் நூலும் குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

இதே வேளை தமிழிலக்கிய வரலாற்றின் முழுக்காலப் பகுதியையும் பெரும்பாலும் ஆட்சிக்காலங்களின் தலைப்பில் ஆராய்வதாக ஈழத்தவரான பேராசிரியர் வி. செல்வநாயகத்தின் 'தமிழ் இலக்கிய வரலாறு' 1951இல் வெளியிடப்பட்டது. அவர் தமிழ் இலக்கிய வரலாற்றை ஏழு காலக்கட்டங் களாக வகுத்து ஆராய்ந்தார்.

முதலிரு காலகட்டங்களும் முற்காலத்தில் தமிழ் வளர்த்த சங்கம் என்னும் நிறுவனத்தை அடிப்படை யாகக் கொண்டமைய, ஏனையவை அவ்வக்காலங்களில் ஆட்சி செய்த ஆட்சியாளர்களின் பெயர்களில் அமைந்தன.

1. சங்ககாலம் (கி.பி.1ஆம் நூ.ஆ. - கி.பி. 3ஆம் நூ.ஆ.)
2. சங்கமருவிய காலம் (கி. பி. 3 - கி. பி. 6)
3. பல்லவர் காலம் ( கி. பி. 6 - கி. பி. 9)
4. சோழர் காலம் (கி. பி. 9 - கி. பி. 14)
5. நாயக்கர் காலம் (கி. பி. 14 - கி. பி. 18)
6. ஐரோப்பியர் காலம் (18, 19ஆம் நூ. ஆ.)
7. இருபதாம் நூற்றாண்டுக்காலம்

என்பனவே அவரது காலப் பிரிவுகள் ஆகும். இன்றும் பெரும்பாலா னோரால் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு காலப்பகுப்பாக இது உள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

இவற்றுடன் இலக்கியப் பாடு பொருள்களின் அடிப்படையிற் காலப் பகுப்பை மேற்கொண்ட ஈழத்தவரான பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையின் "தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்" என்னும் நூலும், மார்க்சியப் பின்னணியில் சமூக உருவாக்கக் கருத் துக்களின் அடிப்படையிற் காலப்பாகு பாட்டை மேற்கொண்ட பேராசிரியர் கா. சிவத்தம்பியின் "தமிழில் இலக்கிய வரலாறு" என்னும் நூலும் தமிழிலக் கிய வரலாறு எழுதுகையில் முக்கி யத்துவம் வாய்ந்தனவாகவே அமைந் தன.

**3. பேராசிரியர் வி. செல்வநாயகம் இருட்டடிப்புச் செய்யப்படல்:**

பேராசிரியர் வி. செல்வநாயகத் தின் நூல் அது வெளிவந்த காலத் திலும், அதன் பின்னரும் தமிழகத்தில் மிகுந்த மதிப்புக்குரியதொன்றாகவே கருதப்பட்டது. இதற்குப் பல ஆதா ரங்கள் உள்ளன.

"இலங்கையைச் சேர்ந்த செல்வநாயகம், ஆட்சிக் காலங்களின் தலைப்பில் அரிய இலக்கிய வரலாறு படைத்தார்கள்"[3] என முனைவர் ச. மெய்யப்பன் 1975இல் வெளிவந்த சோம. இளவரசின் இலக்கண வரலாற்று அணிந்துரையிற் குறிப்பிடுகின்றார். இது "தமிழ் இலக்கிய வரலாறுகள்" என்னுந் தலைப்பில் எழுதப்பட்டுள்ளது. "An Introduction to the History of Tamil Literature" என்னும் நூலை எழுதிய M. அருணாசலம்,

"இலங்கையைச் சேர்ந்த வி. செல்வநாயகம் அவர்களால் எழுதப் பட்ட சுருக்கமான நூல் ஒரு சிறந்த நூல். அந்த நூல் தமிழிலக்கிய வரலாற்றின் கால கட்டங்களின் தொடக்கங்களைப் பற்றிய உண்மை யான அணுகு முறை கொண்டது"[4] என்கிறார்.

ஆனால் அண்மைக்காலத்திற் பேராசிரியர் வி. செல்வநாயகத்தை இருட்டடிப்புச் செய்யும் பண்பு தமிழகத் தில் மேலோங்கி வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. 1975இல் வெளி வந்த சோம. இளவரசின் இலக்கண வரலாற்றில் பேராசிரியர் வி. செல்வ நாயகத்தைப் பாராட்டிய அதே முனை வர். ச.மெய்யப்பனே, 1998இல் வெளி வந்த புலவர் இரா. இளங்குமரனின் இலக்கண வரலாற்றுப் பதிப்புரையில், தமிழிலக்கிய வரலாற்றாசிரியர்களின் (முக்கியமானவர்களின்) பெயர்ப்பட்டி யலைக் குறிப்பிடும்போது இவரை நீக்கியுள்ளார். இதே போலத் "தமிழ் இலக்கிய வரலாறு" (2002) எழுதிய

முனைவர் ச. சுபாஷ்சந்திரபோஷ் ஈழத்தவரில், இலக்கிய, இலக்கணங்களைப் புதிய நோக்கில் ஆராய்ந்தவர்கள் எனப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, கா. சிவத்தம்பி, அ. சண்முகதாஸ் போன்றோரைக் கூறி, வி. செல்வயாகத்தைக் குறிப்பிடாமல் விட்டுள்ளார்.

இந்த இருட்டடிப்பு மரபின் முழு வளர்ச்சியை அல்லது உச்ச நிலையை, நாம் 2001இல் வெளிவந்த முனைவர் ச. சவரிமுத்துவின் தமிழ் இலக்கிய வரலாற்றில் காணலாம். தமது நூலின் முன்னுரையில் காலந்தோறும் தமிழில் இலக்கிய வரலாறு என்னும் தலைப்பில், முக்கியமான 13 நூல்களைப் பற்றிய தகவல்களைத் தந்துள்ளார். இவற்றில் ஈழத்தவர்களான சைமன் காசிச் செட்டி, ஆ. வேலுப்பிள்ளை, கா. சிவத்தம்பி ஆகியோருடைய பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இதன் பின்னர் அடுத்த கட்டமுக்கியத்துவம் வாய்ந்தன எனக் கருதப்படும் 11நூல்களின் பட்டியல் தருகின்றார். இந்த இரு இடங்களிலும் செல்வநாயகத்தின் நூல் இடம்பெறவில்லை. அடுத்து, தமிழ் இலக்கியங்களின் காலம்பற்றி வரையறை செய்தவர்கள் எனச் சி. வை. தாமோதரம்பிள்ளை முதல் S. வையாபுரிப்பிள்ளை வரை 12 பேரின் பெயர்கள் இடம்பெறுகின்றன. இங்கும் கூடச் செல்வநாயகத்தின் பெயர் இடம்பெறவில்லை.

அப்படியானால் வி. செல்வநாயகத்தின் தமிழ் இலக்கிய வரலாறு இவருக்குக் கிடைக்கவில்லையோ என்ற ஐயம் எழுவது தவிர்க்க முடியாததே. ஆனால் உசாத்துணை நூல் விபரப்பட்டியலில் இந்நூலின் பெயரும் இடம்பெறுவது இந்த ஐயத்தைப் பொருத்தமற்ற தாக்குகின்றது.

இந்த இருட்டடிப்புக்குக் காரணம் யாது என வினவுபவர்கள் முனைவர் சா. சவரிமுத்து இலக்கிய வரலாற்றுக் காலப்பிரிவுகளை எவ்வாறு மேற்கொள்ளுகின்றார் என ஆராய்ந்தால் ஓரளவு விடையை நெருங்க முடியும்.

1. சங்ககாலம்
2. சங்கமருவிய காலம்
3. பல்லவர்காலம்
4. சோழர் காலம்
5. நாயக்கர் காலம்
6. ஐரோப்பியர் காலம்
7. தற்காலம்

என அவரது காலப்பகுப்புக்கள் அமைகின்றன. இவற்றை வி. செல்வநாயகத்தின் காலப்பிரிப்புக்களுடன் ஒப்பிடும் போது ஏழாவது காலப்பிரிவில் மேற்கொண்ட சிறு மாற்றத்தைத் தவிர ஏனையவை அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளன. அதாவது இலக்கிய வரலாற்றுக் காலப்பிரிப்புக்களை மேற்கொண்டோரில் தன்னால் முக்கியத்துவம் அற்றவராகக் கணிக்கப்பட்ட ஒருவரின் காலப்பிரிவையே முனைவர் சா. சவரிமுத்து அப்படியே எடுத்துப் பயன்படுத்தியுள்ளார். தமது இலக்கிய வரலாற்று நூலில் வி. செல்வநாயகத்துக்கு அறிமுகம் கொடுத்தால் அவரது காலப்பகுப்புப் பின்பற்றலையும் ஏற்றுக் கொள்ள வேண்டி வரும் என்ற அச்சம் தான் இருட்டடிப்புக்குக் காரணமாக அமைந்திருக்கும் என்பது பலரின் நியாயமான ஊகம் ஆகும்.

அடிக்குறிப்புக்கள்:

1. முனைவர் கா.சவிரிமுத்து. தமிழ் இலக்கிய வரலாறு பக்.-13
2. பேராசிரியர் கா.சிவத்தம்பி - தமிழில் இலக்கிய வரலாறு - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் 1998-பக்.03
3. சோம.இளவரசு, இலக்கண வரலாறு மணிவாசகர் பதிப்பகம், 1997 (2ஆம் பதிப்பு) அணிந்துரை.
4. M. Arunachalam - Introduction tothe history of Tamil Literature-Jemini Printing House 1974. Page 4.

# நிதி முகாமைத்துவம்

**இராகுலன்**
**2005 Com**

**நிதி முகாமைத்துவம்:**

நிறுவனம் தனக்குத் தேவையான நிதியினைத் திட்டமிட்டுப் பெற்றுக் கொள்ளப்பட்ட விதத்தினையும் அது தனது வளர்ச்சி, இலக்கை அடைதல் என்பவற்றின் நோக்கில் அது எவ்வாறு பிரயோகிக்கப்பட்டது என்பதனை எடுத்துக் காட்டுவதே நிதிமுகாமைத்துவம் எனப்படும். இதில்

1. **நிதி மூலங்கள்**
2. **நிதிப்பிரயோகங்கள்** உள்ளடங்குகின்றன.

❄ **நிதி மூலங்கள்:**

நிறுவனம் ஒன்று தனது தொழிற்பாட்டிற்குத் தேவையான நிதியினைப் பெற்றுக் கொண்ட வழிமுறைகளை எடுத்துக் காட்டுவது நிதி மூலங்கள் ஆகும்.

அதாவது தேவையான நிதி பெறப்பட்ட மார்க்கங்களை அல்லது நிதி திரட்டப்பட்ட வழிமுறைகளை எடுத்துக் காட்டுவதே நிதி மூலங்களாகும்.

உ+ம்:

| | |
|---|---|
| சாதாரணபங்கு | பகிரப்படாத இலாபம் |
| முன்னுரிமைப்பங்கு | முன்னுரிமைப்பங்கு மீட்புஒதுக்குநிதியம் |
| தொகுதிக்கடன் | தொகுதிக்கடன் மீட்பு ஒதுக்குநிதியம் |
| வங்கிக்கடன் | பெறுமானத் தேய்வு ஏற்பாடு |
| ஈட்டுக்கடன் | ஐயக்கடன் ஏற்பாடு |
| பங்குவட்டம் | வியாபாரக்கொடு கடன் |
| பொது ஒதுக்கம் | சென்மதிக்கொடு கடன் |

**Note:** நிறுவன ஐந்தொகையின் பொறுப்புக்கள் பாகம் நிதி மூலங்களைப் பிரதிபலிக்கும்

**நிதிப்பிரயோகங்கள்:**

பல்வேறு வழிமுறைகளின் ஊடாக திரட்டப்பட்ட நிதியினை எவ்வாறான தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு உள்ளது என்பதனை எடுத்துக் காட்டுவதே நிதிப் பிரயோகம் ஆகும்.

அதாவது நிறுவன நிதி பயன்படுத்தப்பட்ட வழி முறைகளைப் பிரதிபலிப்பதாகும்.

உ+ம்:

| | |
|---|---|
| நிலையான சொத்து | XXX |
| முதலீடுகள் | XXX |
| நடப்புச் சொத்துக்கள் | XXX |

**Note:** நிறுவன ஐந்தொகையின் சொத்துக்கள் பாகம் நிதிப் பிரயோகங்களைப் பிரதிபலிக்கின்றது.

உ+ம்: வரையறுக்கப்பட்ட X கம்பனியின் 31-12-2003 உள்ளபடியான ஐந்தொகை வருமாறு

| பொறுப்புக்கள் | தொகை | சொத்துக்கள் | தொகை |
|---|---|---|---|
| சாதாரண பங்குகள் | 20000 | நிலையான சொத்துக்கள் | 48000 |
| முன்னுரிமைப்பங்குகள் | 100000 | பெறுமானத் தேய்வு ஏற்பாடு | (200000) |
| பங்குவட்டம் | 30000 | | 280000 |
| பொது ஒதுக்கம் | 20000 | முதலீடுகள் | 20000 |
| தொகுதிக்கடன்கள் | 500000 | இருப்புக்கள் | 500000 |
| கடன் கொடுத்தோர் | 45000 | வருமதி உண்டியல் | 30000 |
| சென்மதிகள் | 35000 | காசு | 100000 |
| | 480000 | | 480000 |

(அ) கம்பனியின் நிதி மூலங்களைப் பட்டியல் படுத்துக?

| | |
|---|---|
| சாதாரணபங்கு | 200000 |
| முன்னுரிமைப்பங்கு | 100000 |
| பங்குவட்டம் | 30000 |
| பொது ஒதுக்கம் | 20000 |
| தொகுதிக்கடன் | 50000 |
| கடன் கொடுத்தார் | 45000 |
| சென்மதிகள் | 35000 |
| பெ. தே. ஏற்பாடு | 200000 |

(ஆ) கம்பனியின் நிதிப் பிரயோகங்களைப் பட்டியல்படுத்துக.

| | |
|---|---|
| நிலையான சொத்து | 480000 |
| முதலீடுகள் | 20000 |
| இருப்புக்கள் | 50000 |
| வ.உ. | 30000 |
| காசு | 100000 |

## நிதி மூலங்களை வகைப்படுத்தல்:

1) அகநிதி மூலங்கள் அல்லது உள்ளக நிதி மூலங்கள்

2.) புறநிதி மூலங்கள் அல்லது வெளியக நிதி மூலங்கள்

**அகநிதி மூலங்கள்:**

நிறுவனத்திற்கு நிதித் தேவை ஏற்படுகின்ற போது தேவையான நிதியினை நிறுவனத்திற்கு உள்ளே இருந்து நிதி பெறப்படுமாயின் அதனை அகநிதி மூலங்கள் என அழைப்பர்.

**Note:** நிறுவன ஒதுக்கங்களிலும் ஏற்பாடுகளில் இருந்தும் அகநிதி பெற்றுக் கொள்ளப்படும்.

உ+ம்: பங்குவட்டம்
ஒதுக்கம்
பகிரப்படாத இலாபம்
முன்னுரிமைப் பங்கு மீட்பு ஒதுக்கு நிதியம்

**நிறுவன நிதித் தேவைகளுக்கு அகநிதியைப் பயன்படுத்துவதன் அனுகூலங்கள்:**

1. கால தாமதங்கள் இன்றி நிதியினைத் திரட்டக்கூடியதாக இருத்தல்
2. நிதி திரட்டல் செலவுகள் தவிர்க்கப்படுகின்றது
3. நிதியைப் பயன்படுத்துவதனால் ஏற்படுகின்ற வட்டி, பங்கு இலாபம் போன்ற செலவுகள் தவிர்க்கப்படும்
4. கடன் கொடுத்தவர்களுடைய தலையீடுகள் தவிர்க்கப்படும்

**நிறுவனங்கள் கடுமையான நிதிப்பிரச்சினையை எதிர்நோக்குகின்ற போதும் அகநிதியைப் பயன்படுத்துவதற்கு விரும்பாமைக்கு காரணங்கள்:**

1. உரிமையாளரது சம்மதம் கிடைக்காமை
2. நிலையான சொத்துக்களைப் பிரதியிட முடியாத நிலை உருவாகும் என்பதனால்
3. நிதிப்பலம் குறைவடையும் என்பதால்

**புற நிதிமூலங்கள் அல்லது வெளிவாரியான நிதி மூலங்கள்:**

நிறுவனத்தை உருவாக்குவதற்கு அல்லது நிறுவனத்தை செயற்படுத்துவதற்குத் தேவையான நிதியினை நிறுவனத்திற்கு வெளியே இருந்து திரட்டிக் கொள்ளுமாயின் அதனை புறநிதி என அழைப்பர்.

இவ்வாறான நிதி திரட்டப்பட்ட வழிமுறைகளை எடுத்துக் காட்டுவது புற நிதி மூலமாகும்.

| | |
|---|---|
| உ+ம்: சாதாரண பங்குகள் | XX |
| முன்னுரிமைப்பங்குகள் | XX |
| தொகுதிக்கடன்கள் | XX |
| வங்கிக் கடன்கள் | XX |

**புற நிதியை வகைப்படுத்துதல்:**

1. கால அடிப்படையில்
   - **a.** குறுங்கால நிதி
   - **b.** நீண்டகால நிதி

2. உரிமையின் அடிப்படையில்
   - **a.** உரிமை/உரிமை மூலதனம்
   - **b.** கடன்நிதி/கடன் மூலதனம்

**குறுங்கால நிதி:**

நிறுவனத் தொழிற்பாடுகளுக்குத் தேவையாக திரட்டப்பட்ட நிதியினை ஒரு நிதியினை ஒரு நிதியாண்டு காலப்பகுதிக்குள் மீள் அளிக்கப்பட வேண்டிய தேவை காணப்படுமாயின் அதனை குறுங்கால நிதி என்பர்.

eg:- வங்கி மேலதிகப்பற்று
சென்மதி உண்டியல்
வியாபார கடன் கொடுனர்
சென்மதி கொடுகடன்

**நீண்டகால நிதி:**

நிறுவன தொழிற்பாட்டுக்கு தேவைக்காகப் பெறப்பட்ட நிதியினை ஒரு நிதி ஆண்டிற்கு மேலாக நிறுவனத்தினால் பயன்படுத்த முடியுமெனின் அதனை நீண்டகால நிதி என்பர்

உ+ம்: சாதாரண பங்கு
முன்னுரிமைப்பங்கு
வங்கிக்கடன்
தொகுதிக்கடன்
ஈட்டுக்கடன்

**உரிமை மூலதனம்:**

நிறுவனத் தொழிற்பாட்டிற்காக நிறுவனத்தின் உரிமையாளரால் உள்ளீடு செய்யப்பட்ட நிதியினை உரிமை மூலதனம் என அழைப்பர்

eg:- சாதாரண பங்குகள்
ஒதுக்கங்கள்

**உரிமை மூலதனத்தின் பண்புகள்:**

1. உரிமையாளரால் உள்ளீடு செய்யப்படும்
2. மீள் அளிக்கப்படுமென்ற உத்தரவாதமற்ற நிதி
3. இலாபம் என்ற சன்மானத்தை உழைக்கும் நிதி
4. முதலீட்டில் அபாயம் கூடுதலான நிதி

**கடன் மூலதனம்:**

நிறுவன தொழிற்பாட்டிற்குத் தேவையான நிதி திருப்பிச் செலுத்தப்படும் என்ற நியந்தனையின் கீழ் பெற்றுக் கொள்ளப்படுமாயின் அதனைக் கடன் மூலதனம் என்பர்

eg:- முன்னுரிமைப்பங்கு
தொகுதிக்கடன்
வங்கிக் கடன்

**கடன் மூலதனத்தின் பண்புகள்:**

1. நிறுவன உரிமையாளர்களின் / உரிமையாளர் அல்லாதவர்களால் உள்ளீடு செய்யப்படுதல்
2. திருப்பிச் செலுத்தப்படும் என்ற உத்தரவாதத்திற்கு அமைவாக பெற்றுக் கொள்ளப்படும் நிதி
3. வட்டியை வருமானமாக உழைக்கும் நிதி
4. முதலீட்டில் அபாயம் குறைவாக உள்ள நிதி

**வேறுபாடுகள்**

| கடன் மூலதனம் | உரிமை மூலதனம் |
|---|---|
| 1. உரிமையாளராலும் உரிமையாளர் அல்லாதவராலும் உள்ளீடு செய்யப்படும். | நிறுவன உரிமையாளரால் மட்டும் உள்ளீடு செய்யப்படும் |
| 2. மீள் அளிக்கப்படுமென்ற உத்தரவாதம் உண்டு | மீள் அளிக்கப்படுமென்ற உத்தர வாதம் இல்லை |
| 3. வட்டியை உழைத்துக் கொள்ளல் | இலாபத்தை உழைத்துக் கொள்ளல் |
| 4. ஆபத்துக் குறைவாகக் காணப்படும் | ஆபத்து அதிகமாகக் காணப்படும் |

**மூலதன கட்டமைப்ப அல்லது மூலதன இணைப்பு:**

நிறுவனமொன்றின் மாற்றமடைகின்ற வருமானத்தை உழைக்கின்ற உரிமை மூலதனத்திற்கும் நிலையான வருமானத்தை உழைக்கின்ற கடன் மூலதனத்திற்கும் இடையிலான தொடர்பினை எடுத்துக் காட்டுவதே மூலதன இணைப்பாகும்.

**மூலதன இணைப்பின் வகைகள்:**

1. உயர் மூலதன இணைப்பு
2. சம மூலதன இணைப்பு
3. தாழ் மூலதன இணைப்பு

**உயர் மூலதன இணைப்பு:**

நிறுவனத்தின் மாற்றமடையும் வருமானத்தை உழைக்கின்ற உரிமை மூலதனத்தின் அளவிலும் பார்க்க நிலையான வருமானத்தை உழைக்கின்ற கடன் மூலதனம் அதிகமாகக் காணப்படுமாயின் அதனை உயர் மூலதன இணைப்பு என அழைப்பர்.

உயர்மூலதன இணைப்பு → கடன் மூலதனம் → உரிமை மூலதனம்

உயர்மூலதன இணைப்பின் விளைவுகள்:

1. கடன் மூலதனம் அதிகமாகக் காணப்படுமானால் கடன் கொடுத்தோரது செல்வாக்கு அதிகரிக்கும்.

2. வருடாந்த வட்டிக் கொடுப்பனவுகள் அதிகமாகக் காணப்படும்

3. இலாபம் குறைவாக உழைக்கப்படும் காலப்பகுதிகளில் நிறுவனத்தை நட்டமடையச் செய்யும்

**Note:** செழிப்பான வியாபாரம் நடைபெறும் காலத்தில் அதிக இலாபம் உழைக்கப்படும் போது உயர் மூலதனக் கட்டமைப்பு பொருத்த முடியாது.

**சமமூலதன இணைப்பு:**

நிறுவனத்தில் மாற்றமடைகின்ற வருமானத்தைப் பெறுகின்ற உரிமை மூலதனமும் நிலையான வருமானத்தை பெறுகின்ற கடன் மூலதனமும் சமமாகக் காணப்படுமாயின் அதனை சம மூலதன இணைப்பு என அழைப்பர்.

சமமூலதன இணைப்பு → கடன்மூலதனம் = உரிமை மூலதனம்

**தாழ் மூலதன இணைப்பு:**

நிறுவனத்தில் மாற்றமடைகின்ற வருமானத்தை உழைக்கின்ற உரிமை மூலதனத்திலும் பார்க்க நிலையான வருமானத்தைப் பெறுகின்ற கடன் மூலதனம் குறைவாக காணப்படுமேயானால் அதனை தாழ் மூலதன இணைப்பாகும்.

தாழ் மூலதன இணைப்பு → உரிமைமூலதனம் → கடன்மூலதனம்

**நிறுவனத்தின் திரவத்தன்மையை மதிப்பீடு செய்ய பயன்படுத்தப்படுகின்ற விகிதங்கள்:**

1. நடைமுறை விகிதம் / நடப்பு விகிதம்
2. விரைவு விகிதம் / துரித விகிதம்

**நடைமுறை விகிதம்:**

நிறுவனத்தின் நடைமுறைச் சொத்துக்களைப் பயன்படுத்தி குறுங்காலக் கடன்களை தீர்க்க முடியுமா என்பதனை வெளிப்படுத்துவதே நடைமுறை விகிதமாகும்.

$$\text{நடைமுறை விகிதம்} = \frac{\text{நடப்புச் சொத்து}}{\text{நடப்புப் பொறுப்பு}}$$

கணக்கியல் விதிமுறைகளின்படிஇவ்விகிதம் 2:1 அமைதல் வேண்டும்.

**விரைவு விகிதம்:**

நிறுவன திரவ சொத்துக்களைப் பயன்படுத்தி குறுங்காலக் கடன்களைச் செலுத்த முடியுமா என்பதனை வெளிப்படுத்துவதே விரைவு விகிதமாகும்.

$$\text{விரைவு விகிதம்} = \frac{\text{திரவச்சொத்து}}{\text{நடப்புப் பொறுப்பு}}$$

இவ்விகிதம் கணக்கியல் விதிமுறைகளின்படி 1:1ஆக அமைதல் வேண்டும்.

**உசாத்துணை நூல்:-** FRANK WOOD

# தந்திரோபாய நன்மைக்கான தகவல் தொழில்நுட்பம்

# [Information Technology for Strategic Advantage]

கி. கீதவாணி
2006 A/L Com

இன்றைய நடைமுறை உலகில் தகவலின் முக்கியத்துவம் அதிகரித்துக்கொண்டு செல்வதால் நிறுவனங்கள் தகவல் தொழில்நுட்பத்தினை ஒரு தந்திரோபாயக் கருவியாகப் பயன்படுத்தி வருகின்றன. இது போட்டி அடிப்படையிலான நன்மையினைப் (**Competitive advantage**) பெற்றுத் தருகின்ற ஒரு வளமாகக் காணப்படுகிறது.

**Michel Porter** இன் கருத்துப்படி தகவல் தொழில்நுட்பமானது ஒரு கைத்தொழிலினை மூன்று வழிகளில் பாதிக்கின்றது. அல்லது உருவாக்குகின்றது.

(i) கட்டமைப்பினைப் பாதிக்கின்றது

(ii) புதிய தொழில் நிறுவனங்களையும் கைத்தொழில்களையும் பாதிக்கின்றது

(iii) போட்டி அடிப்படையிலான நன்மையினை உருவாக்குகின்றது

ஒரு கைத்தொழிலில் தகவல் தொழில்நுட்பத்தின் தாக்கத்தினை ஆய்வு செய்வதற்கு **Porter** ஐந்து சக்தி மாதிரிகளைப் (**Five Forces Models**) பயன்படுத்தியுள்ளார்.

அவையாவன:-

i புதிய போட்டியாளர்களின் உள்வருகை


ii பதிலீட்டுப் பொருள்கள் / சேவைகளின் அச்சுறுத்தல்

iii வாங்குநர்களின் பேரம்பேசுகின்ற ஆற்றல்

iv வழங்குநர்களின் பேரம் பேசுகின்ற ஆற்றல்

v ஏற்கனவே இருக்கின்ற போட்டியாளர்களுக்கான போட்டி என்பனவாகும்.

இவை நிறுவனங்களின் வல்லமையினைத் தீர்மானிப்பதுடன் இலாபத்தன்மை, விலைகள், இரயங்கள் வேண்டப்படும் மூலதனம் போன்றவை மீது செல்வாக்குச் செலுத்துபவையாகக் காணப்படுகின்றன.



**புதிய போட்டியாளர்களின் வருகை:**
**[New entrants]**

ஒரு சந்தைக்குள் வரும் புதிய நிறுவனங்கள் புதிய உற்பத்தி இயலளவு சந்தையில் ஒரு நிலையான இடத்தினை உருவாக்குதல். போட்டியிடுவதற்கான மூலப்பொருட்கள் போன்றவற்றினைக் கொண்டு வரலாம். ஒரு குறிப்பிட்ட சந்தையில் எவ்வாறு உள்வருகைக்கான தடைகள் இருக்கப் போகின்றன என்பன இரண்டு காரணிகளில் தங்கியுள்ளன. அவையாவன:-

**i.** புதிதாக வருகின்ற நிறுவனங்களுக்கு ஏற்கனவே சந்தையில் இருக்கின்ற நிறுவனங்களால் ஏற்படுத்தப்படுகின்ற உள்வரும் தடைகள்.

**ii.** புதிதாகச் சந்தைக்குள் வருகின்ற நிறுவனங்கள் சந்தையினை உடைத்து தமக்கென ஒரு இடத்தினை வகிக்கும் போது ஏற்கனவே இருக்கின்ற நிறுவனங்களுக்குரிய வெளியேறும் தடைகள்.

பொதுவாக உள்வரும் தடைகளாகப் பின்வருவனவற்றைச் குறிப்பிடலாம்.

1. அளவுத்திட்டச் சிக்கனம் **(Economics of Scale)**
2. பொருள் வேறுபடுத்தல்கள்
3. பண்டக்குறித் தத்துவம்
4. மாறும் கிரயங்கள்
5. மூலதனத் தேவைகள்
6. விநியோக வசதிகள்
7. முழு கிரய நன்மைகள்
8. அரசாங்கக் கொள்கை
9. எதிர்பார்க்கப்பட்ட எதிர்ச்செயல்

**பதிலீட்டுப் பொருட்கள்:**
**(Substitute Products)**

ஒரு கைத்தொழிலினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் இன்னொரு கைத்தொழிலினால் உற்பத்தி செய்யப்டும் பொருட்களுக்குப் பதிலீடாக இருக்கலாம். வாடிக்கையாளர் தேவைகளைப் பதிலீடுகள் வேறுபட்ட வகைகளில் பூர்த்தி செய்யலாம்.

பதிலீட்டுப் பொருட்களின் அச்சுறுத்தல்களைத் தீர்மானிப்பனவாகக் கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. பதிலீடுகளின் தொடர்பான விலைச் செயற்திறன்
2. மாறும் செலவுகள் **(Switching Cost)**
3. பதலீட்டுக்கான வாங்குநர்களின் உடமை உரிமை

**வழங்குநர்களின் பேரம் பேசும் ஆற்றல்:**
**(Bargaining Power of Suppliers)**

வழங்குநர்களின் பேரம் பேசும் ஆற்றலைத் தீர்மானிக்கும் சக்திகளாவன:-

1. உள்ளீடுகளின் வேறுபடுத்தல்கள்
2. கைத்தொழிலில் இருக்கும் வழங்குநர்கள் மற்றும் நிறுவனங்களின் மாறும் செலவுகள்

3. வழங்குநர் ஒருமுகப்படுத்தல்
4. கைத்தொழிலின் மொத்தக் கொள்வனவுடன் தொடர்புடைய செலவு
5. உள்ளீடுகள் மீதான செலவு அல்லது வேறுபடுத்தலின் தாக்கம்
6. முன்னோக்கிய இணைவு

**வாங்குநர்களின் பேரம் பேசும் ஆற்றல்:**
**(Bargaining Power of Buyers)**

வாங்குநர்களின் பேரம் பேசும் ஆற்றலினைப் பின்வரும் சக்திகள் தீர்மானிக்கின்றன.

1. வாங்குநர் ஒருமுகப்படுத்தல், எதிர் நிறுவன ஒருமுகப்படுத்தல்
2. நிறுவன மாறும் செலவுடன் தொடர்புடைய வாங்குநர் மாறும் செலவு
3. வாங்குநர் அளவு
4. வாங்குநர் தகவல்
5. பின்னோக்கிய இணைவுக்கான வல்லமை
6. பதிலீட்டுப் பொருட்கள்
7. பொருள் வேறுபடுத்தல்
8. பண்டக்குறி தனித்துவம்
9. வாங்குநர் இலாபங்கள்
10. தீர்மானம் எடுப்பவர்களின் ஊக்கப்படுத்தல்கள்.

**ஏற்கனவே இருக்கின்ற நிறுவனங்களுக்கிடையிலான போட்டி:**
**(Rivalry among existing firms)**

ஐந்து போட்டிக்குரிய காரணிகளில் மிகவும் வலுவுள்ளது எனக் கருதப்படுவது போட்டி நிறுவனங்களுக்கிடையிலான போட்டியாகக் காணப்படுகின்றது. இது பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளது.

1. கைத்தொழில் வளர்ச்சி
2. நிலையான செலவுகள்
3. இடைநிறுத்தி வைக்கும் இயலளவு
4. பொருள் வேறுபடுத்தல்கள்
5. பண்டக்குறித் தனித்துவம்
6. மாறும் செலவுகள்
7. ஒரு நிலைப்படுத்தலும் சமநிலையும்
8. தகவல் சார்ந்த சிக்கனத் தன்மை
9. போட்டியாளர்கள் பரவலாக்கம்
10. வெளியேறும் தடைகள்

போட்டி விற்பனையாளர்களுக்கான தீவிர போட்டியானது வலிமையான தாக அல்லது வலிமையற்றதாகக் காணப்படுவதற்குரிய காரணங்களாவன.

1. போட்டியாளர்களின் எண்ணிக்கை அதிகமாகவும் அவற்றின் அளவு இயலளவின் அடிப்படையில் ஒரே அளவான அதிகமான நிறுவனங்களும் காணப்படின் போட்டியானது அதி தீவிரமாகக் காணப்படும்.

2. பொருளுக்கான கேள்வியின் வளர்ச்சியானது குறைவாக இருக்கும்போது போட்டியானது வலிமையாகக் காணப்படும்.

3. கைத்தொழிலில் இருக்கும் போட்டியாளர்கள் தமது அலகுத் தொகையினைக் கூடுதலாக விற்பனை செய்வதற்காக விலை வெட்டுக்கள் அல்லது ஏனைய போட்டியாளர்கள் ஆயுதத்தினைப் பயன்படுத்தும்போது போட்டியானது தீர்மானமாக இருக்கும்.

பொதுவான போட்டிக்குரிய தந்துரோபாயங்களாக **(Competitive Strategies)** பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. செலவில் தந்துரோபாய தலைமைத்துவம் **(cost leadership Strategy)** அல்லது குறைந்த செலவு உற்பத்தி **(Low Cost Produce)**

2. பேதப்படுத்தல் தந்திரோபாயம் **(Differenciation Strategy)**

3. புத்தாக்கத் தந்திரோபாயம் **(Innovation Strategy)**

4. வளர்ச்சித் தந்திரோபாயம் **(Growth Strategy)**

5. இணைத்தல் தந்திரோபாயம் **(Alliance Strategy)**

போட்டிக்குரிய சக்திகள் எவ்வாறு போட்டிக்குரிய தந்திரோபாயங்களுடன் தொடர்புபடுகின்றன என்பதனைப் பின்வரும் வரைபடம் விளக்குகின்றது.

| | வழங்குநர் | வாடிக்கையாளர் | போட்டியாளர் | புதிய வருகைகள் | பதிலீடுகள் |
|---|---|---|---|---|---|
| வேறுபடுத்தல் | | | | | |
| செலவு | | | | | |
| புதிது புனைதல் | | | | | |
| வளர்ச்சி | | | | | |
| இணைவு | | | | | |
| ஏனையவை | | | | | |

இது தந்திரோபாய முறையில் போட்டிக்குரிய கூர்மையினைப் பெற்றுக்கொள்ளும் மாற்றுவழியாகவும் காணப்படுகின்றது.

# கணனியும் அதனை தாக்கும் வைரஸ் பற்றிய கண்ணோட்டமும்


ந. நிமல்ராஜ்
2005 A/L Com

இன்று கணனிகள் எல்லா சிக்கலான பிரச்சினைகளையும் விரைவாகவும் வெகு இலகுவாகவும் ஆராய்ந்து நேர்த்தியான தீர்வை தருவதன் காரணமாக பரவலாக எல்லாத்துறைகளிலும் இதன் செல்வாக்கு ஆக்கிரமித்துள்ளது.

பெருவாரியான தகவல்களை அரியதொரு தட்டில் சேகரித்து வைத்திருக்கும் ஆற்றல் கணனியின் அதிசிறந்த பயன்பாடுகளில் சிலவாகும்.

கணனியானது கணிப்பீடுகளைச் செய்யக்கூடியதால் கணனி எனப்பெயர் பெற்றது. முதன் முதலில் 1940ஆம் ஆண்டளவில் (கணனியானது) அறிமுகமானது.

ஒரு கணனியின் இயக்கத்தையும் அதன் பகுதிகளையும் இலகுவாக புரிந்து கொள்வதற்கு **Block diagram**




→ Data/Information Flow

⇢ Control Information Flow

⇨ Program Information Flow

**கணனியும் மனிதனும்:**

கணனியை உருவாக்கியவன் மனிதன் ஆனால் மனிதனை விட கணனி மிகத்திறமையையும் ஆற்றலினையையும் கொண்டது. (புரோகிராம்) செய்யப்பட்ட ஓர் இலத்திரனியல் கருவியே கணனியாகும். மனிதன் சில வேலையைச் செய்வதற்கு சில நாட்களை அல்லது சில மாதங்களையே எடுத்துக்

கொள்கின்றான் ஆனால் அதே வேலையைக் கணனி சில விநாடிகளில் முடித்துவிடும் அளவு அபார வேகத்தினைக் கொண்டது.

கணனியானது ஓர் இயந்திரம் தான் இது நுண்ணறிவு அற்றது. இது மனிதனின் கட்டளைகளுக்கு அடிபணிந்து நடக்கும் ஓர் அடிமையாகவே இருக்கின்றது. ஆயினும் தொழில்நுட்ப முன்னேற்றங்களினால் சில வேளைகளில் கணனி மனிதனை அடிமையாக்கலாம்.

## கணனி வைரஸ் (Computer Virus)

❐ மருத்துவத்துறையில் வைரஸை கேள்வியுற்றுள்ளோம். அதே போன்று கணனியுலகத்திலும் இதன் தாக்கம் எம்மை மேலும் சிந்திக்க வைக்கின்றது. வைரஸ் என்பதன் விரிவாக்கம் **Kital Information and Resources Under Seiwage (VIRUS)** ஆகும். வைரஸ் என்ற வார்த்தை லத்தீன் மொழியில் உள்ள வைரான் எனும் சொல்லைத் தழுவியது.

❐ வைரஸ் என்றால் இலத்தீனில் நஞ்சு எனப் பொருள்படும். இந்தச் சொல் பொதுவாக மருத்துவத்துறையில் தான் பயன்படுத்தப்பட்டு வந்தது ஆனால் காலப்போக்கில் இச்சொல் கணனியுலகிலும் இடம்பிடித்துவிட்டது.

❐ அப்படியானால் மனிதனைத் தாக்கும் வைரஸ்கள் தான் கம்பியூட்டரையும் தாக்குகின்றனவா? இல்லை

❐ ஒரு மனிதனை வைரஸ் தாக்கும்போது அவன் எவ்வாறு உடல் நலம்குன்றி சோம்பலாக அவதிப்பட்டு நிலைகுலைந்து போய்விடுகின்றானோ அது போலவே ஒரு கணனி வைரஸ் தாக்கும்போது அது அதனுடைய செயலில் வேகம் குறைந்தோ அல்லது தகவல்களை நிலைகுலைய வைத்தோ விடுகிறது.

❐ கணனி உலகில் வைரஸ் என்பது எந்தவொரு நுண்ணுயிரையும் குறிப்பிடுவதில்லை கணனியில் உள்ள மொழிகளுக்கு கேடுவிளைவிக்கும் வகையில் ஏதாவது ஒரு மொழி இருந்தால் அதனையே நாம் கணனி வைரஸ் என்று அழைக்கின்றோம்.

❐ இந்த வரைஸ் புரோகிராம்கள் கம்பியூட்டரின் நினைவகத்தில் தங்கி தன்னுடைய நகலை மற்ற அனைத்து புரோகிராம்களிலும் தொற்றிக்கொள்ளச் செய்துவிடுகிறது வைரஸ்களில் இரண்டு வகையுண்டு.

1. ஆபத்தை விளைவிக்கும் வைரஸ் **Dangerous Virus**
2. ஆபத்து விளைவிக்கா வைரஸ் **Harmless Virus**

❐ பொது ஆபத்தை விளைவிக்காத வைரஸ் என்பது கம்பியூட்டரின் நினைவகத்தில் பெரும் பகுதியை அடைத்தகொள்ளும் ஆனால் கம்பியூட்டரில் உள்ள புரோக்கிராம்களுக்கு எந்த விதமான கெடுதலையும் விளைவிக்காது.

❐ 1987ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மேற்குஜேர்மன் மாணவர்களால் எழுதப்பட்ட ஒரு புரோகிராம் ஐ பி எம் நிறுவனத்தின் கம்பியூட்டர் தகவல் தொடர்பில் இணைக்கப்பட்டிருந்தது.

❐ இந்த கம்பியூட்டர் தகவல் தொடர்பை சுமார் 250 000 பேர் பயன்படுத்திக் கொண்டிருந்தனர். ஆனால் இரண்டே மணி நேரத்தில் பல்லாயிரக்கணக்கான

மட்டங்களில் இந்த புரோகிராம் நகலாகி விட்டது இந்த புரோகிராம் தொற்றிக் கொண்டிருக்கும் கம்பியூட்டரினை வேறொருவர் அவருடைய கம்பியூட்டரின் உதவியுடன் தொடர்பு கொள்ளும் போது இந்த புரோகிராம் அதனுடைய நகலை புதிய நபருடைய கம்பியூட்டரிலும் தொற்றிக்கொள்ள வைத்துவிடும். இப்படியாக இது தன்னடைய நகலை மேலும் மேலும் பரப்பிக் கொண்டேபோகும் ஆனால் புரோகிராம்களுக்கு எந்தத் தீங்கையும் ஏற்படுத்தாது.

ஆபத்தை விளைவிக்கக் கூடிய வைரஸ்கள் முக்கியமான மாற்றும் முதன்மையான புரோக்கிராம்களில் ஏறி அமர்ந்து கொள்ளும் அது மட்டுமன்றி அதனை அந்த புரோகிராமினுள்ளே மறைத்து வைத்துக் கொள்ளும் தன்மையும் கொண்டவை

❒ இவை நேரப்படியோ புரோகிராம்களை செயற்படுத்தும் முறைகளைப் பொறுத்தோ செயற்படும் படியோ எழுதப்பட்டிருக்கும்.

❒ இதற்கு இடப்பட்டிருக்கும் கட்டளையோடு ஒத்துப் போனவுடன் அது தன்னைப் பல வழிகளில் வெளிக்காட்டும் சில வைரஸ்கள் மெதுவாக செயற்பட ஆரம்பிக்கும் இன்னும் சில வைரஸ்கள் விரைவாக செயற்பட ஆரம்பிக்கும் ஒவ்வொரு வைரஸ் புரோகிராமும் ஒவ்வொரு விதத்தில் செயற்படுமாறு எழுதப்பட்டிருக்கும் சில வைரஸ்கள் புரோகிராம்களை நகலெடுத்து நினைவகத்தை அடைத்துக்கொள்ளும் சில வைரஸ்கள் கம்பியூட்டரின் செயற்பாட்டைக் குறைத்துவிடும் சில வைரஸ்கள் கணனியை செயற்படவிடாது

❒ பொதுவாக வைரஸ் புரோகிராம்கள் மிகவும் சிறியவை அது ஏதாவது ஒரு பைலில் தொற்ற வைக்கப்பட்டு பரவவிடப்படும் இந்த புரோகிராம் மற்ற கம்பியூட்டர்களுக்கு மற்ற புரோகிராம்களுடன் டிஸ்கில் இணைத்துவிடப்பட்டு பரவிக்கொண்டே இருக்கும் இவ்வாறு தொற்றுவிடப்பட்ட வைரஸானது நினைவகத்தில் ஏறி அமர்ந்துகொண்டு அது இருக்கும் கம்பியூட்டரில் செயற்படுத்தப்படும் ஒவ்வொரு புரோகிராமிலும் தன்னுடைய புரோகிராமினைப் போன்று அதில் ஏதாவது இருக்கிறதா என்று தேடிப்பார்க்கும் இவ்வாறு இருந்தால் அதில் ஒன்றுமே செய்யாமல் விட்டுவிடும் இல்லையென்றால் உடனே தன்னைப் போலே இன்னொரு நகலை உருவாக்கி அதில் தொற்ற விட்டுவிடும் இந்த நகலும் இதைப் போலவே செயற்பட ஆரம்பித்து விடும்.

❒ பொதுவாக வைரஸ்கள் சொப்ட்வெயார்களாகத்தான் வெளியிடப் படுகின்றன அதுவும் இலவச சொப்ட்வெயர்

❒ புரோகிராம்களில் தான் அளவுக்கு அதிகமாக இவை பரவ விடப்படுகின்றது. என ஒரு அமெரிக்க ஆய்வாளர் கூறுகிறார்.

❒ வி. பிரெயன் எனும் வைரஸ் புரோகிராமானது பூட்டிங்ர பைல்களை **IBM BIOS IOISys-Ms Dos sys** மற்றும் **Commad. Com** என்னும் பைல்களில் முதலில் செயற்படக்கூடிய **IBM BIOSSYS** அல்லது **10 Sys** என்னும் பைல்களில் தொற்றிக் கொள்ளுமாறு எழுதப்பட்டிருந்தது. இந்த பைல்கள் சிஸ்டம் பைல்கள் எனவே இவை மறைத்து வைக்கப்பட்டிருக்கும். அது மட்டுமன்றி தன்மையான பைல் இதுவாகும்.

❒ இந்த வைரஸ் தொற்றிக்கொண்டவுடன் முதலில் மெதுவாக தன்னை வெளிப்படுத்திக் காட்டிஸ்கின் **Volume Lable**

❒ **Brain** இன் மாற்றிவிடும் இந்த **Volume Dos**இன் உதவியுடன் மாற்ற முடியாது உடனே நமக்கு **Invalid Character Label** என்ற செய்தி வரும் எனினும் **PC Tools** போன்ற சொர்ப்ட் வெயர்களில் **Volume label** மாற்றி அமைத்துவிடலாம் ஆனாலும் இது ஓர் உறுதியான தீர்வு அல்ல இது மீண்டும் தாக்கி விடவும் கூடும் என்பது நூற்றுக்கு நூறு உண்மையான ஒன்றாகும்.

❒ இந்த சிபிரெய்ன் வைரஸானது டிஸ்கிலுள்ள பூட்ஏசியாவில் **O** எனும் செகடரில் அமைத்து கொண்டு **Dos Copy** கட்டளையின் உதவியால் பைல்களைக் ஹார்ப்பி செய்யும் பொழுது இவை ஒரு டிஸ்கிலிருந்து மற்றொரு டிஸ்கிற்கு தன்னுடைய நகலையும் சேர்த்து பைல்களுடன் அனுப்பிவிடுகின்றது. இந்த நகலும் அந்த டிஸ்கிலுள்ள **O** செகடரில் அமர்ந்து கொள்ளும்

❒ இந்த வைரஸ் ப்ளாப்பி டிஸ்கில் உள்ளது என வைத்துக் கொள்வோம் இந்த ப்ளாப்பியை பயன்படுத்தும் பொழுது இதில் உள்ள வைரஸ் 'ராம்' என்னும் தற்காலிக நினைவகத்தில் ஒரு நகலை அனுப்பி வைத்து அதிலிருந்து மற்ற பைல்களை செயற்படுத்தும்போது அதனோடு கடைசியாக ஹார்ட் டிஸ்கிலும் குடிபுகுந்துவிடும் அது மட்டுமன்றி ஹார்டிஸ்கிலிருந்து நகல் அடுக்கப்படும் பைல்களிலும் அது இணைந்து வேறு ப்ளாப்பிகளிலும் இது நடைபழக ஆரம்பித்துவிடும்.

❒ இந்த சீ பிரெய்ன் வைரஸானது ப்ளாப்பியில் **Bad Sector** உருவாக்கவல்லது அது மட்டுமன்றி தகவல்களுக்குமிடையில் தேவையில்லாத கண்டதையும் எழுதி ப்ளாப்பி மற்றும் ஹார்ட் டிஸ்கை உதவாமல் போகச்செய்து விடும் சி பிரெய்ன் வைரஸானது 1989ஆம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள டொலாவாரே பல்கலைக்கழகத்தில் 40க்கு மேலான கம்பியூட்டரை செயலிழக்கச் செய்துவிட்டது.

❒ இந்த வைரஸை எழுதியவர்கள் இரு பாகிஸ்தானிய சகோதரர்களான பாசித் அம்ஜத அலி ஆவர் இவர்கள் அமெரிக்கா பத்திரிகை ஒன்றிற்கு பேட்டியழித்தபோது இந்த வைரஸ் புரோக்கிராம் 1986ஆம் ஆண்டு எழுதப்பட்டது எனவும் இதனை விளையாட்டாகவே தங்களது நண்பர்களுக்குக் கொடுத்தோம் எனவும் கூறியுள்ளார்கள்.

❒ இந்த வைரஸ் முற்றாக அழிக்கப்பட்டு விட்டது என நம்பப்படுகின்றது

❒ இதைப் போலவே **face** என்ற தீங்கு விளைவிக்காத ஒரு வைரஸ்ம் உண்டு இந்த வைரஸ் புரோகிராமானது திரையில் சிறிய 5 முகங்களை இங்கும் அங்கும் ஓடவிடும் இந்த வைரஸ் செயற்பட்டால் மற்ற எந்த புரோகிராம்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தாது

❒ கணனி உலகில் எவ்வளவுக்கெவ்வளவு புதிய சொப்ட்வெயர்கள் தோன்றுகின்றதோ அந்த அளவுக்கு இணையாக புதிய வைரஸ்களும் உருவாக்கப்பட்டுவிடுகின்றது

❒ முன்னர் **exe com** மற்றும் **sys**பைல்களை மட்டும் தாக்கிக் கொண்டு வந்த வைரஸ் தற்போது டொக்கிமென் பைல்களையும் தாக்க ஆரம்பித்துவிட்டன.

❒ சில வைரஸ் புரோகிராம்கள் விளையாட்டாக எழுத பரவவிடப்படுகின்றன சில வைரஸ் புரோகிராம்கள் தொழிலாகவே எழுதி விடப்படுகின்றன இவ்வாறு நாளுக்கு நாள் வைரஸ்கள் வெவ்வேறான முறையில் வெவ்வேறு வழிகளில் செயற்படும்படி பரப்பிவிடப்படுகின்றன.

**கணனி அகராதி:**

| | |
|---|---|
| மென்பொருள்: | கணனி இயக்கத்திற்கு உதவும் செயற்திட்டங்கள் செயற்பாட்டு விதிகள் போன்றவை |
| வன்பொருள்: | கணனியின் இயந்திர அமைப்பில் சிலிக்கன்சிப்கள் பிரான்ஸ் யேர்மாகா பேர்டுகள் மற்றும் வயர்போன்றவை |
| சட்டம்: | கணனி தான் பெற்றுள்ள வசதிகளை திரையில் காட்டும் பட்டியல் |
| சுட்டி: | கணனி திரையில் உள்ள அம்புக்குறியை நகர்த்த பயன்படுத்தப்படும் கருவி |
| வட்டு: | தகவல்களும் செயற்திட்டங்களும் சேமித்துவைக்கப் பட்டுள்ள ஒரு சுழல் தட்டு |
| நினைவகம்: | தகவல்களைச் சேமித்து வைக்கும் உள்ளமைப்பு |
| அச்சுப்பொறி: | கணனியில் இருந்து அனைத்தும் கட்டுப்படுத்தும் இதயம் போன்ற அமைப்பு |
| வலைப்பின்னல்: | கணனிகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து அவற்றின் செயற்பாடுகளை பகிர்ந்து கொள்ளுமாறு செய்யும் முறை |
| பெய்ப்பு: | மூலத்தினை கணனிக்கு வழங்குவது |
| தரவு: | உண்மையான விடயங்களின் தொகுப்பு |
| நிகழ்ச்சித் திட்டம்: | விரும்பிய வேலை ஒன்றை செய்விப்பதற்கு கணனிக்கு வழங்கப்படும் படிப்படியான அறிவுறுத்தல்களின் தொடர் |
| தரவு செயன்முறை: | எத்தகைய தகவல் வெளியிடப்பட வேண்டும் என்ற இலக்குடன் தரவை ஒழுங்குபடுத்தும் கணனியின் வேலை தகவல் தரவினது ஒழுங்கமைக்கப்பட்ட கருத்துள்ள தொகுப்பு |
| பயப்பு: | செய்முறையின் அமைப்பாக்கம் பெற்ற தகவல்களை கணனியிலிருந்து பெறுதல் ஒரு தொகுதியாகவே கருதப்படும். |
| கணனித்தொகுதி: | நிகழ்ச்சித்திட்டங்களுடன் அடங்கிய பல இலத்திரனியல் பகுதிகளின் சேர்க்கையே கணனித்தொகுதியாகும். |

தரவு: ஒன்றை உள்வாங்கி ஞாபகம் என்ற அம்சத்தில் நிகழ்ச்சித் திரட்டாக அதை சேமித்து பின்னர் செயன்முறை ஒன்றை மேற்கொள்வதால் அத்தரவை ஒழுங்குபடுத்தி கருத்து மிக்க தகவலாக வெளிப்படுத்தப்படும் ஆற்றலுடைய இலத்திரனியல் கருவி கணனி ஆகும்.

**Password:** ஓர் ரகசிய மொழியாகும்.கணனிக்கு பாஸ்வேட்டை நிரு பித்த பின்னர் கம்பியூட்டரை இயக்கமுடியும். எவராவது ஒருவர் உங்களுடைய பாஸ்வேட்டை பற்றி அறிந்திருந் தால் பாஸ்வேட்களை அமைக்கும்போது எழுத்துக்களை வைத்துக் கொள்ளவேண்டும்

**Hardware:** ஒரு கணனியின் பௌதீக ரீதியாக அமைக்கப்பெற்ற சகல உறுப்புக்களுக்கும் காட்வெயர் அமைப்பாகும்.

**Livewen modem:** கணனி அமைப்புடன் தொடர்புடைய சகல நபர்களையும் குறித்து நிற்கும் கணனியை ஒரு அனலொக் தொலைத் தொடர்புடன் இணைக்க உதவும் சாதனம்

திரைக்கொப்பிகள்: பழைய திரைகள் ஒரு காட்டியானது அதிக நேரத்திற்கு அப்படியே மாறாமல் இருத்தல் இப்படித்திரை கெடுவதைத் தடுக்க உலவவிடலாம்.

**E-mail:** இது இணையத்தின் வரவால் கிடைத்த ஒரு வசதியாகும். இதன்மூலம் ஒரு கணனியில் இருந்து இன்னொரு கணனிக்கு தகவல்கள் கடிதங்கள் மாற்றும் படங்களை பிரிமாற்றிக்கொள்ளலாம்.

**Commonly Operating Machine Purpose Used For Trade Education And Research. (Computer)**

**Global System of Mobile Service.**

# இலத்திரனியல் வணிகம்

க.மயூரப்பிரியா
2006 A/L Com

**இலத்திரனியல் வணிகம் எதற்காகப் பயன்படுத்துகின்றனர்:**

உலகம் முழுவதும் நீங்கள் சொல்வதைக் கேட்பதற்குத் தயாராய் இருக்கிறது. நவீன தகவல் தொழில்நுட்பம் வளர்ந்துள்ள நிலையில் நீங்கள் விரும்பியதைப் பெறலாம். மற்றவர்களுக்கும் கொடுக்கலாம். கிடைக்கும் இடத்தில் வாங்கித் தேவைப்படும் இடத்தில் கொடுக்கும் சேவைதான் வணிகம் என்பதற்குரிய வரைவிலக்கணம். மாறிவரும் சூழ்நிலைகளில் வணிகத்தை புதிய கோணத்தில் அணுக வேண்டி இருக்கின்றது.

முன்னைய முறைகளை பின்பற்ற முடியாத சூழ்நிலை ஒருபுறம். இன்னொரு புறம் உலகம் செல்லும் வேகத்திற்கேற்ப நாமும் சென்றாக வேண்டும். அதற்கு புதிய கண்டுபிடிப்புக்களைப் பயன்படுத்த தெரிந்து கொள்ள வேண்டும். கால காலமாக இருந்து வந்த வணிக முறைகள் மாறி இன்டர்நெட் யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

மனித இன மேம்பாட்டிற்கும் பயன்படுத்தாத எந்த ஒரு கண்டுபிடிப்பாலும் யாருக்கும் பயனில்லை. அதே போல் புதிய கண்டுபிடிப்புக்களைப் பயன்படுத்தத் தெரியா விட்டாலும் அத்தகையவர்களால் பயன் இல்லை. இந்த இரண்டிற்கும் பதில் சொல்லும் கண்டுபிடிப்பாக இன்டர்நெட் உருவாக்கப்பட்டுள்ளது.

இன்டர்நெட்டைப் பயன்படுத்தினால் இன்னும் அதிகமான வாடிக்கை யாளர்களை மிகக் குறைந்த நேரத்தில் சென்று அடையலாம். வேகம் ஒரு நன்மை என்றால் செலவு மிகவும் குறைவாக இருப்பது இன்னொரு நன்மை. கார் காத்துக் கொண்டிருக்கிறது என்னும் போது அதை விட்டு விட்டுக் கால்நடையாக நடந்து போகிறேன் என்று ஒருவர் சொல்வது எவ்வளவு மதியீனமாக தெரியுமோ அதே மாதிரித்தான் இன்டர்நெட் வழியே செய்யப்படும் இணைய வர்க்கம் என்னும் மின் வணிகம் இருக்கும் போது இன்னும் பழைய முறையிலேயே வணிகம் செய்வது.

புதுமை வரும் போது அதனை பின்பற்றுபவர்களால் தான் உலகை வெல்ல முடியும். உங்களுக்கும் உலகை வெல்லும் ஆசை இருக்கிறது தானே? பிறகென்ன? இப்போதே செல்லுங்கள்.

இன்டர்நெட் ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் அற்புதமான வாய்ப்புத்தான் இந்த இணைய வர்த்தகம். இதை பல்வேறு பெயர்களில் குறிப்பிட்டாலும் அடிப்படை ஒன்று தான். இது நவீன உத்தி, வேகமானதுடன் செலவு குறைவானது. எல்லாவற்றிற்கும் மேலாக இனிமேல் எல்லா வர்த்தகமும் இப்படித்தான் நடக்கப் போகிறது. இது படித்தவர்களிற்கு மட்டும்தான் என்றோ பணக்காரர்களுக்கு மட்டும் தான் என்றோ யாரும் தனிமைப்படுத்தவும் முடியாது. எல்லோருக்கும் ஏற்றது.

மின் வணிகம் எல்லோருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய சேவைகளை வழங்குகின்றது. கடைக்குச் சென்றுதான் பொருட்களை வாங்க வேண்டும்

என்பது இல்லை. வீட்டில் இருந்து கொண்டே என்ன வேண்டுமோ வாங்கிக் கொள்ளலாம்.

இருந்த இடத்தில் விட்டு நகராமல் எந்தக் கடையில் எந்தப் பொருள் விலை குறைவாக விற்கப்படுகிறது என்று பார்க்கலாம். ஒப்பிடுவதன் மூலம் அங்கு விலை குறைவாக கிடைக்குமோ அங்கேயே வாங்கிக்கொள்ளலாம்.

மின் வணிகத்தில் உள்ள இன்னொரு வசதி என்னவெனில் இந்த முறையில் பொருட்களை வாங்குவதற்கு நேரம் காலம் என்பதெல்லாம் இல்லை 24 மணி நேரமும் ஒரு கடை திறந்து இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். இந்த வசதி இதில் கிடைக்கும்.

வருடத்தில் 365 நாட்களிலும் வாங்கலாம். விடுமுறை என்பதே கிடையாது உலகில் எந்த மூலையில் எது விற்றாலும் அங்கிருந்து வேண்டுமானாலும் வாங்கி விடலாம். மிகச்சிறிய பேனா வாங்குவதாக இருந்தாலும் பெரிய ஒரு விமானத்தையே வாங்குவதாக இருந்தாலும் பணத்தை கொண்டுபோய் நேரில் கொடுக்க வேண்டியதில்லை. எல்லாம் வங்கிக்கணக்கின் மூலமே கொடுத்த விடலாம்.

இன்னும் கொஞ்சக் காலம் போனாலும் யாரும் ரூபாய் நோட்டை கண்ணால் பார்க்காமலேயே தேவைப்பட்டதை வாங்கமுடியும். பணம் என்பது இப்போது உள்ள வடிவத்தை இழக்கப் போகிறது.

தனிநபர், குடும்பம் எனக் கொஞ்சம் கொஞ்சமாய் வாங்குவதைத் தவிர பெரிய நிறுவனங்கள் தங்களுக்கு வேண்டிய பல பொருட்களை இலட்சக் கணக்கில் கோடிக்கணக்கில் வாங்கும் வழக்கம் இருக்கிறது. இனி இவை எல்லாமே மின் வணிகத்திற்கு மாறிவிடும். மீண்டும் மீண்டும் ஒரே மாதிரியான காகிதப் படிவங்களில் கணக்கு எழுதிக் கொண்டிருக்க வேண்டாம்.

இதுவரை யாரும் நினைத்துப் பார்த்தே இராத பல சேவைகள் புதிது புதிதாய் இன்டர்நெட்டில் வந்து கொண்டே இருக்கின்றன. உங்களுக்கே தோன்றும் யோசனை ஒன்று கூட இந்த உலகத்தை உன்னதமாக மாற்றக் கூடியதாக இருக்கும். அதை எப்படி செயற்படுத்தப் போகிறீர்கள் என்பதற்கு முன்னோடியாக மின் வணிகத்தில் அனைத்தையும் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறீர்கள் அப்டித்தானே?

நீங்கள் விரும்பியது நடக்கும் நினைத்ததும் கிடைக்கும்.

**தொடக்கம் வளர்ச்சி:**

மின் வணிகம் எப்படி வந்தது என்பதை தெரிந்து கொள்ளுமுன் இன்டர்நெட் என்னும் இணையம் எப்படி வந்தது என்பதை தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் 1960களில் அமெரிக்க இராணுவம் தனது இரகசியத் தகவல்களை எத்தகைய பேரழிவு வந்தாலும் சேதமில்லாமல் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக வழிமுறைகளை ஆராய்ந்தது.

இதற்காக அவர்கள் கம்பியூட்டர்கள் மற்ற கம்பியூட்டர்களுடன் பேசிக்கொண்டு தகவல்களைப் பரிமாறிக் கொள்கின்ற விதத்தை ஒத்த செயற்பாட்டை வெற்றிகரமாக நிகழ்த்திக் காட்டினார்கள். இன்டர்நெட் இப்படித்தான் 1969இல் சிறிய அளவில் செயற்படத் தொடங்கியது.

File களைக் கம்பியூட்டர்கள் பரிமாறிக்கொள்ளும் முறை எளிதாக்கப்படவே தகவல் பரிமாற்றம் வேகம் எடுத்தது. அப்போது கூடக் கம்பியூட்டர்கள் சாதாரண மனிதன் வாங்கக் கூடிய விலையில் கிடைக்கவில்லை. கம்பியூட்டரின் விலை இறங்கி வருவதற்கு 1980களில் தான் வாய்ப்பு வந்தது. கம்பியூட்டர்களின் எண்ணிக்கை அதிகமாக ஆக அவற்றிடையேயான தகவல் பரிமாற்றங்களும் வளர்ந்தன.

1989இல் கம்பியூட்டர்கள் மூலமாக கடிதங்களை அனுப்பும் முறைக்கு அமெரிக்காவில் அனுமதி அளித்தார்கள். காகிதத்தில் எழுதி அனுப்பும் கடிதங்கள் போய் E-mail எனப்படும் கம்பியூட்டர்கள் வழிக் கடிதங்கள் முன் னெப்போதுமில்லாத வேகத்தில் தகவல்களை அனுப்பவும் பெறவும் உதவின.

இந்தக் கால கட்டம் வரை கம்பியூட்டர்களை இணைத்துத் தகவல்களைப் பரிமாறிக் கொள்வது அமெரிக்காவின் தேசிய அறிவியல் கழகத்தின் உரிமை ஆகவே இருந்து வந்தது. ஆராய்ச்சி, கல்வி, ஆகிய துறைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்த மின்னஞ்சலைத் தனியாரும் பயன்படுத்தலாம் என்று அனுமதி அளித்தார்கள்.

இது நடந்தது 1991இல் கம்பியூட்டர்களை இணைக்கும் வலைப்பின்னலை அமைத்து இயக்கிப் பராமரிக்கும் பொறுப்பை தனியார் வசம் விடுவதற்கு 1995இல் அமெரிக்கா அரசு முன் வந்தது. இதனால் இன்டர்நெட் என்பது யாரோ தனியார்களுக்குச் சொந்தமானது என்று நினைத்து விட வேண்டாம்.

எல்லோருக்கும் சொந்தமான ஒரு பொதுச்சொத்து இருந்தால் எப்படி இருக்கும் இதுதான் இன்டர்நெட் இதைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை வளரத்தொடங்கி இன்று வணிகத்தில் வந்து நின்றிருக்கின்றது.

கம்பியூட்டர்களை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வருவதாலேயே தகவல் போக்குவரத்திற்கு அஞ்சல் துறையை நம்பி இராமல் கம்பியூட்டர் மூலமே கடிதங்களை அனுப்பும் முறை வேகம் பிடித்து வருகிறது.

கம்பியூட்டர்கள் தங்களிடையே தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் தொடர்புடைய தகவல்களைத் தேடிப்பிடிக்கவும் வசதியான ஏற்பாடுகள் உருவாகின. இதில் டின்பர்னர்ஸ்லீ, மார்க் ஆண்ட்டீசன் போன்றவர்களுடைய பங்களிப்பு முக்கியமானது Microsoft நிறுவனம் இந்தத் துறையில் தனது இன்டர்நெட்டின் வளர்ச்சிக்கு அடிகோலியது.

வணிக நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் திரும்பத் திரும்ப ஒரே மாதிரியான எழுத்து, கணக்கு வேலைகளை செய்ய வேண்டி இருக்கும். இவற்றை எல்லாம் மின்னனு முறைக்கு மாற்றி விடுவதால் வெகு வேகமான செயற்பாடுகள் சாத்தியமானவை அமெரிக்க அரசே இதை உணர்ந்திருக்கிறது.

1993இல் ஜனாதிபதி பில்கிளின்டன் தனது அறிக்கையில் இதைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க அரசு ஆண்டுதோறும் 200 பில்லியன் மதிப்புள்ள பொருட்களை வாங்கிக் கொண்டிருக்கின்றது இதனால் அதிகாரிகள் வேண்டுமென்றே காலங்கடத்துவதனால் அமெரிக்க அரசிற்கு ஏராளமாக செலவு ஏற்படுகிறது.

மின் வணிகம் அரசின் ஆதரவோடு வளர்ந்தது என்று கூடச்சொல்லலாம் கொள்முதல் செலவை குறைக்கவும் நடவடிக்கைகளை விரைவு படுத்தவும் வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்தவும் மின்னனு வணிகத்தை அதிகரிப்பதே சிறந்த வழி என்கிறார் பில்கிளின்டன் அமெரிக்காவுக்கே அப்படி ஒரு என்னும்போது மற்ற நாடுகளைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வணிகம், பொருளாதாரம், மக்களின் வாழ்க்கைத்தரம் எல்லாவற்றையும் மேம்பாடு அடையச் செய்வதுதான் மின் வணிகத்தின் அடிப்படை நோக்கம். இதை உலகின் எல்லா நாடுகளும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன.

எல்லைகள் இல்லா உலகம் என்பது ஏட்டளவில் இல்லாமல் நடைமுறைக்கு வருவதற்கு மின் வணிகத்தின் பின்னணியிலுள்ள அறிவியல் கண்டுபிடிப்புக்கள் பெரிதும் உதவியிருக்கின்றன. அவற்றை பயன்படுத்தலாம்.

**இன்றைய நிலை:**

வணிகம் மின்னனு வர்த்தகமாக மாறியதால் ஏற்பட்டுவரும் மாறுதல்கள் அளவிட முடியாதவை. பெரும் வணிக நிறுவனம் என்றால் அது நிறைய மூலப்பொருட்களை வாங்கி இருப்பு வைக்கவேண்டும். செய்து முடித்த மூலப்பொருட்களையும் அதிக எண்ணிக்கையில் தயாராக வைத்திருக்க வேண்டும். இவ்வாறு இருந்தால் தான் வணிகத்தில் வெற்றிபெற முடியும் என்று இருந்தது பழையகாலம். இன்னும் எட்டுமுதல் பத்து ஆண்டுகளிற்குள் இப்போதுள்ள தொழில்களில் 70% இல்லாமல் மறைந்து போகும் என்கிறார்கள்.

வாடிக்கையாளர்கள் தங்களது தேவைகளைப் பெறுவதற்கு எவ்வளவு விலை வேண்டுமானாலும் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். அவர்கள் விரும்புவதெல்லாம் நல்ல தரமான பொருட்கள் மற்றும் சேவையைத்தான்.

**Online** விற்பனை எனப்படும் இன்டர்நெட் வழி வர்த்தகத்தில் அதிக அளவு வாடிக்கையாளர்களை வெகுவிரைவில் பிடித்துவிட முடியும் என்பது வணிகம் வளர்வதற்கு காரணமாக இருக்கிறது அதே நேரத்தில் எதற்கெடுத்தாலும் இன்டர்நெட் நிறுவனம் என்னும் போக்கும் வெளிநாடுகளில் வளர்ந்து வருகிறது.

எப்படியாவது தக்களுடைய கவனத்தைத் தங்கள் பக்கம் திருப்பியே ஆக வேண்டும் என்று இன்டர்நெட் வழி வர்த்தக நிறுவனங்கள் முயல்கின்றன. இதற்காக கோடிக்கணக்கில் செலவு செய்து வருகிறார்கள். முதல்முறையாக இன்டர்நெட்வழி வர்த்தகத்தை ஆரம்பித்த அமேசன் டொட்கொம் நிறுவனமே இன்னும் இலாபம் சம்பாதிக்கத் தொடங்கவில்லை.

கம்பியூட்டர்களை இணைக்கும் கம்பிகளுக்கு தேவை இல்லாத நிலை வந்துவிட்டது எங்கு வேண்டுமானாலும் இன்டர்நெட்டைப் பிடிக்க வசதியாக லப்டொப் கம்பியூட்டர்கள் வந்துவிட்டன தொலைபேசி இணைப்பு இருந்தால் தான் இன்டர்நெட்டில் இணைய முடியும் என்பதும் பொய்யாய்ப் போனது.

இணைய வர்த்தகம் பற்றிய விழிப்புணர்வு எல்லா நாடுகளிலும் பரவி வருகிறது. எல்லாத் தொழில்களிலும் இதன் தாக்கத்தை உணரமுடிகிறது எதற்கெடுத்தாலும் டொட்கொம் மயமாக இன்டர்நெட் வழி வர்த்தக நிறுவனங்கள் பெருகி வருகின்றன.

இன்டர்நெட் வர்த்தகம் பெருகி வரும் வேகம் எல்லாரையுமே ஆச்சரியப்பட வைக்கிறது. இன்டர்நெட் இணைப்பை எளிதாக்குவதற்கு **Bandwidth** எனப்படும் அலை அகலம் அவசியமாகிறது. இதைப் புரிந்து எளிமையான உதாரணம் சொல்ல வேண்டுமானால் வீட்டிற்கு வரும் நீர்ப்பாசன திணைக்கள நன்நீர் கொண்டுவரும் குழாயைச் சொல்லலாம்.

பெரிய குழாயாக இருந்தால் நிறை நீர் கிடைக்கும் என்பது மாதிரி பேன்ட்விட்த் அதிகமாக இருந்தால் இன்டர்நெட் இணைப்பும் வசதியாகவும் விரைவாகவும் அமையும். இதற்காகச் செயற்கைக்கோள் இணைப்பு கடலுக்கு அடியில் போடப்படும் கம்பி இணைப்பு என்று பல விதங்களில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கெல்லாம் அதிக பணம் செலவாகும். ஆனால் இந்த **Bandwidth** பற்றிய விதி ஒன்று வினோதமாக இருக்கிறது.

பில்டரின் விதி என்று சொல்கிறார்கள் இதன்படி ஒவ்வொரு வருடமும் எந்தக் கூடுதல் செலவும் இல்லாமலேயே **Bandwidth** மூன்று மடங்காகிறது. எமது நாட்டிலும் இன்டர்நெட் நிறுவனங்கள் பதிவு செய்யப்படும் வேகம் அதிகரித்து கொண்டே வருகிறது.

**எதிர்காலம்:**

அறிவியலின் ஒவ்வொரு கண்டுபிடிப்பும் அதற்கு முன்பு இருந்த பழக்க வழக்கங்களை முற்றிலுமாக மாற்றி வருவதாக இருந்து வந்திருக்கிறது நீராவி இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட போது குதிரை வண்டி வைத்திருந்தவர்கள் தங்கள் பிழைப்புப் போய்விடுமே என்று போராட்டம் நடத்தி இருக்கிறார்கள்.

கணனிகள் அறிமுகமானபோது அதிகமான வேலை இழப்பு ஏற்படும் என்று தொழிலாளர்கள் போராட்டம் நடத்தினார்கள் தொலைக்காட்சி வந்ததும் திரைப்படம் அவ்வளவுதான் என்று அழுது புலம்பினார்கள். ஆனால் உண்மையில் என்ன நடந்தது.

பெரும்பாலான கண்டு பிடிப்புகள் அதற்கு முன்பு இருந்த கண்டுபிடிப்புக்களை முற்றிலும் அழித்து விடவில்லை இன்றும் சொல்லப்போனால் அவற்றை மேலும் செம்மைப்படுத்துவதாகவே அமைகிறது.

தொலைக்காட்சியில் திரைப்படத்தொழில் அழிந்து விடும் என்பதெல்லாம் பொய் ஆகிவிட்டது திரைப்படங்களைச் சார்ந்தே தொலைக்காட்சி இயங்கும். சூழ்நிலை நிலவுகிறது எதுவுமே புதிதாக அறிமுகமாகும் போது மக்களிடையே ஒரு வித மிரட்சி காணப்படுவது இயல்பு.

கம்ப்யூட்டர்களும் அவை தொடர்பான தொழில்களும் பெரும்பாலானவர்கள் வேலை இழக்கச் செய்வது உண்மை. அதே நேரத்தில் இதுவரை யாரும் கனவில் கூட நினைத்துப் பார்த்திராத பல வேலைகள் இப்போது இருக்கின்றன வாழ்க்கை வசதிகள் பெருகி இருக்கின்றன.

செலவு குறைவாகவும் சுகங்கள் அதிகமாகவும் ஆகி மனிதனை சொகுசான வாழ்க்கைக்குப் பழக்கப்படுத்தி இருக்கின்றன. நாடுகளிடையே பயணம் கலாச்சாரப் பரிமாற்றம் என்பதையெல்லாம் முன்னெப்போதும் இல்லாத அளவில் வேகமாகப் பரவி வருகின்றது இதனால் கலாச்சாரச் சீரழிவு ஏற்படுகிறது.

ஒரு கண்டு பிடிப்பினால் தொல்லை என்று ஏற்பட்டால் வேறு ஒரு கண்டுபிடிப்பு அதற்குத் தீர்வாக ஆகிவிடுகிறது. லவ்பக் என்னும் வைரசால் கோடிக்கணக்கான பொருள் இழப்பும் மனித உழைப்பு வீணானதும் ஏற்பட்டது. கம்பியூட்டர்களில் குறும்பு செய்பவர்கள் ஒருபுறம் இவ்வாறு நாச வேலைகளை செய்வார்கள்.

வேறு ஒருபுறம் இவ்வாறு நாச வேலைகளை செய்பவர்களை மடக்குவதற்கான வழிமுறைகளும் உண்டு. பிடிபட்டுக் கொண்டு வருகின்றன பாதுகாப்பு இல்லாதது என்று கருதப்பட்ட இ. கொமர்ஸ் பாதுகாப்பானதாகி விட்டது.

இ.மெயிலை யாரும் எதிர்க்கவில்லை என்பதே நல்ல அணுகுமுறைதான் இல்லாவிட்டால் வழக்கமான அஞ்சல் சேவைகளையே நம்பிக்கொண்டிருக்க வேண்டி இருக்கும் அதுவே நத்தை வேகத்தில் போவதாக அமெரிக்காவில் கேலி செய்து கொண்டிருக்கிறார்கள்.

தொலைபேசி இணைப்பு இருந்தால்தான் இன்டர்நெட்டைப் பிடிக்க முடியும் என்ற நிலையைக் கடந்து வந்து விட்டோம் கம்பியூட்டர்களை கையடக்க எங்கும் எப்போதும் எடுத்துச் செல்வது எளிதாகி விட்டது அவ்வாறு எடுத்துச் செல்லக்கூடிய கம்ப்யூட்டர்களையும் எவ்வித இணைப்பும் இல்லாமல் பயன்படுத்த முடியும்.

பூமிப்பந்தின் எந்த மூலையில் வேண்டுமானாலும் இருந்து கொண்டு விற்கலாம் வாங்கலாம் என்பது வெளிநாடுகளில் சாதாரணமாகி விட்டது இன்னும் வேகமாக திறமையாக, எளிமையாக, செலவு குறைவாக எதையும் செய்ய வேண்டும் என்பதே நோக்கமாக இருக்கிறது.

அச்சடித்த தாளை ஒளி நகல் எடுப்பது போல ஆட்களையே பிரதி எடுக்கும் விந்தைகளை அனுமதிப்பதா? வேண்டாமா? என்று விவாதம் நடந்துகொண்டிருக்கிறது கத்தி இன்றி இரத்தமின்றி இப்போதுதான் உண்மையிலேயே யுத்தம் ஒன்று நடந்து கொண்டிருக்கிறது பேரழிவுகளைக் கைவிரல் நுனியால் தட்டிவிட முடிகிறது.

மனிதன் பூமியைத் தாண்டி மற்றக் கோளுக்கும் தகவல்களை அனுப்பவும் பெறவும் முயன்று வருகின்றான் வருங்காலத்தில் நீங்கள் காலையில் சென்று சந்திரனில் இறங்கி அங்கிருந்து வியாழனுக்கு மின்னஞ்சல் அனுப்பலாம். வீட்டிலிருந்து வீதியில் எங்கோ ஒரு இடத்தில் இருக்கும் தொலைபேசி மையத்திற்கு செல்வது போல் இதுவும் ஆகிவிடும் தொழிற்சாலைகள் தொடர்ந்து இயங்கமாட்டா.

ஒரே பொருளை ஒரே மாதிரி செய்து கொண்டிருக்கும் ஆலைகள் இல்லாமல் போய்விடும் ஒவ்வொருவருக்காக பலா மரப்பட்டைகளில் ஆடைகளுக்கான துணி நெய்யப்படலாம் இன்னொருவர் வந்து மாமரப்பட்டையில் சட்டை கேட்கலாம் இன்னொருவர் பிளாஸ்டிக் அரிசி கேட்கலாம் அதில் பிரியாணிவாசம் இருக்கட்டும் என்பார்.

ஒவ்வொரு தேவைகளையும் உடனுக்குடன் நிறைவேற்றுகின்ற இவை வீட்டிற்கு உள்ளேயே வரலாம் கணனியை வந்த ஒரு பெட்டி என்னென்னவோ செய்யலாம் தொழில் வர்த்தகம் என்ன ஆகும்? இப்போது போல் இருக்காது இதுவரை நினைத்துப் பார்த்திராத அளவு அதிகமாக வளரும் வளர்ந்தே ஆக வேண்டும்.

# பங்குச் சந்தை
## [SHARE MARKET]

செ.பிறேமினி
2005A/L Com

வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியின் பங்குகள் கொள்வனவு, விற்பனை இடம்பெறுவது தொடர்பான சந்தை பங்குச்சந்தை எனப்படும்.

மூலதனச்சந்தையின் மிகப் பிரதான அமைப்பு பங்குச்சந்தையாகும்.

**இலங்கை பங்குச் சந்தையின் வரலாறு:**

| ஆண்டு | நிகழ்வு |
|---|---|
| 1896 | பங்குதரகர் சங்கம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. |
| 1904 | பங்குதரகர்சங்கம் கொழும்பு தரகர் சங்கம் என பெயர் மாற்றப்பட்டது. |
| 1984 | கொழும்பு பங்குத்தரகர் சங்கத்திற்கெதிரான வரையறுத்த பங்கு தரகர் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. |
| 1985 | கொழும்பு பங்குத்தரகர் சங்கமும், வரையறுத்த பங்குத் தரகர் சங்கமும் ஒன்றாக இணைக்கப்பட்டு கொழும்பு ஆவணமாற்று உத்தரவாத லிமிற்டெட் உருவாக்கப்பட்டது. |
| 1987 | கொழும்பு பங்குச் சந்தையை மேற்பார்வை செய்து கட்டுப்படுத்து வதற்காக தேசிய பிணையங்கள் பேரவை என்ற அமைப்பு உரு வாக்கப்பட்டது. |
| 1990 | கொழும்பு ஆவணமாற்று உத்தரவாத லிமிற்டெட் வரையறுத்த பங்குப்பரிமாற்று லிமிற்டெட் என பெயர் மாற்றப்பட்டது. இதுவே தற்பொழுது இலங்கைப் பங்குச் சந்தையைக் கட்டுப்படுத்துகிறது. |
| 1991 | தேசிய பிணையங்கள் பேரவையானது கூடிய அதிகாரங்களுடன் ஆவணசபையும் பரிமாற்று சபையும் என பெயர் மாற்றப்பட்டது. இதுவே இலங்கை பங்குச்சந்தையை மேற்பார்வை செய்து கட்டுப்படுத்துவதாகும். |

**வியாபாரத் தளம்:**

பங்குச் சந்தையில் பங்குகளை விற்பதற்கும் வாங்குவதற்குமென ஒதுக்கப்பட்ட இடம் வியாபாரத்தளம் என அழைக்கப்படும்.

இலங்கையில் பங்குச்சந்தை செயற்பாட்டு நேரமாக 9-30-12-30 மணி வரை உள்ளது. இவ்வியாபாரத் தளத்தில் 15 தரகர் நிறுவனங்கள் செயற்படுகிறது. பங்குச்சந்தையில் எந்தவொரு செயற்பாடும் நேரடியாக மேற்கொள்ள முடியாது. தரகர் ஊடாகவே மேற்கொள்ள வேண்டும் இந்த வியாபாரத் தளத்தில் முக்கியமாக 2 கட்சிக்காரர் தொழிற்படுவர்.

i. பங்கு முதல்
ii. பங்கு முதல் வர்த்தகர்

**கொழும்பு பங்குச் சந்தையில் கைமாற்றப்படும் ஆவணங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| i. | சாதாரண பங்கு | iv. | முன்னுரிமைப் பங்கு |
| ii. | தொகுதிக் கடன்கள் | v. | அரச பிணைகள் |
| iii. | திறைசேரி உண்டியல் | vi. | பங்கு ஆணைப் பத்திரம் |

**பங்குத் தரகர்:**

பங்குகளை வாங்க விரும்புபவர்களையும் விற்க விரும்புபவர்களையும் இணைத்து வைத்து பங்கு வியாபாரம் இடம்பெற உதவுபவர் பங்குத் தரகர் ஆவார்.

eg: ஜோன்ஸ் கீல்ஸ் பங்குத்தரகர் கம்பனி
சீரிசிமித் பங்குத்தரகர் கம்பனி
பாட்லீற் மெலறி பங்குத்தரகர் கம்பனி
சிலிங்கோ பங்குத்தரகர் கம்பனி

**பங்கு முதல் வர்த்தகர்:**

பங்குச் சந்தையிலே பங்கைக் கொள்வனவு செய்பவர்களையும் விற்பனை செய்பவர்களையும் பங்குமுதல் வர்த்தகள் என அழைப்போம். இவர்கள் முக்கியமாக 2 நோக்கமுடையவர்கள்.

i. முதலீட்டு நோக்கம்
ii. ஊக வியாபாரிகள்

பங்குகளை வாங்கி வைத்திருந்து பங்குலாபம் உழைப்பதை நோக்கமாகக் கொண்டவரை முதலீட்டு நோக்கம் உடையவர் என்பர்.

எதிர்பார்க்கையடிப்படையில் பங்குகளை வாங்கி விற்று மூலதன லாபம் உழைப்பதை நோக்கமாகக் கொண்டவர்களை ஊக வியாபாரிகள் என்பர். இவர்கள் முக்கியமாக 3 வகைப்படுவர்.

i. காளைகள்
ii. கரடிகள்
iii. கலைமான்கள்

**காளைகள்:**

எதிர்காலத்தில் பங்கின் விலை கூடும் எனக்கருதி தற்பொழுது பெருமளவான பங்கினைத் தெரிவு செய்து வைத்திருப்பவரைக் காளைகள் என்பர். இவர்கள் பங்குச் சந்தையிலே பங்குகளுக்குக் கேள்வியை ஏற்படுத்துவர்.

**கரடிகள்:**

எதிர்காலத்தில் பங்கின் விலை குறையும் எனக் கருதி தற்போது தம் வசமுள்ள பங்கினை விற்பனை செய்பவரைக் கரடிகள் என்பர்.

இவர்கள் பங்கின் சந்தையில் பங்குகளுக்கு நிரம்பலை ஏற்படுத்துவர். இலங்கையின் பங்குச் சந்தையானது தற்போது தொடர்ச்சியான வீழ்ச்சியைக்

காணமுடியும். இதற்கான காரணங்கள்:

i. நாட்டிலிருக்கும் அரசியல் ஸ்திரமின்மை
ii. உள்நாட்டு யுத்தம் தொடர்பான அபாயம்
iii. உலகப் பொருளாதார மந்தம்
iv. விலை கூறப்பட்ட கம்பனிகளின் பொருளாதார மந்தம்
v. சர்வதேச நெருக்கடிகள்

**கலைமான்கள்:**

இவர்கள் 1ஆம் தர பங்குச்சந்தையுடன் தொடர்புபட்டவர்கள். அதாவது வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனிகளின் பங்கை விற்பனை செய்யும் போது பெருமளவு பங்கிற்கு விண்ணப்பம் செய்யும் ஒதுக்கும் செய்வர். பின் அவற்றின் உரிமையே வேறு நபருக்கு மாற்றிக் கொடுப்பதன் மூலம் பெருமளவு மூலதன இலாபத்தை உழைக்கும்.

**பங்குச் சந்தையின் வகைகள்:**

**1. 1ஆம் தர பங்குச்சந்தை:**

கம்பனி ஒன்றின் பங்குகள் முதன் முதலாகப் பங்குச்சந்தையூடாக விற்பனை செய்தல் 1ஆம் தர பங்குச்சந்தையாகும். இங்கு கொள்வனவு மட்டுமே இடம்பெறும். தரகர்கள் பெருமளவில் தொடர்புபடுவதில்லை.

**2. 2ஆம் தர பங்குச் சந்தை:**

1ஆம் தர சந்தையூடாக விற்கப்பட்ட பங்குகள் ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகள் அதன் முதலீட்டாளரிடையே மீண்டும் தரகர்களுடாக கொள்வனவு, விற்பனை செய்வதை இடம்பெறும் சந்தை இதுவாகும். கொழும்பு பங்குச் சந்தையானது ஒரு 2ஆம் தர பங்குச்சந்தையாகவே செயல்படுகிறது.

**கொழும்பு பங்கு பரிமாற்று லிமிட்டெட்:**

1985ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கொழும்பு ஆவணமாற்று உத்தரவு லிமிட்டெட் என்பதே 1990ஆம் ஆண்டு தொடர்ந்து கொழும்பு பங்கு பரிமாற்று லிமிட்டெட் ஆக பெயர் மாற்றப்பட்டது. இதுவே இலங்கையின் பங்குச் சந்தையாகவும் தற்போது செயற்பட்டு வருகிறது.

இது தற்போது தனது செயற்பாட்டு நேரத்தை 9-30 மணியிலிருந்து 12-30 மணியாக மாற்றியுள்ளது. இலங்கையின் பங்குச் சந்தையை செயல்படுத்துகின்ற அமைப்பாகவும் இதுவே உள்ளது. இந்த அமைப்பில் தற்போது 15 தரக நிறுவனம் பதிவு செய்துள்ளது.

பங்குச் சந்தையில் தமது பங்குகளை விற்பனை செய்வதற்கு விரும்புகின்ற எந்த வரையறுக்கப்பட்ட கம்பனியும் தனது கம்பனியை பங்குச்சந்தையில் பட்டியலிடுவதற்கான அனுமதியினை இதனிடமே பெற வேண்டும். அங்கத்துவ நிறுவனங்களாலும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளினாலும் செலுத்தப்படும் கட்டணங்கள் பங்கு பரிமாற்று லிமிட்டெட்டின் பிரதான வருமான மூலமாகும். பங்கு பரிமாற்று லிமிட்டெட் தொழில் முயற்சியாளர்கட்கு தேவையான நிதியினைப் பெற்றுக்கொள்ள உதவும் அதே வேளை முதலீட்டாளர்களின் நலன்களையும் பாதுகாக்கிறது.

### பங்குச்சந்தை முதலீட்டாளர்கள்:

பங்குச்சந்தையில் கொள்வனவு, விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற தனிப்பட்டவர்களையும், நிறுவனங்களையும் முதலீட்டாளர்கள் என்பர். கொழும்பு பங்குச்சந்தையில் ஆறு வகையான முதலீட்டாளர்கள் பங்கு கொள்கின்றனர்.

i. தனிப்பட்டவர்கள் **[individuals]**
ii. அலகுப்பொறுப்பாட்சி நிறுவனம் **[unittrusts]**
iii. வெளிநாட்டு நிதியங்கள் **[Foreign funds]**
iv. வேறு உள்நாட்டு நிறுவனங்கள்
v. பிராந்திய நிதியங்கள் **[Regional funds]**
vi. நாட்டு நிதியங்கள் **[Country funds]**

### பங்குச்சந்தை வியாபார தளத்தில் பங்கு வியாபாரம் நடைபெறும் முறை:

பங்குச்சந்தையில் தற்பொழுது பங்குகள் கைமாற்றம் செய்யும் முறை தன்னியக்க வியாபார முறையாகும். இது திறந்த கத்தல் முறைக்குப் பதிலாகக் கொண்டு வரப்பட்டது.

இதன் பிரகாரம் பங்குகளைக் கொள்வனவு செய்ய விரும்புகிறவர்கள் தாம் கொள்வனவு செய்ய விரும்பிய பங்கின் விலை, பங்கின் எண்ணிக்கை, அப்போது கொள்வனவு செய்ய இருக்கிறேன் எக்கம்பனி பங்குகளை கொள்வனவு செய்வதாக தரகருக்கு எழுதிக் கொடுக்க வேண்டும். அதே போல் பங்குகளை விற்பனை செய்பவர்களும் எக்கம்பனி பங்கை என்ன விலைக்கு எப்பொழுது விற்பனை செய்ய தயார் என்ற விபரங்களை தரகருக்கு எழுதிக் கொடுக்க வேண்டும்.

இவை தரகரால் தமது கணனிக்கு உட்படுத்தப்படும். இவ்வாறு உட்படுத்தப்படும் விடயங்கள் மின்காந்த அலையூடாக பங்குச்சந்தையில் பங்குகளை விற்பனை செய்ய இருக்கின்ற மத்திய வங்கிக்கு மாற்றப்படும். இந்த செய்கையில் விற்பனையாளரது விற்பனை கட்டளையும் கொள்வனவாளரின் கொள்வனவு கட்டளையும் பொருந்தும். இவ்வாறு பொருந்துபவையே வியாபாரமாக மாறும். ஏதேனும் பிணக்குகள் இருந்தால் 3 தினங்களுக்குள் அறிவிக்கப்பட வேண்டும். வியாபாரமாக மாறுபவையே மத்திய வைப்பு திட்ட கணனியூடாக $T_5$, $T_6$ என்ற அடிப்படையில் கொள்வனவாளர் கணக்கில் கூட்டப்படும். விற்பனையாளர் கணக்கில் கழிக்கப்படும்.

### விலை கூறப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்வதனால் ஏற்படும் அனுகூலம்:

1. பங்குகளில் முதலீடு செய்வதனால் கம்பனி உழைக்கின்ற இலாபத்தி லிருந்து பங்குலாபமும், பங்கு விலை பங்குச்சந்தையில் அதிகரிப்பதனால் மூலதன மிகையும் கிடைக்கும்.

2. விலை கூறப்பட்ட கம்பனிகளின் பங்குகள் திரவத்தன்மை கூடியவை யாகும். ஏனைய சொத்துக்களைப் போலல்லாமல் நினைத்தவுடன் பங்குச் சந்தையில் விற்பனை செய்து பணத்தைப் பெறக்கூடியன.

3. நிலையான வைப்பு, சேமிப்பு வைப்பு, என்பவற்றின் வட்டி வருமானங்களை விட நீண்டகாலத்தில் கூடிய வருமானத்தை பங்குகளால் முதலீடு செய்வ தன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**பங்குச்சந்தை நடவடிக்கையின் மாற்றங்களுக்கான சில காரணங்கள்:**

1. **பணவீக்கம்:**

பணவீக்க வீதம் பங்கு சந்தை வளர்ச்சி வீதத்தை விட அதிகமாக இருக்குமாயின் பங்குகளில் முதலீடு செய்வதைவிட வேறு நிலையான சொத்துக்களில் நிர்ணயிக்கப்பட்ட வட்டி வீதங்களை கொண்ட நிலையான வைப்பு, சேமிப்புவைப்பு, திறைசேரி உண்டியல், தொகுதி கடன்கள் என்பவற்றில் முதலீடு செய்வது இலாபகரமானது. இதனால் பங்குச்சந்தையில் கொள்வனவு செய்வோரை விட விற்பனை செய்வோர் அதிகமாக இருப்பதனாலும் பங்குச்சந்தை குறிகாட்டி இந்நிலையில் வீழ்ச்சியடையும்.

2. **அரசின் மந்த போக்கு:**

இலங்கை அரசு பொதுக்கூட்டுத்தாபனங்களையும் நியதிச்சபைகளையும் தனியார் மயப்படுத்தல் தொடர்பாக கடைப்பிடிக்கின்ற மந்தபோக்கு பங்குச்சந்தை தொழிற்பாடுகளை மந்தமடையச் செய்யும்.

3. **பாதுகாப்பு நிலைமை:**

அதாவது யுத்த நடவடிக்கைகள் பங்குச்சந்தை நடவடிக்கைகளைப் பாதித்தல்

4. **வரவு செலவுத்திட்ட ஆலோசனைகள்:**

மூலதன மிகையினை மீண்டும் அறிமுகப்படுத்தல், கம்பனிவரி,விடுதலை கள், வரி விலக்கு என்பவற்றின் கம்பனிகளின் இலாபத்தன்மைக்கும் முதலீட்டாளர்களுக்கும் பணச்சந்தை வளர்ச்சிக்கும் பாதகமாகஅமை கிறது.

5. **வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்குபற்றல் குறைவு:**

சில காலங்களில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஏனைய ஆசிய நாடு களின் சந்தைகளினால் கவரப்படும் போது இலங்கை பங்குச்சந்தையில் மந்த நிலை காணப்படுகிறது.

6. **விலைகூறப்பட்ட கம்பனிகளின் விருப்பமின்மை:**

பங்குச்சந்தை மந்த நிலையிலுள்ளபோது ஏற்கனவே பட்டியலிடப்பட்ட கம்பனிகள் கூட தமக்குத் தேவையான மேலதிக நிதியினை பங்குச் சந்தையினூடாக நிதியீட்டம் செய்ய விரும்புவதில்லை.

7. **உல்லாசப் பிரயாண துறை:**

உல்லாச பிரயாணிகளின் வருகை குறைவடையும் போது உல்லாசப் பிரயாணதுறை, கம்பனிகளதும், ஹொட்டல்களினதும் பங்கின் விலை வீழ்ச்சியடைதல்.

8. **நாணயமாற்று வீதம்:**

இலங்கை நாணயமாற்று வீதத்தில் ஏற்படும் தளம்பலும் பெறுமதி வீழ்ச்சியும் பங்குச்சந்தையைப் பெரிதும் பாதிக்கின்றது. நாணயப் பெறுமதி இறக்கமும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

9. பொருளாதார வளர்ச்சி

10. அரசியல் ஸ்திரமின்மை

**பங்குச்சந்தையின் விருத்திக்காக அண்மைக் காலத்தில் கொண்டு வரப்பட்ட பயன்தரு திட்டங்கள்:**

1. வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியாகக் கொழும்பு பங்கு பரிமாற்று லிமிட்டெட் நிறுவப்பட்டமை
2. கொடுக்கல் வாங்கல்களை கணனி மயப்படுத்திப்பதிவு செய்ய மத்திய வைப்புத் திட்டமிடல் கம்பனி ஆரம்பிக்கப்பட்டது.
3. கட்டுப்பாடுகள் எதுவுமின்றி பங்குகளை கருமபீடத்தில் விற்பனை செய்யும் முறை அறிமுகம் செய்யப்பட்டது.
4. திறந்த ஏலமிடும் முறை ஒழிக்கப்பட்டு தன்னியக்க கணனி திரைமுறை அறிமுகம் செய்யப்பட்டது.
5. அரசதுறை நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்பட்டன.
6. பங்கு கொள்வனவு விற்பனையின் போது வரிவிலக்களிப்பு குறைந்த வரிகளை விதித்தமை
7. தனியார் துறைக்கும் வெளிநாட்டு துறைக்கும் வங்கிகளை நிறுவுவதற்கு வாய்ப்பளித்தமை
8. அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்களை உருவாக்கியமை
9. சட்டவிதிகளைத் தளர்த்தியமை

**பங்குச் சந்தையின் முக்கியத்துவம்:**

தனியார் துறையினரின் சேமிப்பையும் முதலீட்டையும் விரிவாக்க முடிதல்

கம்பனிக்குத் தேவையான நிதியினைப் பெற்றுக் கொடுத்தல்

விரும்பும் போது பணமாக்கக்கூடிய கருவியைக் கொண்டிருத்தல்

வர்த்தகதுறை, கைத்தொழில் துறை என்பனவற்றின் விருத்திக்கு உதவுதல்

வெளிநாட்டு முதலீடுகளையும் அன்னியச் செலவாணி வருகையும் ஏற்படுத்தல்.

**பங்குச் சந்தை எதிர்நோக்கும் பிரச்சனைகள்:**

1. 100 வருட ஆயுளை உடைய சந்தையிலே 16 துறைகளைச் சார்ந்த 235 பட்டியலிடப்பட்ட கம்பனிகள் மட்டுமே காணப்படல்.

2. இலாபம் உழைக்கும் நிறுவனங்களின் பங்குகள் குறைவாக இருத்தல்.

3. வங்கி வைப்புக்கள், திறைசேரி உண்டியல் போன்றன இலாபம் கூடியன வாய் அமைய பங்குச்சந்தையை நாடும் முதலீட்டாளர்கள் குறைவாக காணப்படுகின்றன.

4. கிராமப் புற மக்களுக்கு பங்குச்சந்தை பற்றிய அறிவின்மை

5. பங்குச்சந்தை வரி விதிப்புக்கள்

6. இலங்கையில் நிலையற்ற அரச கொள்கைகள்

7. போட்டித்தன்மை குறைவாகக் காணப்படல்

8. உள்நாட்டுப் போர்ச்சூழலும் முதலீட்டாளர்கள் பங்குச் சந்தை மீதுள்ள நம்பிக்கையின்மையும்

9. இலங்கையில் பொதுப்பணிகளை விட சொந்தக் கம்பனிகள் அதிகமாக காணப்படல்

10. நாட்டின் தொடர்ச்சியான பணவீக்க நிலைமைகள்

**பங்கு விலைச் சுட்டெண்:**

கொழும்புப் பங்குச் சந்தையில் பட்டியல் படுத்தப்பட்ட கம்பனிகளின் பங்கு விலைப்போக்கு தொடர்பாக கொழும்பு பங்கு பரிமாற்று லிமிட்டெட்டால் கணித்து வெளியிடப்படும் சுட்டெண் பங்கு விலைச்சுட்டெண் எனப்படும்.

பங்கு விலைச்சுட்டெண்கள் உச்சமாக 2 விலையில் கணித்து வெளியிடப்படுகிறது.

- **i.** அனைத்து பங்கு விலைச் சுட்டெண்
- **ii.** மெலங்கா விலைச் சுட்டெண்

பங்கு விலைச் சுட்டெண் பின்வரும் சமன்பாட்டினூடாக கணிக்கப்படும்.

$$\frac{\Sigma p_1 q_1}{\Sigma p_o q_o} X\ 100$$

இங்கு $p_o$:- அடியாண்டு பங்கு சந்தை விலை

$p_1$:- குறிக்கப்பட்ட இடத்தில் பங்கின் விலை

$q_1$:- அடியாண்டில் சந்தை மூலதனமாக்கப்பட்ட பங்கின் விலை

$q_1$:- குறிக்கப்பட்ட தினத்தில் சந்தையில் மூலதனமாக்கப்பட்ட பங்கின் எண்ணிக்கை

**அனைத்து பங்கு விலைச்சுட்டெண்:**

கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியல் படுத்தப்படுள்ள அனைத்துக் கம்பனிகளின் பங்கு விலை போக்கு தொடர்பாக கொழும்பு பங்கு பரிமாற்று லிமிட்டெட்டால் கணித்து வெளியிடப்படுகிறது.

இச்சுட்டெண்ணைக் கணித்து வெளியிடுவதற்கான ஏறக்குறைய 240 கம்பனிகளின் பங்கு விலைப்போக்கு கவனத்தில் எடுக்கப்படும். 1985ஆம் ஆண்டை அடியாண்டாக கொண்டு இந்தச் சுட்டெண் கணித்து வெளியிடப்படும்.

**மிலங்கா விலைச்சுட்டெண்:**

உணர்திறன் விலைச்சுட்டெண்ணிற்குப் பதிலாக அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டதே மிலங்கா விலைச்சுட்டெண் எனப்படும்.

தேசிய பொருளாதாரத்திலே நன்கு நிலை பெற்றிருப்பதுவும் உயர்வான பங்குலாபத்தை வழங்குவதுமான 25 கம்பனி முதல் தர கம்பனிகளின் பங்கு விலைப்போக்கு தொடர்பாக கணித்து வெளியிடப்படும் சுட்டெண் மிலங்கா விலைச்சுட்டெண் எனப்படும்.

இந்தச் சுட்டெண் 1998ஆம் ஆண்டை அடியாண்டாகக் கொண்டது. இந்தச் சுட்டெண் கணிப்பிற்குரிய கம்பனியைத் தெரிவு செய்யும் போது பின்வரும் பிரமாணங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

i. கம்பனியின் இயலளவு
ii. கடந்த மூன்று வருடங்களின் பங்கு வழங்கலினதும் உழைப்பினதும் வளர்ச்சி வேகம்
iii. கம்பனியின் பங்குலாபக் கொள்கை
iv. பங்கின் வழங்கிய விலைக்கு சார்பான நிகழ்சந்தை விலை

**மத்திய வைப்புத் திட்டம்:**
**[C.D,S.]**

இதுவரை மனித முயற்சியினால் மேற்கொள்ளப்பட்டு வந்த பங்கு பரிமாற்று நடவடிக்கைகளைக் கணனி மூலம் மேற்கொள்ள அறிமுகம் செய்த திட்டமே இதுவாகும்.

இதனை செயற்படுத்துவதற்கென கொழும்பு பங்கு பரிமாற்று லிமிட்டெட்டால் உருவாக்கப்பட்ட தனியார் கம்பனியே "மத்திய வைப்புத்திட்ட தனியார் கம்பனி" எனப்படும். கொழும்பு பங்குச் சந்தையில் பங்குகளைக் கொள்வனவு செய்ய அடிப்படைத் தேவைப்பாடு என்னவெனில் மத்திய வைப்புத்திட்ட தனியார் கம்பனியில் தரகர் ஊடாக கணக்கொன்றை ஆரம்பிக்க வேண்டும் என்பதாகும்.

அவ்வாறு கணக்கு ஆரம்பிப்பவர்களின் பங்கு பரிமாற்று பதில் நடவடிக்கைகள் $T_5, T_6$ என்ற அடிப்படையிலே கொள்வனவாளர், விற்பனையாளர் கணக்குகளில் பதிவு மேற்கொள்ளப்படும். அதாவது விற்றவர் கணக்கில் குறைக்கப்படும். வாங்கியவர் கணக்கில் கூட்டப்படும்.

**பங்குச் சந்தைக் குறி காட்டிகள்:**

| விபரம் | 2002 | 2003 |
|---|---|---|
| சந்தை மூலதன வாக்கம் (பில்லியன்) | 163 | 263 |
| வர்த்தகம் செயயப்பட்ட பங்குகளின் பெறுமதி (மில்லியன்) | 30183 | 73657 |
| வர்த்தகம் செயயப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை | 1220 | 2255 |
| விலை வருவாயீட்டு விகிதம் | 12.1 | 1.1 |
| பொதுமக்களுக்கான ஆரம்பப்பங்கு வழங்கல் | 05 | 04 |
| தேசிய வெளிநாட்டு கொள்வனவு (U. S. மில்லியன்) | 25 | 24 |
| அனைத்து பங்கு விலைச் சுட்டெண் | 815.1 | 1062.1 |
| மிலங்கா விலைச் சுட்டெண் | 1374.6 | 1897.8 |

**2003இல் இரண்டாந்தர பங்குச்சந்தையில் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் வகைப்படியான பரம்பல்:**

| முதலீடுகளின் வகை | கொடுக்கல் வாங்கலின் எண்ணிக்கை | பங்குகளின் எண்ணிக்கை | பெறுமதி (MR) |
|---|---|---|---|
| வங்கி, நிதி, காப்புறுதி | 154861 | 614393 | 26751 |
| குடிபானம், உணவு, புகையிலை | 39719 | 196187 | 4830 |
| இரசாயனமும், மருந்தாக்கலும் | 4242 | 7900 | 451 |
| கட்டடவாக்கம், பொறியியல் | 3756 | 21568 | 565 |
| பன்முகப்படுத்தப்பட்டவை | 38828 | 143922 | 14577 |
| காலணிகளும், புகையிலைகளும் | 4727 | 18518 | 138 |
| சுற்றுலாவிடுதிகளும், பயணங்களும் | 79562 | 459736 | 10440 |
| முதலீட்டுப் பொறுப்பாண்மை | 3569 | 5158 | 170 |
| காணியும் சொத்தும் | 17851 | 120915 | 707 |
| தயாரிப்பு | 57911 | 196298 | 6348 |
| ஊர்திகள் | 3232 | 11356 | 498 |
| ஓயில்பாம் | 182 | 67 | 11 |
| பெருந்தோட்டங்கள் | 17835 | 88863 | 1120 |
| பணிகள் | 528 | 431 | 48 |
| களஞ்சியங்களும், நிரம்பலும் | 3552 | 12826 | 102 |
| வர்த்தகம் | 6635 | 13815 | 306 |
| வலுவும் சக்தியும் | 01 | - | - |
| நலக்கவனிப்பு | 11273 | 63438 | 1045 |
| தகவல் தொழில்நுட்பம் | 181 | 335 | 4276 |
| டெலிகொம் | 34509 | 279771 | 5510 |

**2003இல் கம்பனிகளால் வழங்கப்பட்ட பங்குகள்:**

| கம்பனியின் பெயர் | வழங்கப்பட்ட மாதம் | பங்குகளின் எண்ணிக்கை | பங்கு வட்டம் | முன்வைக்கப் பட்ட பங்கின் பெறுமதி | பொது மக்களால் வாங்கப்பட்ட பங்கு |
|---|---|---|---|---|---|
| வ.ப. இ/கை வர்த்தக் வங்கி | மே | 100 000 | - | 1000 | 100 000 |
| வ.ப. இ/கை தோல்உற்பத்தி | யூலை | 2 500 | - | 25 | 2500 |
| வ.ப. செலான் வங்கி | ஓகஸ்ட் | 40 000 | 15 | 1000 | 40 000 |
| வ.ப. இ/கை கொஸ்பிட்டல் | ஒக்ரோபர் | 4 500 | 15 | 112.5 | 4 500 |
| வ.ப. கோமால் கோல்டிங் | செப்ரெம்பர் | 12 350 | 40 | 127.5 | 12 350 |
| வ.ப. ஹற்றன் நஷனல் அசூறன்ஸ் | நவம்பர் | 10 000 | 2.50 | 600 | 10 000 |
| வாக்குரிமையற்றது | | 6 375 | 10 | 125 | 6 375 |

**உசாத்துணை நூல்கள்:**
**[ REFERENCES ]**

1. Unit Trust code
2. The ceylon Daily News
3. Central bank Report, 2003
4. Security Analysis

# கூட்டுறவுக்கோர் அறிமுகம்

இ. ஜெயப்பிரியா
2006 A/L Arts.

கூட்டுணர்வு உயிரினத்தின் தோற்றத்தோடு பிறந்துள்ளது. மனித குலம் அறிவு முதிர்ச்சி அடையாது விலங்கோடு விலங்காக வாழ்ந்த காலத்திலும் கூட அவர்களிடம் கூட்டுறவு உணர்வும் கூட்டுறவுச் செயல்களும் காணப்பட்டன. **"Cooperation"** என்ற ஆங்கிலப்பதம் இலத்தீன் வினையடிச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். குழுவாழ்க்கை முறையால் அறிவியல், அரசியல் வளர்ச்சி, பொருளாதார நாகரீகமாற்றங்கள், மனித வாழ்வின் தொழில் துறைகளின் அறிவியல் விஞ்ஞானம், தொழிநுட்பம் ஆகியன கூட்டுறவு அமைப்பில் பெருமளவு வளர்ச்சியை ஏற்படுத்தியது.

19ஆம் நூற்றாண்டின் தலை சிறந்த புரட்சிச்சிந்தனையாளரான பார்ல்மார்க்ஸ் முதலாளித்துவ அமைப்பை ஒழித்து சமதர்ம அமைப் பொன்றை ஏற்படுத்தப் பொதுவுடமை இலட்சியத்தை நோக்கிச் செல்லும் கருத்துக்களையும் செயற்பாட்டு முறைகளையும் வெளியிட்டார். கூட்டுறவு என்பதை பல கருத்துக்களில் முன்வைக்கலாம். "முதலாளித்துவ நோக்கிலிருந்தும் பொதுவுடைமை நோக்கிலிருந்தும் மாறுபட்ட இலட்சிய நோக்குடையது கூட்டுறவாகும்." ஒவ்வொருவரும் அனைவருக்கும், அனைவரும் ஒவ்வொருவருக்கும் என்பதே கூட்டுறவாகும்.

ஒவ்வொருவரும் ஒவ்வொருக் கொருவர் உதவியாகவும் ஒத்துழைப் போடும் மற்றவர்களைச் சுரண்டாமலும் வாழும் நீதியான உயர்ந்த வாழ்க்கை முறையே கூட்டுறவாகும். சுயநலமற்ற ஒத்துழைப்பு மனப்பாங்கையும் பிறருக்கு உதவும் மனப்பாங்கையும் அறவழி சார்ந்த உயர்பண்புகளும் நிறைந்த வாழ்க்கை முறையை கூட்டுறவு எனலாம்.

கூட்டுறவைப்பற்றி றொபேர்ட் ஓவன், கல்வெர்ட், **E. S.** போகாடஸ், **T. W.** மோர்சேஸ், **J. J.** உவர்லி, ஹெரிக், சேர் ஹேரேஸ்பிளங்கட், லெனின் மேத்தா, சேர்டார்லிங், கவிஞர் தாகூர், மஹாத்மா என இன்னும் பல அறிஞர்கள் பலவாறு கருத்துக்களைக் கூறியுள்ளார்கள். கூட்டுறவைப்பற்றி பழைய வரலாற்று நிகழ்ச்சிகளும், பல கதைகளும் கூறுகின்றன. 1844ஆம் ஆண்டில் கூட்டுறவு எண்ணக்கருவிற்கு உலகில் முதன்முதல் உரு அமைக் கப்பட்டது. இலங்கையில் 1911ஆம் ஆண்டிற் சட்டம் அமைத்து 1912ஆம் ஆண்டு உரு அமைக்கப்பட்டது.

கூட்டுறவின் நோக்கமாக மனிதகுலத்தின் அமைதியான சுபீட்சம் நிறைந்த வாழ்வுக்குத்தடையாக இருக் கும் அனைத்தும் நீக்கி ஒருவருக் கொருவர் பரஸ்பர உதவியுடன் அறவழி சார்ந்த நடவடிக்கைகளால் பொருளா தார, சமூக, கலாச்சாரத் துறைகளில் முன்னேற்ற மடைந்த ஜனநாயக ரீதியான சமுதாயத்தை உருவாக் குவதே கூட்டுறவின் நோக்கமாகும். "அடிமையாகவும் இருக்கவும் மாட்டேன் அதே நேரம் அடிமையாக்கவும் மாட்டேன்" என இலிங்கனின் கூற்றுப் போல ஒரு கூட்டுறவாளன் சுரண்டப்படா மலும் அதே நேரம் மற்றவர்களைச் சுரண்டாமலும் வாழும் உள்நோக்குத் தான் கூட்டுறவாகும். கூட்டுறவின் மூலநோக்காக நீதி செறிந்த முறையில் அறம் சார்ந்த ஜனநாயக அமைப்பில் ஒருவருக்கொருவர் பரஸ்பர உதவி யுடன் வாழ்வின் சகல தேவைகளையும்

நியாயமான வழிகளில் பூர்த்தி செய்கின்ற புதிய சமுதாயமொன்றை அமைப்பதாகும். இவ் நோக்கை எய்த கூட்டுறவாளர்களின் பயணவழி திசைதிரும்பாது" சரியான வழியை கண்டுபிடிப்பதே கூட்டுறவாளரின் கடமையாகும்.

கூட்டுறவில் முரண்பாடு ஏற்பட நான்கு வகையான கூட்டுறவு உறுப் பினர்களாக கூட்டுறவு பொதுநலவாயக் குழாம், திருத்திய முதலாளித்துவ கருத்துக்குழாம், சமூகவுடமை தழுவிய கருத்துக்குழாம், தனிக்கூட்டுறவுக் கருத்துக்குழாம் என வகைப்படுத்தலாம். றெபேர்ட்ஓவன், டாக்டர் வில்லியம் கிங் போன்ற தன்னலமற்ற உயர்இலட்சிய வாதிகளின் சிந்தனைகளைப் பற்றி 1844இல் றொச்டேன் நகர தொழிலா ளர்கள் ஒரு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பித்தனர். றொச்டேல் சமத்துவ முன்னோடிகள் கூட்டுறவுக் கொள்கைகளை எட்டு வகைப்படுத்தி நுகர்வோர் கூட்டுறவுச்சங்கமாக இங்கிலாந்தில் கூட்டுறவு இயக்கத்தை வளர்ச்சியடையச் செய்தனர்.

1895ஆம் ஆண்டு அனைத் துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவனம் உருவானது. 1934ஆம் ஆண்டு நிர்ண யத்துணைக்குழு ஒன்றை நியமித்தார். 1937ஆம் ஆண்டு இனைத்துலக கூட்டுறவு நிறுவனத்தால் இரு கொள்கைகள் பிரகடனப்படுத்தப்பட்டன. தேவையான கொள்கைகள், விருப்பத் தேவைகளுக்கு உரிய கொள்கைகளா கும். இரண்டாம் மகாயுத்தத்தினால் பொருளாதார, சமூக, கலாசாரமாற்றங் கள் கூட்டுறவு அமைப்பில் மாற்றம் ஏற்றபட்டது. 1963ஆம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள போர்ணிமவுத் எனும் நகரிற் கூட்டுறவு மறுசீரமைக்கப்பட்டு D.U கார்வே தலைமையில் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட கூட்டுறவு நியமிக்கப்பட்டது. 1966ஆம் ஆண்டு மனைத்துலக கூட்டுறவு மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டு ஆறு கொள்கை களையும் பிரகடனப்படுத்தப்பட்டது.

கூட்டுறவுச்சங்கம் என்பது மனிதச்சேர்க்கை. இங்கு சமூக, அரசியல் இன மத வேறுபாடுகளைக் கடந்து மனிதத்துவம் நிலவுமிடம் கூட்டுறவாகும். கூட்டுறவு இயக்கம் என்பது நடுநிலைக்களம் எனவும் கூறலாம். கூட்டுறவுச் சங்க உறுப்புரிமை பெற பொதுத்தேவை இருக்கிறது. கூட்டுறவு சங்க உறுப்பினர்களின் தீர்மானங்கள், செயற்ாடுகள், கட்டுப்பாடுகள் வெளியுலகத் தொடர்பு களிற்கு ஏற்றதாகவும், வெளியுலகம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் அமைதல் வேண்டும். கூட்டுறவு சங்கத்தீர்மானங்களும் செயற்பாடுகளும் பகிரங்கத்தன்மையாக இருத்தல் வேண்டும்.

கூட்டுறவு சங்கத்தில் இரகசிய ஒளிவுமறைவு என்பவற்றிற்கே இடமிருத்தல் ஆகாது. ஜனநாயக மரபுகளையும் கோட்பாடுகளையும் தன்னுள் அடக்கியதே கூட்டுறவாகும். கூட்டுறவுச் சங்கத்தின் பெருநோக்கு உறுப்பினர்களின் நலன்களைப் பேணுத லாகும். கூட்டுறவுக் கொள்கைகள் மனித சமுதாயத்திற்கு ஒளிமயமான தீபமாக தொடர்ந்து வழிகாட்டிக் கொண்டு இருப்பதற்கு நெய்போல் உதவிக்கொண்டிருப்பது கூட்டுறவுக் கல்வியே ஆகும்.

அனைத்துல கூட்டுறவு இணைப்பு நிறுவனகொள்கை கல்வி பெற வேண்டியவர்கள் உறுப்பினர்கள், பதவி வகிப்போர், பணியாளர், பொது மக்கள் என நான்கு வகைப்படுத்தலாம். ஒவ்வொரு கூட்டுறவுச்சங்கமும் பொது மக்களுக்குக் கூட்டுறவுக்கல்வியைப் பிரசாரம் மூலம் அளிக்கிறது. பொதுமக்களிடையே கூட்டுறவு பற்றிய உண்மைக்கருத்துக்களையும் உயர்ந்த இலட்சியத்தையும், கொள்கைகளையும் பரப்பி பொதுமக்களின் நல்லெண்ணம்,

நன்மதிப்பு, ஒத்துழைப்பு மனப்பான்மை என்பவற்றை ஏற்படுத்த மக்களுக்கு கூட்டுறவுக்கல்வியை அளித்தல் வேண்டும்.

கூட்டுறவாளர்களின் உலகளாவிய செயல் ஒற்றுமையை நடைமுறைச்சாதனையாக்குவது இவர்களின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். என அனைத்துலக கூட்டுறவு இணைப்பு கூறுகிறது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு இடையே கூட்டுறவு எனும் கொள்கையின் நோக்கம் சங்க உறுப்பினர்களினதும் உறுப்பினர்களைச் சார்ந்திருக்கும் சமூக நலன்களையும் சிறந்த முறையில் பேணுதலாகும். கூட்டுறவு இயக்கம் போட்டி, பொறாமை, சுரண்டல், ஆதாயம், துவேஷம் போன்ற தீயசக்திகளுக்கிடமளிக்காது அறவழி சார்ந்த புனித இயக்கமாவும் கூட்டுறவு இயக்கத்தையும் கூறலாம்.

மக்களுக்குப் பணிபுரிவதற்காக உருவாகிய கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று உதவியாகவும் ஒற்றுமையாகவும் காணப்படும் நிதிவசதி குறைந்தவர்களால் உருவாக்கப்படுவதே பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்களாகும். கூட்டுறவுச்சங்க உறுப்பினர்களிடையே "எல்லோருக்குமாக ஒருவரும், ஒருவருக்காக எல்லோரும் ஒன்று சேர்ந்து உழைத்தல்" என்ற இலட்சிய நோக்குக் கடைப்பிடிக்கப் படுவது போல கூட்டுறவுச் சங்கங்களும் எல்லாம் ஒவ்வொன்றுக்காகவும் ஒவ்வொன்றும் "எல்லாவற்றிற்காகவும் ஒன்று சேர்ந்து உழைக்கும் தன்மை" என உருவாகி இருக்கும்.

வணிக பலத்திற்கு ஆதாரமாக ஸ்கன்டினேவிய மொத்த வியாபாரக் கூட்டுறவுச்சங்கம், சர்வதேச கூட்டுறவு எரிபொருள் கழகம் போன்ற நிறுவனங்கள் சிறந்த எடுத்துக்காட்டாகும். கூட்டுறவு நிறுவனங்கள் இயல்பாகவும், கொள்கை ரீதியாகவும், தற்காப்பு முறைக்காகவும் எதிர்ச்சக்திகளின் ஊடுருவல்களைக் களைவதற்காகவும், பலம் பெறுவதற்காகவும் எதிர்ப்புச் சக்திகளின் போட்டிகளைத் தவிர்ப்பதற்காகவும் விருத்தி வளர்ச்சி என்பவற்றின் பொருட்டும் உள்ளூர், தேசிய அனைத்துலக அடிப்படையில் சாத்தியமான வழிகளில் இணைதல் கூட்டுறவின் புனிதமான உயர் இலட்சியங்களை வழிபிறக்கச் செய்யும்.

கூட்டுறவு இயக்கத்தின் ஆரம்பகர்த்தாக்களாக கூட்டுறவுத் தந்தை றொபேட்ஓவன், வில்லியம் தொம்சன், டாக்டர் சிங் என்பவர்கள் ஆவார். கூட்டுறவு இயக்கத்தின் தந்தை என றொபேட்ஓவன் போற்றப்படுகிறார். கூட்டுறவுச்சட்டங்களாக கூட்டுறவை ஒழுங்குபடுத்தல் பாதுகாத்தல், உரிமைகளை அளித்தல், கட்டுப்படுத்தல் என்பன அடங்கும். சட்டங்கள் பொதுவாக விவாதங்களுக்கும் விமர்சனங்களுக்கும் உட்பட்டவை. கூட்டுறவுச் சட்டங்கள் பற்றி அனைத்துலகக் கூட்டுறவு நிறுவன மகாநாடு துசறி, டிக்ம, வாஸ்டர், கலாநிதி வாங்கோ என பல சட்டங்கள் கூறுகின்றன. கூட்டுறவுக் கொள்கைகளைச் சிதைவுறாது பாதுகாத்தல் அரசு அளிக்கும் சலுகைகள் உதவிகளை வரையறுத்தல், அரசின் அதிகாரத் தன்மையை வரையறுத்தல் கூட்டுறவை பேணிப் பாதுகாக்கும் உரிமை பெறல், அறிவு குறைந்த உறுப்பினர்களின் நலன் பேணல், வீண் விரயங்களையும் துர்ப்பிரயோகங்களையும் தவிர்த்தல் மேற்பார்வைஎண்பார்வை போன்ற கடமைகளைச் செய்ய கூட்டுறவுச் சட்டம் அவசியமாகிறது.

கூட்டுறவுச்சட்டம் கூட்டுறவு அபிவிருத்திக்கு மூலகாரணமாகும். 1852ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் கூட்டுறவுச்சட்டம் உருவாகி டென்மார்க்கில் 1850ஆம் ஆண்டு சட்டம் வெளிவிடப்பட்டது. பெஞ்சமின் பிராங்கினின் என்ற ஜனாதிபதி கூட்டுறவுக் காப்புறுதித் திட்டமொன்றை முன்

வைத்தார். 1865இல் கூட்டுறவுக் காப்புறுதிச்சங்கம், கால்நடைச்சங்கம், விவசாயச்சங்கம் போன்றன அங்கீகாரம் பெற்றன. ஜேர்மனியில் 1867இல் கூட்டுறவுச்சட்டம் உருவாகியது. 1904ஆம் ஆண்டில் கூட்டுறவுச்சட்டம் உருவாக்கப்பட்டது.

இலங்கைக் கூட்டுறவுச்சட்ட மூலங்கள் இரு வகைப்படுத்தலாம். பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம், துணைநிலைச்சட்டங்கள் ஆகும். கூட்டுறவுச்சட்டங்கள் கூட்டுறவுச் சங்கச் சட்டம், சங்கவிதி, வேலையாளர் ஆணைக்குழுச்சட்டம், கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு பிரமாணங்கள், கூட்டுறவுசங்கத்துணை விதிகள் என ஆராயலாம்.

கூட்டுறவுச்சங்கங்களுக்கிடையிலான பொதுவான செயற்பாடுகளாக பதிவு, பொறுப்பு, பதிவுக்கு விண்ணப்பித்தல், உறுப்புரிமை முடிவு, பங்குகள், கணக்காய்வு, கூட்டுறவுநிதி, விசாரணை, முடிவு பிணக்கு, நினைவெண் தலைமைதாங்கல் எனப் பல செயற்பாடுகள் காணப்படுகின்றன.

இலங்கைக்கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய நிகழ்வுகளாக 1906ஆம் ஆண்டிலிருந்து 1995ஆம் ஆண்டு வரை அளவிடமுடியாத நிகழ்வுகள் காணப்படுகின்றன. கூட்டுறவை பற்றி இன்னும் பலவற்றை கூறிக்கொண்டே போகலாம். இக்கூட்டுறவானது முடிவிலான பல பயன்களையும் அளித்துக்கொண்டே செல்கிறது. இவ் கூட்டுறவிற்கு ஓர் அறிமுகம் எனும் தலைப்பை எடுப்பதற்கு எனக்கு உதவிய உசாத்துணை நூல்களாக கூட்டுறவு உத்தியோகத்தர் தராதரப்பத்திரம், இலங்கை கூட்டுறவு இயக்கம் (Mr. G. குருகுலசூரியர்), கூட்டுறவு (திரு. அ. குழந்தை) **Multi Purpose Cooperative Societies in South-East Asia (Mr. J. M. Rana)** சட்டமூலங்கள், பத்திரிகைகள் (ஐக்கியதீபம்) சஞ்சிகை (பொருளியல் நோக்கு) கூட்டுறவுப்பத்திரிகை (ஆங்கிலம்) சமூபகாரயா (சிங்களம்) போன்றவனவாகும்.

# தலைமைத்துவம்
## [Leader Ship]

த. தயாளரூபன்
2005 A/L Com.

**தலைமைத்துவத்தின் வரை விலக்கணம்:**

தலைமைத்துவம் என்பது ஒரு இலக்கினை அடைவதற்காக மனித வளத்தினை நெறிப்படுத்துகின்ற ஓர் கருமமாகும். அதாவது பிறரை வழிநடத்தி அவர்களிடம் இருந்து தன்னிச்சையான ஒத்துழைப்பினைப் பெற்று அதனூடாக நிறுவனத்தின் நோக்கினை அடைய முற்படும் ஓர் செய்முறையாகும் இன்னொரு வகையில் கூறினால் தலைமைத்துவம் என்பது ஒரு குறித்த இலட்சியம் ஒற்றுமையும் இல்லாமல் சிதறுண்டு வாழும் மக்கள் கூட்டத்தினரை இலட்சியப்படுத்தி, ஒற்றுமைப்படுத்தி, நெறிப்படுத்தி தலைமை தாங்கி குறித்த இலட்சியத்தை மிக இலகுவில் நிறைவேற்ற முயற்சிக்கும் மனித நடத்தையே தலைமைத்துவம் எனலாம். தலைமைத்துவம் என்பது தொடர்பாக முதல் முதலின் கருத்து வெளியிட்டவர் உளவியலாளரான **"Maruin Eshaw"** என்பவராவார்.

**தலைமைத்துவத்தின் குறிக்கோளும் அவசியமும்:**

தலைமைத்துவத்தின் குறிக்கோள் என்பது நிறுவனத்தின் இருக்கும் தலைவர் தவிர்ந்த ஏனையோர் எக்கருமத்தை ஆற்ற வேண்டும் என விதந்துரைப்பதும் அதனூடாக நிறுவனநோக்கை இலகுவாக அடைய வைப்பதும் ஆகும்.

தலைமைத்துவம் சிறப்பாக இயங்க வேண்டுமாயின் தலைவன் தூயவனாகவும் சிக்கனமானவனாகவும் சாதுரியமானவனாகவும் இருக்க வேண்டும். நேர்க்கணியச் செல்வாக்கு என்பது உதவியாளர்கள் தலைவனது பணிப்புரையை மறுப்பின்றி ஏற்றுக்கொள்வதாகும். எதிர்க்கணியச் செல்வாக்கு என்பது உதவியாளர்களது பணிப்புரையைத் தலைவன் ஏற்றுக்கொள்வதாகும். இவ்விரு நிலைமைகளும் ஒரு நிறுவன தலைமைத்துவத்திற்கு அவசியமானதாகும்.

**தலைமைத்துவம் ஏற்படும் முறைகள்:**

1. மரபு ரீதியான தலைமைத்துவம்
   **eg:** அரசன்

2. தெரிவு மூலமான தலைமைத்துவம்
   **eg:** தொழிற்சங்கத் தலைவர்

3. குறித்த பதவி மூலமான தலைமைத்துவம்
   **eg:** முகாமையாளர்

4. ஆளுமை செயற்திறன் மூலமான தலைமைத்துவம்
   இவர்கள் "கரிஸ் மற்றிக் தலைவர்" என அழைக்கப்படுகின்றனர்
   "கரிஸ்மா" என்பது தெய்வீக ரீதியாக கிடைத்திறன்
   **eg:** கிட்லர், நெப்போலியன்

தலைமைத்துவத்தை ஏற்பவர் தனது வலு **(Power)** மூலம் பிறர் மீது செல்வாக்கைச் செலுத்தி நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றனர்.

தலைவர் → வலு → செல்வாக்கு → நடத்தை மாற்றம்

வலு என்பது தனிப்பட்டவர்களின் அல்லது குழுக்களின் நடத்தையில் அல்லது எண்ணங்களில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய ஆற்றலைக் குறிக்கின்றது. ஜோன் பிரேஞ் **(John French)** மோர்ட்ரம் ரவன் **(Bertram Raven)** ஆகிய இருவரும் 5 வகையான வலுக்களை இனம் கண்டுள்ளனர். அவையாவன:-

1. வெகுமதியளிக்கும் வலு **(Reward Power)**
2. கட்டாயப்படுத்துகின்ற வலு **(Coercive Power )**
3. மதிப்பளிக்கும் வலு **(Referent Power)**
4. நிபுணத்துவ வலு **(Expert Power)**
5. சட்டப்படியான வலு **(Legitimate Power)**

**முகாமையாளர்களும் தலைவர்களும்:**

முகாமையாளர்களும் தலைவர்களும் வேறுபட்டவர் ஆவார். ஹவாட் வியாபாரக் கல்லூரியைச் சேர்ந்த சமூக உளவியல் பேராசிரியரான **Abraham Zaleznik**இன் கருத்துப்படி முகாமையாளரும் தலைவரும் வேறுபட்டவர்கள் அவர்கள் எவ்வாறு சிந்திக்கின்றனர், செயற்படுகின்றனர் ஆகிய விடயங்களில் வேறுபடுகின்றனர் அத்துடன் முகாமையாளரும், தலைவரும் தமது வேலைகளை கருகின்ற முறையும் வேறுபட்டது. முகாமையாளர்கள் தன் கீழ் பணிபுரிபவர்களிற்கு வரையறுக்கப்பட்ட மாற்று வழிகளில் இருந்து தெரிவினை மேற்கொள்ள இடமளிக்கின்றனர். தலைவர்கள் மக்களை பிரச்சனை மேற்கொள்ள இடமளிக்கின்றனர். தலைவர்கள் மக்கள் பிரச்சனைகளிற்கு புதிய அணுகுமுறைகளை கண்டுகொள்ளும் படி ஊக்கப்படுத்துகின்றனர் அத்துடன் தலைவர்கள் வேலையில் உணர்ச்சி பூக்களை ஏற்படுத்த விரும்புகின்றனர். இவ்வாறு தலைவர் முகாமையாளரிடையே சில வேறுபாடு காணப்படினும் முகாமையாளருக்கும் தலைமைத்துவம் வேண்டப்படுகின்றது. மனித வளத்தினை வழி நடத்தும் எவரிற்கும் சிறந்த தலைமைத்துவம் தேவை எனக்கூறுவது பொருத்தமானது. முகாமையாளர் எதிர்பார்த்ததிலும் சிறந்த தலைமைத்துவம் அவசியமாகின்றது பின்பற்றுகின்றவர் அல்லது பணியாளர் நடத்தையினை அடிப்படையாகக் கொண்டு தலைவரின் திறமையை மதிப்பிட முடியும். சிறந்த முகாமையாளராக விளங்குவதற்கு சிறந்த தலைமைத்துவம் வேண்டப்படுகிறது.

**முறைசார்ந்த தலைவர் முறைசாரா தலைவர்:**
**(Formal Leader - Informal Leader)**

நிறுவனங்களிலே காணப்படுகின்ற தலைவர்கள் இரண்டு வகையாக காணமுடியும்.

1. முறைசார்ந்த தலைவர்
2. முறைசாரா தலைவர்

- நிறுவனத்தின் உத்தியோக ரீதியாக நியமிக்கப்பட்டவர் முறைசார்ந்த தலைவர் என அழைக்கப்படுவார் இவர் வரையறுத்த அதிகாரம் பொறுப்ப என்பனவற்றினை கொண்டிருப்பார்.

- நிறுவனத்தினால் நியமிக்கப்படாமல் ஆனால் தலைமைத்துவ செயற்பாடுகளை மேற்கொள்பவரை முறைசாரா தலைவர் எனலாம்.

**தலைமைத்துவம் தொடர்பான அணுகு முறைகள்:**
**(Approaches to Leader Ship)**

நிறுவன வெற்றியானது தலைமைத்துவத்திலேயே தங்கியுள்ளது. தலைமைத்துவம் தொடர்பான ஆய்வு காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறந்த தலைமைத்துவமானது எக்காரணிகளில் தங்கியுள்ளன என்ற வினாவிற்கு விடைகாணும் பொருட்டு இவ் ஆய்வு அமைகின்றது இதன் அடிப்படையில் பல்வேறு வகையான தலைமைத்துவ அணுகு முறைகள் காணப்படுகின்றது. இவற்றினை 3 பிரதான வேறுபாடாக வகுக்க முடியும். அவையாவன:-

1. பண்புக்கோட்பாடு **(Trait Theories)**
2. நடத்தைக் கோட்பாடு **( Behavioural Approach)**
3. நெகிழத்தக்க கோட்பாடு **(Comingeney Theories)**

**பண்புக் கோட்பாடு Trait Theories**

தலைமைத்துவம் தொடர்பாக மிகவும் பழமை வாய்ந்த கோட்பாடாகும். ஒரு சிறந்த தலைவனிடம் காணப்படும் பண்புகள் எவை என்பதனை அடையாளம் கண்டு கொள்வதில் இக்கோட்பாடு கவனம் செலுத்துகின்றது. சிறந்த தலைமைத்துவம் கொண்டிருப்பவரிடம் பின்வரும் பண்புகள் காணப்பட வேண்டும்.

1. புத்திக்கூர்மை
2. சுயநம்பிக்கை
3. பொறுமை
4. நேர்மை
5. முதிர்ச்சி

**நடத்தைக் கோட்பாடு:**
**(Behavioural Approach)**

திறமை மிக்க தலைவர்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றனர் என்பதனை கண்டு கொள்வதில் நடத்தைக் கோட்பாடு கவனம் செலுத்துகின்றது. சிறந்த தலைவர்கள் தமது நடத்தை மூலம் தம்மால் வழிநடத்தப்படுவோர் மீது செல்வாக்குச் செலுத்துகின்றனர் என்ற முடிவு பல ஆய்வு மூலம் கண்டறியப்பட்டது. அதாவது சிறந்த தலைமைத்துவத்திற்கு பிரதான காரணமாக தலைவர்களது நடத்தைகள் அமைகின்றது எனக் கூறுவது பொருத்தமானது.

1940களில் ஒகியோ மாநில பல்கலைக்கழகத்தினால் **(Ohio State University)** மேற் கொள்ளப்பட்ட ஆய்வானது தலைவர்களின் நடத்தை தொடர்பான இரண்டு வகையான பரிமாணங்களை அடையாளம் கண்டுள்ளது. அவையாவன:

1. ஊழியர்களின் நலன்களை மையமாகக் கொண்டது
   **Consideration**

2. வேலை நிறைவேற்றுவதனை மையமாகக் கொண்டது **Initiating Stracture**

மேற்குறிப்பிட்டவற்றில் ஒரு நடத்தையின் அடிப்படையில் தலைமைத்துவம் அமையலாம்.

**நெகிழக்தக்ககோட்பாடு:**
**Contingncy Theory**

ஆய்வாளர்கள் பல்வேறு வகையான தலைமைத்துவ பாங்குகளை **(Leader Ship Style)** அடையாளம் கண்டனர். ஆனால் அத்தலைமைத்துவங்கள் அனைத்தும் எல்லா வேளைகளிலும் எதிர்பார்த்த ஒரேயளவு பெறுபேறுகளை தருவதில்லை. ஒரு குறிப்பிட்ட நிலைமையில் வெற்றியளிக்கும் ஒரு தலைமைத்துவமானது இன்னொரு நிலையில் வெற்றியளிக்காது விடுவதுமுண்டு. எனவே தலைமைத்துவத்தினை தெரிவு செய்யும் போது குறிப்பிட்ட நிலைமை தொடர்பான காரணிகளை கருதிக்கொண்டு பொருத்தமான தலைமைத்துவத்தை தெரிவு செய்யவேண்டும்.

**தலைமைத்துவத்தின் பண்புகள்:**
**Leader Ship Trait**

ஒவ்வொரு நிறுவனத்திலும் காணப்படும் தலைவன் தனது கருமத்தை சிறப்பாக ஆற்றுவதற்கு சில சில பண்புகளை கொண்டிருக்க வேண்டும். ஒரு தலைவனிடம்,

1. மற்றையோர் நிலைக்குள்ளாதல் **(Empathy)**
2. தன்னைத்தானே உணர்தல் **(Self awareness)**
3. நோக்க உணர்வுடையவனாதல் **(Objectivity)** என்ற பண்புகள் காணப்பட முடியும். ஆனாலும் ஒரு தலைவன் தனது கருமத்தை சிறப்பாக ஆற்று வதற்கு சில விசேட பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

1. மனித நடத்தைகளினை புரிந்து கொள்ளும் ஆற்றல் தலைவன் ஒரு வனிற்கு இருக்க வேண்டியது முக்கிய பண்பாகும் அதாவது தனது நடத்தை யினையும் ஏனையோர் நடத்தையினையும் அறிந்து கொள்ளும் ஆற்றலை பெற்றுக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. மற்றையோர் நிலைக்குள்ளாகும் பண்பு ஒரு தலைவனிடம் இருக்க வேண்டும். அதாவது ஏனையோர் விருப்பங்களை அறிந்து கொண்டு அவன் எந்த செயற்பாட்டையும் ஆற்றி விட முடியாது.
3. ஒவ்வொரு தலைவனும் தன்னைத்தானே உணருகின்ற ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
4. ஒரு நல்ல தலைவன் எப்பொழுதுமே நோக்க உணர்வுடன் செயற்பட வேண்டும்.
5. ஒவ்வொரு தலைவனும் எழுத்தாற்றலை விட பேச்சாற்றலை அதிகமாக கொண்டிருக்க வேண்டும்.

6. பொறுப்புக்களை ஏற்கும் ஆற்றலையும் அதற்கு வகை சொல்லும் ஆற்றலையும் ஒரு தலைவன் கொண்டிருக்க வேண்டும்.

7. ஒவ்வொரு தலைவனும் விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளும் மனநிலையை கொண்டிருக்க வேண்டும்.

8. ஒவ்வொரு தலைவனுக்கும் தொடர்பாடல் திறன் அவசியம் அதற்காக 3 இயல்புகளை அவர் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

   a) பின்னூட்டியை பயன்படுத்தல்
   b) மனதை அலையவிடாதிருத்தல்
   c) பரிமாற்றப்படும் செய்தி முடிவடையும் வரை தகவலைப் பரிமாற்றாதிருத்தல்

9. பக்க சார்பின்மையை கடைப்பிடித்து நடுவராக இயங்குதல் வேண்டும்.

10. விரைவான தீர்மானம் எடுக்கும் ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.

11. உதவியாளர்களது திறமைகளிற்கு மதிப்பளித்து அவர்களுக்குரிய வாய்ப்பை வழங்குதல்

இவ்வாறான பண்புகள் கொண்ட தலைவன் ஓர் நிறுவனத்திலே காணப்படுவாராயின் அந்நிறுவனமானது சுலபமாக தனது இலக்கினை அடைய முடியும்.

**தலைமைத்துவத்தின் இயல்புகளும் வகைகளும்:**
**Leader Ship Styles & Types**

ஒரு நிறுவனத்தில் காணப்படும் தலைவனிற்கும் உதவியாளர்களுக்கும் இடையில் எத்தகைய உறவு பேணப்படுகின்றதோ அதனையே தலைமைத்துவத்தின் இயல்பு எனலாம். தலைமைத்துவத்திற்கு என்னென்ன முதலிலே வெளிக்கொணர்ந்தார் இவரது கருத்தின்படி நிறுவனத்தில் இருக்கும் தலைமைத்துவத்தினை பின்வருமாறு பிரிக்கலாம்.

1. அதிகாரமயப்படுத்தப்பட்ட தலைமைத்துவம்
   **Authoritative Leadership**

2. ஜனநாயகத் தலைமைத்துவம்
   **Democratic Leadership**

3. கட்டுப்பாடற்ற தலைமைத்துவம்
   **Laissez Faire Leader Ship**

◆ அதிகாரமயப்படுத்தப்பட்ட தலைமைத்துவம் என்பது தலைவன் மிகக் கூடுதலான அதிகாரத்தை வைத்துக் கொண்டு உதவியாளர்களிற்கு மிகக் குறைந்த சுதந்திரங்களை வழங்க முன்வருவதாகும் நெருங்கிய மேற்பார்வையின்

கீழ் கடுமையான கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதை இத் தலைமைத்துவத்தின் முக்கிய பண்பாகும். இத்தலைமைத்துவத்தை **Heck Man** என்பவர் மேலும் இரு பிரிவுகளாக பிரித்துள்ளார்.

- சர்வாதிகாரத் தலைமைத்துவம் **Distatorial Leader Ship**
- எதேச்சதிகாரத் தலைமைத்துவம் **Autocratic Leader Ship**

ஜனநாயகத் தலைமைத்துவம் என்பது தலைவன் அதிகாரங்களை வைத்துக் கொண்டு உதவியாளர்களுக்குப் பெருமளவு சுதந்திரத்தை வழங்கும் முறையாகும் இங்கு உதவியாளர்களின் ஆலோசனை பெறப்பட்ட பின்பே தீர்மானங்கள் எடுக்கப்படும் இங்கு இரு வழித்தொடர்பு காணப்படும்.

**eg:** ஜனநாயக நாட்டின் தலைவர்

கட்டுப்பாடற்ற தலைமைத்துவம் என்பது விசேடமாக தலையீடற்றது என்ற கருத்தைக் கொண்டாரும் இதன்படி தலைவன் மிகக்குறைந்த அதிகாரத்தை வைத்துக் கொண்டு உதவியாளர்களிற்கு பெருமளவு சுதந்திரத்தை வழங்க முன்வருவதாகும் இதன் காரணமாக தலைவன் உதவியாளர் மீது கட்டுப்பாட்டை விதிக்காமல் ஓர் பார்வையாளனாக மட்டுமே தொழிற்படுவான்.

**eg:** தரச்சுற்று

இத்தலைமைத்துவம் பற்றி **Rensis Likert** என்பவர் மேலும் இதனை 4ஆக வகைப்படுத்தியுள்ளார்.

1. சுரண்டல் தலைமைத்துவம்
2. இரங்கல் தலைமைத்துவம்
3. கலந்துரையாடல் தலைமைத்துவம்
4. பங்கு பற்றும் தலைமைத்துவம்

1960களில் தலைமை வகித்தல் சம்பந்தமாக ஓர் புதிய கோட்பாட்டை அறிமுகப்படுத்தியவர் **Douglas Megregor** ஆவார் இவர் தலைமைத்துவம் என்பது தலைவனது பண்பில்லாது ஊழியரது பண்பிலே தங்கியிருக்கின்ற தென்று புதிய கருத்தை வெளியிட்டார் இவரது கருத்தின்படி தலைமை வகித்தல் இரண்டாக அமையும்.

1. **X (Theory)** கொள்கை
2. **Y (theory)** கொள்ளை

கோட்பாடு **X** ஆனது ஊழியர் சார்பாக 5 அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கும்.

1. ஊழியர்கள் வேலை செய்வதற்கு விரும்புவதில்லை
2. தம்மிடம் கொடுக்கப்படும் பொறுப்புகளை தட்டிக்கழிப்பதாக அமையும்

3. ஊழியர்களுக்கு நிறுவனத்தின் இலக்கை அடைவதில் எவ்வித அக்கறையும் இல்லை
4. ஊழியர்களிடமிருந்து வேலையைப் பெற கடுமையான மேற்பார்வை நடைமுறைப்படுத்தப்படவேண்டும்
5. எதிர் பார்த்த விளைவுகளை பெற்றுக் கொள்ள ஊழியர்களிற்குத் தண்டனைகளையும் அபராதங்களையும் விதிக்க வேண்டியிருக்கும்

கோட்பாடு **Y** ஆனது ஊழியர் சார்பாக நல்லெண்ணத்தைக் கொண்டிருக்கும் இதனால் தலைவன் குறைந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டு ஊழியரிடம் பின்வரும் பண்புகள் காணப்படும்.

1. ஊழியர் வேலை செய்ய என்றுமே அக்கறை உடையவராக இருப்பர்
2. நிறுவன இலக்கை அடைவதில் ஊழியருக்கு அக்கறை இருக்கும்
3. ஊழியருக்குக் கடுமையான மேற்பார்வை தேவையில்லை
4. வேலை செய்வதனூடாக திருப்தியை பெற முற்படுவது ஊழியர் இயல்பாகும்

அடுத்து **Ashridge Studies** என்பது 1965இல் அறிமுகமாகியது இங்கிலாந்திலுள்ள சிறிய பெரிய கைத்தொழில் நிறுவனத்திலே மேற்கொள்ளப்பட்டது வெவ்வேறு கைத்தொழில் நிறுவனத்திலே மேற் கொள்ளப்பட்டது. வெவ்வேறு கைத்தொழில் நிறுவனத்திலே கடைப்பிடிக்கப்படும் தலைமை வகித்தலில் 4 இயல்பு இருப்பதாக கூறப்படுகின்றது.

1. அறிவிக்கும் இயல்பு **(Tell Style)**
2. திணிக்கும் இயல்பு **(Sells Style)**
3. கலந்தாலோசிக்கும் இயல்பு **(Consultative Style)**
4. இணையும் இயல்பு **(Join Style)**

இதனை விட **Tannen Baum** என்பவர் தொடர்ச்சித் தலைமைத்துவ இயல்பு என்ற கருத்தை முன்வைத்தார் இவர் தலைவனிற்கும் ஊழியர்களுக்கும் இடையே அதிகாரத்தையும் சுதந்திரத்தையும் 7 கட்டங்களில் விளக்கினார் முதல் 4 கட்டமும் அதிகாரத்தை பெருமளவில் கொண்ட தலைவனை குறிக்கும் மிகுதி மூன்றும் ஜனநாயக முறையில் தலைவர் நடந்து கொள்ளும் அடிப்படையில் உதவியாளருக்கு சுதந்திரம் பெருமளவில் வழங்கப்பட்டதனை குறிக்கும்.

**முடிவுரை:**

தலைமைத்துவம் தொடர்பான கருத்தானது நாளிற்கு நாள் புதிய புதியவர்களால் அறிமுகப்படுத்தப்படுகின்றது இங்கே கூறப்பட்ட தலைமைத்துவம் இயல்புகள் வேறுபட்டாலும் அவற்றின் உட்கருத்து ஒன்றே ஆகும். தலைவரின்

அறிவு, திறன், ஆளுமை என்பனவும் முயற்சியின் தன்மை, குறிப்பிட்ட நிலைமை பணியாளர்களின் திறன் ஆகிய மாறிகளின் அடிப்படையில் தலைமைத்துவம் தீர்மானிக்கப்படுகின்றது ஒரு நிறுவனத்திலே கடமையாற்றும் முகாமையாளர் தலைமைத்துவம் தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள் என்பனவற்றினை வாசிப்பதன் மூலமும் பேச்சு திறனை விருத்தி செய்ய முடியும் நிறுவன வெற்றி சிறந்த தலைமைத்துவத்திலே தங்கியுள்ளது மேலும் திறனற்ற முகாமைத்துவம் பல்வேறு முகாமைத்துவப் பிரச்சனைகளுக்கு வழிவகுப்பனவாகவும் அமைந்து விடுகின்றது.

உசாத்துணை நூல்: - முகாமைத்துவம்
க. தேவராசா

# இன்றைய உலகில் எண்ணெய் விலை அதிகரிப்பும் அதனால் இலங்கை எதிர்நோக்கும் பிரச்சனைகளும்

திரு. இ.கனேசானந்தன்
ஆசிரியர்,
(யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

பெற்றோலிய வளங்களினால் அதிகளவில் நிறைவடைந்துள்ள நாடுகளாக மத்திய கிழக்கு நாடுகளினைக் குறிப்பிடலாம். இந்த நாடுகளே ஏனைய நாடுகளுக்குப் பெருமளவில் எண்ணெயை ஏற்றுமதி செய்கின்றன. இந்த நாடுகளாலும், ஏனைய எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளினாலும், ஏற்றுமதி செய்கின்ற எண்ணெய் விலைகள் 2004ஆம் ஆண்டில் கடுமையாக அதிகரிக்கத் தொடங்கி 2005இன் தொடக்கத்தில் வரலாற்றில் இல்லாத உயர்ந்த மட்டத்தினை அடைந்தன. பிறெனட் மசகெண்ணெய்யின் விலை 2004 ஒக்டோபரில் பீப்பாய் ஒன்றிற்கான ஐக்கிய அமெரிக்க டொலர் 52 கொண்ட முன்னைய உயர்ந்த விலையுடன் ஒப்பிடுகையில் 2005 மார்ச்சில் பீப்பாய் ஒன்றிற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 56இற்கு அதிகரித்தது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மசகெண்ணெய்யின் சராசரி இறக்குமதி விலை 2003இன் பீப்பாய் ஒன்றிற்கான ஐக்கிய அமெரிக்க டொலர் 29 உடன் ஒப்பிடுகையில் 2004இல் பீப்பாய் ஒன்றிற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 38இற்கு 31 சதவீதத்தினால் அதிகரித்தது.

பெற்றோலிய விலைகளிலேற்பட்ட அதிகரிப்பிற்கான காரணங்கள்:

1. சீனா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் யப்பான் ஆகிய நாடுகளில் இருந்தான குறிப்பிடத்தக்களவு உயர்ந்த கேள்வியின் காரணமாக எண்ணெய்க்கான உலகளாவிய கேள்வி கடந்த 16 ஆண்டுகளில் இப்பொழுது மிக விரைந்த வேகத்தில் அதிகரித்திருக்கின்றது.

2. சீனாவின் எண்ணெய் நுகர்வு மட்டும் 2004இல் 20 சதவீதத்தினால் அதிகரித்திருக்கிறது.

3. மத்திய கிழக்கு, வெனிசூலா மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளில் காணப்பட்ட பதற்றமான அரசியல் நிலைமைகளும், மோசமான வானிலை நிலைமைகளும் எண்ணெய் வழங்கலின் தடைக்கு காரணமாக இருந்தன.

4. பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பல்லாத பாரிய எண்ணெய் உற்பத்தியாளராக விளங்கும் ருசிய எண்ணெய்க் கம்பனியாக யூகோசில் ஏற்பட்ட நிதியியல் நெருக்கடி ஆகியனவாகும்.

2004இல் இலங்கை ஏறத்தாழ 30 மில்லியன் பீப்பாய் பெற்றோலிய உற்பத்திகளை இறக்குமதி செய்தது. இதில் ஏறத்தாழ 50 சதவீதம் மசகெண்ணெய் வடிவிலும் மீதி ஊர்திகளுக்கான டீசலை முனைப்பாகக் கொண்டு பல்வேறு வகைப்பட்ட சுத்திகரிப்பு உற்பத்திகளையும் உள்ளடக்கி இருந்தது.

இலங்கையின் பெற்றோல், மண்ணெண்ணெய், மற்றும் ஊர்திகளுக்கான டீசல் என்பவற்றின் ஆண்டு நுகர்வானது 2.6 பில்லியன் லீற்றர்களாக விளங்கியது இவ்வாறு இலங்கையின் எண்ணெய் நுகர்வு அதிகரித்தமைக்கான காரணங்கள் வருமாறு:

1. போக்குவரத்துத்துறை முக்கிய பெற்றோலிய நுகர்வாளராக விளங்கியமை.

2. வலு, கைத்தொழில்துறையின் பெற்றோலிய நுகர்வு அதிகரித்தமை.

3. குடியிருப்பாளர்களின் பெற்றோலியக் கேள்வி அதிகரித்தமை.

4. ஊர்திப்பதிவுகளின் எண்ணிக்கை அதிகரித்தமை.

5. பெற்றோலியத்திற்கு மாற்றான மாற்று வலு மூலங்கள் இல்லாமை.

6. திட்டமிடப்பட்டுள்ள நிலக்கரி வலுவும் நீர்மின் வலுச் செயற்றிட்டங்களும் இன்னமும் நடைமுறைப்படுத்தப் படாமை.

7. வெப்பமின் வலுவின் பயன்பாடு அதிகரித்தமை.

இலங்கை போன்ற எண்ணெய் இறக்குமதி செய்யும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் மீது எண்ணெய் விலை உயர்வு ஏற்படுத்தும் தாக்கங்களாகப் பின் வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. வர்த்தக சமநிலையை விரிவாக்கி திரண்ட சென்மதி நிலுவை மோசமடைவதற்கு வழிவகுக்கும்.

2. வெளிநாட்டு ஒதுக்குகள் இழக்கப்படுவதற்கும் வழிவகுக்கும்.

3. நாட்டில் பணவீக்கமொன்றினை ஏற்படுத்தும்

4. அரச வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை விரிவடைவதுடன் அதிகரிக்கவும் வழிவகுக்கும்.

5. அரசாங்கத்தின் கடன் பளு அதிகரித்து பொருளாதாரச் சுமை ஏற்படுகின்றது.

6. மக்களின் வருமான ஏற்றத் தாழ்வுகள் விரிவடைந்து செல்ல வழி வகுக்கும்.

7. நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவு உயர்வடைதல்.

8. தனியார்துறை முதலீடுகளை இல்லாமல் செய்து விடும்.

9. நாட்டின் பொருளாதார வளர்ச்சி பாதிப்படையும்

10. நாட்டின் அபிவிருத்தி பாதிப் படையும்.

2002 சனவரியில் அறிமுகப் படுத்தப்பட்ட விலையிடல் சூத்திரத் திற்கமைய முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகள் மாதாந்தம் திருத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் 2004 சனவரிக்குப் பின்னர் விலையிடல் சூத்திரத்தின் நியதிகளின் படி உள்நாட்டு விலைகள் முழுமையாகச் சீராக்கப்படவில்லை இது எண்ணெய்க் கம்பனிகளுக்கு பாரிய இழப்புக்களைத் தோற்றுவித்து உதவுதொகைகளை வழங்குவதற்கு அரசாங்கத்தினை நிர்ப்பந்தித்தது. பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் மீதான ஒரு ரூபா உதவுதொகை ஆண்டொன்றிற்கு ரூபா 2.6 பில்லியன் உதவுதொகை யினைத் தேவைப்படுத்தும் எண்ணெய்க் கம்பனிகளுக்கு அரசாங்கம் ரூபா 18 பில்லியன் கொண்ட மொத்த உதவு தொகைக்கே வழங்கும் கடப்பாட்டினைக் கொண்டிருந்தது. இது 2004ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 0.9 சதவீதமாக இருந்தது.

இப்பாரிய அளவு உதவு தொகையினை நிதியிட அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் அதனால் தோன்றும் விளைவுகள்.

அரசாங்கம் வரிகளை அதிகரிக்கவேண்டும் அல்லது அதன் செலவினத்தில் எங்காவது குறைப்பினை ஏற்படுத்த வேண்டும்.

அரசாங்கத்தினால் வரிகள் அதிகரிக்கப்படுமாயின் எரிபொருட்களைப் பயன்படுத்துவோர் மற்றும் பயன்படுத்தாதோர் எல்லோருமே அதனைச் செலுத்த வேண்டி இருக்கும் எனினும் வரி விதிப்புக்கள் பொதுவாக மறைமுகவரிகளாக இருப்பதனால் உயர் வருமானத் தொகுதியினரை விட குறைந்த வருமானம் பெறும் குழுவினரே வரிச்சுமையைப் பெருமளவிற்கு சுமக்க வேண்டி இருக்கும்.

அரசாங்கம் அதன் செலவினங்களை ஏதாவதோரிடத்தில்

குறைக்க வேண்டி இருக்குமாயின் அதன் காரணமாக பிற்பட்ட பிரிவினருக் கான உதவி வழங்கும் ஆற்றல் குறைவடையக் கூடும். அல்லது நீண்ட கால பொருளாதார அபிவிருத்திக்கு இன்றியமையாததான உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்கள் மீதான முதலீட்டு ஆற்றல் கட்டுப்படுத்தப்படக் கூடும். உள்நாட்டு சந்தைகளில் இருந்து அரசாங்கம் அதன் கடன்பாடுகளை அதிகரிக்குமாயின் இது மூலவளங் களை இல்லாமல் செய்யும் செயற் பாட்டினூடாக தனியார் துறைக்கு கிடைக்கத்தக்கதாக உள்ள மூலவளங் களைக் குறைத்துவிடும். கடன்பாடுகள் வங்கித்தொழில் முறையினூடாக மேற்கொள்ளப்படுமாயின் பணவீக்கம் ஏற்படும்.

எரிபொருள் உதவுதொகையின் காரணமாக ஏற்பட்ட அதிகரித்த அரச கடன்பாடுகளின் விளைவாக பண வீக்கத்தில் ஏற்படும் உயர்வு வறியவர் களைக் கூடுதலாகப் பாதிக்கின்றது. அதற்குக் காரணம் பணவீக்கத்திற் கெதிராகத் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் ஆற்றல் அவர்களிடம் இல்லாதிருப்பதே ஆகும்.

இலங்கை அரசு எரிபொருட் களை பாவனையாளர்கள் சிக்கனமின்றி அதிகளவு பயன்படுத்துவதனைக் குறைப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளாகப் பின்வருவன வற்றைக் குறிப்பிடலாம்.

1. பன்னாட்டு விலைகளின் அதிகரிப்பிற்குச் சமாந்தரமாக உள்நாட்டு விலைகளை அதிகரிப்பது குறிப்பாகச் சிக்கனமின்றி எரிபொரு ளைப் பயன்படுத்தும் பாவனையாளர் களினுடைய பாவனையைக் குறைக்க முடிகின்றது.

2. வீதி நெருசலைத் தவிர்ப்பதற்கு பொருத்தமான முறையொன்றினை அபிவிருத்தி செய்யும் விதத்தில் நகர மற்றும் நெடுஞ்சாலை வடிவமைப் பதிலும் திட்டமிடுதலிலும் முன்னுரிமை யளித்தல் வேண்டும்.

3. வினைத்திறன் மிக்க போக்கு வரத்துமுறையினை அபிவிருத்தி செய் வது தனிப்பட்ட ஊர்திகளின் பாவனை யைக் குறைத்து அதன்மூலம் வலு வினைச் சேமிப்பது சுற்றாடல் பாது காப்பிற்கும் வழிவகுக்கின்றது.

4. தற்போது உள்ள புகைவண்டி முறையினைச் சிறந்த முறையில் பயன்பாட்டிற்குள் கொண்டு வருவது பயணிகள் மற்றும் பொருள் போக்கு வரத்திற்காகப் பயன்படுத் தப்படும் சிறிய ஊர்திகளினால் பயன்படுத் தப்படும் வலுவினைச் சேமிக்க உதவும்.

5. நிலக்கரிவலு, ஏனைய மாற்று வலு மூலங்களை அபிவிருத்தி செய்வது வலு உருவாக்கத்திற்கான பெற்றோலிய இறக்குமதிகள் மீதான அழுத்தத்தினைத் தவிர்க்க உதவும்.

6. தேவையற்ற போக்குவரத்துப் பாவனையைத் தவிர்த்துக்கொள்ளலும் எரிபொருட் பாவனையாளர்கள் தமது தனிப்பட்ட ஊர்திப்பாவனையை விடுத்து அல்லது குறைத்துப் பொதுப்போக்குவரத்தினைப் (இலங்கைப் போக்குவரத்துச்சபை -பஸ்) பயன்படுத்திக்கொள்வது எரிபொருட் களினைச் சிக்கனமாகப் பயன்படுத்திக் கொள்ள உதவுகின்றது.

7. பெற்றோலியத்திற்கு மாற்றீடான மாற்று வலு மூலங்களினை அபிவிருத்தி செய்தல்.

மேற்கூறிய நடவடிக்கைகளின் மூலம் இலங்கை அரசு பெற்றோலிய இறக்குமதியினைக் குறைத்து தனது நுகர்வுச் செலவினைக் குறைத்து அந்நியச் செலாவணியை சேமித்து அதனை நாட்டின் அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல முடியும் எனலாம்.

உசாத்துணை நூல்:
**மத்தியவங்கி அறிக்கை - 2004**

# மேந்தலைக் கிரயம்
## [Over Head Cost]

பா. சோபிநாத்
2006 A/L Com

பொருட்களின் உற்பத்தியுடன் நேரடியாக தொடர்புபடாத அனைத்து நேரிற் செலவுகளினதும் கூட்டுமொத்தத் தொகையே மேந்தலைக் கிரயம் எனப்படும். அதாவது நேரில் மூலப்பொருள் கிரயம், நேரில் கூலிக்கிரயம், நேரில் செலவுக்கிரயம் என்பவற்றினைக் கூட்டிவரும் தொகையினை குறிக்கும்.

உதாரணம்: முகாமையாளர் சம்பளம்

மேந்தலைக்கிரயம் = நேரில் மூலப்பொருள் + நேரில் கூலிக்கிரயம் + நேரில் செலவுக்கிரயம்

மேந்தலைச் செலவுகளினை அதன் தன்மையினை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு மூன்று வகைப்படுத்தலாம்.

1. உற்பத்தி மேந்தலை
2. நிர்வாக மேந்தலை
3. விநியோக மேந்தலை

**உற்பத்தி மேந்தலை:**

பொருட்களினை உற்பத்தி செய்யும் போது தொழிற்சாலையில் ஏற்படுகின்ற அனைத்து நேரில் கிரயங்களே உற்பத்தி மேந்தலை எனப்படும்.

உதாரணம்: தொழிற்சாலை வாடகை

**நிர்வாக மேந்தலை:**

நிறுவனத்தினை முகாமை செய்வதுடன் தொடர்புபட்ட அனைத்த நேரில் கிரயங்களே நிர்வாக மேந்தலைகள் எனப்படும்.

உதாரணம்: எழுதுவினைஞர் சம்பளம்

**விற்பனை விநியோக மேந்தலை:**

உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் வாடிக்கையாளர் கரங்களுக்குச் சென்றடையும் வரை ஏற்படுகின்ற அனைத்து நேரில் கிரயங்களே விற்பனை விநியோக மேந்தலைகள் எனப்படும்.

உதாரணம்: விளம்பரம்

**செலவுக் கூற்று:**

| | |
|---|---|
| நேர் பொருட்கிரயம் | X |
| நேர் கூலிக்கிரயம் | X |
| நேர் செலவுக்கிரயம் | X |
| மூலக்கிரயம் | X |
| உற்பத்தி மேந்தலைகள் | X |
| உற்பத்தி கிரயம் | X |
| நிர்வாக மேந்தலை | X |
| விற்பனை விநியோக மேந்தலை | X |
| மொத்த கிரயம் | X |
| இலாபம் | X |
| விற்பனை விலை | X |
| | |

**செலவு நடத்தை: (Cost behaviour)**


உற்பத்தி மட்டங்களில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு ஏற்ப ஓர் அலகு உற்பத்திக்கான செலவுகள் எவ்வாறு மாறுகின்றன என்பதை எடுத்துக் காட்டும் நடத்தையே செலவு நடத்தை எனப்படும். செலவுகளினை அதன் நடத்தைக்கு ஏற்றவாறு பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. நிலையான செலவுகள்
2. மாறும் செலவுகள்
3. அரைப்பகுதி மாறும் செலவுகள்
4. படிமுறைச் செலவுகள்
5. ஆழ்ந்த செலவுகள்

**நிலையான செலவு: Fixed Cost**

உற்பத்தி வெளியீட்டு மட்டத்துடன் தொடர்பற்றதும் காலத்துடன் தொடர்புடையதுமான செலவுகளே நிலையான செலவுகள் எனப்படும். மேலும் வெளியீட்டு மட்டத்தில் ஏற்படும் மாற்றம் இச் செலவுகளினைப் பாதிப்பதில்லை.


உதாரணம்: தொழிற்சாலை வாடகை




**மாறும் செலவுகள்: Variable Cost**

உற்பத்தி வெளியீட்டு மட்டத்துடன் விகிதாசார ரீதியான நேர்த்தொடர்பைக் கொண்ட செலவுகளே மாறும் செலவுகள் எனப்படும் மேலும் வெளியீட்டு மட்டத்தில் ஏற்படும் மாற்றம் இச்செலவினைப் பாதிக்கும்.


உதாரணம்: ஆடைகளைத் தைக்கும் ஊழியருக்கு வழங்கப்படும் கூலி.





**அரைப்பகுதி மாறும் செலவுகள்: Semivariable Cost**

செலவின் ஒரு பகுதி வெளியீட்டு மட்டத்துடன் தொடர்புடையதாகவும் மறு பகுதி வெளியீட்டுடன் தொடர்பற்றதாகவும் காணப்படும் செலவுகளே அரைப்பகுதி மாறும் செலவுகள் எனப்படும்.

உதாரணம்: தொலைபேசிக் கட்டணம்




உதாரணம்: விற்பனையாளர் தரகும் மின்சாரக்கட்டணம்





**படிமுறைச் செலவுகள்: Step Cost**

குறிப்பிட்ட உற்பத்தி வீச்சுக்கள் செலவு நிலையானதாக காணப் படுவதுடன் உற்பத்தியானது அவ்வீச்சிலும் பார்க்க அதிகரிக்கும் போது செலவு குறிப்பிட்ட மடங்கினால் அதிகரிக்குமாயின் அதனையே படிமுறைச் செலவு எனப்படும்.

உதாரணம்: மேற்பார்வையாளர் சம்பளம்

மேற்பார்வையாளர் ஒருவரினால் ஆகக் கூடுதலாக 10 ஊழியரினை மேற்பார்வை செய்ய முடியும் அவருக்கான மாதச் சம்பளம் **1000/-** எனின்,



**ஆழந்த செலவுகள்: Sunk Cost**

ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட வளங்கள் மீது காணப்படுகின்ற செலவே ஆழந்த செலவுகள் எனப்படும்.

உதாரணம்: நிலையான சொத்துக்கள் கொள்வனவு தொடர்பாக ஏற்பட்ட செலவுகள்

**கிரய அலகு: Cost Unit**

கிரயங்களினைக் கண்டு கொள்வதற்கு பயன்படுத்தப்படுகின்ற அளவு சார்ந்த தொகையே கிரய அலகு எனப்படும்.

உதாரணம்:

1. பாண்களினை உற்பத்தி செய்யும் பேக்கரி ஒன்றின் கிரய அலகாக அமைவது பாண் ஆகும்.
2. பயணிகள் சேவை நடத்தும் நிறுவனம் ஒன்றின் கிரய அலகாக அமைவது பயணிகள் அல்லது கிலோமீற்றர்
3. உணவு விடுதி ஒன்றின் கிரய அலகாக அமைவது ஒரு வேளைக்கான உணவு
4. மின்சாரம் வழங்கும் நிறுவனம் ஒன்றின் கிரய அலகாக அமைவது கிலோவாட்ஸ்/மணித்தியாலம் **(KWPH)**

**கிரய நிலையம்: Cost Centre**

குறித்த சந்தர்ப்பம் ஒன்றில் கிரய அலகுகளுக்கிடையில் கிரயங்களினைப் பகிர்வதற்கு நடுவராகத் தொழிற்படுவதே கிரய நிலையம் எனப்படும்.

கிரயங்களினைக் கண்டுகொள்வதற்கு நிலையங்களையோ, நபர்களையோ, உபகரணங்களையோ, கிரய நிலையமாகப் பயன்படுத்தலாம்.

உதாரணம்: கார்களினை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றில் பின்வரும் பகுதிகள் கிரய நிலையமாகப் பயன்படுத்தலாம்.

1. வடிவமைத்தல் பகுதி
2. பொருத்துதல் பகுதி
3. முடிவுறுத்தல் பகுதி

**Note:** சில சமயங்களில் கிரய நிலையமும் கிரய அலகும் ஒன்றாகவே காணப்படலாம்.

**கிரயமிடல் நடைமுறைகள்:**

1. மேந்தலைகளினை திரட்டுதல்
2. மேந்தலைகளினை ஒதுக்குதல்
3. மேந்தலைகளினை பகிர்ந்தளித்தல்
4. மேந்தலைகளினை உள்ளடக்குதல்

**மேந்தலைகளினைத் திரட்டுதல்: (Collection of Overheads)**

குறிப்பிட்ட காலப்பகுதியில் உற்பத்தியின் போது ஏற்பட்ட மேந்தலைச் செலவுகளினை ஒன்று சேர்க்கின்ற நடவடிக்கையே மேந்தலைகளினைத் திரட்டுதல் எனப்படும்.

**மேந்தலைகளினை ஒதுக்குதல்: Allocation of Overheads**

குறிப்பிட்ட செலவு நிலையத்துடன் நேரடியாகத் தொடர்புபட்டதும் இலகுவாக அடையாளம் காணக்கூடியதுமான மேந்தலைச் செலவுகளினை குறிப்பிட்ட செலவு நிலையத்திற்கு சாட்டுதல் செய்வதனையே மேந்தலைகளினை ஒதுக்குதல் எனப்படும்.

உதாரணம்: களஞ்சிய காவலாளி சம்பளத்தினை களஞ்சிய திணைக்களத்துக்கு சாட்டுதல் செய்தல்

**மேந்தலைகளினைப் பகிர்ந்தளித்தல்: Apportionment of Overheads**

குறிப்பிட்ட செலவு நிலையத்துடன் நேரடியாக தொடர்புபடாததும் இலகுவில் அடையாளம் காணப்பட முடியாததுமான பொது மேந்தலைகளினை தொடர்புபட்ட அனைத்து திணைக்களங்களிற்கும் ஓர் ஏற்றுக்கொள்ளப்பட்ட பகிர்ந்தளித்தல் முறைக்கமைய சாட்டுதல் செய்வதனை மேந்தலைகளினைப் பகிர்ந்தளித்தல் எனப்படும்.

உதாரணம்:

| பொது மேந்தலை | பகிர்வுக்கான அடிப்படை |
|---|---|
| வாடகை<br>காப்புறுதி<br>மின்சாரம்<br>கட்டிடப் பழுது பார்த்தல்<br>இறையும் வரியும் | தளப்பரப்பு |
| குளிரூட்டல்<br>வெப்பமூட்டல் | கனவளவு |
| இயந்திரப் பெறுமானத்தேய்வு<br>இயந்திரப் பழுதுபார்த்தல்<br>இயந்திரக் காப்புறுதி | இயந்திரத்தின் கிரயம்<br>புத்தகப் பெறுமதி |
| சிற்றுண்டிச்சாலைச் செலவுகள்<br>ஊழியர் நலன் பேணல்<br>மேற்பார்வையாளர் சம்பளம்<br>ஆளணி செலவுகள் | ஊழியர் எண்ணிக்கை |

**மீள் பகிர்வு (2ஆம் பகிர்வு)**

சேவைத் திணைக்களங்களின் மேந்தலைச் செலவினை மீள் உற்பத்தி திணைக்களங்களுக்கு பங்கீடு செய்யும் நடவடிக்கையே 2ம் பகிர்வு எனப்படும்.

தொழிற்சாலை ஒன்றில் உற்பத்தி திணைக்களங்கள் சேவைத் திணைக்களங்கள் என்பன காணப்பட்ட போதும் பொருட்களின் உற்பத்தியுடன் உற்பத்தி திணைக்களங்களே நேரடியாகத் தொடர்புபட்டவையாகக் காணப்படுகின்றன. எனவே சேவைத் திணைக்களங்களின் மேந்தலைச் செலவினை அலகுக்கு ஏற்பட்ட செலவினைக் கணிப்பீடு செய்வதற்கு மீள்

உற்பத்தி திணைக்களங்களுக்குப் பங்கீடு செய்யப்படல் வேண்டும். இதனையே மீள் பகிர்வு எனப்படும். இவ்வாறு மீளப்பங்கீடு செய்யப்பட்ட தன்மையினை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு இரண்டு வகைப்படுத்தலாம்.

1. உற்பத்தித் திணைக்களங்களுக்கு மட்டும் மீள்பங்கீடு செய்யப்படல்
2. உற்பத்தி திணைக்களங்களுடன் மற்றைய சேவைத் திணைக்களங்களுக்கும் பங்கீடு செய்யப்படல்

**சேவைத் திணைக்களங்களின் மேந்தலைச் செலவினை உற்பத்தி திணைக்களத்திற்கும், மற்றைய சேவைத் திணைக்களங்களுக்கும் பங்கீடு செய்தல்:**

இம் முறையின் கீழ் சேவைத் திணைக்களங்களின் மேந்தலைச் செலவினைப் பங்கீடு செய்வதற்கு பின்வரும் முறைகள் பயன்படுத்தப்படும்.

1. தொடர்ச்சியான பங்கீட்டுமுறை **(Continuons Auotment Method)**
2. ஒருங்கமை சமன்பாட்டு முறை **(Simultaneous Euqation Methad**
3. நீக்குதல் முறை **(Elimination Method)**

**Note:**

நீக்குதல் முறைக்கமைய எந்த சேவைத் திணைக்களத்தின் மேந்தலைச் செலவு கூடுதலாகக் காணப்படுகின்றதோ அத்திணைக்களத்தினையே முதலாவதாக நீக்குதல் வேண்டும்.

**மேந்தலை உறிஞ்சுதல் / மேந்தலை உள்ளடக்குதல்:**
**(Absorption of Overheads)**

நேரில் கிரயங்கள் அனைத்தினையும் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு அலகுகளுக்கிடையில் ஓர் பொருத்தமான அடிப்படையில் பகிர்ந்தளிப்பதனையே மேந்தலை உறிஞ்சுதல் எனப்படும்.

**மேந்தலைகளினை உறிஞ்சுவதற்குப் பயன்படும் முறைகள்:**

1. ஊழிய மணி முறை
2. இயந்திர மணி முறை
3. உற்பத்தி அலகு முறை
4. நேர்மூலப்பொருட் கிரயத்தின் சதவீதமுறை
5. நேர்கூலிக் கிரயத்தின் சதவீதமுறை
6. மூலக் கிரயத்தின் சதவீதமுறை

**ஊழிய மணி முறை:**

$$\text{ஒரு ஊழிய மணிக்கான மேந்தலைச் செலவு} = \frac{\text{மதிப்பிட்ட மேந்தலை}}{\text{மதிப்பிடப்பட்ட ஊழிய மணித்தியாலம்}}$$

இம்முறை ஊழியர் செறிவினை தொழில்நுட்பத்தைப் பின்பற்றுகின்ற நிறுவனங்களிற்கு பொருத்தமானதாகும்.

**இயந்திர மணிமுறை:**

$$\frac{\text{ஒரு இயந்திர மணி முறை மேந்தலைச் செலவு}}{} = \frac{\text{மதிப்பிட மேந்தலை}}{\text{மதிப்பிடப்பட்ட ஊழிய மணித்தியாலம்}}$$

இம்முறை இயந்திர செறிவான தொழில்நுட்பத்தைப் பின்பற்றுகின்ற நிறுவனங்களிற்கு பொருத்தமானதாகும்.

**உற்பத்தி அலகுமுறை:**

$$\text{ஒரு அலகுக்கான மேந்தலைச் செலவு} = \frac{\text{மதிப்பிடப்பட்ட மேந்தலை}}{\text{மதிப்பிடப்பட்ட உற்பத்தி அலகு}}$$

**நேர்மூலப்பொருள் கிரயத்தின் சதவீத முறை:**

$$\text{ஓர் அலகுக்கான மேந்தலை நேர்மூலம் பொருள் கிரயத்தின் சதவீதமாக} \quad \frac{\text{மதிப்படப்பட்ட மேந்தலை}}{\text{மதிப்பிடப்பட்ட நேர்மூலப் பொருள் கிரயம்}} \times 100$$

**நேர்கூலிக் கரயத்தின் சதவீதமுறை:**

$$\text{ஒரு அலகுக்கான மேந்தலை நேர்கூலி கிரயத்தின் சதவீதமாக} \quad \frac{\text{மதிப்பிடப்பட்ட மேந்தலை}}{\text{மதிப்பிடப்பட்ட நேர்கூலிக்கிரயம்}} \times 100$$

**மூலக் கிரணத்தின் சதவீத முறை:**

$$\text{அலகுக்கான மேந்தலை மூலக்கிரயத்தின் சதவீதமாக} \quad \frac{\text{மதிப்பிட்ட மேந்தலை}}{\text{மதிப்பிடப்பட்ட மூலக்கிரயம்}} \times 100$$

**மேந்தலை கூடுதல் உள்ளடக்கம்:**

உண்மையாக ஏற்பட்ட மேந்தலைக் கிரயத்திலும் பார்க்க உள்ளடக்கப்பட்ட மேந்தலைக் கிரயம் கூடுதலாகக் காணப்படுமாயின் அதனையே மேந்தலைக் கூடுதல் உள்ளடக்கம் எனப்படும்.

**மேந்தலை குறைவு உள்ளடக்கம்:**

உண்மையாக ஏற்பட்ட மேந்தலைக் கிரயத்திலும் பார்க்க உள்ளடக்கப்பட்ட மேந்தலைக்கிரயம் குறைவாகக் காணப்படுமாயின் அதனையே மேந்தலைக் குறைவு உள்ளடக்கம் எனப்படும்.

உசாத்துணை நூல்: **R. Yugendarajah**
Cost-Acconting

# எமது அன்பிற்கினிய மாணவர்களே!

உங்கள் ஒளிமயமான நல்வாழ்விற்காக பாடசாலைப் பருவத்தில் இருந்தே சேமிப்பு பழக்கத்தை உருவாக்குவதே மக்கள் வங்கியின் பிரதான குறிக்கோள் ஆகும். மக்கள் வங்கி அறிமுகம் செய்யும் "மாணவ மலர்ச்சிக்" (சிசு உதான) கணக்கை ஆரம்பித்து சேமிப்பதன் மூலம் அதிகூடிய வட்டியுடன் பல நன்மைகள் கிடைக்கின்றன.

| | | |
|---|---|---|
| ◆ கணக்கின் மீதி | 100/= | வை அடையும்போது ஒரு அழகிய தொப்பி |
| | 2500/= | வை அடையும்போது வங்கி இலட்சனை பொறித்த குடை |
| | 5000/= | வை அடையும் போது சிறிய பை (Bag) |
| | 10,000/= | வை அடையும்போது பெரிய பயணப்பை (T.Bag) |
| | 25,000/= | வை அடையும் போது அகராதி (Dictionary) |
| | 100,000/= | வை அடையும் போது 1275/=பெறுமதியுள்ள மாணவர் விரும்பும் பரிசு |
| | 200,000/= | வை அடையும்போது 2000/=பெறுமதியுள்ள மாணவர் விரும்பும் பரிசு |

◆ இவற்றைவிட முதன் முறையில் G. C. E. சா. தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் அனைத்துப் பாடங்களிலும் அதி விசேட சித்தி பெற்றால் 1000/=

◆ முதன் முறையில் G.C.E. உ. தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றால் 2000/=

◆ இவற்றைவிட மாணவர் கணக்கின் மீதி 10,000/=வை அடையும் போது பல இலட்சம் ரூபாய் பரிசுகளைக் கொண்ட ஜயசிறி சீட்டிழுப்பில் கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

◆ இவற்றைவிட எந்த ஒரு வங்கியும் இதுவரை வழங்காத மாணவர்க்கும் / பெற்றோருக்குமான காப்புறுதிப் பாதுகாப்பும், மருத்துவ உதவியும்.....

| | | | |
|---|---|---|---|
| இதற்கான வயதெல்லை | : | மாணவர் | 18 வயது வரை |
| | | பெற்றோர் | 18-60 வயது வரை |

மாணவர்கட்கு:

◆ கணக்குடமையாளர் நோயுற்று வைத்தியசாலையில் 2 நாட்களுக்கு மேல் அனுமதிக்கப்பட்டிருந்தால் நாளொன்றுக்கு 100/= வீதமும் (வருடத்தில் 30 நாட்கள் மட்டும்)

◆ அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தால் நாளொன்றுக்கு 200/= வீதமும் (வருடத்தில் 30 நாட்கள் ) வழங்கப்படும்.

◆ அபாயகரமான நோய்க்கான (இருதய, சிறுநீரகச் சத்திர சிகிச்சை) காப்புறுதியாக கணக்கின் மீதியின் ஐந்து மடங்கு ஆகக் கூடிய தொகை 250,000/= வழங்கப்படும்.

பெற்றோருக்கு:

◆ பிள்ளையின் கணக்கு ரூபா 5000/=வுக்கு மேற்பட்ட மீதியை மூன்று மாதங்கள் பேணி இருந்தால் கணக்குடமையாளரின் பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு ஆயுட்காப்புறுதியாக கணக்கின் மீதியின் 10 மடங்கு தொகை வழங்கப்படும். (ஆகக்கூடிய தொகை 500,000/=மட்டும்) (3 மாதங்களுக்குள் வங்கிக்கு அறிவித்தல் கொடுத்து ஆவணங்களை கையளிக்க வேண்டும்.)

◆ விபத்தினால் ஏற்படும் நிரந்தர ஊனத்திற்கான காப்புறுதியாக கணக்கு மீதியின் 5 மடங்கு தொகை வழங்கப்படும். (ஆகக் கூடிய தொகையாக ரூ. 250,000/= மட்டும்)

◆ இத்தோடு மாணவர்களாகிய உங்களுக்கு வங்கிப் பழக்கத்தையும், வங்கியாளர் ஆகும் பயிற்சியையும் மக்கள் வங்கி உங்களுக்கு வழங்குகின்றது.

◆ எனவே மாணவர் ஒவ்வொருவரும் ஒரு மாணவ மலர்ச்சி (சிசு உதான) கணக்கொன்றை ஆரம்பிக்க உங்கள் பாடசாலை வங்கி அலகிற்கோ அல்லது அருகிலுள்ள எமது வங்கிக் கிளைக்கோ விரைந்து செல்லுங்கள்.

**மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கியே!**

**மக்கள் வங்கி, சுன்னாகம்.**


ஹட்டன் நஷனல் வங்கி
சுன்னாகம்
HNB
PATHUM VIMANA
For you, your family and for the Nation 2005
HATTON NATIONAL BANK
LIMITED
HNB
லீசிங்
விவசாயக் கடன்கள்
கடன் அட்டைகள்
VISA
MasterCard
ஷாந்தி வீடமைப்புக் கடன்
SHANTHI
HNB
அடகு வைக்கும் வசதி
சிங்கிதி பத்தும்
110 தங்க நாணயங்கள்
பத்தும் விமான
ரு.500,000
1100 சிங்கிதி கைக் கடிகாரங்கள்
550 சிங்கிதி வோக்மன்கள்
2200 சிங்கிதி புத்தகப் பைகள்
இச்சீட்டிழுப்பிற்கு நீங்களும் தகுதிபெற விரும்புகிறீர்களா?
சேமிப்புக் கணக்கில் 10,000 ரூபாவையோ அல்லது நடைமுறைக்கணக்கில் 5,000 ரூபாவையோ நீங்கள் கணக்கில் தொடர்ச்சியாக பேணுவதன் மூலம் மேற்குறிப்பிட்ட சீட்டிழுப்பிற்கு தகுதி பெறுவீர்கள்.
HNB

# மகாஜனா - ஸ்கந்தா
# துடுப்பாட்ட வீரர்கள் கீதம்

வீரர்களின் போர் - இது
வீரர்களின் போர்.
ஸ்கந்தா மகாஜனா வீரர்களின் போர்.

ஒற்றுமையுடன்மிகு கண்ணியத்துடன்
வேற்றுமைகள் ஏதுமின்றி நாங்கள் மோதுவோம்.
பற்றுறுதியால் எங்கள் பாடசாலைக்காய்
அர்ப்பணிப்புடன் என்றும் நாங்கள் ஆடுவோம்.

(வீரர்களின் போர்)

நூறு ஆண்டுகள் தாண்டி மேலும் உயர்ந்து
வீறுநடை போடுது எங்கள் ஸ்கந்தா.
கந்தைய வள்ளல் தந்த சிந்தை நிறைவாய்
வந்துநிலைத்தே புகழ் கொண்ட ஸ்கந்தா.

(வீரர்களின் போர்)

காவலனான பெரும் பாவலனான
துரையப்பா பிள்ளையின் அற்புதமாக
பூவுலகமே இன்று போற்றி மகிழும்
தாயென வந்த எங்கள் மகாஜன மாதா.

(வீரர்களின் போர்)

பெற்றபுத்திரர் வெற்றி ஈட்டுதற்காக
நற்கிறிக்கற் ஆடக் களம் புகுந்தார்கள்
உற்றதெதுவோ வெற்றி தோல்வி எதுவோ
அத்தனையும் சமம் என வந்திணைந்தார்கள்.

(வீரர்களின் போர்)

'உன்னை நீ அறி' என்னும் மகுடவாசகம்
மனனில் நிலைக்க வளம் சேர்க்கும் மாஜனா.
'உண்மையே உயர்அறம்' என்ற நீதியைக்
கண்ணெனக் கொண்டே நிதம் வாழும் ஸ்கந்தா.

(வீரர்களின் போர்)

இயற்றியவர்: ம. பா. மகாலிங்கசிவம்
இசையமைத்தவர்: சி. சிவஞானராஜா

NSB உங்கள் குடும்ப வங்கி

வணிகநாதம் சிறப்புற வெளிவருவதையிட்டு
எமது இனிய வாழ்த்துக்கள்.

வளமான வருங்காலத்திற்கு வழிகாட்டும்
தேசிய சேமிப்பு வங்கி.

காலத்திற்கேற்ப பயனளிக்கும் எமது சேமிப்புத்திட்டங்கள்
புஞ்சிஹறப்பன், ஹறப்பன் சேமிப்புக் கணக்குகள்
மாணவர்களுக்கானது.

இத்துரு மித்துரு இளைய தலைமுறையினருக்கானது.
கணனி மயப்படுத்தப்பட்ட துரித சேவை.

NSB

வணிகநாதம் சிறக்க வாழ்த்துகின்றோம்

பாடசாலை உபகரணங்களின்

விற்பனையில் முன்னோடிகள்......

# துர்க்கா புத்தகச்சோலை

பஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம்.

---

வணிகநாதம் சிறக்க வாழ்த்துகின்றோம்

கணனி கற்கைகளில்

முன்னோடி நிறுவனம்

# விசுவல் ரெக்

சிவன்கோவில் முன்பாக, சுன்னாகம்.

---

வணிகநாதம் சிறக்க வாழ்த்துகின்றோம்

சுன்னாகத்தில் பிரபல மோட்டார் சைக்கிள்

விற்பனையாளர்கள்

# ரஜீவன் மோட்டோர்ஸ்

கே. கே. எஸ் வீதி, சுன்னாகம்.

வணிகநாதம் சிறக்க வாழ்த்துகின்றோம்

யாழ் நகரில் மோட்டார்
சைக்கிள் விற்பனையில்
தனித்துவமான நிறுவனம்

# A.V.R மோட்டோர்ஸ்

**100 A ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

வணிகநாதம் சிறக்க வாழ்த்துகின்றோம்

# aat Computer Centre

## கற்கை நெறிகள்


- Accounting Package.
- Children Kinds Programme.
- G.I
- Computer Languages.
- Internet/E-mail.
- Diploma in Ms office.
- Diploma in Desktop Publishing.
- Diploma in Multi Media.

# aat tamil.com

Internet Browsing
Computer Sales
Photo Copy
Scanning.

Computer Classes
Net 2 Phone
Designing
Printing.

பதிவுகள் விபரங்களுக்கு
Opposit st. Antoniy's Church
Dr. Subramaniam Road,
Chunnakam.



## வணிக நாதம் சிறக்க வாழ்த்துகின்றோம்

இளைஞர்களை அரவணைக்க இலங்கை வங்கி வழங்கும் 18+ இளைஞர் சேமிப்புக் கணக்கு (18 - 25 வயதுடையோருக்கானது)

18 +plus Savings Account

திருமணப் பரிசாக தங்கப்பவுண்
ஆகக் குறைந்த நிலுவையாக ரூபா 25000/=
திருமணத்திற்கு முன்பு ஒரு வருடத்துக்குப் பேணுபவருக்கு
திருமணத்தின் போது தங்கப்பவுண் ஒன்று வழங்கப்படும்.
மேலும் 0.5% கூடிய வட்டி, காப்புறுதி (ரூபா 500 000 /= வரை)
புலமைப்பரிசில்கள், கடன் அட்டை, ATM (Card) அட்டை,
கடன் வசதிகள், முதல் குழந்தைக்கு இலவச சிறுவர் சேமிப்புக் கணக்கு.

## தங்க நகை அடகு கடன் சேவை

- அவசர தேவைக்கு துரித கடன் சேவை
- குறைந்த வட்டி வீதம்
- நாளாந்த வட்டிக்கணிப்பு
- உயர்ந்த பாதுகாப்பு
- பூரண இரகசியம் பேணுதல்

## இலங்கை வங்கி

உங்கள் தேவைகளைச் சந்திக்கும்.


அட்டைப் பதிப்பு: கரிகணன் பிறிண்டேர்ஸ் யாழ்ப்பாணம்.